

# இது நம்ம சொத்து

ஜுனைதா ஷெரீப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *ITHU NAMMA SOTHTHU*

***( THIS IS OUR TREASURE)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்து விட்டீர்களா?

ஜுனைதா ஷெரீப் எழுதியவை:

| | |
|---|---|
| அவன் ஒன்று நினைக்க.... | (துப்பறியும் நாவல்) |
| சாணைக் கூறை | (சமூக நாவல்) |
| அவளுக்கும் ஓர் இதயம் | (சமூக நாவல்) |
| மூன்றாம் முறை | (சமூக நாவல்) |
| காட்டில் எறித்த நிலா | (சமூக நாவல்) |
| ஒவ்வாமுனைக் காந்தங்கள் | (சமூக நாவல்) |
| இளநரை | (சிறுகதைத் தொகுப்பு) |
| பெட்டிசம் | (சிங்கள நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பு) |
| பொன்னாடை | (வானொலி நாடகத் தொகுப்பு - இலங்கை அரசின் சாகித்திய விருது பெற்றது) |
| இவளுக்காகவா? | (சிறுகதைத் தொகுப்பு) |

ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது (சமூக நாவல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது நம்ம சொத்து

சமூக நாவல்

ஜுனைதா ஷெரீப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ITHU NAMMA SOTHTHU**
**A novel**
**by K.M.M. Sheriff (S.L.A.S)**
**(Junaida Sheriff)**

This book is printed through the patronage and sponsorship of the Sri Lanka National Library Services Board. It should be noted that the contents of this book do not reflect the views of the National Library Services Board.

**All rights reserved**

**© 1998 by K.M.M. Sheriff**

**First published in December 1998**

**Price Rs. 100/=**

**ISBN : 955-95096-4-0**

**Address :**
**3/2, 2nd Lane, Ratmalana Tel: 638377**

**Cover page designed by : Mr. A. Morais**

**Printed at :**
**Print Graphics, 4, Nelson Place, Colombo - 6**
**Tel: 596312**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FORWARD

Ever since man, propelled by the swelling population, began to make inroads into the jungles, the domains of wild animals, there has been a wrangle down the line between the man and the wild animals. With the ever expanding population, the conflict between man and animal has reached a crisis level.

An environmental study reveals that today, the country does not have the minimal forest cover that is required to sustain a healthy eco-balance, vital for the life systems. Today, Sri Lanka's forest cover is only 18% while what is required for a sustainable eco-balance is 30%. The Asian Development Bank has reported that the de-forestation rate in Sri Lanka is one of the highest in the world. The forest cover that was 84% in 1981 , has gradually but alarmingly depleted to 70 % in 1989, 44.5% in 1990, 27.5% in 1991, 23% in 1992 and 18% in 1996.

While these statistics present a dim picture and a crisis situation regarding the sustenance of eco-balance, systematic approaches towards corrective measures have been continuously ignored by all. The fact, the conservation of nature is the foundation of our existence, have been ignored. It is everybody's duty. The communicators, the writers and media persons should play a particular role.

I am happy that Mr. K.M.M. Sheriff, a popular Tamil novelist has chosen this subject of forest and wildlife as a theme for his new book, rightly naming it ' Ithu Namma

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Soththu" THIS IS OUR TREASURE. I began to read it with a feeling of reading any other novel expecting in it a senario of romance, social issues and perhaps politics. However, at the end of reading I found myself lost in the deep jungle, deeper indeed in sympathy and love for the innocent creatures of the jungle. The writer should be congratulated for selecting the above theme and for his knowledge on the forest and wildlife and also for explicit dedication for the conservation of wildlife and nature. To my knowledge and literary experience of nearly 35 years, this is perhaps the pioneer work in Tamil that I have come accross on this theme.

It is appropriate here to quote from the preamble to the statues of the International Union for Conservation of Nature and Natural Resources.

*"Conservation of Nature and Natural Resources involves the preservation and management of the living world, the natural environment of humanity and the earth's renewable natural resources on which rest the foundation of human civilisation.'*

Mr. Sheriff's strategy adopted in simple style and elegant language, keeping the reader absorbed in the subject, motivates the reader to be committed for the cause of conservation of the forest and wildlife. The writer himself, being a convert, has portrayed his own action of shooting down animals and birds for the enjoyment of a single moment. I am pleasantly surprised to note the vivid projection of the core aspect of forest conservation, particularly the conflict between man and animal, man encroaching the animal reserves, the animal slyly coming out in the night to destroy man's cultivation, the secret design of the illicit

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tree-feller and the unity of opposing young minds, the destruction of environment and the reactive failure of nature, the persistent efforts by the environmentalist and the good sense bearers of the village. These are beautifully presented and to the reader it is like a kaleidoscopic panorama. It is really fascinating and at the same time heart wrenching. It brings man to his sense that though he is supreme creation of Almighty he is nothing but a fellow being on earth and destined to share it with all the fellow creatures on earth that Almighty has created.

Though the aspect of forest life is visibly given high emphasis, the undertone throughout the story clearly depicts the innocence of the village folks, the poor cultivator, their non communal approach and the fact that they differ very little in their thought and action though they belong to different ethnic groups. It is glad tiding for a harmonious nation of multi ethnic, multi religious and multi lingual composition in the days to dawn.

The book successfully conveys a very clear message to man.

There is a conflict, in an acute level, with man and the forest, man and wild animals and man and nature.

As human habitation expands should animal retreat.....to nowhere?

As human habitation demands should forest cover deplete.....?

As human habitation wants should nature be maimed.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The answer is a firm "NO". None of that will happen without the destruction of man from earth. The man if he likes can live in harmony with man and man, with man and animal, with man and forest and with man and nature.

I congratulate the writer once again for writing " Ithu Namma Soththu" This is our Treasure for so convincingly driving a hard message so easily.

**"Ithu Namma Soththu"** is not a novel. It is, of course, more than a novel.

**Sgd M.T.M .Aluharuddeen, JP**
President - Sri Lanka Muslim Media Alliance
December 01 -1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FORWARD

### ITHU NAMMA SOTHTHU

I am not the 'Normal' person whom a novel is sent for an opinion. But here I got one. I was inquisitive. I read it. It was fantastic.

A novel, story, poem or any other literature has its own definitions. What was considered as 'words' in an earlier era are considered as' modern poems' with none of the stringent laws of yesterday. That is development, a change with time, which has to be analysed from that particular platform of time to understand it.

In my view a novel, though is fiction, should signal a message to the reader. Not only a novel is read for pleasure of reading but also has to be 'educative' or analytical of the characters and events within a theme. In this context "Ithu Namma Soththu" has been excellent where **a thread of harmony among communities and role of the community in conservation is woven beautifully amidst a group of new generation (School kids) and the old generation (the village).**

The problems of generation gap, poverty etc. are highlighted in the whole novel. The novel has achieved a success in communicating a message to the reader. However, I should confess that the author has excelled in one side and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have neglected the 'popular reading' concept which makes the novel more to a 'documentary' in strict sense, at the early stages. If the novel had more pages on the village and its day to day transactions in the early pages, it would have become an ideal novel for the reader on all sides.

What stands after you close the book is the message it had passed on to you, beyond the individual letters inside. **ITHU NAMMA SOTHTHU** is worth to preserve and cherish.

**Sgd. Dr. T. Jayasingam**
Head, Department of Botany
Eastern University.
(Former National Consultant on Protected Area Planning,
Department of Wildlife Conservation)

December 01, 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதை ஏன் எழுதினேன் ?

இந்த நாவலை எழுதுவதற்கு என்னைத் தூண்டிய காரணங்களை எழுதவேண்டுமென்ற எண்ணத்துடன், நிசப்தமான ஓர் இரவில் நான் கட்டிலில் உருண்டு கொண்டிருந்த வேளையில் கடந்த கால எனது அனுபவங்களில் பல அலையலையாக மனதினுள் தோன்றுவதும், மறைவதுமாக அலைக்கழித்தன. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக கடமையாற்றத் தொடங்குவதற்கு முன் நானும் ஒரு சராசரி மனிதனைப் போல வன மிருகங்கள் தொடர்பாக வக்ர மனத்துடன் செயற்பட்டவன் தான். மனிதனுடன் மனிதன் மனித நேயத்துடன் செயற்படாத போது, மிருகங்களுடன் நேயம் பாராட்டுவது என்பதைப்பற்றி கற்பனைதானும் பண்ண முடியாத காலகட்டத்தினுள் வாழ்ந்து கொண்டிருக்கும் சராசரி மனிதனான நானும் மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் எனது வக்ர மனதின் உந்துதலால் ஊறுவிளைவித்து மகிழ்ச்சியென அப்போது கருதிய அந்த சந்தோசங்களை அனுபவித்தவன் தான்.

ஒன்றா, இரண்டா, எத்தனையோ தடவைகள் எனது சொந்தக் கைகளால், எனது சொந்தத் துப்பாக்கியைப் பாவித்துச் சுட்டுக் கொலை செய்த காட்டு மிருகங்களை எண்ணிப்பார்க்கிறேன். ஒரு மானைச்சுட்டு, அதை அறுத்து தோல் களையும் போது அதனது வயிற்றினுள் இருந்து வெளியே எடுத்துப் போட்ட குட்டியையும், துப்பாக்கி வாங்கிய புதிதில் சுட்டுப் பழகுவதற்காக சுட்டுவீழ்த்திய குரங்கினது முகத்தையும், உயரே தென்னை மரக்கீற்றில் உட்கார்ந்து கதை பேசிக்கொண்டிருந்த இரண்டு கொக்குகளில் எனது துப்பாக்கி ரவை பட்டு உயிர் நீத்து கீழே விழாமல் அங்கேயே தொக்கி நின்ற ஒன்றை மற்றது பல நிமிடங்கள் சுற்றிச் சுற்றிப் பறந்து துக்கித்த காட்சியையும், மரமொன்றில் தங்கிநின்ற கடற்காகங்கள் பல எனது துப்பாக்கியிலிருந்து சீறிப்பாய்ந்த சன்னங்களின் தாக்குதல்களால் காயப்பட்டு தொப் தொப் என கீழே விழுந்ததைக் கண்டு மகிழ்ச்சியால் நான் துள்ளியதெல்லாம் ..... ஒவ்வொரு நிகழ்வாக மனத்திரையில் தோன்றித்தோன்றி மறைய அப்போதைய எனது குரூரத்தனத்தையிட்டு என்மேலேயே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது.

சமீப காலங்களில் என் மனதினுள் புதிதான ஒரு சிந்தனை துளிர்விட்டு மெதுவாக வளர்வதாக எனக்குப்படுகிறது. அன்பு, இரக்கம், கருணை, என்பவையெல்லாம் மனிதர்களுக்கு மனிதர்கள் காட்டுவது மட்டும்தானா? எல்லாம்வல்ல இறைவனை 'கருணைக்கடல்', 'நிகரற்ற அன்புடையவன்' என்றெல்லாம் கூறுகிறோம். மனித வாழ்க்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கம் இறைவனை அடைவதுதான் என்றால், அந்த இறைவனின் குணங்களில் ஒன்றாவது சம்பூர்ணமாக நம்மிடம் இருக்கக்கூடாதா? வாழ்நாள் முழுவதுமே வக்ர குணங்களுடன் வாழ்ந்துவிட்டு மரணிப்பதுதான் நமது பிறப்பின் நோக்கமா? இறைவன் மனிதர்களுக்கு மட்டும் தான் அன்பு காட்டுகிறானா? அப்படியென்றால் 'கருப்பை உயிருக்கும், கல்லினுள் தேரைக்கும்....' என சித்தர்கள் எழுதி வைத்துவிட்டுப் போனதெல்லாம் எதற்காக? மனிதர்களிடம் அன்பு காட்டுவது மனித குணமென்றால் அதையும்தாண்டி மரங்கள், பறவைகள், மிருகங்கள் குறிப்பாக வனவாழ் சீவராசிகள் ஆகிய சகல படைப்புகள் மீதும் பரிவும், பாசமும் காட்டுவது தெய்வகுணமாக அமையாதா?

எனக்கு ஒரு பழைய அனுபவம் நினைவுக்கு வருகிறது. வஸ்கமுவ தேசிய வனவிலங்குப் பிரதேசத்தில் சுற்றுலா விடுதியொன்றைத் திறப்பது தொடர்பான வேலைகளை மேற்பார்வையிடுவதற்காக ஒரு நாள் அங்கு சென்றிருந்தேன். விடுதிக்கான பெயர்ப்பலகையை மரமொன்றில் ஆணியறைந்து மாட்டுவதற்கு வசதியாக நீண்டிருந்த மிகச்சிறிய மரக்கிளை யொன்றைத் தறிப்பதற்கான முயற்சியில் வேலையாட்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, சமீபத்திலுள்ள பாதையில் நடந்து சென்ற கிராம வாசியொருவர் இதை அவதானித்துவிட்டு நேரே என்னிடம் வந்து அக்கிளையைத் தறிக்க வேண்டாமெனத் தடுத்தார். "சார், நாங்க இந்த கிராமத்திலே மரங்களிலிருந்து இலைகளைக்கூட பிடுங்குவதில்லை. கிளையைத் தறிக்காதீங்க" என்றார்.

மரங்கள் சம்பந்தமாக அந்தக் கிராமவாசி வைத்திருந்த பாசம் மனதைத் தொட்டதுமல்லாமல் அது நாள்வரை மூடிக்கிடந்த என் கண்களையும் திறக்க வைத்தது.

சில வருடங்களுக்கு முன்னர், வனசீவராசிகள் தொடர்பாகவும், பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாகவும் ஒரு மாதகாலம் நேபாளத்தில் கல்விச்சுற்றுலாவொன்றை மேற்கொண்டேன். தரைமட்டத்திலிருந்து சுமார் ஐயாயிரம் அடி உயரத்தில் அன்னபூர்ணா மலைத்தொடரில் அமைந்துள்ள கிராமமொன்றுக்கு ஒருநாள் சென்றேன். வனத்தையும், வனமிருகங்களையும் பாதுகாப்பதற்காக அந்தக் கிராம மக்களால் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பார்த்தும், கேட்டும் வாய்பிளந்தேன். நான் அங்கு சென்ற நாட்களில் அத்தகைய நடவடிக்கைகளுக்குக் காலாகவிருந்த சங்கத்தின் தலைவர் வனத்துக்கும் அதில்வாழ் சீவராசிகளுக்குமாக ஆற்றியுள்ள ஒப்பற்ற சேவைக்காக அவருக்குக் கிடைத்த சர்வதேச ரீதியிலான பரிசொன்றைப் பெறுவதற்காக அமெரிக்கா சென்றிருந்தார் என அறிந்து மானசீகமாக நானும் அவரை வாழ்த்தினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனம், வனவாழ் மிருகங்கள் ஆகியவை தொடர்பாக ஏற்பட்ட அனுபவங்களும், அறிவும் என் மனதில் பெருகிக் கொண்டுவந்த கால கட்டத்தில், ஒருநாள் பிற்பகல் வழமைப்பிரகாரம் காரியாலயம் முடிந்து நானும், நிருவாக சேவையிலிருந்து இளைப்பாறி எனது திணைக்களத்தில் தொடர்பு உத்தியோகத்தராக பணியாற்றிய மதிப்புமிகு திரு. ரி.திருலிங்கநாதன் அவர்களும் வாகனமொன்றில் வனசீவராசிகளுக்கும், மக்களுக்கும் இடையே நடைபெறும் பிரச்சினைகள் குறித்து உரையாடிய வாறு வருகையில், அவர் சரேலென "நீங்கதான் எழுத்தாளராச்சே. இந்த சப்ஜக்டை கருவாக வைச்சு ஒரு நாவல் எழுதுங்களேன்" என்றார்.

அவருடைய யோசனை எனக்குப் பிடித்திருந்தது. அன்றிரவெல்லாம் கட்டிலில் உருண்டவாறு சிந்தித்தேன். தொடர்ந்து சில நாட்கள் கற்பனை உலகில் மிதந்தேன். நண்பர் திரு. திருலிங்கநாதனிடம் நான் யோசித்து வைத்திருந்த கதையை விபரித்தபோது அவர் கூறிய சில ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டேன். சரசரவென நாற்பது பக்கங்களளவில் எழுதி முடித்தேன். தவிர்க்க முடியாத சில காரணங்கள் கதையைத் தொடர்ந்து எழுதுவதில் தடைகளாக அமைந்தன.

இனவிவகார அமைச்சில் நான் சேர்ந்ததன் பின் இந்நாட்டில் வாழ் இனங்களுக்கிடையில் நின்று நிலைக்கக் கூடிய இன ஒற்றுமையை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பொறுப்புகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. வனத்தையும், வனவாழ் சீவராசிகளையும் கருப்பொருளாக வைத்து ஏற்கனவே என்னால் எழுதி குறையாக வைக்கப் பட்டிருந்த நாவலில் கதாநாயகர்களாக அமைந்த இந்நாட்டில் வாழ் சிங்கள, தமிழ், இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்த நான்கு இளைஞர்களும் நாட்டின் தேசிய சொத்துக்களான வனத்தையும், வனவாழ் சீவராசிகளையும் பாதுகாப்பதிலும், அடுத்தடுத்துவரும் தலைமுறையினர்களும் அவைகளினால் ஏற்படும் பலன்களை அனுபவிப்பதற்கு ஏதுவாக அவைகளை விட்டுச் செல்வதிலும் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகளை விளக்குவதற்காக தொடர்ந்தும் எழுதி இந்நாவலை முடிக்க வேண்டுமென நினைத்து எழுதத் தொடங்கினேன். இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும், நாட்டின் தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு இனங்களுக்குமுள்ள பொறுப்புக்களையும் வலியுறுத்துவது இந்நாவலின் நோக்கங்களில் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் உயிர் வாழ்வுக்கு சூழல் பாதுகாப்பும், வனமும், மரங்களும், வனசீவராசிகளும் எந்தளவுக்கு தேவைப்படுகின்றன என்பதை இதை வாசிப்பவர்களின் மனங்களில் மிகச் சிறிய தீபமாக ஏற்றிவைத்துவிட வேண்டுமென்பதுதான் இதை நான் எழுதியதற்கான முக்கியகாரணம். அவ்வாறு ஏற்றிவைக்கும் தீபம் படிப்படியாக அவர்களின் மனங்களில் வளர்ந்து, இந்நாட்டின் தேசிய செல்வங்களைப் பாதுகாப்பதற்கும், அதிகரிப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்களைத் தூண்டலாமல்லவா?

இந்நாவலை எழுதுமாறு என்னை ஊக்கப்படுத்திய திரு. ரி. திருலிங்கநாதன் அவர்களுக்கும், கையெழுத்துப்பிரதியை அழகுற தட்டச்சில் பொறித்துத் தந்த செல்வி பி.ஆர். சாந்தி அவர்களுக்கும், எனது வேண்டுகோளையேற்று அன்புடன் முகவுரைகள் எழுதிய காலநிதி ரி. ஜெயசிங்கம் அவர்களுக்கும், இலங்கை முஸ்லிம் தொடர்பியலாளர் ஒன்றியத்தின் தலைவரான எனது இனிய நண்பர் ஜனாப் எம்.ரி. எம். அஞஉறுருத்தீன் அவர்களுக்கும், இதை வெளியிட சகல உதவிகளையும் நல்கிய இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையினருக்கும், அட்டைப்படம் வரைந்துதவிய பிரபல சித்திரக் கலைஞர் திரு. அ. மொறாயஸ் அவர்களுக்கும் தரமாக அச்சிட்டுத்தந்த பிரின்ட் கிறாபிக்ஸ் தாபனத்தாருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

ஜ"னைதா ஷெரீப்
3/2, இரண்டாவது ஒழுங்கை
இரத்மலான
டிசம்பர் 01, 1998
தொலைபேசி : 638377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது நம்ம சொத்து

பசும்புல்வெளியின் ஓரத்தே கிடந்த பாறாங்கல்லொன்றின் மேல் பாபு உட்கார்ந்திருந்தான். அவனது முகத்தில் கவலை ரேகைகள் கவ்விக் கிடந்தன. அகன்ற வான வெளியைப் பார்த்தவாறு கடந்த சில நாட்களாக மனதில் அல்லாடும் அந்த எண்ணத்தை இரை மீட்டிக்கொண்டிருந்தான்.

சூரியக்கதிர்கள் பட்டதால், புல் நுனிகளில் ஒட்டிக்கொண்டிருந்த பனித்துளிகள் மெதுவாக கரைந்து கொண்டிருந்தன. தூரத்தே தெரிந்த உயர்ந்த மலையின் மேல் மரங்களின் கிளைகள் காற்றுக்குத் தாலாட்டம் ஆடின. கிளைகளினூடாக எட்டிப் பார்த்த சூரியக்கதிர்கள் வண்ணக் கோலம் காட்டி துள்ளிப் பாய்ந்து வந்து புல்வெளியில் நர்த்தனமாடின.

மலையின் மறுபக்கத்தில் அடர்ந்த காடு இளம் காலைப் பொழுதில் பச்சை மை தெளித்தாற் போல் காட்சிதந்தது. மரங்களுக்கு மேலே தெரிந்த அடிவானம் சூரிய ஒளியில் பளிங்கு மலையாக மின்னியது.

பாபுவின் முகத்தில் வகைசொல்லமுடியாத மெல்லிய வேதனை. நான்கு நாட்களுக்கு முன்னர் அவனும் அவனுடைய நண்பர்கள் மூவரும் காட்டை அண்டிய பகுதியில் நடந்துசென்றுகொண்டிருந்த போது கண்டகாட்சி இன்னும் அவனுடைய மனதைவிட்டும் நீங்கியதாக இல்லை.

பாபுவுக்கு சுமார் பதினெட்டு, பத்தொன்பது வயதிருக்கலாம். கிராமத்தை அண்டி இரண்டு மைல் தொலைவிலுள்ள பாடசாலையொன்றில் உயர்தர பரீட்சைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறான்.

சுமார் ஐந்து வருடங்களின் முன்னர் அந்தக் கிராமத்துக்கு வந்து, களிமண் குடிசையொன்றை அமைத்து அவனின் குடும்பம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தகப்பன் மாணிக்கம், வீட்டோடு உள்ள காணியில் சேனைப்பயிர் செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

பாபு தலையை உயர்த்தி தூரத்தே தெரிந்த அடர்ந்த காட்டைப் பார்த்தான். அதனுள்ளே இன்னும் ஊஞ்சலாடிய மரங்களைப் பார்த்தான். எத்தனை நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்தானோ சடுதியாகக் கேட்ட பேச்சுக்குரல்களால் ஈர்க்கப்பட்டு வேகமாகத் திரும்பினான். அவனுடைய நண்பர்கள் மூவரும் அங்கு நின்றிருந்தனர்.

"பாபு இப்பத்தான் வந்தியா?" லஸ்ஸன்ன கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்பா"

"ஏன் உன் முகமெல்லாம் பேயறைஞ்சாப்ல இருக்கு?" முகத்தைக் கோணலாக்கியவாறு சலீம் கேட்டான்.

"ஒண்ணுமில்லை"

"இல்லல்ல. ஏதோ இருக்கணும். சொல்லேன்" என்றான் சார்ல்ஸ்.

பாபு, லஸ்ஸன்ன, சலீம், சார்ல்ஸ் ஆகிய நால்வரும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒரேவகுப்பில் படிக்கும் மாணவர்கள். எல்லோருடைய பெற்றோருமே வெவ்வேறு கிராமங்களிலிருந்து சேனைப் பயிர் செய்வதற்காக கிராமத்துக்கு வந்து குடியேறியவர்கள்.

வனவிலங்குப் பிரதேசத்துக்கு எல்லையாக அதுவரை தரிசாகக் கிடந்த அந்தப் பகுதியில், சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் இரண்டொரு குடும்பத்தினர் வந்து அடாத்தாக குடியேறினர். படிப்படியாக இன்னும் சிலர் வர..... இவர்களின் குடியேற்றம் மெல்ல மெல்ல வெளிக் கிராமங்களுக்குத் தெரியவர..... சுமார் நூறு குடும்பங்கள் இப்போது குடியேறியிருந்தன.

ஒவ்வொரு குடும்பத்தினரும் அவர்களுக்கு அகப்பட்ட காணியை அடாத்தாகப்பிடித்து..... ஆரம்பத்தில் கம்பு, தடிகளைக் கொண்ட குடிசைகளை அமைத்து..... வளவுகளினுள்ளேயே தூரவு தோண்டி தண்ணீர் பெற்று, பயளை நிரம்பிய மண்ணைக் கொத்தி பயிர் செய்யத் தொடங்கி, காலப் போக்கில் களிமண் வீடுகளை அமைத்து வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.

அரசாங்கக்காணி அடாத்தாகப் பிடிக்கப்படுவதை அசட்டையீனமாகப் பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க அதிகாரிகள், நாளாக ஆக பத்து இருபதாக குடும்பங்கள் குடியேறத்தொடங்கியபோது, இறக்கைகளைத் தட்டிவிட்டவாறு துள்ளி எழுந்து நடவடிக்கை எடுக்கப் போனாலும், செல்வாக்குள்ள அரசியல்வாதிகளின் தலையீட்டினால் முடக்கப்பட்டு விட்டார்கள்.

"அரசாங்க காணிதான் ! வனவிலங்கு பாதுகாப்பு வலயத்துக்கு அருகிலே குடியேறக்கூடாது என்பதும் நியாயம் தான். ஆனால், அவர்கள் ஆரம்பத்திலே குடியேறியபோது நீங்க தடுத்து இருக்கணும். இப்ப என்னடான்னா, அறுபது எழுபது குடும்பங்கள் குடியேறிட்டாங்க. காணியை விட்டுட்டு போங்கடான்னா, எங்க போவாங்க?" அரசியல் வாதியொருவர் தனக்கே உரித்தான கரகர குரலில் அப்பகுதியின் உதவி அரசாங்க அதிபரைப் பார்த்துக் கேட்டார்.

அவர் அவ்வாறு கேட்டதன் பின்னர் விடயம் கப்சிப் என அடங்கிவிட்டது. மேற்கொண்டு குடியேறுவது என்னவோ சற்றுக் கட்டுப் படுத்தப்பட்டதாக மட்டும் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாபு, சொல்லேன். உனக்கு என்னவோ நடந்திருக்கு." லஸ்ஸன்ன மீண்டும் கேட்டான். அவர்கள் நால்வருக்கும் சிங்களமும், தமிழும் அத்துபடி.

"உங்களுக்கு ஞாபகமிருக்கா நாம நால்வரும் பார்த்த அந்தப் பயங்கரமான காட்சி ....." பாபு கூறி முடிக்குமுன் சலீம் இடைமறித்தான்.

"அந்தக் குரங்கைப் பார்த்தது தானே"

"அதான். அதான் என்னைப்போட்டு வாட்டுது."

"குரங்கு ஏன் உன்னைப்போட்டு வாட்டுது ?" சார்ல்ஸ் கேட்டான்.

" இதபாரு சார்ல்ஸ். அந்தக்குரங்கை நம்ம கிராமத்தவங்க யாரோ சுட்டு குறை உயிரிலே விட்டுட்டுப் போயிட்டாங்க. நாம அந்தப்பக்கம் போனப்போ, மரத்தின் அடியிலே படுத்துக்கொண்டு, கண்கள் இரண்டிலும் சோகம்ததும்ப, வேதனையாக முனகியவாறு நம்மைப் பார்த்திச்சே. அதை என்னாலே மறக்கவே முடியாமஇருக்கு. ஒரு சின்னக் குழந்தை நிர்வாணமாக படுத்துக் கொண்டு மரண வேதனையை அனுபவிப்பது போல அது எனக்குப்பட்டது. அதப்பார்த்த நேரந்தொடக்கம், அதுக்கு நாம நாலு பேரும் ஏதாவது உதவி செய்யாம விட்டுட்டோமே என என்னைப் போட்டு வதைக்குது"

பாபு கூறியதைக் கேட்டதும் நண்பர்கள் அவனுடைய முகத்தை உற்றுப்பார்த்தனர். அவர்களுடைய கண்களும் மெதுவாக கலங்க ஆரம்பித்தன.

நின்று கொண்டிருந்த லஸ்ஸன்ன பாய்ந்து பாறையில் ஏறி ஓரத்தில் அமர்ந்தான். மற்ற இருவரும் அவனைப் பின்பற்றினர். ஆமையொன்று சற்றுத் தூரத்தில் வெளியே கழுத்தை நீட்டியவாறு, கால்களால் ஊர்ந்து கொண்டிருந்தது. புறாக்கூட்டமொன்று வான வீதியில் உலாச்சென்றது. வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்துக்குள்ளிருந்து நரிகளின் ஊளைச்சப்தம் துல்லியமாக கேட்டது.

"அந்தக் குரங்கை அந்தக் கோலத்திலே பார்த்ததுக்கப்புறம், பாபுவைப் போலத்தான் எனக்கும் மனதிலே ஒரே யோசனை" என்றான் சலீம்.

"உனக்கு மட்டுமில்லே. எனக்கும் அப்படித்தான்."

"எனக்கும் தான்" என்றான் சார்ல்ஸ்.

"நம்ம எல்லோருக்கும்தான் குரங்கை அந்தக் கோலத்திலே பார்த்ததுக்குப் பிறகு அதற்கு ஏதாவது உதவி செய்யாம போயிட்டோமே என்ற வேதனை. ஆனால், உங்கள் யாருக்கும் சொல்லாம நான் அதை அடுத்த நாள் போய்ப்பார்த்தேன்." என்றான் பாபு.

"பார்த்தியா ?" அனைவரும் ஏக நேரத்தில் கேட்டனர்.

"ஆமா. அது செத்துப் போய் கிடந்தது. பிணத்தை நரிகள் தின்னு கொண்டிருந்தன."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ ! பாவம்பா" என்றான் சார்ல்ஸ்.

அவர்கள் ஆளையாள் பார்த்தவாறு சிறிது நேரம் எதையோ யோசித்துக் கொண்டிருந்தனர்.

"ஏம்பா. எனக்கு ஒரு யோசனை தோணுது." என்றான் சரேலென பாபு.

"என்ன யோசனை ?"

"இதோ பாருங்கப்பா. நம்மைச் சுற்றியிருக்கிறது காட்டு மிருகங்கள் சுதந்திரமாக வாழுற காடு. நாமெல்லாம் எவ்வளவு சுதந்திரமா இந்தக் கிராமத்திலே வாழணும்னு விரும்புறோமோ. அதைப் போல்த்தான் அந்த வாய்பேசாத பிராணிகளும் வாழ விரும்புதுங்க. மனிதர்களான நாம அவைகளை அப்படிவாழ விடுவதாயில்லை. இல்லையா ? "

"உண்மைதான் பாபு. நானும் பலதடவைகள் யோசித்து இருக்கேன். வாய் போசாத அப்பிராணிகளுக்கு நாம் செய்யும் கொடுமைகளைப் பற்றி நினைச்சா வயிறு பத்துது" என்றான் சலீம்.

"மிருகங்கள் வாழ்ந்த இடத்திலே நாம வந்து குடியேறிட்டோம். குடியேறினது மட்டும் இல்ல. அவைகளைக்கொன்று தின்னவும், சுட்டுக் கொல்லவும் தொடங்கிட்டோம். அன்றைக்க்கு எட்வேட்டின் வாழைத் தோட்டத்தை அழிச்ச யானையை நஞ்சு கொடுத்துக் கொலைசெய்திட்டாங்க. எவ்வளவு கொடிய பாவம்! இல்லையா ?" சார்ல்ஸ் கேட்டுவிட்டு மூச்சிரைத்தான்.

"அந்தப் பெரிய யானையை கொஞ்சம் கூட கருணை காட்டாம கொலை செய்தாங்களே. பாவிங்க" லஸ்ஸன்ன கூறியவாறு வாய்க்கு வந்த வார்த்தைகளால், யார் யாரெல்லாம் யானையின் சாவுக்கு காரணமாக இருந்தார்களோ அவர்களையெல்லாம் திட்டித் தீர்த்தான்.

"எல்லாவற்றுக்கும் நம்ம பெற்றோர் தான் காரணமாக இருக்காங்க. நம்ம கிராமத்திலே எத்தனையோ பேர் பின்னேரமானதும் துவக்கைத் தோளிலே போட்டுக் கொண்டு மிருகங்களை வேட்டையாடப் போறாங்க. முயலும், மானும், மரையுமா சுட்டுக் கொண்டு வாராங்க. இதைத்தான் நாம இத்தனை நாட்களாக சாப்பிட்டுக் கொண்டு வாறோம்." என்றான் தொலைவில் நின்ற பூஞ்செடிகளில் தேனருந்தியவாறு குந்திக் கொண்டிருந்த வண்ணாத்திப் பூச்சிக் கூட்டமொன்றைப் பார்த்தவாறு சலீம்.

"உண்மைதான்பா. ஏன்பா, இப்படிச் செய்தா என்ன ?" சார்ல்ஸ் கேட்டான்.

"எப்படி ?"

"நம்ம பெற்றோர் சுட்டுக்கொண்டுவர்ர காட்டு மிருகங்களின் இறைச்சியை நாமும் தானே சாப்பிடுறோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமா"

"அந்த இறைச்சியை நாம சாப்பிடாம விட்டா.....?"

"நல்ல ஐடியா. முதலிலே நாம நாலுபேரும் இனிமே காட்டு மிருகங்களை வேட்டையாடிக்கொண்டு வர்ர இறைச்சியை சாப்பிடு வதில்லையென சத்தியம்செய்து கொள்வோம்."

அவர்கள் நால்வரும் இது தொடர்பாக ஆளுக்காள் கதைத்து, நால்வரினதும் வலது கைகளை ஒன்றுக்குமேல் ஒன்றாக வைத்து தங்களுக்குள் சத்தியம் செய்து கொண்டனர்.

"ஏன்பா, எனக்கு இப்படி ஒரு யோசனை தோணுது" என்றான் நிசப்தத்தைக் கலைத்தவாறு லஸ்ஸன்ன.

"என்ன யோசனை ?" பாபு கேட்டான்.

"நாம நாலுபேருமா, நம்ம கிராமத்திலே வசிக்கிற மற்றவங்களுக்கும் இந்தக் கருத்தைப் பரப்பினால் என்ன ?"

"செய்யலாம். ஒவ்வொரு வீட்டிலும் நம்மைப் போன்ற இளைஞர்கள் இறைச்சி சாப்பிடுவதை விட்டுட்டா, பிள்ளைகள் சாப்பிடாததை எதற்காக நாம சாப்பிடணும்னு நமது பெற்றோரும் வேட்டைக்குப் போவதை விட்டுடுவாங்க."

"எனக்கு இன்னுமொரு ஐடியா தோணுது" என்றான் சலீம்.

"என்ன? " பாபு கேட்டான்.

"நம்ம கிராமத்திலே ஒரு சங்கம் அமைப்போம். வன மிருகங்கள் பாதுகாப்புச் சங்கம்னு பெயர் வைப்போம். வன மிருகங்களை யார் எந்த விதமாக துன்புறுத்த நினைக்கிறாங்களோ, அவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். வன சீவராசிகள் எதிரிகளல்ல. நமது நண்பர்கள் என்ற எண்ணத்தை சனங்க மனங்களிலே உருவாக்கக் கூடியவாறு நடவடிக்கைகள் எடுப்போம்."

"ரொம்ப நல்ல ஐடியா. வன சீவராசிகளால நமது கிராம மக்களுக்கு தொல்லை ஏற்படாதவாறும் நாம நடவடிக்கை எடுக்கணும்."

அவர்கள் நால்வரும் நீண்டநேரம் உரையாடி சங்கமொன்றை அமைப்பது தொடர்பான திட்டங்களை வகுத்தனர்.

## 02

**பா**டசாலை முடிந்ததும், ஏற்கனவேயே தீர்மானித்திருந்தவாறு அவர்கள் நால்வரும் சிறிது தூரம் நடந்து அந்த வீட்டை அடைந்தனர். கேட் அருகில் நின்று " சார் " என சற்று உரக்க அழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார்......? " என்றவாறே வயதான ஒருவர் வாசலுக்கு வந்து அதுவரை வாய்க்குள்ளிருந்த மசிந்த வெற்றிலைச்சாற்றை வாசலில் ஓரமாக துப்பிவிட்டு கேட்டைத் திறந்தார்.

"ஆயுபோவன்" என்றான் முன்னால் நின்ற சார்ல்ஸ்.

"ஆயுபோவன். வாங்கோ. உள்ளுக்கு வாங்கோ." என்றார் அப்புஉறாமி.

அப்புஉறாமிக்கு சுமார் எழுபது வயது இருக்கலாம். தோலில் சுருக்கம் விழுந்திருந்தாலும் பிடித்து வைத்தது போன்ற உடற்கட்டு. முகத்தில் வயதைக் காட்டும் கோடுகள். தலை நிறைய வெள்ளிக் கம்பிகள். காதோரங்களில் கொத்தாக வெண்முடிக் கற்றை. காவிச் சிவப்பேறிய உதடுகள். வெள்ளை படர்ந்த கண்கள்.

கிழவரைப் பின் தொடர்ந்து நால்வரும் விறாந்தைக்குச் சென்று அங்கு கிடந்த அழுக்குப்படிந்த, சில இடங்களில் அறுந்த, பிரம்புப் பின்னலுடன் கூடிய நாற்காலிகளில் அமர்ந்தனர்.

"ஆமா.... யாரு நீங்க ?" அப்புஉறாமி கேட்டார்.

"சார். நான் பாபு"

"யாரு உன் அப்பா ? இந்தக் கிராமம் தானா ?"

"இல்லை சார். நாங்க நால்வருமே யடகல கிராமத்தைச் சேர்ந்தவங்க. என் அப்பா பேரு மாணிக்கம். சேனைப் பயிர் செய்றாரு,"

"அடட...மாணிக்கம் மகனா நீ ? உங்க அப்பனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கேன். களவாக மான் இறைச்சி விக்கிறாராமே. உண்மையா?"

பாபு தலையைத் தொங்க விட்டான். தனது தகப்பனைப் பற்றி முன்பின் தெரியாத ஒருவர் இழிவாக கதைப்பதைக் கேட்கும் போது அவனுக்கு வெட்கமாக இருந்தது.

"பரவாயில்லை. நீ யாரு ?"

"என் பேரு லஸ்ஸன்ன. பந்துல பெரேராதான் என் அப்பா. உங்களுக்கு அவரை நல்லா தெரியும்."

"தெரியும் தெரியும். நல்லா தெரியும். நான் வன இலாகாவிலே றேஞ்சரா வேலை செய்யும் போது, என் றேஞ்சுக்குள்ளே சட்ட பூர்வமற்ற முறையிலே நுளைந்து கள்ள மரம் வெட்டினாருன்னு கோட்டிலே வழக்குப் போட்டு அபராதம் கட்ட வைச்சிருக்கேன்."

லஸ்ஸன்னவும் தலையைக் கீழே தொங்க விட்டான்.

"இப்ப உன் தகப்பனார் என்ன செய்கிறார் ?"

"வேளாண்மை செய்கிறார்"

"உங்க கிராமத்திலே தான் வேளாண்மைப்பயிர் இல்லையே."

"பக்கத்து கிராமத்திலே குத்தகைக்கு காணி எடுத்து செய்கிறார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது. இப்போ மரமெல்லாம் வெட்டமாட்டாரு. உன்னைப் பார்த்தா முஸ்லிம் பையனைப் போல இருக்கே. உன்பேரு என்ன ?"

"சலீம் சார். என் வாப்பா பேரு அப்பாஸ்"

"அட! நீ அப்பாஸிட மகனா? நிறைய கள்ள மரம் வெட்டி விற்கிறாராமே. ம்..... காலம் நல்லா கெட்டுப் போச்சு. அதிகாரிகளுக்கு லஞ்சத்தைச் கொடுத்து எந்த வேலைன்னாலும் செய்யக் கூடிய காலமா போயிட்டு. ஏம்பா..... உன் வாப்பாகிட்டே நீயாவது சொல்லக்கூடாதா? மரங்க நம்ம சொத்து. மரங்க இருந்தாத்தான் நாட்டிலே மழை பெய்யும். மழை பெய்தாத்தான் உணவுப் பயிர் வளரும். அப்பத்தான் நிம்மதியா சாப்பிடலாம்னு நீ சொல்லக் கூடாதா ?" சலீம் இனம் புரியாத வேதனை நிழலாடிய மற்றவர்களின் முகங்களைப் பார்த்தான்.

அப்புஉறாமி சார்ல்ஸின் மேல் பார்வையைத் திருப்பினார்.

"நான் சார்ல்ஸ். என் அப்பா எட்வேட். பக்கத்து கிராமத்திலே கொல்லன் வேலை செய்றார்."

"உன் அப்பாவைப் போல ஆக்கள்தான் பட்டறையிலே கட்டுத் துவக்கு செய்து கொடுக்காங்க. அந்தத் துவக்குகளாலேதான் வன விலங்குகளை வேட்டையாடுறாங்க." அப்புஉறாமி கூறிவிட்டு நால்வரையும் மாறிமாறிப் பார்த்தார்.

"சார். நீங்க சொல்றதை நாங்க ஏத்துக்கிறோம். வன மிருகங்கள் பாதுகாப்பு வலயத்துக்கு சமீபமா இருக்கிற எந்தக் கிராமத்திலேயும் இதெல்லாம் நடக்கத்தான் செய்யுது. எங்க கிராமமும் இதுக்கு விதி விலக்கில்ல. " என்றான் தொய்ந்து கிடந்த தலையை சற்று உயர்த்தியவாறு பாபு.

"தம்பி. வன விலங்குகள் வாய் பேச முடியாத ஊமைகள். நம்மைப்போல அவைகளுக்கும் உயிர் இருக்கு. பசி இருக்கு. ஆசாபாசங்கள் எல்லாமே இருக்கு. நாம எப்படி சுதந்திரமாக சீவிக்கணும்னு விரும்புறோமோ அவங்களும் தங்களது எல்லைகளுக்குள்ளே சுதந்திரமா, பயமில்லாம சீவிக்கணும்னு விரும்புறாங்க. அவங்க சுதந்திரத்திலே நாம தலையிட்டா, நம்மை எதிர்த்துத் தாக்க வர்றாங்க . இந்த யானைகளைப் பாருங்க...."

"சொல்லுங்க சார். யானை என்றாலே எங்களுக்கு உயிர்....." என்றான் சரேலென சார்ல்ஸ்.

"சில வருடங்களுக்கு முன்னாலே நம்ம நாட்டிலே பதினெட்டாயிரத்துக்கும் அதிகமான யானைகள் இருந்தன. வெள்ளைக்காரன் நம்மநாட்டை ஆளும்போது இதைவிட எத்தனையோ மடங்கு அதிகமாக வசித்தன. வெள்ளைக்காரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமோ.....? "

"என்ன செய்தார்கள் ?" சலீம் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்களுக்குத் தேவைப்பட்டது யானைத்தந்தங்கள்தான். அந்தத் தந்தங்களுக்கும், அவைகளினாலே செய்யப்படும் அழகுப் பொருள்களுக்கும் ஏக கிராக்கி. அதனாலே நிறைய யானைகளை சுட்டுக்கொன்றாங்க. யானைவேட்டைக் கென்றே வெள்ளைக்காரங்க நிறையபேரு நம்மநாட்டுக்கு அந்தக் காலத்திலே வந்திருக்காங்க. ஒரு வெள்ளைக்காரன் யானை யொன்றைச் சுட்டுட்டான்னா அது அவனுக்கு பெரியபெருமை. சுடுபட்டுச் செத்த யானைக்குப்பக்கத்திலே துவக்கைத் தரையிலே ஊன்றியவாறு நின்று போட்டோ எடுப்பதிலே அவங்களுக்கு அலாதி ஆசை" கூறிவிட்டு அப்புஉறாமி பெரிதாக பெரு மூச்சு விட்டார்.

"ரொம்பத்தான் பாவம் செய்துட்டுப் போயிட்டாங்க" என்றான் லஸ்ஸன்ன.

"இப்பத்தான் என்ன வாழுது. நம்ம ஆக்களும் அதைத்தானே செய்றாங்க. அபிவிருத்தி என்ற போர்வையிலே, மிருகங்கள் வாழ்ந்த காடுகளை அழித்து, பயிர் செய்யத் தொடங்கிட்டாங்க. ஒருகாட்டிலே இருந்து இன்னுமொரு காட்டுக்கு யானைகள் போற வழியை மறிச்சி குடியிருப்புகளை உண்டாக்கிக் கொண்டாங்க. இவங்களின் அபிவிருத்தி பற்றியெல்லாம் அந்த ஊமை மிருகங்களுக்கு எதுவுமே தெரியாது. அபிவிருத்தி செய்த இடங்களெல்லாம் தாங்கள் வாழ்ந்த, தங்களுக்குச் சொந்தமான இடங்கள் என நினைத்து குடியிருப்புகளுக்கெல்லாம் வந்து நடமாடுகின்றன. இதனால் பொதுமக்களுக்கும், அவைகளுக்குமிடையில் பெரியபோராட்டமே நடந்து கொண்டிருக்கு." அப்புஉறாமி கூறிவிட்டு, தனது தோளில் கிடந்த துவாயை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"சார்.... இது சம்பந்தமா உங்களோட கதைப்பதற்காகத்தான் நாங்க நால்வரும் இங்க வந்திருக்கோம். நாங்க நால்வரும் ஒரே வகுப்பிலேதான் படிக்கிறோம். எங்க தகப்பன்மார் வனத்துக்குப் போவது, வேட்டையாடுவது, கள்ளமரம் வெட்டுவது ஆகிய எல்லாவித நடவடிக்கை களுக்குமே நாங்க எதிர்ப்பா செயல்பட தீர்மானித்திருக்கோம்." என்றான் லஸ்ஸன்ன.

"சா.... சா பொஉறாம ஹெறாந்தாய் நே."

" நீங்க வனபாதுகாப்புத் திணைக்களத்திலே பல வருடங்களாக கடமை பார்த்து இப்போ பென்சன் எடுத்துக் கொண்டிருக்கிற ஒரு ஒபீஸர். உங்களைப் போன்ற அனுபவசாலியை போசகராகக் கொண்டு நாங்க எங்க கிராமத்திலே ஒரு சங்கம் தொடங்கலாம்னு எண்ணியிருக்கோம்."

" வொண்டபுள் ஐடியா! இளைஞர்களா இருக்கீங்க, ஆனா, வயதான ஆக்களையும்விட பெரிசா செயல்பட பாக்கிறீங்களே."

" சார்..... வனமும், வன மிருகங்களும் நம்ம தேசிய சொத்து, எப்படி நமது சொந்த சொத்துக்களைப் பாதுகாக்கிறோமோ அதைப்போல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியசொத்தைப் பாதுகாக்க வேண்டியது இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரினதும் கடமை. அதனால, எங்ககிராமத்துக்குப் பக்கத்திலே இருக்கிற வனத்தையும், அதனுள்ளே வசிக்கிற வன மிருகங்களையும் பாதுகாப்பதற்காக சங்கம் அமைக்கப்போறோம். " என்றான் உறுதியான குரலில் சலீம்.

" ஒன்றை நினைச்சா எனக்கு ரொம்ப துக்கமா இருக்கு."

" என்ன சார் ? "

" உங்களைப் போன்ற இளம் பையன்களோட சேர்ந்து அதிகாரத்தோட கடமையாற்றமுடியாம நான் வயதானவனாக போயிட்டேனேன்னு"

அவர் கூறியதைக்கேட்டதும் எல்லோருமே கொல்லெனச் சிரித்தனர்.

" இப்பவும் ஒன்றும் கெட்டுப் போகல்ல. நீங்கதான் எங்களின் போசகர். எங்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளைப் பற்றியும் உங்களிடம் தான் யோசனை கேட்டுச்செயல்படப் போறோம்." என்றான் சார்ல்ஸ்.

" உங்கள் சங்கத்தாலே என்ன வெல்லாம் செய்யலாம்னு யோசிக்கிறீங்க ? "

" முதல்ல யானைகளைக் கிராமவாசிகள் கொல்வதை நிறுத்தப் போறோம். யானைகள் கிராமத்துக்குள் வராமல் தடுக்கப் போறோம். வனத்துக்குள் சென்று வேட்டையாடுபவர்களைத் தடைசெய்யப் போறோம். மரங்களை வெட்டி, தேசிய சொத்தை சூறையாடுபவர்களை எதிர்த்து நடவடிக்கை எடுக்கப்போறோம். வனத்துக்குள்ளேயே மிருகங்களுக்குத் தேவையான உணவும், தண்ணீரும் கிடைக்கக் கூடியவாறாக நடவடிக்கை எடுக்கப் போறோம். வன மிருகங்கள் எதிரிகளல்ல, அவை நமது நண்பர்கள் என்பதை கிராம மக்களுக்கு உணர்த்தப் போறோம்."

" அடேங்கப்பா..... பெரிய பெரிய வேலைகளெல்லாம் செய்யப் போறீங்க. இப்படியெல்லாம் செய்யலாம்னு உங்களுக்கு யார் சொல்லித் தந்தா? "

" எங்க கொலிஜ் மாஸ்டர் சின்னத்துரை. அவர் தான் இப்படியெல்லாம் செய்யலாம்னு சொல்லித் தந்தார். சங்கம் அமைப்பது சம்பந்தமாக உங்களோட கதைக்கணும்னு அவர்தான் எங்களுக்குச் சொன்னார்."

"சின்னத்துரை மாஸ்டரா ? என் வீட்டுக்கு வந்து அடிக்கடி என்னோட கதைத்துக் கொண்டிருப்பாரு. வன மிருகங்களென்றாலே அவருக்கு உயிர். ஹோட்டல்களிலே மானிறைச்சி சமைச்சு வைக்கிறாங்கன்னு பலமுறை எங்கிட்டே சொல்லியிருக்காரு. அதை எப்படியாவது நிறுத்த முடியாதான்னு நாங்க பல தடவை கதைச்சிருக்கோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உண்மைதான் சார். அதை நினைத்தாலே வயிறெல்லாம் எரியுது. அப்பாவி மான்களையும், மரைகளையும் கதறக் கதற சுட்டுக்கொலை செய்து. தோலை உரித்து, இறைச்சாக விக்கிறாங்க. நாங்க நால்வரும் ஒரு பெரிய சத்தியம் செய்திருக்கோம். " என்றான் சார்ல்ஸ்.

" சத்தியமா ? என்னன்னு ? "

" இனிமே ஒருபோதுமே வனவிலங்குகளைச் சுட்டுக்கொண்டுவர்ர இறைச்சியை சாப்பிடுவதில்லைன்னு. ஆரம்பத்திலே நாங்க நால்வரும்தான் இப்படி சத்தியம் செய்தோம். மெல்ல மெல்ல இதை எங்க நண்பர்கள் மத்தியிலே சொன்னோம். எங்க கிராமத்தைச் சேர்ந்த இருபதுக்கு மேற்பட்ட எங்க வயதையுடையவங்க, எங்களோட சேர்ந்து சத்தியம்செய்து கொண்டாங்க. "

" ரொம்ப நல்ல வேலை செய்தீங்க. உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா ?"

" என்ன சார் ? " பாபு கேட்டான்.

" சமீபத்தில வனசீவிகள் பாதுகாப்பு திணைக்களத்தினாலே மேற்கொண்ட ஒரு கணக்கெடுப்பின்படி, நம்மநாட்டிலே இப்போ இருப்பதெல்லாமே மொத்தமாக ரெண்டாயிரத்து சொச்சம் யானைகள்தான். மனிதர்கள் யானைகளைச் சாகடிக்கும் விகிதத்தைப்பார்த்தால், இன்னும் சில வருடங்களில் யானை இனம் நம்ம நாட்டிலே இருந்து மறைந்து போனாலும் போகும். பின்னால் வரும் சந்ததிகள் யானைகளைப் பார்க்க வேண்டுமென்றால் படங்களில்தான் பார்க்கலாம். அல்லது ஆபிரிக்க கண்டத்துக்கோ, இந்தியாவுக்கோதான் போகணும். "

யானைகள் தொடர்பாக அப்புஉறாமி கூறியதையெல்லாம் அவர்கள் நால்வரும் வைத்த கண் வாங்காமல் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அப்புஉறாமியின் வயதான மனைவி அவர்களுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். அவளுக்கு அவர்களை அப்புஉறாமி அறிமுகப்படுத்தினார்.

"ரொம்ப நல்லது. நான் இப்போ உங்களுக்கு என்ன செய்யணும்?"

" இப்போதைக்கு உங்களிடமிருந்து நாங்க எதையும் எதிர்பார்க்கலே. எங்க சங்கத்துக்கு போசகரா இருக்க நீங்க சம்மதித்ததற்கு ரொம்ப நன்றி. எங்க சங்க நடவடிக்கைகள் தொடர்பாக நாங்க அடிக்கடி வந்து சந்திப்போம். அப்போதெல்லாம் எங்களுக்கு நீங்க ஆலோசனைகள் சொன்னாப் போதும். வர்ர ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாங்க எங்க சங்கத்தின் முதலாவது கூட்டத்தைக் கூட்ட இருக்கிறோம். நீங்க அதிலே கலந்துகொண்டா பெரிய உதவியாயிருக்கும்." என்றான் அப்புஉறாமியை உற்றுப்பார்த்தவாறு பாபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நான் கட்டாயம் வருவேன். என்னை வந்து அழைத்தது போல, உங்க கிராமத்துக்குப் பக்கத்திலே இருக்கிற வனசீவிகள் பாதுகாப்பு வலயத்துக்குப் பொறுப்பான துரையையும் கூட்டத்துக்கு அழைங்க. நான் சொன்னதா சொல்லுங்க. அவர் வருவாரு. "

"கட்டாயம் அழைக்கிறோம் சார். நீங்க மறந்திடாம வந்துடுங்க. "

அப்புஉடறாமியிடம் விடைபெற்று, புத்தகப்பைகளுடன் சுமார் மூன்றுமைல் தூரத்திலிருந்த தங்களது கிராமத்தை நோக்கி அவர்கள் செல்லத் தொடங்கினர்.

## 03

மாணிக்கம் மண் வெட்டியைத் தோளில் போட்டவாறு தனது குடிசைக்கு வரும் போது இருட்டி விட்டது. அவனது உடம்பு நிறைய வியர்வை. கால்கள் இரண்டிலும் சகதி அப்பி இருந்தது. துவாய்த் துண்டொன்றை இடுப்பில் கட்டியிருந்தான். வயது நாற்பதுக்குச் சற்று அதிகம். முறுக்கேறிய உடலமைப்பு. முன் நெற்றியில் வழுக்கை. வாய் நிறைய பீடிப்புகை நாற்றம்.

" பாக்கியம்....." அழைத்த வாறே மண்வெட்டியை குடிசை ஓரமாக வைத்துவிட்டு மரக்குற்றியொன்றில் உட்கார்ந்தான். மடித்துக் கட்டிய சாரனுக்கு வெளியே தொடைகளில் அடர்ந்து படர்ந்திருந்த கறுப்பு மயிர்கற்றைகள் தலை காட்டின.

" இப்பத்தான் வந்தீங்களா ? " கேட்டவாறு பாக்கியம் அவனருகில் வந்தாள்.

" ஓம் பாக்கியம். தோட்டத்திலே சரியான வேலை. வாழை மரங்களுக் கெல்லாம் பாத்தி புடிச்சேன். துரவிலேருந்து தண்ணி ஊத்தினேன். மரக்கறி நாட்டியிருக்கிற பகுதிக்கெல்லாம் தண்ணி ஓடுறதுக்கு கானு வெட்டினேன். ஆமா..... பாபுவை பின்னேரமா என்னோட கூடமாட நிக்கிறதுக்கு அனுப்புன்னு சொல்லிட்டுப் போனேனே . அவன் ஸ்கூல்லருந்து இன்னும் வரல்லையா ? "

" வந்துட்டான். வந்ததும் வராததுமா ஆக்கி வைத்திருந்ததிலே ஒரு புடியைச் சாப்ட்டுட்டு தலையிடின்னு படுத்துட்டான். பாவம். படிக்கப் போற புள்ளைதானே. "

" படிக்கப் போறது சரிதான். அதுக்காக நான் தனியே கிடந்து கஸ்டப்படணுமா? கொஞ்சம் வந்து என்னோடு நின்றா செத்தா போயிடப் போறான். அவன் படிக்கப் போறது என்னமோ எனக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லே. என்னோட சேர்ந்து தோட்டத்தைச் செய்தா, நாலு காசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாதிச்சு, நாமும் மெல்ல மெல்ல இந்தக் குடிசையை களிமண்ணாலே கட்டிடலாம். என்ன சொல்றே ? " கீழே கிடந்த பலகைபோன்ற ஏதோ ஒன்றைக் கையில் எடுத்து கால்களில் அப்பிக் கொண்டிருந்த சேற்றை வழித்தவாறு மாணிக்கம் கேட்டான்.

" உங்க போக்கும், பேச்சும் எனக்கு கொஞ்சம் கூட புடிக்கல்ல. நீங்கதான் படிக்கல்ல. இந்தத் தொழிலுக்கு வந்துட்டீங்க. அதுக்காக, நம்ம புள்ளையும் படிக்கக் கூடாதென்பது என்ன ஞாயம்? இன்றைக்கு மட்டும் தலையிடின்னு படுத்துட்டான். மற்ற நாட்களிலே அவனுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் தோட்டத்துக்கு வராமலா விடுறான்? இதப் பாருங்க. இந்தக் கதையை இன்னியோட உட்டுடுங்க. இல்லே, இதனாலே பெரிய பிரச்சினையே வந்துடும். " என்றாள் பாக்கியம் உறுதியுடன்.

பாக்கியம் மாணிக்கத்தைத் திருமணம்செய்து சுமார் பதினேழு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அவள் தோட்டத்துரை ஒருவரின் வீட்டில் வேலைக்காரியாக வேலை செய்து கொண்டிருந்த நாட்களில் அவரின் தோட்டத்தில் கூலியாளாக வேலை செய்ய வந்தவன்தான் மாணிக்கம். அவர்கள் இருவரும் தனியே சந்திக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் பல கிடைத்ததனால் இருவருடைய கண்களும் கதை பேசத் தொடங்கி..... வாய்களினால் உரையாடி..... இருவருமே துரைக்குத் தெரியாமல் வீட்டை விட்டு ஓடி..... தொலை தூரத்திலிருந்த கோயிலொன்றில் அவன் அவளுடைய கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டி மனைவியாக்கிக் கொண்டான். பாபுவையும் சேர்த்து அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். மற்ற இரண்டும் பெண்கள். மாணிக்கம் பார்ப்பதற்கு அப்பாவியாகத் தெரிந்தாலும் சற்று முரட்டுப் பேர்வழி. சற்று முன்கோபக்காரன். பாக்கியமும் அவனுக்கு சளைத்தவளல்ல. விட்டுக் கொடுக்காமல் கதைக்கக் கூடியவள்.

"சரி. சரி. என்ன இழவோ செய். நீயாச்சு! உன் மகனாச்சு! ஆனால் அதை நினைச்சாத்தான் எனக்கு பயமா கிடக்கு." என்றான் மாணிக்கம்.

" எதை ? "

" கோடை காலம் தானே . ராவுவேளைகளிலே காட்டு யானைகள் தோட்டத்துக்குள்ளே வந்து, குலை தள்ளியிருக்கிற வாழைமரங்களை சேதப்படுத்திடுமோன்னுதான் பயமா இருக்கு. "

" ஒண்ணும் பயப்படாதீங்க. எதுவும் நடக்காது."

" நானும் அந்த கதிர்காமத்தையனை சதா வேண்டிக்கிறது அதைத்தான்."

"உடம்பைக் கழுவிட்டு உள்ளுக்கு வாங்க. தேத்தண்ணி தர்றேன்"

மாணிக்கம் எழுந்து, துரவை நோக்கிச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இரவு பன்னிரெண்டைத் தாண்டி விட்டிருந்தது. நிலவு இன்னும் காய்ந்தது. நிலாக் கதிர்கள் மரக்கிளைகளில் மொய்த்து மகிழ்ந்தன. பெரிய மரங்களின் நிழல்கள் நீண்ட தூரத்துக்கு இருட்டு யானைகளின் உருவங்களாகக் காட்சி தந்தன. காற்று தொடர்ச்சியாக குளிரை வாரியிறைத்தது. பக்கத்து வன வலயத்திலிருந்து வனமிருகங்களின் இடைவிட்ட சப்தங்கள் நள்ளிரவின் நிசப்தத்தைக் கலைத்தன.

கிராமத்தின் குடிசைகள் எல்லாமே மௌனத்தின் வசப்பட்டு அசையாமல் உறங்கின.

திடீரென........

எங்கோ ஒரு மூலையிலிருந்து " மகே அம்மே....." என்ற சப்தம் பெருங் குரலில் கேட்க..... தொடர்ந்து அதைப் போன்ற சப்தங்களும்..... தடிக்குரல்களும்...... விளக்கு வெளிச்சங்களும்..... ஆளுக்காள் அங்கேயும் இங்கேயுமாக ஓடுவதுமாக..... மரக்கிளைகள் பெரிதாக முறிக்கப்படுவது போன்ற சப்தமும்...... டார்ச் லைட்டுக்களின் ஒளி பாய்ச்சல்களுமாக..... குடிசைகளுக்குள் சுருட்டி முடக்கியவாறு படுத்திருந்த பலர் பழைய அழுக்குப் போர்வைச் சீலைகளை தூக்கியெறிந்து விட்டு அவிழ்ந்து கிடந்த சாறனை ஒரு கையால் வயிற்றுடன் அமுக்கிப்பிடித்தவாறு வெளியே ஓடி வந்தனர். கசமுச சப்தம் அங்கும் இங்குமாகக் கேட்டது. சில நிமிடங்களில் எல்லாமே அடங்கிவிட்டது.

அப்போதுதான் கனவுகண்டு விழித்தவன்போல கண்விழித்த மாணிக்கம் பக்கத்தில் கோணிச்சாக்கில் சுருண்டு படுத்திருந்த பாக்கியத்தை இருட்டில் மெதுவாகத்தொட்டான்.

" பாக்கியம். என்ன சத்தம் ? " கரகரத்த குரலில் கேட்டான்.

" ஆனை வந்திருக்கும்போல. இப்போ சத்தம் இல்ல. " ஏற்கனவே விழித்துக்கொண்டு படுத்திருந்த பாக்கியம் மாணிக்கம் கேட்டதுமே பதிலளித்தாள்.

" ஆனைதான் வந்திருக்கும் . இப்ப ஒரு சப்தமும் இல்ல. நீ படு."

அவர்கள் மீண்டும் நித்திரையாகினர். யானை மாணிக்கத்தின் தோட்டத் துக்குள்ளால் தான் ஓடிச் சென்றது என்பதை அவன் அப்போது அறிந்திருக்க வில்லை.

பொழுது விடியும் போதே படுக்கையிலிருந்து எழுந்து விடும் பாபு அடுத்த நாள் காலை அவ்வாறு எழுந்திருக்கவில்லை. நேரத்தோடேயே எழுந்து, சற்றுத்தூர சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றுக்குச் சென்று, அதற்குச் சமீபமாகவுள்ள புதர்களுக்குள் காலைக் கடன்களை முடித்துவிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுநீரில் கால் முகம் கழுவி, பானைக்குள் கிடக்கும் பழஞ்சோற்றை உப்புத் தண்ணீருடன் பிசைந்து தாய் கொடுப்பதைச் சாப்பிட்டு, சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள கல்லூரிக்குச் செல்வதற்காக வீட்டை விட்டுப்புறப்படுவது அவனது வழக்கம். இன்று அவன் இவைகள் எதிலுமே ஈடுபடவில்லை.

அவன் அணிந்திருந்த அழுக்குப்படிந்த தடித்த சுவெட்டரை தலைவரை இழுத்துவிட்டுக் கொண்டு, உடுத்திருந்த சாரனுக்குள் கால்கள் இரண்டையும் சுருட்டியவாறு இன்னும் படுத்திருந்தான்.

பாக்கியம் கொடுத்த தேநீர் கசாயத்தை இடக்கையில் படிந்துகிடந்த துளிச் சீனியை நாக்கால் நக்கியவாறு மாணிக்கம் பருகிமுடித்தான். மண்வெட்டியை எடுத்து தோளில் வைத்தான்.

" பாக்கியம் "

" என்ன ? " குடிசையின் பின்பக்கத்தில் பெருக்கிக் கொண்டு நின்ற பாக்கியம் குரல் கொடுத்தாள்.

"பாபு இன்னும் எழும்பலையா ? பொழுதைப்பாரு. எழுப்பிவிடு" என்றான்.

துடைப்பத்தை புதரொன்றில் சாத்திவிட்டு அழுக்குக்கைகளை உடுத்திருந்த சீத்தையில் தேய்த்தவாறு குடிசைக்குள் நுழைந்து பழைய பாயொன்றில் முடங்கிக் கிடந்த பாபுவைத்தொட்டாள்.

" கடவுளே! இங்க வாங்களேன். நெருப்பா காயுதே! " என்றாள் பதறியவாறு.

மாணிக்கம் மண்வெட்டியை எறிந்துவிட்டு குடிசைக்குள் ஓடினான். பாபுவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

" பாக்கியம். காய்ச்சல் அடிக்குது. நேத்துப் பின்னேரம் தலையிடிச்சிருக்குது இதுக்குத்தான். இப்ப என்ன செய்றது ? "

" யாரிடமாவது காட்டத் தேவைல்லியா ? "

" இப்பவேணாம். கொத்தமல்லி இருந்தா அவிச்சிக்கொடு. தோட்டத்துக்கு போயிட்டுவாரன். தொடர்ந்து காய்ச்சல் இருந்தா நான் போய் ஏதாவது குளிசை வாங்கிட்டு வாரன். "

" காசு இருக்கா ? "

" அதுக்குத்தான் தோட்டத்துக்கு போறேன்னேன். முத்தின வாழைக்குலை இரண்டு இருக்கு. வெட்டி டவுனுக்குக் கொண்டுபோனா வித்துட்டு காசு எடுத்திடலாம்."

மண் வெட்டியை கையில் எடுத்தவாறு தோட்டத்தை நோக்கிச் சென்ற மாணிக்கம் சுமார் ஒரு மணி நேரத்தில் முகத்தில் தீப்பொறிகளுடன் திரும்பி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பாக்கியம்! " சப்தமிட்டான்.

குடிசைக்குள்ளிருந்து வெளியே தலை நீட்டிய பாக்கியம் "என்ன, உடனேயே திரும்பீட்டீங்க? " என்றாள்.

" நடந்த அநியாயத்தைக் கேட்டியா ? "

" என்ன நடந்தது ? "

" ராவு கிராமத்துக்குள்ளே வந்த ஆனை நம்ம தோட்டத்துக்குள்ளாலதான் ஓடிப் போயிருக்கு."

" நம்ம தோட்டத்துக்குள்ளாலேயா ? "

" ஆமா. தோட்டத்தை வளைச்சுப் போட்டிருக்கிற கம்புவேலியை உடைச்சிப் போட்டு, வாழை மரஙகளிலே அஞ்சு மரங்களையும் முறிச்சுப் போட்டு, குலைகளை காலால மிதித்து சிதைத்து எறிஞ்சிட்டுப் போயிருக்கு"

"கடவுளே! இப்ப என்ன செய்றது ?"

"நம்ம தோட்டத்துக்கு மட்டுமில்ல. கமகேட தோட்டத்துக்கும் போய் நிறைய அநியாயம் செய்திருக்கு. அவன் தலையிலே கையை வைத்து குந்திக்கொண்டு இருக்கான். கூட்டத்தை விட்டுப் பிரிஞ்ச தனி அலியன் போல."

" நல்லகாலம். தனியா வந்ததாலே அஞ்சு மரங்களைத்தான் முறிச்சி இருக்கு. கூட்டத்தோட வந்திருந்தா, தோட்டத்தையே அழிச்சிட்டுப் போயிருக்கும். "

மாணிக்கம் அசையாது தூரத்தே தெரிந்த எதையோ பார்த்தவாறு இருந்தான். அவனுடைய மனதுக்குள் எதைப்பற்றியோ சிந்திப்பதாக கண்கள் காட்டின. அவனுக்குள் ஒளித்துக் கொண்டிருந்த வக்ர எண்ணங்கள் எழுந்து செயற்பட எத்தனித்தன.

"பாக்கியம். இந்த அலியன் இன்னும் வரத்தான் செய்யும். ஏற்கனவே வாழை மரங்களைத் திண்டு ருசி கண்டுட்டு. அதனாலே...... "

"அதனாலே...? "

" வேற மாற்றுமருந்து இல்லை. கொல்லவேண்டியதுதான்." கண்களில் உறுதி தெரிய கரகரத்த குரலில் கூறினான்.

" யானையைக் கொல்லப் போறீங்களா ? "

" வேறு என்ன தான் செய்வது ? தோட்டம்செய்யத் தொடங்கிட்டோம். அதாலதான் சீவனம் நடக்கணும். காய்ச்சலால பாபு படுத்திருக்கான். அவனுக்கு பனடோல் வாங்கத்தானும் ஒரு ரூபா காசு எங்கிட்ட இல்ல. எனக்கு நிச்சயமா தெரியும். இன்று ராவைக்குக் கூட அந்தயானை வரத்தான் போகுது. அதுவும் நம்ம தோட்டத்துக்கு வரத்தான் போகுது. "

" அது எப்படி அவ்வளவு நம்பிக்கையா சொல்றீங்க ? "

" அது நம்ம தோட்டத்துள்ளால தான் கடந்த ராவு போயிருக்கு. கிராமத்துக்குள்ளே வாரதுக்கு அதுதான் லேசான வழியின்னு அதுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிஞ்சிருக்கு. அதனாலே....."

" என்ன செய்யப் போறீங்க ? "

" கமகேயோட கதைச்சிட்டேன். அப்பாஸிக்கிட்டே துவக்கு இருக்கு. ராவைக்கு நானும் அவனுமா தோட்டத்துக்குப் போய் அது வந்ததும் சுட்டுக் கொல்லப்போறோம். " குரலில் உறுதி தொனிக்க மாணிக்கம் கூறினான்.

"கடவுளே. புள்ள குட்டிகளோட வாழுற நாம அந்தப்பெரியசீவனைக் கொலை செய்து எதுக்காக பாவத்தைத் தேடணும்?"

" பாவமாவது! புண்ணியமாவது! அதைக் கொல்றதா முடிவு செய்தாச்சு. அதை அப்படியே விட்டு வைத்தா.... கடந்த ராவு கமகேட தோட்டத்தை அழிச்சிது. ராவைக்கு என் தோட்டத்தை அழிக்கும். நாளை ராவைக்கு அப்பாஸிட தோட்டத்தை அழிக்கும். இப்படியேபோனா, கிராமத்தைவிட்டு நாம எழும்ப வேண்டியதா போகும். ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுத்துடணும். எடுக்கலேன்னா, பயந்து, பயந்தே சாக வேண்டி வந்தாலும் வந்துடும். "

பாக்கியம் அவனுக்கு எடுத்துக்கூறிய நீதிஉபதேசங்கள் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகின.

பாபு காய்ச்சலால் அனுங்கியவாறு படுத்திருந்தாலும், அவர்களின் உரையாடல் அத்தனையையும் செவிமடுத்தான்.

அவனுடைய வீட்டுக்கு சிறிது தூரத்தில் வசித்த லஸ்ஸன்னவை சந்திக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

**பி**ற்பகல் நான்குமணி சுமார் இருக்கலாம். லஸ்ஸன்னவும், சலீமும் பாபுவின் வீட்டுக்கு வந்தனர். பாக்கியம் முற்றத்தில் விறகு தறித்துக் கொண்டு நின்றாள்.

" வாங்க. பாபுவுக்கு சுகமில்லையே " என்றாள் அவர்களைக் கண்டவுடன்.

"பாபுவுக்குச் சுகமில்லையா? அதான் ஸ்கூலுக்கு வரல்லையா?" சலீம் கேட்டான்.

" ஆளுக்கு சரியான காய்ச்சல். உள்ளே போய் பாருங்க. இன்னமும் படுக்கார் தான். "

" என்ன வைத்தியம் செய்தீங்க ? "

" அதை ஏன் கேக்கே மனே. வாழைக்குலைகளை வெட்டி டவுணுக்குப் போய் வித்துட்டு மருந்து வாங்கிட்டு வாரதா தோட்டத்துக்கு மாமா போனாரு. ராவு தோட்டத்துக்குள்ளே ஆனை வந்து குலைகளை யெல்லாம் முறிச்சி கசக்கி எறிஞ்சிட்டுப் போயிருக்கு. கைலே காசு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதமும் இல்லை. அதான் மாமா பகலெல்லாம் யோசனையா குந்திக் கொண்டிருந்தாரு."

" பரவால்ல மாமி. நான் போய் சைக்கிளை எடுத்து வந்து பாபுவை டவுணுக்கு அழைத்துச் சென்று டாக்டரிடம் காட்டி மருந்து எடுத்துக் கொண்டு வாரேன். சலீம். நீ பாபுவோட கதைச்சுக் கொண்டிரு. இதோ வந்துடறேன். " கூறிவிட்டு லஸ்ஸன்ன திரும்பி வேகமாக நடக்கத் தொடங்கினான். சிறிது நேரத்தில் சைக்கிளுடன் வந்தான். பாபுவை சலீப் அணைத்தவாறு அழைத்துவந்து சைக்கிள் பாரில் ஏற்றி வைக்க உதவினான்.

லஸ்ஸன்ன ஒற்றையடிப் பாதை ஊடாக சைக்கிளைச் செலுத்திக் கொண்டிருக்கும் போது அன்று காலை நடைபெற்ற அத்தனை உரையாடல் களையும் பாபு அவனிடம் கூறினான்.

" ஆமா லஸ்ஸன்ன. எங்கப்பாவும் கமகே மாமாவுமாக அந்தயானை வந்தா எங்க தோட்டத்துக்குள்ளேயே நின்னு சுட்டுக் கொல்லுதா இருக்காங்க. அப்பாஸ் மாமாவிடம் துவக்கை வாங்கி வந்து அப்பா வீட்டுக்குள்ளே ஒழிச்சி வைச்சிருக்காரு. இரவைக்கு அவங்க ரெண்டு பேருமா தோட்டத்துக்குப்போய் காத்துக் கொண்டிருந்து யானை வந்ததும் சுடப்போறாங்க. "

" அவங்க திட்டத்தை எப்படியாவது முறியடிச்சி யானையைக் காப்பாத்தணும். இன்று ராவைக்கு அதைக்கொலைசெய்வாங்க. நாளை ராவைக்கு வேறொரு யானை வந்தா அதையும் கொல்வாங்க. யானைகளைக் கொலை செய்யாதீங்கன்னு நாம போய் அவங்க காலைப்புடிச்சி கெஞ்சினாலும், அவங்கதிட்டத்தை மாற்றப் போறதில்லை. அதனாலே நாம வேற ஏதாவது திட்டம் வகுக்கணும். "

" என்ன திட்டம் வகுக்கலாம் ? " பாபு கேட்டான்.

" ஆஸ்பத்திரிக்குப் போய் உன்னை டாக்டரிடம் காட்டிட்டு அப்புஉறாமி அங்கிளையும் சந்திச்சிட்டு வருவோம். " லஸ்ஸன்ன வேகமாக சைக்கிளை மிதித்தான்.

## 04

வனத்தில் எங்கோ ஒரு மூலையில் மெல்லிய மின்னல் தெறித்தது. காய்ந்து கொண்டிருந்த நிலவை பெரியதொரு கருமேகம் மறைக்கத் தொடங்கியதும் காடு முழுவதையும் இருள் கௌவியது. பெருத்த குரலில் காட்டெருமையொன்று கத்திய சப்தம் நிசப்தத்தைக் கிழித்தவாறு கேட்டது.

இரவு உணவை நேரத்தோடு முடித்துக் கொண்ட கமகே வாய்க்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலையை நிரப்பியவாறு நடந்து வந்து மாணிக்கத்தின் குடிசையை அடையும் போது வாசலில் நின்ற நாய் வள்த்தது.

" கமகே, என்ட என்ட " வாய்நிறைய அழைத்தவாறு மாணிக்கம் வெளியே வந்தான்.

" அபி யமுத ? "

" பொட்டக் இண்ட. மங் மொனவ உறரி காலா என்னங் "

" ஏன் இன்னும் சாப்பிடல்லை ? நேரம் என்ன இருக்கும் ? "

" ஒம்பது இருக்குமா ? "

" இருக்கும். நீ கெதியா சாப்டுட்டு எடு. "

" வாங்க. வந்து சாப்பிடுங்க " குடிசைக்குள்ளிலிருந்து பாக்கியம் உரத்துக் குரல் கொடுத்தாள்.

" கமகே. நான் பாக்கியத்தைக் கூப்பிடறேன். நீ அவகூட கதைச்சுக் கொண்டிரு. நான் ஒரு புடி சாப்டுட்டு வந்துடறேன். எனக்கு பகல்கூட ஒழுங்கா சாப்ட கிடைக்கல்ல. " மாணிக்கம் சென்ற சிறிது நேரத்தில் பாக்கியம் வெளியே வந்தாள். கையில் கொண்டுவந்த லாந்தரை நீட்டிக் கொண்டிருந்த மரக்கிளையொன்றில் தொங்கவிட்டாள். மரக்குற்றியொன்றில் அமர்ந்தாள்.

" அவரு எல்லாம் சொன்னாரு. ராவு உன் தோட்டத்துக்குள்ளே வந்த அலியன் தோட்டம் முழுதையும் அழிச்சிப் போட்டாமே ? எனக்கு சரியான மன வருத்தம். "

" அதை ஏன் கேக்கே பாக்கியம். யானை ஒரு தோட்டத்துக்குள்ளே புகுந்தா அப்புறம் அந்தத் தோட்டத்தைக் கைகழுவ வேண்டியதுதான். அதுகளுக்கு என்ன பைத்தியமோ, மரங்களையெல்லாம் உடைச்சி, நொறுக்கி, கசக்கி தூள் தூளாக்கிட்டுத் தான் போகுதுகள். நல்லகாலம். நான் நித்திரைவராம முழிச்சிக்கொண்டு இருந்ததாலே, தோட்டத்துக்குள்ளே சப்தம் கேட்டதும், பெரிசா இரைச்சல்போட்டு கலைத்ததாலே ஓடிப் போயிட்டு. இன்னும் கொஞ்சம்நேரம் அங்கேயே நின்றிருந்தா முழுத் தோட்டத்தையும் மண்ணாக்கி இருக்கும். "

" பாவம்! அது சரி. இப்போ அதைச் சுட்டுக் கொல்லப் போறீங்களாமே ? "

" சுட்டுக்கொல்லாம என்ன செய்வது? தோட்டத்திலே கிடைக்கிற லாபத்திலே தான் குடும்பம் நடத்தணும். ஆகஉள்ள ஒரே வருமானத்தை அது ஒரு ராவுக்குள்ளே நாசமாக்கிட்டுப் போனா அதை சுட்டுக் கொல்லாம என்ன செய்வது ? " கமகே உணர்ச்சி வசப்பட்டவாறு கூறினான்.

" ஏன் கமகே, அந்தப் பெரிய சீவனைக் கொலைசெய்றது பாவம் இல்லையா? வாய் பேசாத அப்பிராணி. நமக்குத் தோட்டம் தான் சோறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுது என்பது ஐயறிவு படைத்த அந்த மிருகத்துக்கு என்ன தெரியும்? உன் தோட்டத்திலுள்ள வாழை மரமும், காட்டுக்குள்ளே நிக்கிற கித்துள்மரமும் அதைப் பொறுத்த வரையிலே வெறும் மரங்கள்தான். இரண்டையும் அது தனது உணவுப் பொருளாத்தான் நினைக்கும். எது அதுக்கு ருசிஉள்ளதாதோணுதோ அதைத்தான் கூடுதலாக சாப்பிட விரும்பும். "

" பாக்கியம், இதெல்லாம் எனக்கும் நல்லா தெரியும். ஆனா. அதை விட்டு வைச்சா நமக்கெல்லாம் ஆபத்து. நம்ம தொழிலுக்கு ஆபத்து. அதான் நானும், மாணிக்கமுமா சேர்ந்து அதைச் சுட்டுக்கொன்று போட்டுடுறதாக தீர்மானிச்சுட்டோம். " கமகே உறுதியான குரலில் கூறினான்.

பாக்கியம் நீண்டதொரு பெருமூச்சை ஊதினாள்.

" எனக்கென்னவோ, நீங்க ரெண்டுபேரும் பெரியதொரு பாவத்திலே ஈடுபடப் போறீங்கன்னு தோணுது."

அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது குடிசைக்குள்ளிருந்து மாணிக்கம் வெளியே வந்தான். சாரனை மடித்துக் கட்டியிருந்தான். அரைக்கை பெனியன் அணிந்திருந்தான். தலையில் துவாயால் முண்டாசு கட்டியிருந்தான். வாய் நிறைய வெற்றிலை. கையில் நீண்ட துப்பாக்கி.

" கமகே. உன்ட டார்ச் லைட் நல்ல வெளிச்சம் தானே ? என்டதுக்கு பெட்றி வீக் "

" என்டது புது பெட்றி. போவமா ? "

" கிளம்பு. பாக்கியம், பாபுவுக்கு குளிசைகளைக் கொடு. நான் எத்தனை மணிக்கு வருவன் என்டு சொல்ல முடியா. நீ சாப்டுட்டு பிள்ளைகளோட படு."

" ஆமாமா. உங்க பிள்ளைகள் சாப்டணும், படுக்கணும், சுகமா இருக்கணும். ஆனா, உங்களை விட பலமடங்கு பெரிய, புத்தியில்லாத, வாய்பேசமுடியாத சீவனை மட்டும் கொலை செய்யப் போறீங்க. கடவுள் உங்களுக்கு ஏன் தான் இந்த மாதிரி வக்ர புத்தியைக் கொடுத்தானோ?" முகத்தைச் சுளித்தவாறு பாக்கியம் கூறினாள்.

" ஏன் மாணிக்கம், உன் பொன்சாதிக்கு அந்த யானையைக் கொல்றது துளி கூட விருப்பமில்ல போல? "

" அவ கிடக்கா. நீ வா போகலாம் " துப்பாக்கியை முறித்து தோளில் போட்டவாறு மாணிக்கம் கமகேயுடன் அவனது தோட்டத்தை நோக்கி ஒற்றையடிப் பாதையூடாக நடக்கத்தொடங்கினான்.

தோட்டத்தினுள் கிளைவிட்டு வளைந்து வளர்ந்துநின்ற நாவல் மரமொன்றின்மேல்ஏறி கிளையொன்றில் அருகருகே கமகேயும், மாணிக்கமும் அமர்ந்திருந்தனர். இருள் மேகம் விலகி, இப்போது நிலாக்கதிர்கள் காட்டையும், தரையையும் முத்தமிட்டன. மரங்களுக்குள்ளால் நிலவுவெளிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமையாக தெரிந்தது. தொலை தூரத்தில் டொப் என சப்தமொன்று கேட்டது.

"மாணிக்கம், சப்தத்தைக் கேட்டியா ?"

"யாரோ மானுக்குச் சுட்டிருக்கான்."

"ரொம்ப தூரத்திலே சப்தம் கேட்டது. இல்லே ?"

"தெற்குப்பக்கமா கேட்டிச்சு. ஆமா. நாமளும் நாளைக்குப் போவமா? மானிறைச்சி சாப்பிட்டு ரொம்பநாளாச்சு. அப்பாஸிட துவக்கை திருப்பிக் கொடுக்கறதுக்குமுன்னாலே, மானொன்றை சுட்டுட்டுத்தான் கொடுக்கணும்," கூறியவாறு வாய்க்குள்ளிருந்த வெற்றிலைச்சாறு கடைவாய்வழியாக வழிய சிரித்தான்.

"போகலாம் மாணிக்கம். ஊட்டிலே ஒரு பிரச்சினை இருக்கே ?"

"ஊட்லே பிரச்சினையா ?"

"ஆமா. என்மகன்ட பிரச்சினை."

"யாரு? ஆரியவங்சயா?"

" அவன்தான். இனிமே வேட்டையாடிக் கொண்டுவார வன மிருகங்களின் இறைச்சியை தின்னுவதில்லைன்னு சத்தியம் செய்திருக் கானாம். அவன்ட தங்கச்சிமாரோட கதைச்சி அவர்களையும் அவன்பக்கம் திருப்பிக்கொண்டான். முந்தா நாள் பாரு. இஸ்மாயில் வேட்டைக்குப் போனதாச் சொல்லி மரைஇறைச்சி கொஞ்சம் தந்தான். மெனிகே அதை சமைச்சா. பிள்ளைகள்யாரும் கறியைச் சாப்பிடல்ல. நானும், மெனிகேயும் சாப்டுட்டு மிச்சத்தை கொட்டி விட்டோம்."

."அடப்பாவி! வேட்டைஇறைச்சியைச் சாப்பிட்டா என்னவாம் ?"

" வனமிருகங்கள் தேசிய சொத்தாம். அவைகளை அழிக்கிறது தேசத்தையே அழிக்கிறதுக்கு சமமாம். மனிதர்கள் சுதந்திரமா நடமாட உரிமையிருக்கிறாப்ல, வன மிருகங்களும் பயமில்லாம வாழுறத்துக்கு நாம உதவணுமாம். " கூறியவாறு கமகே மெதுவாக சிரித்தான்.

" புதிய புதிய ஞானமெல்லாம் இந்தக் காலத்து பையன்களுக்கு ஏற்படுதுன்னு சொல்லு. யாரு எது சொன்னாலும், நானும், நீயும் நாளை ராவைக்கு வேட்டைக்குப் போறோம். துவக்கும், தோட்டாவும் கைலே இருக்கும் போதே மானிறைச்சி சாப்பிட்டுடணும். "

அவர்கள் மெதுவாக பேசிக் கொண்டிருந்தார்கள். நேரம் நிமிடங்களாகக் கரைந்து கொண்டிருந்தது. குருட்டு வௌவாலொன்று அவர்களின் முகங்களில் உராயுமாப் போன்று சிறகடித்துப் பறந்தது, தூரத்தே மின்மினிப் பூச்சிகள் மர இருட்டின்கீழ் ஒளிக் கற்றைகளாகப் பறந்து திரிந்தன. நுளம்புகள் கால்களில் கடித்தன. ஓநாயின் ஊளைச் சப்தம் பெரிதாக தொடர்ச்சியாகக் கேட்டது.

சிறிது நேரத்தில்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுத் தொலைவில் மரக்கிளையொன்று முறிபடும் சப்தம் கேட்டது.

"மாணிக்கம். சத்தத்தைக் கேட்டியா ? ஆசாமி வாரான். கீழே இறங்கி ரெடியாவோம். " கமகே பதறத் தொடங்கினான்.

மாணிக்கம் கையிலிருந்த டார்ச்லைட்டை சப்தம் வந்த திசை யைப்பார்த்து நீட்டி ஒளியைப் பாய்ச்ச வைத்தான்.

" கமகே, ஒன்றையும் காணல்ல. தொலைவிலதான் வருதுபோல. கொஞ்சம் பொறு. எப்படியும் இந்த வழியாலதான் வரணும். கிட்ட வரும் போதே சரியா நெற்றிப் பொட்டுக்கு வேலைகொடுக்கேன். அப்புறம்பாரு மாணிக்கமா கொக்கான்னு. "

சில விநாடிகள் கரைய.......வகைசொல்லமுடியாத சிலசப்தங்கள் சமீபமாகக் கேட்க.....

அவர்கள் இருவரும் மரத்திலிருந்தும் வேக, வேகமாக கீழே இறங்கினர். டார்ச் லைட்டை தலைக்கு மேலே உயர்த்தி மிகத்தூரத்துக்கு வெளிச்சத்தைப் பாய்ச்சி மாணிக்கம் தேடினான்.

திடீரென அவனது கைகள் நடுங்கின.

" கமகே..... அது வருது " முணுமுணுத்தான். வெளிச்சத்தை அணைத்தான். டார்ச்சை கமகேயிடம் கொடுத்தான்.

" நான் சொன்னதும் டார்ச்சை அந்தப்பக்கமாக அடி. அதுக் கிடையிலே துவக்கைச் சரி பண்ணிக்கிறேன்." துப்பாக்கியை எடுத்து அதனது அடிப்பகுதியை தோளில் அணைக்க வைத்து, யானை வந்து கொண்டிருக்கும் திசையைப்பார்த்தவாறு குழாயைத்திருப்பும்போது.....

சற்றுத்தொலைவில் சற்றுமே எதிர்பாராதவிதமாக இடிவெடி களின்சப்தம் ஒன்றன் பின் ஒன்றாக காடுஅதிரக் கேட்டது. சுற்றுச்சுற்றாக சுற்றிச்சென்ற வெடியொன்று உயரே மிகப்பலத்தசப்தத்தில் வெடித்தது.

கண நேரத்தினுள் மரக்கிளைகளினூடாக யானை பாய்ந்து ஓடும் சப்தமும் கேட்டது.

## 05

கூரையில் வேயப்பட்டிருந்த இற்றுப்போன தென்னோலை களுக்குள்ளால் பாய்ந்து வந்த சூரியக் கதிர்கள் முகத்தைப் பிராண்டியதால் மாணிக்கம் கண் விழித்தான். "அடட...... ரொம்ப நேரத்துக்கு படுத்திட்டேன் போல....." கூறியவாறு படுத்திருந்த பாயைச்சுற்றி ஓரமாக வைத்துவிட்டு குடிசைக்கு வெளியே வந்தான். பாக்கியம் குடிசையோடு இணைந்திருந்த குசினிக்குள் குந்தியவாறு தேநீருக்காக நீரைக் கொதிக்க வைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தாள். பாபு வாசலில்கிடந்த மரக்குற்றியில் குந்தியவாறு வேப்புக் குச்சியொன்றால் பல் விளக்கியவாறிருந்தான்.

" ராவு என்ன நடந்துச்சி ? சுட்டுக் கொன்னுட்டீங்களா?" பாக்கியம் கேட்டாள்.

"அதை ஏன் கேக்கே? யானையைக் கண்டதும் நான் துவக்கை தோள்லே அணைச்சி சுடுறதுக்காக றெடி பண்ணும் போது யாரோ இடிவெடி எறிஞ்சு அதைக் கலைச்சுட்டாங்க. அது திரும்பி ஓடிட்டுது."

" அப்போ...... தப்பிட்டுது. அத கடவுள் காப்பாத்திட்டாரு."

"இப்ப என்னவோ தப்பிப் போயிட்டுது. ஆனா, அதுக்கு சாவு என் கையால தான்."

பாபு மனதுக்குள் ஆழமாகச் சிரித்துக் கொண்டான். யானை தப்பிச் சென்றதுக்கு காரணமானவன் அவன்தான் என்பது மாணிக்கத்துக்கோ, பாக்கியத்துக்கோ தெரிந்திருக்கவில்லை. பாபுவுக்கு அவனுடைய நண்பர்களைச் சந்தித்துக் கதைக்க வேண்டும் போல் தோன்றியது.

**அ**ப்பாஸ் வாசலில் பெரியதொரு துரவைத்தோண்டிக்கொண்டிருந்த வேளையில் வெளியூரைச் சேர்ந்த குடாபண்டா அவனைச் சந்திப்பதற்காக வந்தான். ஒற்றையடிப் பாதைவழியாக தான் செலுத்தி வந்த சைக்கிளை மரமொன்றில் சாத்தி வைத்து விட்டு " ஸலாம் அப்பாஸ் " என்றான் சற்றுக் கரகரப்பான குரலில்.

" அடடா...... குடா பண்டா! வா..வா எப்ப வந்தே?" தோண்டிக் கொண்டிருந்த துரவுக்குள்ளிருந்து தலையைமட்டும் உயர்த்தி அப்பாஸ் அவனை வரவேற்றான்.

" என்ன, துரவு தோண்டுறாப்ல?"

" ஓம்பா, தண்ணிக்கு ரொம்ப கஸ்டமாயிருக்கு. அதான் தோண்டறேன். " கூறியவாறு துரவுக்குள்ளிருந்து வெளியேறி வந்தான்.

" சலீம். அந்தப்பாயை எடுத்து வெளியே போடு. குடா பண்டா இருக்கட்டும். "

சலீம் மரநிழலில் விரித்தபாயில் குடாபண்டா அமர்ந்தான். மடித்துக் கட்டியிருந்த சாரணை கீழே அவிழ்த்துவிட்டவாறு அப்பாஸ் பாயின் ஓரத்தில் குந்தினான்.

"சலீம், உம்மாவிடம் சொல்லி தேத்தண்ணி வாங்கிட்டு வா."

அவர்கள் இருவரும் சில வினாடிகள் ஆளையாள் பார்த்தவாறு இருந்தனர்.

"என்ன இந்தப் பக்கம்?" அப்பாஸ் அமைதியைக் கலைத்தான்.

"உன்னைத்தான் பார்த்துட்டுப் போகலாம்னு. உன்னாலே எனக்கு ஒருஉதவி தேவைப்படுது." குடாபண்டா கூறிவிட்டு அப்பாஸின் முகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுருவினான்.

"என்னால உதவியா ? சொல்லேன். முடிந்தால் செய்றேன்."

"உனக்கு முடியும். அதான் உன்னைத்தேடி வந்தேன். விசயம் என்னன்னா......"

"சொல்லு."

"உன் வண்டிலையும், மாடுகளையும் வித்திட்டியாமே?"

"ஓம்பா. வித்துட்டேன்."

"ஏன் ?"

" உனக்குத்தெரியும்தானே. வண்டிலை வைச்சிருந்ததே கள்ளமரம் ஏத்துறதுக்குத்தான். கொஞ்சநாளா பெரியகெடுபிடி. கள்ளமரம் கொண்டு போவது ரொம்பக் கஸ்டம். எவனாவது றேஞ்சருக்கு தகவலைக் கொடுத்துடறான். அல்லது பொலிசுக்கே போய் சொல்லிடறான். மாடுகளை சும்மா வைச்சுக் கொண்டு சாப்பாடு கொடுக்க கட்டுப்படியாகல்ல. அதனாலே, அதை வித்துட்டு தோட்டம் போட தொடங்கினேன். "

" தோட்டத்திலே வரும்படி வருதா ?"

" பரவால்ல. மரக்கறிகள்ல நல்ல லாபம் இருக்கு. ஆனா, இந்தக் குரங்கும், யானையும் தான் ரொம்ப கஸ்டப்படுத்துதுங்க. இதப்பாரு, ரெண்டு நாளைக்கு முன்னால கமகேட தோட்டத்துக்குள்ளே யானை புகுந்து தோட்டம் முழுதையும் மண்ணாக்கிப் போட்டு போயிட்டு."

" பெரிய பரிதாபமாயிருக்கே. ஒண்ணும் யோசியாம இவைகளை சுட்டுத்தள்ள வேண்டியது தான்."

குடாபண்டா கூறியது மரமொன்றில் சாய்ந்தவாறு நின்ற சலீமுக்கும் கேட்டது. குடாபண்டாவின் மீது அவனுக்கு வகைசொல்லமுடியாத எரிச்சலும். கோபமும் ஏற்பட்டது.

" அதைத்தான் இப்போ செய்யப்போறோம். நீ வந்த விசயத்தைச் சொல்லலியே ? "

" அப்பாஸி. என் பொன்சாதி சவுதியிலே இருந்து காசு அனுப்பியிருக்கா. புதுசா வீடு கட்டுறேன். ஒரு பார்ட்டியைப் புடிச்சு, காட்டுக்குள்ளே கொஞ்சம் மரம் தறிச்சுப்போட்டிருக்கேன். உன்னைச்சொல்லி தறிச்ச மரத்தை ஏத்திக்கொண்டு வரலாமான்னு பார்த்தா. உன்கிட்ட வண்டில் இல்ல. என் கிராமத்து வண்டில்காரனொருவனைப் புடிச்சா, அவனுக்கு வழி தெரியாது. காட்டுக்குள்ளேருந்து கள்ள வழியாலதான் அதக்கொண்டுவரணும். உன்கென்டா காட்டுவழியெல்லாம் அத்துபடி. அதனாலே....."

"அதனாலே......?"

" நீ அந்த வண்டிக்காரனோட கூடப் போய் அவனுக்கு வழியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக் கொடுத்தீய்னா பெரிய உதவியாயிருக்கும். உன் செலவுக்கு வேண்டியதை நான் தந்துடுறன்." கூறிவிட்டு குடாபண்டா அப்பாஸின் முகத்தைப் பார்த்தான்.

" காசைப்பத்தி எதுக்குக் கதைக்கே. எனக்கு மனுசன்தான் பெரிசு. எப்ப செய்யணும் ? "

" இன்றைக்கே செய்துடலாம். நான் உடனேயே திரும்பிப் போய் வண்டிலை இங்க கொண்டு வாறன். நீ றெடியா இரு. மரத்தை ஏத்திக் கொண்டு பொழுதுபட்டதும் புறப்பட்டா சரி."

" நேரத்தோட வந்துடு. நான் சாப்பாட்டை அடிச்சிட்டு றெடியா இருப்பேன். மரங்க எங்க கிடக்கு?"

குடாபண்டா தறித்த மரங்கள் கிடக்கும் சரியான இலக்கைக் கூறினான்.

" எனக்கு இடம் தெரியும். பலமுறை அந்தப்பகுதியிலே இருந்து மரம் கொண்டு போயிருக்கேன். "

சலீம் கொண்டு வந்த தேநீரை குடாபண்டா பருகினான்.

" இந்தா அப்பாஸி. இதை இப்போதைக்கு வைச்சுக்கோ. விசயம் முடிஞ்சதும் இன்னும் தாரன்."

" இப்ப எதுக்கு இதெல்லாம். அப்புறமா பார்த்துக்கலாமே " என அப்பாஸ் உதடுகளால் கூறினாலும் குடாபண்டா நீட்டிய ஐம்பதுரூபா தாளை வாங்கிக் கொள்ள மறுக்கவில்லை.

குடாபண்டா விடைபெற்றுச் சென்ற பின்னர் சலீம் தான் நின்றிருந்த இடத்திலிருந்தும் அகன்று, தனது நண்பர்களில் ஒருவனான சார்ல்ஸ்சைப் பார்க்கச் சென்றான். சார்ல்ஸ் இவனுடன் கதைத்துவிட்டு பாபுவையும், லஸ்ஸன்னவையும் சென்று சந்தித்தான்.

அப்பாஸ் லுஹர் தொழுகையை முடித்தகையுடன் மதிய உணவை சாப்பிட்டுவிட்டு குடா பண்டாவின் வருகைக்காக காத்திருந்தான்.

சிறிது நேரத்தில் இரட்டைமாடுகள்பூட்டிய வண்டிலுடன் குடாபண்டா அவனுடைய வீட்டை நோக்கி வருவது அவனுக்குத் தெரிந்தது.

" நபிஸா, நான் வெளியே போயிட்டு வந்துடுறேன்" மனைவியிடம் கூறிவிட்டு, டார்ச்லைட்டை கையிலெடுத்தவாறு அப்பாஸ் எதிரே வந்து கொண்டிருந்த வண்டிலைநோக்கி நடந்தான்.

காட்டுக்குள் தறிக்கப்பட்டமரங்கள் கிடந்தஇடத்தை அவர்கள் அடையும் போது பொழுது அஸ்தமன நிலையில் இருந்தது. பறவைகள் மேலெழுந்து அங்குமிங்குமாக பறந்து கொண்டிருந்தன. யானைகளால் சாய்க்கப்பட்ட சில தேக்குமரங்கள் கருகிய இலைகளுடன் தூரத்தூர வீழ்ந்து கிடந்தன. காட்டெலிகள் துள்ளிப்பாய்ந்து சென்றன. எறும்புப்புற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொன்றுக்குள்ளிருந்து ஓணானொன்று தலையை மட்டும் உயர்த்தி இவர்களைப் பார்த்துக் கண்ணசைத்தது.

மரங்கள் வீழ்ந்துகிடந்த இடத்தில் முண்டாசு கட்டிய இருவர் நின்றிருந்தனர்.

" எல்லாமே முதிரை மரங்களாகத்தான் வெட்டி இருக்கீங்க " என்றான் அப்பாஸ்.

" வாழ்க்கையிலேயே முதன்முதல்ல கட்டுற வீடுதானே அப்பாஸ். போடுற மரத்தை நல்லதா போடணும்னுதான் இவங்ககிட்டே சொல்லி வெட்டவைச்சேன். முதல்ல எல்லோருமா எதையாவது சாப்பிடுவோம். அப்புறமா வேலையைத் தொடங்கலாம். "

குடாபண்டா கொண்டுவந்திருந்த பனிஸ்களை ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டாக பகிர்ந்தளித்தான். சாப்பிட்டுவிட்டு போத்தல்களிலிருந்து தண்ணீர் குடித்தனர். வெற்றிலை மென்றனர்.

" இப்போதைக்கு ரெண்டு மரங்களை மட்டும்தான் இதிலே கட்டலாம். அப்பாஸி வழியைக்காட்டித்தந்தா, நாளைக்கு மற்ற ரெண்டையும் ஏற்றிக்கொண்டுவந்து தாரேன்" என்றான் வண்டிக்காரன்.

சற்றுத்தூரத்துக்கொன்றாகக் கிடந்த இரண்டுமரங்களை சிரமத்தின் மத்தியில் அருகருகே இணைத்துப்போட்டனர். இரண்டுமரங்களும் இடைநடுவில் வரக்கூடியவாறு வண்டிலைக் கொண்டுவந்தனர். மாடுகளை அவிழ்த்துவிட்டு வண்டிலை முன்பக்கமாகச் சரித்து ஏற்கனவே மரங்களின்கீழ்போடப்பட்டிருந்த சங்கிலியொன்றின் இரண்டு முனைகளையும் உயர்த்தி வண்டிலுடன் சேர்த்துக்கட்டினர். கீழே சரிந்துகிடந்த வண்டிலை பலம்கொண்டமட்டும் உயர்த்தி பின்னால் சாய்த்து மரங்களின் பின் பகுதியில் போடப்பட்டிருந்த சங்கிலியை உயர்த்தி இணைத்தனர். வண்டிலின் முன் பகுதியை கீழேபணித்து நால்வர் பிடித்துக்கொள்ள வண்டில்காரன் மாடுகளை அழைத்துவந்து கழுத்துக் கயிறுகளை இணைத்துவிட்டான். மாடுகள் சற்றுத் திணறினாலும் பழக்கம் காரணமாக பாரத்தைப் பொறுத்துக் கொண்டன.

" புறப்படலாமே " என்றான் வண்டில்காரன்.

புஸ், புஸ் என மூச்சிரைத்தவாறு சங்கிலிகளினால் வண்டிலுடன் இணைக்கப்பட்டிருந்த பாரமான மரங்கள் இரண்டையும் சுமந்து மாடுகள் நடந்தன. பாரம் கனக்கும் போதெல்லாம் நடக்கமறுத்தவேளைகளில் வண்டில்காரன் கையிலிருந்த கேட்டியினால் மாடுகளின் முதுகில் பலமாக அடித்தான். வாய் பேசமுடியாத ஊமைப் பிராணிகள் இரண்டும் தலை விதியை நொந்தவாறு நடந்து கொண்டிருந்தன.

அப்பாஸ் காட்டிய வளைந்த, நெளிந்த ஒற்றையடிப் பாதையூடாக அவர்கள் சென்றனர். வெளியே நிலாக்காய்ந்தாலும் காட்டுக்குள் இருளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. தூரத்தே மான்கூட்டமொன்று ஒன்றன் பின் ஒன்றாக துள்ளிப்பாய்ந்துசென்றது. காட்டெருமைகள் காடு அதிரக்கத்தின. நொய் என்ற சப்தத்தில் வல்லூறுகள் இரைந்தன. நரிகள் விட்டுவிட்டு ஊளையிடும் சப்தம் இடைக்கிடை கேட்டது. காட்டுப் பன்றிகள் இரண்டு சற்றுத்தூரநின்று இவர்களைப் பார்த்துவிட்டு தலைகளைத் தொங்க விட்டவாறு ஓடிச் சென்றன.

அவர்கள் இப்போது காட்டின் எல்லைப் பகுதிக்கு வந்துவிட்டனர். காட்டு மிருகங்கள் கிராமத்தினுள் புகுவதைத்தடை செய்வதற்காக சற்று இடைவெளிக் கொன்றாக விறகுகளைப் போட்டு கிராமத்தவர்கள் மூட்டிய நெருப்பு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. நெல் வயலொன்றினுள்ளிருந்து தகரடின்களில் பலத்த சப்தத்தில் அடிக்கும் சப்தம் கேட்டது.

"அப்பாஸி, இது உன் கிராமமா தெரியலையே. வேற இடமா? "

" ஆமா. இந்தவழியால கொஞ்சம்தூரம் போனா சந்தி வரும். சந்தியைக் கடந்தா உங்கஊருக்குப் போறவழி வண்டிக்காரனுக்குத் தெரியும். என்னபா. உனக்குத் தெரியுமா? "

" தெரியும் அப்பாஸி "

" குடாபண்டா. இனி நான் தேவலை. உங்களுக்கு போயிக்கலாம். நான் இதால நடந்துபோனா என் ஊட்டுக்குப் போயிடலாம். "

அப்பாஸ் கூறியவாறு அவர்களை விட்டும் பிரிய முற்பட்டபோது குடாபண்டா அவன் அருகில் வந்து " இந்தா, இதை வைச்சுக்கோ " எனச்சொல்லி ஐம்பதுரூபா தாளொன்றைக் கொடுத்தான். அப்பாஸ் அதைவாங்கி சாரத்துக்குள் சொருகிக் கொண்டு, டார்ச்லைட்டைஅடித்து பாதையைப்பார்த்தவாறு வீட்டைநோக்கி நடக்கத் தொடங்கினான்.

வண்டில் சந்தியை அடைவதற்கிடையிலேயே அவர்களுக்கு ஆபத்து காத்துக் கொண்டிருந்ததை அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை. மாடுகள் வேண்டாவெறுப்புடன் வண்டிலை இழுத்துக்கொண்டு நடந்தன.

**வ**ண்டிலில் பூட்டியிருந்த மாடுகள் இரண்டும் உயர்ந்தும், பெருத்தும் இருந்தன. மாடுகளின்சக்தி வீணாகிவிடக் கூடாதென்பதற்காக வண்டில்காரன் அவைகளுக்கு நலம் அடித்திருந்தான். வளைந்துசென்ற காலடிப்பாதையில் மாடுகள் இரண்டும் தலைகளை அசைத்தவாறும் மூச்சிரைத்தவாறும் நடந்துசென்றாலும், சிறிது ஏற்றமான ஓர்இடத்தில் நடக்கமுடியாமல் அவஸ்தையுற்று, நடையின் வேகத்தைக்குறைக்க முயன்ற வேளையில் கையிலிருந்த கேட்டிக்கம்பால் வண்டிக்காரன் அவைகளின் முதுகில் ஓங்கி அறைந்தான். மாடுகள் வேகத்தைக் கூட்டின.

"என்னதான் இருந்தாலும் நீங்க இந்த மாடுகளுக்குச் செய்றது பயங்கர அனியாயம்பா" என்றான் கூடவே நடந்துசென்ற குடாபண்டா.

" ஏன் சொல்றே ? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வாய்பேசமுடியாத இந்தஉயிர்கள் யாருக்கும் எந்தப் பாவமும் செய்யாம தாங்களுண்டு, தங்க வாழ்க்கையுண்டுன்னு சுதந்திரமா வாழ்ந்து கொண்டிருக்கும்போது உங்களைப் போலவங்க அவைகளை விலை கொடுத்து வாங்கிடுறீங்க. அவங்க கழுத்துகளிலே கயிற்றைக்கட்டி உங்கஅடிமையா ஆக்கிக்கொள்றீங்க. அப்புறம்........"

குடாபண்டா கூறியதைக் கேட்டதும் வண்டிக்காரன் வாய்விட்டுச் சிரித்தான்.

"என்ன பண்டா. மனுசன்களைத்தான் அடிமையா ஆக்கிக் கொள்வாங்க. மாடுகளையும் மனுசங்களோடு ஒப்பிட்டுச்சொல்றியே" கூறியவாறு இன்னும் பெரிதாகச்சிரித்து, மாடுகளின் தொய்ந்தநடையைக் கண்டதும் தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து கேட்டியினால் அவைகளின் முதுகுகளில் அடித்தான்.

"சனியங்க. நேரம் போய்க்கொண்டிருக்கு. நேரத்தோட ஊரு போய்ச் சேர்ந்திடணும்னு எண்ணமே இல்லாம தேர் அசையிறாப்போல அசையிறதைப் பாரேன்." கூறியவாறு ஒரு மாட்டின் வாலைப்பிடித்து பலம்கொண்ட மட்டும் முறுக்கினான்.

" ஏய்.....ஏய்.....பாவம்பா! வாய் பேசாத அப்பிராணிங்க. "

" பாவமாவது! புண்ணியமாவது! பாவம் பார்த்தா நாலு புள்ளைகளுக்கு சோறு கொடுக்க ஏலாது. பட்டினியால சாகவேண்டியதுதான்"

" இதபாரு. இந்த மாடுகள் சம்பந்தமா வண்டிக்காரங்க செய்றது எல்லாமே கூட்டுமொத்தமா பாவம் தான். பாரமான பொருட்களை இழுக்கறதுக்கு அவைகளுக்கு சக்தி வேண்டும் என்பதற்காக நலம் அடிச்சிப்போடுறீங்க. நலம் அடிபட்ட இவைகள் தங்களுக்கு இயற்கையாக ஏற்படுகிற உடல் ஆசையைத் தணிக்க முடியாம எப்படியெல்லாம் தவிக்கும் என்பதை கொஞ்சமாவது யோசிச்சுப் பார்க்கிறீங்களா? மற்ற மாடுகள் தங்களின் கண் முன்னாலேயே ஒன்றோடஒன்று சுகம் அனுபவிக்கும்போது இவைகள் தங்கள் ஆற்றாமையை எண்ணி எப்படியெல்லாம் வேதனைப்பட்டு கண்ணீர் சிந்தும் என்பதை நீங்க கொஞ்சமாவது எண்ணிப்பார்க்கிறதே இல்லையே." கூறிவிட்டு குடாபண்டா சிறிதாக பெருமூச்சு விட்டான்.

நரிகளின் ஊளைச்சப்தம் பெரிதாகக் கேட்டது. மிகத்தூரத்தில் யானையொன்றின் பிளிறும்சப்தம் மரக்கிளைகளினூடாக காற்றில் தேய்ந்து ஒலித்தது. குருவிகளின் கீச் ஒலி காடு முழுதும் இரைந்தது. பன்றிக் கூட்டமொன்றின் உறுமல் ஓசையும் அவைகள் துள்ளி ஓடுவதனால் காய்ந்தசருகுகள் நொறுங்கும் ஒலியும் கேட்டது.

" அப்பாஸி சந்தி வரும் என்றானே. ஒரு இழவையும் காண ல்லையே " என்றான் குடாபண்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எல்லாம் வரும். இந்த மூதேவிகள் நடக்கணுமே. "

"ஏம்பா அதுகளுக்கு ஏசறே? பாவம்பா. வாய் பேசாதவைகளைப் போட்டு ஏம்பா இப்படி வருத்துறீங்க? நடக்கும் போது குளம்பு தேயக் கூடாதுன்னு அவைகளின் பாதங்களிலே லாடம் அடிக்கிறீங்க. துடிக்கத்துடிக்க லாடத்திலே ஆணிகளை வைத்து அவைகளின் பாதங்களுக்குள்ளேயே ஏற்றிவிடுறீங்களே. ஒரு விசயம் தெரியுமா உனக்கு?" குடாபண்டா கேட்டான்.

" என்னது ? "

" பொலிஸ்காரங்க உண்மையைச்சொல்ல வைப்பதற்காக குற்றவாளிகளின் நக இடுக்கிலே குண்டுசியை ஏற்றுவாங்களாம். "

" அம்மாடியோவ்! "

" என்ன அம்மாடியோவ் ? ஏன் கூச்சலிடுறே ? "

"நக இடுக்கிலே குண்டுசியை ஏற்றினா எப்படியெல்லாம் நோகும்"

" அப்படித்தான். அல்லது அதைவிட கூடுதலாத்தான் நீங்க ஆணி ஏத்துறப்போ மாடுகளுக்கும் வலிக்கும்."

" நீ சொல்றதும் உண்மைதான். "

" நீ ஒத்துக்கொண்டா சரி. அது மட்டுமா செய்றீங்க? உங்க மாடு காணாம போயிடக்கூடாதுன்னு உங்கபெயரையே அவைகளின் முதுகிலே சூட்டுக்கோலாலே எழுதிடுறீங்க. நாலு கால்களையும் கயிற்றினாலே இறுகக்கட்டி அவைகளை அசைய முடியாதவாறு பண்ணி பதைக்கப் பதைக்க தோலிலே காய்ச்சினஇரும்புக்கோலாலே சூடுபோடுறீங்களே. என்ன பரிதாபம்பா. " குடாபண்டா கூறியவாறு தொலை தூரத்திலிருந்து காற்றோடுகலந்துவந்த பட, படவென்ற சப்தமொன்றுக்காக காது கொடுத்தான்.

" என்னப்பா அது சத்தம் ? "

" எனக்கு கேக்கலையே "

" பட.... பட.... ன்னு கேட்டதே."

" தூரத்திலே யானைங்க மரக்கிளைகளை முறிச்சிருக்கும்." வண்டிக்காரன் சொல்லிவிட்டு வண்டிலின்கீழேதொங்கிய லாந்தரின் வெளிச்சத்தை அதிகரித்தான்.

இருவரும் மௌனமாக சிறிதுதூரம் நடந்தனர்.

" ஏன்பா இந்தஊமைப் பிராணிகளுக்கு இப்படியெல்லாம் வேதனை செய்றீங்க? மூக்கைக்துளைத்து மூக்கணாங்கயிறு போடுறீங்க. சுமக்கமுடியாத பாரத்தை வண்டிலிலே ஏற்றிவிட்டு அடித்து விரட்டி இழுக்கப்பண்றீங்க. அவைகளினாலே உங்களுக்கு எவ்வளவு லாபம் அடையணுமோ அவ்வளவையும் அடைஞ்சுட்டு, இனிமே பிரயோசனமே இல்லைன்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனப்புறம் கசாப்புக் கடைக்காரனுக்கு வித்துப்புடுறீங்க. ரொம்ப அனியாயந்தான்பா செய்றீங்க" கூறியவாறு மெல்லிய இருட்டினூடாக தெரிந்த வண்டிக்காரனின் முகத்தை குடாபண்டா உற்று நோக்கினான்.

வண்டிக்காரனின் முகம் பாறையாக இறுகிக்காணப்பட்டது. அவன் ஆழமாக எதையோ சிந்திப்பதாக பாவனை காட்டினான். சடுதியாக மீண்டும் ஒருதரம் சிறிது தூரத்தில் பட...பட....வென்ற அந்தச் சப்தம் காற்றில் கலந்து தேய்ந்தது.

" ஆனைதான் பண்டா மரக்கிளையை முறிக்கிது." வண்டிக்காரன் கூறிவிட்டு கையிலிருந்த கேட்டியை உடுத்திருந்த சாரனிடுக்கினுள் சொருகினான். வலது உள்ளங்கையால் மாடொன்றின் முதுகைத் தடவிவிட்டான்.

" பண்டா. நானும்தான் பலதடவைகள் யோசித்துப் பார்த்திருக்கேன். இந்த வாய்பேசாத ஊமைகளுக்கு நான் செய்வது பெரிய்ய பாவம்தான். பழக்கப்பட்ட தொழிலாச்சே. இதைவிட்டுட்டா அப்புறம் புள்ளைங்க பட்டினியாலே துடிப்பாங்களேன்னு நினைச்சா, தொடர்ந்து இந்தத் தொழிலைத்தான் செய்யணும்னு தோணுது." கூறியவாறு சிறிது தரித்து நின்று, வண்டிலில் கட்டித்தொங்கிய கோணிப்பையொன்றினுள்ளிருந்து எடுத்த மட்டையொன்றைத்திறந்து, பாக்குத்தூள்களை சுண்ணாம்பு தடவிய வெற்றிலைக்குள் கொட்டி, புகையிலை வைத்து வாய்க்குள் கொதுப்பினான்.

" பண்டா, வெத்திலை போடுறியா? " கேட்டான்.

" வேண்டாம்பா. பீடி பத்திக்கிறேன். "

இருவரும் அசைந்து சென்ற வண்டிலோடு சேர்ந்து நடந்தனர்.

" ஆமா. நீ பெரிய்ய ஊடா கட்டப்போறியே. பணம் ஏது?" வண்டிக்காரன் வாய்க்குள்ளிலிருந்து சிவப்புநிற உமிழ்நீர் உதடுகளினூடாக வழியக்கேட்டான்.

" என் பொண்சாதி அனுப்பினா. அதான் ."

"பொண்சாதி அனுப்பினாவா? ஏன் அவ உன் கூட இல்லியா?"

" என்கூடத்தான். "

" அப்போ..... அவ அனுப்பினதா சொல்றே? "

" ஆமாப்பா. அவதான் அனுப்பினா. அவ சவுதியிலே."

" அடட...... அங்க போயிட்டாவா? ஆமா.... நான்தான் மாட்டை விலைக்கு வாங்கி அடிமையாநடத்துறேன்னு சொன்னே. உன்நிலை என்னைவிட மோசமா இருக்கும்போல தோணுதே. "

" நீ என்ன சொல்றே ? "

" பின்னே என்னபா. அரபுக்காரனுக நம்ம பொம்பிளைங்களை விலைக்கு வாங்றாப்ல வாங்கி அடிமைமாதிரிதானே நடத்துறாங்களாம்."

அவன் கூறிமுடிக்குமுன், குடா பண்டா "ஆ....." வென்ற பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்தத்துடன் காலொன்றைப் பிடித்தவாறு கீழே குந்தினான்.

" என்னப்பா? என்ன ஆச்சு ? "

" விரல்லே கல் அடிச்சுட்டு. ரத்தம் கொட்டுதே. "

வண்டிக்காரன் குனிந்து குடாபண்டாவின் விரலைப்பிடித்து நசித்து தோளில் கிடந்த துண்டைப்பிய்த்து சுற்றிக்கட்டிவிட்டான்.

" பார்த்து வாப்பா. "

அவர்கள் இருவரும் அசைந்துநடந்த வண்டில்மாடுகளுடன் இன்னும் சிறிது தூரம் நடந்து சந்தியை அடைவதற்கும், பாதையின்எதிரே நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளொன்றிலிருந்து சரேலென அவர்களின் முகங்களில் யாரோ டார்ச்லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சுவதற்கும் சரியாக இருந்தது.

" யார்டாது முகத்திலே வெளிச்சம் அடிக்கிறது?" சப்தமிட்டான் வண்டிக்காரன்.

" உங்கொப்பன்டா." கூறியவாறு டார்ச்லைட் ஒளியைத் தொடர்ந்து பாய்ச்சியவாறு அவர்களை நோக்கி ஓர்உருவம் நடந்துவரும்போது, பற்றைகளுக்குள் அதுவரை பதுங்கியிருந்த இன்னும் நால்வர் இருட்டினூடே குதித்து பாதைக்கு வந்தனர்.

06

நண்பர்கள் நால்வரும் பேசிக் கொண்டவாறு புல்வெளியின் அருகே மல்லாந்து கிடந்த பாறாங்கல்லின்மேல் வசதியாகஅமர்ந்துகொண்டனர். சித்திரை மாத சூரியக்கதிர்கள் அவர்களின் முகங்களைச் சுட்டாலும் காட்டினூடாக தவழ்ந்து வந்த தென்றல் சுட்டஇடங்களில் இதமாக ஒத்தடம் கொடுத்துவிட்டுச்சென்றது.

சலீம் எதையோநினைத்தவாறு சரேலென வாய்விட்டுச் சிரித்தான்.

" ஏன் சிரிக்கே? " லஸ்ஸன்ன கேட்டான்.

" இப்போ அவங்க ரெண்டு பேரும் பொலிஸ் கூட்டுக்குள்ளே நின்றவாறு ஒன்று, ரெண்டு எண்ணிக் கொண்டிருப்பாங்களாக்கும்." அவன் கூறவும் பாபுவைத் தவிர மற்ற இருவரும் வாய்பிளந்து வெடிச்சிரிப்புச் சிரித்தனர்.

" என்கிட்டயும் சொல்லுங்களேன். ஏன் சிரிக்கிறீங்க?" பாபு கேட்டான்.

காட்டினுள் மரம்வெட்டி வண்டிலில்ஏற்றிவந்த குடாபண்டாவையும், வண்டில்காரனையும் ரேஞ்சருக்குத் தகவல் கொடுத்து பிடிக்கவைத்ததை சவிஸ்தாரமாக சலீம் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரங்களை வெட்ட வைத்தது குடாபண்டாதானே. அவனை சுவர்களுக்குள்ளே வைத்துக்கொண்டு வண்டிக்காரனை விட்டு இருப்பாங்க" என்றான் சார்ல்ஸ்.

" இல்லபா. காலையிலேயே ரேஞ்சர்ஐயாவை சந்தித்துக் கேட்டேன். ஏற்றி வந்தது கள்ளமரம்தான் என நிருபிக்கப்பட்டா வண்டிலையும் பறிமுதல் பண்ணுவாங்களாம். அதான் சட்டமாம். "

" அப்படின்னா கள்ளமரம் ஏற்றவரும் லாரியொன்றைப் பிடித்துக் கொடுத்திட்டா நம்மைப் பொறுத்தவரை அது ஒரு சாதனைதான்." என்றான் பாபு.

" இல்ல பாபு. அந்த எண்ணம் ரொம்பப் பிழை. அவரைப் பிடிக்கணும், இவரைப் பிடிக்கணும் என்றெல்லாம் நாமஎண்ணி செயற்படக் கூடாது. நமது நோக்கமெல்லாம் வனத்தையும், வனசீவராசிகளையும் மனிதர்களிடமிருந்து பாதுகாப்பது தான். அவைகள் நமது சொத்து என்பதை நம்ம சனங்களுக்குப் புரிய வைப்பதுதான்" என்றான் சார்ல்ஸ்.

காட்டினுள் உடைத்தெடுத்த பாரமான விறகுக்கட்டைகளை தூக்க முடியாமல் தூக்கியவாறு சிலபெண்கள் தூரத்தே நடந்துசென்றனர். அவர்களின் பின்னால் ஒன்றின் மேல் மற்றொன்று பாய்ந்து சண்டையிட்டவாறு சில நாய்கள் ஓடின. உயரே சில பறவைகள் ஒன்றன்பின் ஒன்றாக நூல் வடிவில் பறந்தன. தொலைவில் ஆகாயத்தில் பட்டமொன்று குத்துக்கரணம் அடித்தது.

" ஏன்பா. இந்தப் பெண்கள் ஒவ்வொரு நாளுமே இவ்வளவு விறகுகளை காட்டிலிருந்து எடுத்துப்போய் விக்காங்களே. இதை எப்ப நிறுத்துவது?" சலீம் கேட்டான்.

" அதான்பா சொன்னேன். விறகுவாங்கவார லாரியொன்றைப் பிடித்துக் கொடுப்போம்னு." என்றான் பாபு.

" கொஞ்சம்பொறு பாபு. அப்பஉறாமி ஐயா என்ன சொன்னாருன்னு ஞாபகம் இருக்கா? நாமதான் இதுக்கெல்லாம் காரணம்னு உடனேயே நம்மை நாமே இனம் காட்டிக்கொள்ளக்கூடாது. நம்மகிராமப்பெண்களிலே அரைவாசிப் பேருக்கு மேலே இதைத்தான் தொழிலாசெய்றாங்க. லாரிக்காரங் களைக் காட்டிக்கொடுத்து இந்த வியாபாரத்தை நிறுத்திட்டோம்னா, நாம எல்லோருமே பஞ்சத்திலே அடிபடணும். சின்னத்துரைசார் சொல்வதுபோல குற்றம் செய்றவனைப் பிடிப்பதைவிட, குற்றம் செய்யாமல் தடுப்பதுதான் நாமசெய்யவேண்டியவேலை." கூறிவிட்டு லஸ்ஸன்ன நண்பர்களின் விழிகளை பார்வையால் ஊடுருவினான்.

" என்னதான் செய்யலாம் என்கே? " பாபு கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனைபேருமா சேர்ந்து கிராம மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். " லஸ்ஸன்ன கூறியதும் அனைவரும் தலையசைத்தனர்.

" இதுமட்டும் இல்லபா. இதபாரு. நாம நாலுஇனத்தவர்களுமே இந்தக் கிராமத்திலே வாழுறோம். அதுவும் ஒற்றுமையா வாழுறோம். இந்தக் கிராமத்தை நாம நாலுசமூகமும் ஒன்றாசேர்ந்து பெரிசா கட்டிஎழுப்பணும். நமக்குள்ளே பேதம்இல்லாம, ஒருஇனம் மற்ற இனத்தைவிட பெரியது என்ற எண்ணம்இல்லாம, எல்லா சமூகத்தையும் எல்லோரும் மதித்து போற்றக்கூடிய விதமாக..... இதை நாம கட்டி எழுப்பணும்பா. " என்றான் சார்ல்ஸ்.

" பெரிசா என்னென்ன வெல்லாமோ சொல்றே. இதையெல்லாம் நம்மைப் போன்ற சின்னவங்களாலே செய்யமுடியுமா ? " லஸ்ஸன்ன கேட்டான்.

"ஏன் முடியாது? சின்னத்துரை சார்தான் அடிக்கடி சொல்வாரே, எதிர்கால தலைவர்களே நீங்கதான்டான்னு, அவரைப்போன்ற பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு செயற்பட்டா, எந்தக்காரியத்தையும் செய்யலாம்பா. உங்களுக்குத்தெரியுமா, நம்மகிராமத்து ஆண்கள் காட்டிலே வேட்டையாடுவதை ரொம்ப குறைச்சிட்டாங்க. இதுக்கு நாமதானே காரணம்"

" அப்படி நீ சொல்றே. ஆனா என்அப்பாவும் கமகேயும் இன்று ராவைக்கு வேட்டைக்குப்போக இருக்காங்களே. அதை எப்படித்தடுப்பது?"

" உங்க அப்பாவுக்கு குறுக்குப்புத்தி. யானையைச் சுடப்போனாரு. முடியல்ல. இப்போ....." சலீம் கூறிவிட்டுச் சிரித்தான்.

"வேட்டைக்குப் போகாதீங்கன்னு அம்மா எவ்வளவோ சொல்லிப்பார்த்தா. துவக்கை உன்வாப்பாவிடம் திருப்பிக்கொடுப்பதற்கு முன்னாலே மானிறைச்சி தின்னுட்டுத்தான் கொடுக்கணுமாம்."

" திம்பாரு. திம்பாரு. அதையும் நாம பார்த்துக்குவோமே. " என்றான் சலீம்.

அவர்கள் சிறிதுநேரம் கண்ணுக்கெட்டிய தூரம்வரை அகன்று தெரிந்த புல்வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். வெட்டுக்கிளிகள் புல்நுனிகளில் தெத்தி விளையாடின.

" எனக்கு ஒரு யோசனை தோணுதுப்பா" என்றான் லஸ்ஸன்ன.

" என்ன ? " பாபு கேட்டான்.

" சங்கம் அமைப்பதற்கு முன்னாலே ஏதாவது சுலோகங்கள் எழுதி கிராமம் முழுதும் ஒட்டிவிடுவோம்."

" சுப்பர் ஐடியா" சலீம் ஒத்து ஊதினான்.

" என்னென்னு எழுதலாம்? " லஸ்ஸன்ன கேட்டான்.

" வனமும், வன சீவராசிகளும் நம்ம சொத்துக்கள் என்று."

" இதையும் சேர்த்துக் கொள்ளலாம்." என்றான் சார்ல்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எதை? "

" காட்டை அழிப்பது நாட்டை அழிப்பதற்குச் சமம்."

" சுப்பர்டா" என்றான் மீண்டும் சலீம்.

" நான் ஒன்று சொல்வேன். முதலிலே அப்புஉறாமி ஐயாவிடமும், நேஞ்சர் சாரிடமும் கதைப்போம். கடதாசியும், மையும் வாங்க பணம் தேவை. அதுக்கு அவங்க நமக்கு உதவி செய்யலாம். அவங்க ஒத்துக்கொண்டா இதைச்செயற்படுத்திடலாம்." என்றான் லஸ்ஸன்ன.

மாணிக்கம் துவக்கைத் தோளில் போட்டவாறு உடுத்திருந்த சாரனை உயர்த்திக்கட்டினான். தலையில் முண்டாசை இறுக்கினான்.

" பாக்கியம். நான் கமகேட ஊட்டுக்குப்போய் அவனையும் கூட்டிக்கொண்டு காட்டுக்குள்ளே போயிட்டு திரும்பிடறேன். மான் கொண்டுவந்தா உரிக்க ஆள் வேணும். ஒரேயடியா படுத்துடாம முளிச்சுக்கொண்டிரு." கூறியவாறு கையில்எடுத்த கத்தியொன்றை விரலால் தடவி கூர் பார்த்தான்.

சாப்பிட்டுமுடித்த கையை பானையொன்றிலிருந்து தண்ணீர் ஊற்றிக்கழுவி உடுத்திருந்த துண்டில் துடைத்தவாறு பாக்கியம் அவனருகில் வந்தாள்.

வானத்தில் அங்குமிங்குமாக சில நட்சத்திரங்கள் ஒளி உமிழ்ந்தன. அவளுக்குப் பின்னால் நின்ற நாயொன்று வள்த்தது.

" உங்க புத்தி எங்கதான் போய்ச்சுதோ. கடவுளே!" என்றாள்.

" ஏன் ? புத்திக்கென்ன குறைச்சல்? "

" பாபுவுக்கு உள்ள அறிவு கூட உங்களுக்கு இல்லியே. காட்டிலே வேட்டையாடிய மிருகங்களின் இறைச்சியைச் சாப்பிடவே மாட்டேன்னு அவன் சொன்னதுக்கப்புறம் ஒருநாளாவது இறைச்சி சாப்பிட்டு இருக்கானா? மிருகங்களும் மனிதர்களைப்போல உயிர்உள்ளவைதானே. ஒரு மனிதனைச்சுட்டு தோலை உரித்து கறிசமைத்து சாப்பிடச்சொன்னா நீங்க சாப்பிடுவீங்களா? " கேட்டுவிட்டு மாணிக்கத்தின் கண்களை ஊடுருவினாள்.

" சும்மா பேய்க்கதை கதைக்காதே. மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் இருக்கு. வீண்கதைகளை விட்டுட்டு போய் உன்வேலையைப்பாரு. அப்பாஸிட துவக்கை திருப்பிக் கொடுப்பதற்கு முன்னாலே மானிறைச்சியை ருசிபார்த்துவிட்டுத்தான் கொடுக்கணும்." கூறியவாறு முன்னே இரண்டு எட்டுக்கள் எடுத்து வைத்தான்.

" நான் ஒன்று மட்டும் சொல்வேன். மான் சுட்டு வந்தீங்கன்னா அதை முழுதும் நீங்களே தின்னு தீர்த்திடணும். பாபு தின்னாத போது நான் மட்டும் எப்படித் தின்னுவது?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அடிபோடி பைத்தியக்காரி. காட்டின் எல்லையிலே வசிக்கிற நமக்கு அனுபவிக்கக்கூடிய சந்தோசம்னா இவைகதான்டி. டவுனிலே வசிக்கறவன் இந்த இறைச்சிவகைகளின் ருசியையே அறியமாட்டான். நீ சாப்பிடுவியோ மாட்டியோ நான் போறது போறதுதான்."

சிறிது தூரத்தில் யாரோ நடந்து வருவது தெரிந்தது.

" யாரது....?" என்றான் தன் கையிலிருந்த டார்ச் லைட்டை உருவம் நடந்து வரும் திசையைப்பார்த்து அடித்தவாறு மாணிக்கம்.

" மந்தமாய் "

" கமகே, உன் ஊட்டுக்கு வரத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். இடையிலே இவ....... பாக்கியம்! எனக்கு புத்தியே இல்லையாம்னு ஒரே ஏச்சு."

" உனக்கா புத்தியில்லே? உன் உடம்பு முழுக்க புத்திதான். சரி சரி.........வா போகலாம். இந்த நேரந்தான் தளவாய்க்கு புல்மேய மான்கூட்டமோ, மரைக்கூட்டமோ வரும்."

அவர்கள் இருவரும் ஒருவர்பின் மற்றவராக நடைபாதையூடாக நடந்து..............காட்டை அண்மியதும்..................பட பட சப்தத்துடன் அங்குமிங்குமாக பட்டாசு வெடிப்பது போன்ற சப்தங்கள் கேட்டன.

" யார்டா அவன் காட்டுக்குள்ளே சீன வெடில்கள் வெடிப்பது?" என்றான் சப்தமாக கமகே.

" வெடிச்சத்தத்துக்கு மிருகங்களெல்லாம் கலைஞ்சு தறிகெட்டு ஓடியிருக்கும். காட்டுக்குள்ளே போய் பிரயோசனமே இல்ல. வா திரும்பலாம்" என்றான் மாணிக்கம்.

## 07

நாட்கள் மெதுவாக நகர்ந்தன. நண்பர்கள் நால்வரும் கூடுவதும், கலைவதுமாக பொழுதைக் கழித்தனர்.

ஒரு நாள். காலைச் சூரியக்கதிர்கள் அடர்ந்த மரக்கிளைகளின் ஊடாக கிராமத்தின் குடிசைகளையும், களிமண் வீடுகளையும் முத்தமிட்டன. சேவல்கள் சிறகடித்துப் பறந்தவாறு பெட்டைகளைத் துரத்தின. காலைகளுக்குள் சாணியை மிதித்தவாறு எழுந்துநின்ற பசுக்கள் வால்களால் முதுகைத் துடைத்தவாறு பெருங்குரலில் கத்தின. உடுத்திருந்த சாரனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிழ்த்து தோளில் போர்த்தியவாறு சில ஆண்கள் காலைக் கடனுக்காக பக்கத்து தளவாய்க்கு நடந்து செல்லும்போது ஒவ்வொரு மரங்களுக்கு அருகிலும் தரித்துநின்று சென்றனர். சிலபெண்கள் கைகளில் துடைப்பங்களுடன் தங்களது வீடுகளுக்கு முன்னால் நின்ற மரங்களை நோக்கி நடந்து வந்தனர். கிராமத்துக்கு பாலும், மரக்கறி வகைகளும் கொள்வனவு செய்வதற்காக சைக்கிள்களில் வந்த வியாபாரிகள் மரங்களுக்கு அருகே தரித்து நின்றனர். ஒவ்வொரு மரங்களிலும் வெவ்வேறு விதமான வசனங்கள் சிங்களத்திலும், தமிழிலும் வெள்ளைத் தாள்களில் எழுதப்பட்டு ஒட்டப்பட்டிருந்தன.

' வனமும், வன சீவராசிகளும் எங்கள் சொத்துக்கள்.'

' கொல்லாதே! கொல்லாதே! யானைகளைக் கொல்லாதே.'

' மிருகங்களிலிருந்து தோன்றியவன் மனிதன். உன் முன்னோரை நீயே கொல்லலாமா? '

' காட்டை அழிப்பது நாட்டை அழிப்பதற்குச் சமன்.'

' மரங்களை அழித்தால் மழையை இழப்பாய்.'

' நாம் அனுபவிப்பதை எதிர்கால சந்ததியினருக்காகவும் பாதுகாப்போம்.'

' வேட்டை இறைச்சியை உண்ணவே மாட்டோம்.'

' வனமிருகங்கள் எங்களின் நண்பர்கள். '

அன்று முழுவதும் கிராமத்தவர்கள் இதைப்பற்றியே கூடிக், கூடிக் கதைத்தனர்.

நண்பர்கள் நால்வரும் தங்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான இன்னும் சிலருடன் கிராமத்தில் சுற்றித்திரிந்து கடந்த இரவு தங்களால் ஒட்டப்பட்டவைகளை வாசித்து உள்ளுர மகிழ்ந்தனர்.

வன, வனசீவராசி பாதுகாப்பு திணைக்களங்களைச் சேர்ந்த உள்ளூர் அதிகாரிகள்தான் அவைகளை மரங்கள்தோறும் ஒட்ட வைத்ததற்கு காலாக இருந்திருப்பார்கள் என்பதுதான் கிராமத்தவர்களின் ஒட்டுமொத்த அபிப்பிராயமாக இருந்தது.

காலைச்சூரியன் கீழ்வானில் ஒளி காட்டுவதற்கு முன்னர் கிராமத்தை மூடியிருந்த மூடுபனியைக் கிழித்தவாறு மூச்சிரைக்க ஓடிவந்த கமகே எட்வேட்டின் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றான். புசுபுசுவென மூச்சுக்காற்றை வெளியே தள்ளினான். பெரிதாக நான்கைந்து தடவைகள் தும்மினான். மூக்கிலிருந்தும் வழிந்த சளியை இருவிரல்களால் நீவி தூர எறிந்தான். அவனுடைய தும்மல் சப்தத்தினால் கம்மாலைக்குள் அதுவரை சுருண்டு படுத்திருந்த நாயொன்று திடுக்குற்று கண்விழித்து கமகேயைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து வள்த்துவிட்டு சரேலென துள்ளிப்பாய்ந்து வீட்டின் பின்னால் ஓடியது.

கமகே சப்தமிட்டு எட்வேட்டை அழைத்தான். வீட்டின் பின்னால் நின்ற நாய் எட்டிப்பார்த்து பல தடவைகள் பெருங்குரலில் குரைத்துவிட்டு ஒளிந்து கொண்டது.

'இதையெல்லாம் காவலுக்கென்று வைத்திருக்கானே' கமகே தனது துக்கத்தின் மத்தியிலும் நினைத்தவாறு மீண்டும் பெயர்சொல்லி எட்வேட்டை எழுப்பினான்.

எட்வேட் தோளில் போர்த்திய சாரனுடன், கடந்த இரவு குடித்த சாராய வெறி நங்காத சிவந்தகண்களுடன் கதவைத்திறந்தவாறு வெளியேவந்தான்.

" அடட....கமகேயா? வா..வா..கொஞ்சம் படுத்துட்டேன்பா. ஆமா. .....என்ன விடியறதுக்கு முன்னாடியே.....? ஏதாவது அலவாங்கு, மம்மட்டி அவசரமா வேணுமா?" எட்வேட் இன்னும் மயக்கம் தெளியாதநிலையில் வார்த்தைகளை அடுக்கினான்.

" அதெல்லாம் ஒண்ணும் வாணாம்." கோபத்தில் உதடுகள் துடிக்க கமகே கூறினான்.

" அப்போ....? "

" உன் துவக்கு வேணும் "

இதைக் கேட்டதும் சரேலென எட்வேட் வெறி முறிந்து, சுயநிலைக்கு வந்தான்.

" எ...... என்னது......துவக்கா?"

" ஆமா."

" ஆரைச் சுடப்போறே? "

" ஆளையல்ல. அந்தப் பிசாசை!"

" பி......பி.....பிசாசையா? பிசாசை எப்படி துவக்கால சுடுவது?"

" பகிடி வேணாம் எட்வட். உன் துவக்கைத் தருவியா? மாட்டியா? அதைச் சொல்லு." கமகே உச்ச தொனியில் கேட்டான்.

" இதபாரு. இன்னுமே விடியலே. ஏன் இந்த நேரத்திலே கோபப்படுறே.? என்ன நடந்தது? சொல்லேன்." என்றான் கமகேயின் அருகில் வந்த எட்வேட்.

" எனக்கு நடந்தது உனக்கு நடந்திருந்தா இதுவரை சுட்டுப் பொசுக்கியிருப்பே. அந்தச்சனியன் ராவு வந்து தோட்டம் முழுக்க அழிச்சுப்போட்டு போயிருக்கு. எத்தனையோ நம்பிக்கையோட வளர்த்த மரக்கறிப் பயிர்களெல்லாமே சேதமாயிட்டு. என் புள்ளைகளும் நானும் இனி பட்டினி கிடந்து சாகணும். அதான்....... அந்த பிசாசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுக்கொல்லத்தான் உன் துவக்கு எனக்கு வேணும்." கூறியவாறு கமகே மூச்சிறைத்தான்.

" யானையைச் சுடப்போறியா? அதானே பார்த்தேன். யாரையாவது சுட்டுட்டு மறியலுக்குப் போப்பிறியோன்னு. இதபாரு கமகே, இது சட்டுப்புட்டுன்னு செய்ற காரியமில்ல. இப்ப ஊரு கொஞசம் குழம்பிப் போய் கிடக்கு. அதனாலே ரொம்ப யோசித்து நடந்துக்கணும். கொஞ்சம் இரு. அவளை எழுப்பிட்டு வந்துடறேன். தேத்தண்ணி போடட்டும்."

சிறிது நேரத்தில் இறுகப் போர்த்தியவாறு வீட்டினுள்ளிருந்து வெளியே வந்த சார்ல்ஸ் சற்று தூர நடந்துசென்று சாரனை உயர்த்தியவாறு மரத்தடியில் குந்தினான். அவனைத்தொடர்ந்து கலைந்தகூந்தலுடனும், அழுக்குச்சட்டையுடனுமாக எட்வேட்டின் மனைவி வெளியேவந்து வீட்டோடு கட்டப்பட்டிருந்த குசினியின் தகட்டுக்கதவை நீக்கியவாறு உள்நுழைந்தாள்.

" வா. கம்மாலைக்குள்ளிருந்து கதைப்போம்." எட்வேட்டும், கமகேயும் நடந்து சென்று அழுக்கான பெஞ்சொன்றில் அமர்ந்தனர்.

வளவினுள் நின்ற வேப்பமரத்தின் கிளையில் குச்சியொன்றை முறித்து சார்ல்ஸ் பல் விளக்கியவாறு நின்றான்.

" சொல்லு எட்வேட். அந்தப் பிசாசை எப்படித்தான் கொல்லலாம்?" கமகே தொண்டையைக் கனைத்தவாறு கேட்டான்.

"இதபாரு கமகே. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டுன்னு பழமொழியே இருக்கு. காட்டு மிருகங்களைக் கொல்லாம அவைகளைப் பாதுகாக்க ணும்னு ஊர் முழுதும் நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்ததை நீ வாசிச்சிருப்பே. அதனாலே ஊர் குழம்பிப் போய்க் கிடக்கு. இந்தச் சந்தர்ப்பத்திலே நீ என் துவக்கை வாங்கிப்போய் யானையொன்றைச் சுட, அதை நீதான் சுட்டேன்னு யாராவது தகவல் கொடுத்துட்டான்னா உன்னைப் புடிச்சி கம்பிக்குப்பின்னாலே போட்டுடுவானுகள். அதனாலே...." கூறிவிட்டு தூர எதையோ பார்த்தவாறு எட்வேட் நிறுத்தினான்.

" உன்னிடம் துவக்கு வாங்குவதோ, நான் யானையைச் சுடப்போவதோ யாருக்குத் தெரியப்போவுது? நீ சும்மாவே பயப்படுறே."

" பயப்படல்ல, எதுக்கும் ஜாக்கிரதையா இருப்பது நல்லதுதானே. பாம்புக்கும் நோகாம, கம்புக்கும் நோகாம எப்படி காரியத்தை முடிக்கலாம்னு நான் உனக்கு சொல்லித்தாரேன்."

" அதான் சொல்லேன்."

" பூசணிக்காய்ன்னா யானைகளுக்கு அல்வாபோல. பெரியதொரு காயை எடுத்து அதுக்குள்ளே கொஞ்சம் சயனைட்வைத்து அது உன் தோட்டத்துக்கு வார வழியிலே வச்சுவிடு. அவ்வளவ்தான். சாப்பிட்டதும் ஆள் அவுட்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அட! இவ்வளவு லேசா செய்யலாம்னு என் மூளைக்குத் தட்டுப்படல்லையே. அது சரி. நீ சொன்னியே சயனைட். அது எங்க எடுக்கிறது?"

" சிரமமேஇல்ல. பக்கத்து டவுனுக்குப்போய் யாராவது தட்டான்மாருக்கிட்டே கேளு. எடுத்துத் தருவானுகள்."

" எனக்குத் தெரிஞ்ச ஒருவன் இருக்கான். நான் இன்றைக்கே போறேன். கிடைச்சிடும்னா ராவைக்கே ஆளை முடிச்சிடலாம்."

" அதைச்செய். ஆனா, இந்தவிசயம் காதும்காதும் வைச்சாப்ல இருக்கணும். யாருக்குமே தெரிய வந்துடக்கூடாது. காட்டிக் கொடுத்துடுவானுகள்."

எட்வேட்டின் மனைவி கிளாஸில் கொண்டுவந்த தேனீரைப் பருகிவிட்டு கமகே நகர்ந்தான்.

அதுவரை பல் விளக்கியவாறு சற்றுத்தூர நின்றிருந்த சார்ல்ஸ் கிணற்றை நோக்கி நடந்துவந்தான்.

இருள் பரவலாக காட்டையும், அதனையன்றிய கிராமத்தவர்களின் பயிர் தோட்டங்களையும் மெலிதாக கௌவத்தொடங்க..... முதுகில்தொங்கிய கோணிப்பையொன்றுடன் நடந்துவந்த லஸ்ஸன்ன கமகேயின் தோட்டத்துக்கு சிறிது தூரத்திலுள்ள ஒற்றையடிப்பாதையின் மத்தியில் பெரியதொரு பூசணிக்காயைக் கண்டான். சற்று தாமதித்து நின்று, மெல்லியஇருட்டினூடாக பார்வையை அங்கு மிங்குமாக செலுத்திவிட்டு, சரேலெனக் குனிந்து முதுகில் தொங்கிய பையினுள்ளிருந்த பூசணிக்காயை எடுத்து தரையில் வைத்துவிட்டு, அங்கு வைக்கப்பட் டிருந்ததை எடுத்து தனது பையினுள் போட்டுக்கொண்டு தொடர்ந்து நடந்தான்.

கமகே அடுத்தநாள் காலையில் முதல்நாள் தன்னால் பூசணிக்காய் வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்றான். அது அங்கு காணப்படவில்லை. அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட... வாய்க்குள் சினிமாப் பாடலொன்றை முணுமுணுத்தவாறு காட்டுக்குள் நடந்துசென்று நீண்டநேரமாக அங்குமிங்குமாக தேடினான். செத்துக் கிடந்த யானைகளெதையும் அவனால் காண முடியவில்லை. திடீரென..... சற்றுத் தூரத்தில் கேட்ட யானையொன்றின் பிளிறல் சப்தம் அவனுக்கு அடிவயிற்றைக் கலக்க.... தலைதெறிக்கும் வேகத்தில் தனது தோட்டத்தை நோக்கி ஓடத் தொடங்கினான்.

அடுத்தநாள் காலையில் தோட்டத்துக்குச் சென்றபோது அவன் கண்ட காட்சி அவனை அதிர வைத்தது. கடந்தஇரவு யானையொன்று தோட்டத்தினுள் உட்புகுந்து மிச்சமிருந்த பயிர்களையும் துவம்சம் செய்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

கிராமத்தின் இளைஞர்கள் பலரும், சில இளம் பெண்களும் மரநிழலில் கூடியிருந்தனர். பிற்பகல் வெய்யில் மஞ்சளாக இறைத்தது. கூட்டத்தினருள் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகிய பல இனத்தவர்களும் இருந்தனர். அவர்கள் ஆளுக்காள் எதையெல்லாமோ சொல்லி வெடிச்சிரிப்புச் சிரித்தனர். கிராமத்திலுள்ள சில பெரியவர்கள் சற்றுத்தள்ளிநின்று வெற்றிலை மிண்டனர்.

" என்ன ஐயா. இன்னும் நாலு பேரைக் கூட்டி வாரன்னுன்னீங்களே. தனியேவே வாரீங்க. " என்றான் அப்போதுதான் வந்த பெரியவரொருவரைப் பார்த்து பாபு.

" அவங்களெல்லாம் பின்னாடி வாராங்க. எனக்கு நடக்க முடியாதுதானே. அதான் நேரத்தோடேயே வந்துட்டேன்."

"மாமா. எங்க உங்க மூத்தமகனைக் காணல்ல? அவருதான் மானிறைச்சியை டவுணுக்குக் கொண்டு போய் விக்கிற ஆளு. அவருதான் இந்தக் கூட்டத்திலே கட்டாயம் கலந்து கொள்ளணுமாக்கும்" என்றான் தலையில் தொப்பியுடன் நின்ற ஒருவரைப் பார்த்து சலீம்.

"அவங்களுக்கெல்லாம் இன்னும் இந்த விசயங்களைப்பற்றி நல்லாவே உறைக்கல்ல."

அவர்கள் ஆளையாள் குசலம் விசாரிப்பதும், வரவேற்பதுமாக நின்ற வேளையில், தூரத்தே புழுதியைக் கிளப்பியவாறு ஜீப்வண்டியொன்று வருவது தெரிய......

"ரேஞ்சர் ஐயாவும், அப்புஉறாமி ஐயாவும்தான் வாராக. " என்றான் பாபு சப்தமிட்டு.

அவன் கூறியதுபோல், ஜீப்வண்டி நின்றதும் அப்புஉறாமிகிழவர் மெதுவாக இறங்க, தொடர்ந்து வனசீவராசிகள் இலாகாவைச்சேர்ந்த அதிகாரிகள் மூவர் அவரின் பின்னால் இறங்கினார். சிறிது நேரத்தில் இன்னுமொரு ஜீப்பில் வந்து அந்த பகுதியின் காட்டிலாகா ரேஞ்சர் இறங்கினார்.

அதிகாரிகள் எல்லோரும் விரித்திருந்த பாய்களில் அமர, கூட்டத்தினர் தரையில் உட்கார்ந்தனர். அப்போதுதான் பக்கத்துக்கிராம பாடசாலையின் சின்னத்துரை ஆசிரியர் மூச்சிறைக்க சைக்கிளில்வந்து அதிகாரிகளுடன் அமர்ந்துகொண்டார்.

லஸ்ஸன்ன எழுந்துநின்று தொண்டையைக்கனைத்துக்கொண்டு தான் ஏற்கனவே எழுதி மனப்பாடமாக்கிவைத்திருந்தவாறு அதிகாரிகளை வரவேற்றுப் பேசினான். கூட்டத்துக்கான காரணத்தையும் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புஉறாமி எழுந்தார். கூட்டத்தினரைப்பார்த்துச் சிரித்தார்.

"உங்களுக்கெல்லாம் என்னை நல்லாவே தெரியும். உங்க ஒவ்வொருவரையும் எனக்கும் தெரியும். அதைப்போல இந்தக்காட்டு மிருகங்களாலே உங்களுக்கு ஏற்படும் கஸ்டங்களும் எனக்குத்தெரியும். ஏன்னா, நான் இந்தப்பகுதியிலே முப்பதுவருசமா கடமை பார்த்துஇருக்கேன். இந்தப்பெரிய காட்டுக்குள்ளே என் காலடிபடாத இடமே இல்ல. நீங்களெல்லாம் ஒவ்வொருத்தரா இந்த இடத்திலே குடிசை கட்டி குடியேறத் தொடங்கும்போது, அப்போ இருந்த காட்டிலாகா அதிகாரிகளுக்கு அம்பதையும், நூறையும் கொடுத்து, அரசியல்வாதிகளிடம்சொல்லி உங்களை இந்த இடத்திலேருந்து எழுப்பாதமாதிரி பார்த்துக்கிட்டீங்க. என்ன, நான் சொல்வது சரிதானே? " கூறிவிட்டு கூட்டத்தினரைப் பார்த்துச் சிரித்தார்.

கூட்டத்தினர் தலைகளைத் தொங்கப்போட்டவாறு மௌனம் காத்தனர்.

"இப்ப என்னடான்னா, தோட்டத்தை யானைகள் அழிக்குதுன்னு அந்த வாய் பேசாத ஊமைஉயிர்களை கொல்றீங்க. இறைச்சி தின்னனும்ன ஆசையாலே கண்ணில் பட்ட மிருகங்களையும், பறவைகளையும் துப்பாக்கியாலே சுட்டுக் கொல்றீங்க. பணம் உழைக்கணும்னு காட்டுமரங்களை வெட்றீங்க. விறகு பொறுக்கி விற்பதற்காக பட்டுப்போன மரங்களையும், மரக்கிளைகளையும் காட்டுக்குள்ளேயிருந்து எடுத்துட்டுப் போயிடுறீங்க. நீங்க செய்வதுபோல, நம்ம இலங்கைத்தீவிலே காடுகளுக்குப் பக்கத்திலேஉள்ள கிராமங்களிலே வசிக்கிறவங்க எல்லோருமே செய்றாங்க. கடைசியிலே என்னஆகுது? காடுகளெல்லாம் அழியுது. மரங்களெல்லாம் எண்ணிக்கையிலே குறையுது. அதன் பலன்? நாட்டிலே பருவ மழை இல்ல. மழை இல்லாட்டா உணவுஉற்பத்தி இல்ல. மக்களுக்குத் தொழில் இல்ல. பட்டினி, பஞ்சம். நீங்க கொஞசபேருசெய்ற அடாத்தான செயல்களாலே நாட்டுமக்கள் எல்லோருமே கஸ்டத்தை அனுபவிக்காங்க. உங்களுக்கு ஒன்னு சொன்னா புரியுமோ என்னவோ? எதுக்கும் சொல்றேன்" கூறிவிட்டு சற்று நிறுத்தினார்.

அப்புஉறாமி எதைப்பற்றியோ புதிதாகக் கூறப்போகிறார் என்ற ஆவலில் கூட்டத்தினரின் அத்தனை கண்களும் அவரையே மொய்த்தன.

" காற்றிலே ரெண்டு வாயுக்கள் இருக்கு. ஒன்று பிராணவாயு. மற்றது கரியமில வாயு. நாம சுவாசிப்பது பிராணவாயுதான். மற்றதை மட்டும் சுவாசித்தால் நாம செத்துப்புடுவோம். மரங்கள் என்னசெய்யுதுன்னா பகல்நேரங்களிலே கரியமிலவாயுவைக் கொண்டு ஒளித்தொகுப்பு மூலம் உணவு தயாரித்து பிராணவாயுவை வெளியே விடுது. இதனாலேதான் நமக்கு சுவாசிக்க பிராணவாயு கிடைக்குது. மரங்களையெல்லாம்வெட்டி காட்டை அழிச்சிட்டீங்கன்னா, அப்புறம் சுவாசிக்க பிராணவாயு எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாகும்? இதைப்பற்றி யாராவது யோசிக்கிறீங்களா? " கூறியவாறு கூட்டத்தினரின் விழிகளை அப்புஉறாமி உற்றுப்பார்த்தார்.

" இதனாலேதான் சொல்றேன். காடு, மரங்கள், காடுகளிலே வாழும் ஜீவராசிகள் எல்லாமே நமது சொத்துக்கள்ன்னு. இவைகளை அழிக்கவே கூடாது. அவைகளினால் ஏற்படும் பலன்களை நாமும் அனுபவித்துக் கொண்டு நமது எதிர்கால சந்ததியினருக்கும் அப்படியே விட்டுட்டுச் செல்லணும். மரங்கள், மிருகங்கள் எல்லாமே உயிருள்ளவை. அவைகளை அழிப்பது, உயிர்க்கொலை செய்வதுபோல. அதனாலே, நாம் எல்லோரும் ஒன்றா சேர்ந்து, அவைகளால உங்களுக்கு ஏற்படுற தொல்லைகள் என்னென்னு ஆராய்ந்து, அந்தத் தொல்லைகளை நீக்குவதற்கு பரிகாரங்களைப் பார்க்கணும். தோட்ட மொன்றிலே பயிர்களை காட்டு மிருகங்கள் அழிச்சிட்டா அவைகளைக் கொல்வது மட்டும்தான் பரிகாரம் இல்ல. ஒன்றைக்கொன்னா, மற்றது வரும். அந்தப்பரிகாரங்களை உங்களுக்குச் சொல்லத்தான் இங்கே அதிகாரிகள் வந்திருக்காங்க. நீங்க அவங்களோட ஒத்துழைக்கணும்." அப்புஉறாமி பேசிவிட்டு பாயில் சென்று அமர்ந்தார்.

கூடியிருந்தவர்கள் அப்புஉறாமியையும் ஏனைய அதிகாரிகளையும் நோக்கி பல்வேறு கேள்விகளைத் தொடுத்தனர். வனமிருகங்களால் தாங்கள் அனுபவிக்கும் தொல்லைகளை எடுத்துக் கூறினர்.

வனசீவராசிகள் இலாகாவைச்சேர்ந்த அதிகாரியொருவர் எழுந்து கூட்டத்தினரை நோக்கி பேசத்தொடங்கினார். வனசீவராசிகளை இம்சைப் படுத்துபவர்களுக்கு சட்டத்தின்படி கிடைக்கக்கூடிய தண்டனைகளைப்பற்றிச் சொன்னார். தேசியச் சொத்துக்களான வனமிருகங்கள் மனிதர்களினால் எவ்வாறெல்லாம் கொல்லப்படுகின்றன என்பதையும் அதேவிகிதத்தில் உயிர்க் கொலைகள் நடப்பின் வருங்காலசமூகத்தினருக்குக் கிடைக்கக்கூடிய மிச்ச சொச்சங்களை வேதனை ததும்பிய குரலில் கூறினார்.

" டயனோசரஸ் என மிகப்பெரிய மிருகஇனமொன்று ஆதிகாலத்தில் வசித்ததாம். இப்போது அப்படியான இனமொன்று வசித்ததென புத்தகங்களில் மட்டும் தான் படிக்கிறோம். இதேபோன்று யானை என ஒருஇனம் நமது நாட்டின் காடுகளிலும் வசித்தன என்று எதிர்கால மக்கள் புத்தகங்களில் வாசித்துத்தெரிந்து கொள்வதற்கு நீங்கள் காலாக இருந்து விடாதீர்கள்" என்று முடித்துக் கொண்டார்.

காட்டிலாக்காவின் அதிகாரியொருவர் காடுகளினாலும், மரங்களினாலும் மனிதர்களுக்குக்கிடைக்கும் மறைமுகமான நன்மைகளைப் பற்றி விளக்கினார். மரங்களை அழிப்பதனால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப்பற்றி அவர் கூறியபோது கூட்டத்தினரின் அத்தனை பார்வைகளும் அவரை மொய்த்ததனால் அது விடயம் குறித்து அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தளவுக்கு சிந்தித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை உணரக் கூடியதாக இருந்தது.

கூட்டத்தின்முடிவில் கிராமத்தில் வசிக்கும் வயதான ஒருவரைத் தலைவராகவும், லஸ்ஸன்னவை செயலாளராகவும்கொண்ட சங்கமொன்று தாபிக்கப்பட்டது. கிராமத்தவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான அறிக்கைகளை தங்களது தலைமைக் காரியாலயங்களுக்கு அனுப்பி தீர்வு பெற்றுத் தருவதாக அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர்.

வனசீவராசிகள் இலாகாவைச்சேர்ந்த அதிகாரி ஜீப்வண்டியினுள் கொண்டு வந்திருந்த இடிவெடிகளில் சிலதை சங்கத்தலைவரிடம் கொடுத்து யானைகள் கிராமத்தினுள் உள்நுழையும்போதெல்லாம் அவைகளைநோக்கி எறியுமாறு கூறிவிட்டுச் சென்றார்.

## 09

நண்பர்கள் நால்வரும் தாங்கள் வழக்கமாகக் கூடும் பாறாங்கல்லின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

" லஸ்ஸன்ன என்ன ஆச்சு? அதிகாரியை சந்தித்தாயா? " பாபு கேட்டான்.

"ஓம்பா. வேலை பெரிசா நடக்குது. அவரு அறிக்கை அனுப்பிட்டாராம். பதிலுக்காகக் காத்துக்கொண்டிருக்காராம். அவரு சொல்றதைப்பார்த்தா நமது கிராமத்தைப்பற்றி நிறைய விசயங்களைத் தெரிந்துகொள்ள கொழும்பிலிருந்து துரைமார்களெல்லாம் வருவாங்கபோல"

" அதான் சின்னத்துரை சார் சொன்னாரே, யானைகள் கிராமத்தவர்களைத் துன்புறுத்தினா காட்டைச்சுற்றி கரண்ட்கம்பி போடுவாங்கன்னு. நடந்துவரும் யானைகள் கம்பிகளைத்தொட்டதும் ஷாக் அடிக்குமாம். அப்புறம் அந்தப்பக்கமே தலைவைத்துப் படுக்காதாம்" என்றான் சலீம்.

" அப்படி கரண்ட்கம்பி போடுவதற்கு நாம உடனேயே ஒத்துக்கொள்ளக் கூடாது. ஏன்னா, நமது வீடுகளிலே அடுப்பு எரிப்பதற்குத்தேவையான விறகுகளைக் கூட விலைக்கு வாங்கவேண்டி வரும். அப்புறம் நமது மாடுகளை மேய்ப்பதற்கு புல்லுக்கு எங்கே போவது? இதையெல்லாம் அவங்ககிட்ட சொல்லி, அதற்கெல்லாம் ஏற்ற மாதிரிதான் நடவடிக்கை எடுக்கச் சொல்லணும்." என்றான் சார்ல்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுத்தூர தோளில் கோடரியுடன் யாரோ நடந்து வருவது தெரிந்தது. சாரனை மடித்துக் கட்டியிருந்தான். முறுக்கேறிய வெற்றுஉடம்பு. தலையில் அழுக்கான ஒரு முண்டாசு. முகம் நிறைய அடர்ந்த மீசை.

அவன் அவர்களை அண்மியதும்" என்னண்ணே வில்சன். கோடாலியோட எங்கே?" என்றான் லஸ்ஸன்ன.

" ஏன் கேக்கே? நான் எதுக்கோ போறேன்." வில்சன் மெலிதாக தள்ளாடுவதிலிருந்து குடித்திருப்பான் என எண்ண முடிந்தது.

" ஏன் கேக்கப்படாதா? சொல்லேன். காட்டுக்குள்ளே கள்ள மரம் வெட்டவா? " குந்திக் கொண்டிருந்த பாபு எழுந்து நின்று கேட்டான்.

" நான் மரம் வெட்டப் போவேன். இல்லே மடுவெட்டப் போவேன். உங்களுக்கெதுக்குடா? உங்க வேலையை நீங்க பாருங்கடா! பொறுக்கிப் பயல்கள்!"

" என்னண்ணே வார்த்தைகள் தடிப்பா மாறுது? மரியாதையாக பதில் சொன்னா போவுது." என்றான் சலீம்.

" வாங்கடா என் அப்பனுக்குப் பொறந்தவனுகளா . வாங்கடா மரியாதை தாரேன். வாங்க. கிட்டவாங்க" வில்சன் தோளில் கிடந்த கோடரியை வேகமாக கைக்கு மாற்றினான்.

" வில்சணண்ணே, நீ என் சொந்தக்காரன்னு பார்க்கேன். காட்டுக்குள்ளே மரம் வெட்டப் போகாம மரியாதையா ஊருக்குத் திரும்பிப் போயிடு. மீறிப்போனே, அப்புறம் என்ன நடந்தாலும் எங்களை குறை சொல்லாதே."

லஸ்ஸன்ன கூறியதைக் கேட்டதும் வில்சன் கடகடவென வாய்விட்டுச் சிரித்தான்.

" போங்கடா. போக்கற்ற நாய்களா. ஊட்டுக்காவது! திரும்புறதாவது! யாராவது என் வழியிலே வந்தீங்க. துண்டு துண்டா சீவிப்போடுவேன். ஆம்மா" என்றான் தலையில் கட்டியிருந்த முண்டாசை வேகவேகமாக அவிழ்த்து உதறியவாறு.

" நாங்க சொல்லிட்டோம். அப்புறம் உன் இஸ்டம். ஆனா ஒன்று மட்டும் சொல்றேன். நீ காட்டுமரத்தை வெட்டினா, நாங்க நாலுபேரு உனக்கு எதிரா கோட்டிலே சாட்சிசொல்வோம். எதுக்கும் யோசிச்சு நடந்துக்க."

" அதையும் பார்த்துடுவம்டா. நீங்க சாட்சி சொல்லிட்டு அப்புறம் இந்தஊரிலே வசிக்கிறதையும் பார்த்துடறேன்." கூறியவாறு அவர்களைப்பார்த்து காறிஉமிழ்ந்து விட்டு காட்டைநோக்கி நடக்கத் தொடங்கினான்.

நண்பர்கள் சில நிமிடங்கள் மௌனம்காத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பாவம்டா. கஸ்டப்படப்போறான். இவனுக்குச் சரியானபாடம் படிப்பிச்சு விட்டா, அப்புறம் கிராமத்தவங்க யாரும் காட்டுக்குள்ள மரம்வெட்டப் போகமாட்டாங்க." என்றான் சார்ல்ஸ்.

" உங்களுக்கு விசயமே தெரியாது போல. இவன் எனக்கு தூரத்திலே சொந்தம்கிறதாலே இவனைப்பற்றிய எல்லா விசயமுமே எனக்குத்தெரியும். முதலிலே இவன் தனியாபோய் வெட்டவேண்டிய மரங்களை அவைகளின் பெருப்பம், உயரம் ஆகிய எல்லாவற்றையும் பார்த்துட்டு வந்துடுவான். இதுக்குத்தான் இப்போ தனியா போறான். அப்புறம் மரவியாபாரிகளோட விலையைப்பேசிட்டு அவனுக்குத்தெரிந்த நாலைஞ்சு பேர் இருக்காங்க. அவங்களோடவந்து வெட்டத்தொடங்குவான். ரொம்ப நாளா இப்படிச் செய்றான். மரத்தைப் பிடிப்பதற்கென்று யாராவது அதிகாரிமார் வந்தா அவங்கள கவனிக்றாப்ல கவனிப்பானாம்." கூறிவிட்டு லஸ்ஸன்ன எதையோ யோசிக்கத் தொடங்கினான்.

" என்ன யோசிக்கே? " சலீம் கேட்டான்.

" வில்சன் சொந்தக்காரன் இல்லையா? எப்படி புடிச்சுக் கொடுக்கிறதுன்னு யோசிக்கானாக்கும்." என்றான் சார்ல்ஸ்.

" அதான்பா யோசிக்கேன். பரவால்ல, இதுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும். மரங்கள் நம்மசொத்துன்னு இவனைப்போன்றவர்களுக்கு கரடியா கத்தினாலும் உறைக்காது. இவனுகளுக்கெல்லாம் தலையிலேயே அடிக்கணும். இல்லேன்னா சங்கத்து செயலாளனா இருக்கிறதாலே எந்த நன்மையும் இல்லை."

" இவனைக் காட்டிக் கொடுக்கணும்னா, இந்தக்காட்டுக்குப் பொறுப்பா இருக்கிற அந்த மொட்டைத்தலையனிடம் சொல்லக்கூடாது. அவனுக்கு கால் போத்தல் கொடுத்தாலே போதுமாம். வெட்டுங்கடா மரத்தைன்னு சொல்லிட்டு, கோடரி சத்தத்தை ராகமா நினைச்சுட்டு படுத்துத் தூங்கிடுவானாம்" சலீம் கூறவும் மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

" அவன் இன்னுமொன்றும் செய்வானாம்."

" என்ன அது?" பாபு வாய் நிறைந்த பற்களுடன் கேட்டான்.

" கள்ளமரங்களை வண்டிலிலே ஏற்றி பக்கத்திலேயே நடந்து போவானாம். யாராவது பொலீஸ்காரங்க இடைநடுவிலே மறிச்சுக்கேட்டா, மரஙகளை வண்டிலோட பிடிச்சு தன்னுடைய கந்தோருக்குக் கொண்டு போவதா சொல்லிடுவானாம். ஆனா வண்டில் போவதென்னமோ கள்ளமர வியாபாரியின் வீட்டுக்குத்தான்."

" அடப்பாவி! அப்போ யாரிடம் போய் சொல்றது?"

" அதான், பெரிய ரேஞ்சர் இருக்காரே. அவருடைய காதிலே விசயத்தைப் போட்டுட்டா சரி. அந்தவேலையை என்கிட்ட விடுங்க. நான் பார்த்துக்கறேன். " என்றான் லஸ்ஸன்ன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தொடர்ந்து நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அடுத்தநாள். மதியம் சாய்ந்துகொண்டிருந்தது. லஸ்ஸன்னவும், பாபுவும் பாடசாலை முடிந்து, றேஞ்சரின் காரியாலயத்துக்குச்சென்று முதல்நாள் பேசிக் கொண்டவாறு தேவையான தகவல்களைக் கொடுத்துவிட்டு சைக்கிளொன்றில் வந்து கொண்டிருந்தனர். லஸ்ஸன்ன சைக்கிளை மிதித்தான். கையில் இருவரின் புத்தகக் கட்டுக்களுடன் பாபு சைக்கிள்பாரில் இருந்தான். அவர்கள் கிராமத்தை அடைந்து....., பாபுவை அவனுடைய வீட்டில் இறக்கிவிட்டு..... லஸ்ஸன்ன மட்டும் பெடலை மிதித்தவாறு பாதையில் வரும்போது, தனிமையான ஓர் இடத்தில் வில்சன் நிற்பதைக் கண்டான். அவன் தள்ளாடியவாறு நிற்பதிலிருந்து நிறைய குடித்திருப்பான் என நினைத்துக்கொண்டான். லஸ்ஸன்ன சற்று வேகமாக பெடல்களை மிதித்து அவனைத் தாண்டிவிடலாமென முயன்றாலும், வில்சன் பாதையின் நடுவில் வந்துநின்று கைகளிரண்டையும் அகலமாக்கினான்.

" நில்டா பொறுக்கி! ஓடினே இந்தக் கல்லாலே மண்டையிலே எறிஞ்சி பொளந்துடுவேன்." என்றான் கரகரத்த குரலில்.

லஸ்ஸன்ன நடுங்கத் தொடங்கினான். அவனுடைய முட்டுக்கால்கள் தாமாகவே தாளமிடத் தொடங்கின. பசிமயக்கம் வேறு குடலைப் பிசைந்தது. சைக்கிளை நிறுத்தி காலை தரையில் குத்தினான்.

"உனக்காகத்தான்டா காத்திருந்தேன். அந்தத்தெருப் பொறுக்கி நாய்களோட நீயும் சேர்ந்து என்னைக் காட்டிக்கொடுக்கவா போறே?" லஸ்ஸன்ன எதிர்பார்க்காத வேளையில் வில்சன் அவனுடைய குரல்வளையை கையால் கௌவினான்.

" வில்சன் அய்யா. என்னை உட்ரு. எனக்கு ஏதாவது செய்தே, என் அப்பா உன்னை வேரோடு அழிச்சுடுவாரு." கூறியவாறு கையிலிருந்த புத்தகங்கள் தரையில் சிதற, இரு கைகளாலும் வில்சனின் கையைப்பற்றி கழுத்தை அவனது பிடியிலிருந்து விடுவிக்க முயன்று வெற்றிபெற்ற வேளையில்.....வில்சன் சரேலென ஓங்கி அவனது கன்னத்தில் அறைய.. ...லஸ்ஸன்ன சைக்கிளுடன் கீழே விழ.....வில்சன் கால்களால் சில தடவைகள் அவனது முதுகில் பலமாக அடித்தான்.

" ஜாக்கிரதை! என் வழியிலே இன்னும் வந்தே, துண்டாக்கிடுவேன். மரங்களையும், மிருகங்களையும் பாதுகாக்கப் போறாராம். பெரிய்ய மனுசன். காட்டில நிக்கிற மிருகங்களைப் பாதுகாக்கிறதை உட்டுட்டு அங்க இங்க ராவைலே மேய்ஞ்சு திரியிறானே உன் அப்பன், அவனைப் பாதுகார்டா." கூறிவிட்டு தள்ளாடியவாறு நடக்கத் தொடங்கினான்.

லஸ்ஸன்ன மெதுவாக எழுந்தான். பக்கத்தில் கிடந்த பெரியதொரு கல்லை எடுத்து வில்சனின் தலைக்கு குறிவைக்கலாமா என ஒருகணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்து, எண்ணத்தை மாற்றினான். இன்னும் சிலநாட்களில் கம்பி எண்ணப் போகிற இவனை எதுக்காக தண்டிக்க வேண்டும் என நினைத்து, கீழே கிடந்த புத்தகங்களைச் சேகரித்து எடுத்து, உடுப்பில் பட்டுக்கிடந்த செம்மண் புழுதியைத் துடைத்துவிட்டு சைக்கிளில் ஏறி அமர்ந்துகொண்டான். நடந்தவைகளை அவனுடைய பெற்றோரிடம் சொல்வதற்குக் கூட அவன் விரும்பவில்லை.

10

லெஸ்ஸன்னவும், பாபுவும் முகத்தைத் தொங்கப் போட்டவாறு பாறாங்கல்லில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது சலீமும், சார்ல்ஸும் அங்கே வந்தனர். கறுத்த மேகமொன்று மேற்குப்புற சூரியனை மறைத்தது. சடுதியாக காட்டுக்குள்ளிருந்து வெளிவந்த ஓநாயொன்று தூரத்தே புல்வெளிக்குள் ஓடி மறைந்தது. வண்ணாத்திப் பூச்சிகள் சில அங்குமிங்குமாகப் பறப்பதும், குந்துவதுமாக நாட்டியமாடின. புற்களுக்குள் படுத்து இரைமீட்டியவாறிருந்த பசுவொன்றின் முதுகில் இரண்டு காகங்கள் சொண்டுகளால் ஊடல் செய்தன.

"லஸ்ஸன்ன, ஏன் முகம் வாடியிருக்கு?" சார்ல்ஸ் கேட்டான்.

" அதை ஏன் கேக்கே, சங்கத்துக்கு செயலாளரான பலனை லஸ்ஸன்ன இன்று அனுபவிச்சுட்டான்" என்றான் பாபு.

" விளங்கலையே. என்ன நடந்தது?" கல்லூரியிலிருந்து வீடு திரும்பும் வேளையில் வில்சன் தனக்கு அடித்ததை லஸ்ஸன்ன விபரித்தான்.

" உன் ஊட்ல சொன்னியா? "

" சொல்லலல்ல."

" ஏன்? " சலீம் கேட்டான்.

" என் அப்பாவின் குணம்தான் உனக்குத்தெரியுமே. அவருக்குத் தெரிய வந்தா வில்சனை துண்டு துண்டாக்கிடுவார். எனக்கு நடந்ததுக்கு அவரை ஏன் கொலைகாரனா மாற்றணும்?"

" அதுக்காக...... இதை இப்படியே விட்டுட்டு சும்மா இருப்பதா? அவன் வாழ்நாள் முழுதும் மறக்க முடியாத அளவுக்கு அவனுக்குப் புத்தி புகட்டணும்." என்றான் சலீம் சற்று ஆவேசமாக,

" ஒரு கல்லை அவன்மேலே எறிந்து மண்டையைப் பிளந்து இருக்கலாம். கல்லைக்கூட கையிலே எடுத்துட்டேன். ஆனா, அப்படியெல்லாம் செய்துட்டு எதுக்காக அப்புறமா நானும் கோர்ட்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறணும்? அவனுக்கு மறக்கமுடியாத பாடம் படிப்பிக்கிறதுக்குத்தான் நானும், பாபுவும் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துட்டோம்."

" ரேஞ்சரைச் சந்திச்சீங்களா?"

" சந்திக்காமலா இருப்போம்."

" என்ன சொன்னார்?"

" வில்சனும் அவனுடைய நண்பர்களும் மரங்கள் வெட்டப்போகும் இடத்தை சரியா அறிந்து அவருக்குத் தகவல் தரட்டாம். அவன் மரங்களை வெட்டிக் கொண்டிருக்கும்போதே அவருடைய ஆட்களுடன் வந்து அப்பிடுறாராம்."

" வேற என்ன சொன்னாரு?"

" தகவலை மட்டும் தந்துட்டு நம்மை அந்தப்பக்கம்கூட வரவேண்டாம்னு சொன்னார். கோர்ட்டுக்கு சாட்சி சொல்லக்கூட நாம் வரவேண்டியதில்லையாம். ஏன்னா, கள்ளமரம் வெட்டிவிக்கிற பிஸ்னஸ்ல பெரிய, பெரிய ஆட்களெல்லாம் ஈடுபட்டிருக்காங்களாம்."

" பெரிய, பெரிய ஆக்களொன்றா............?" சார்ல்ஸ் கேட்டான்.

" அதை அவரு சொல்லலை. நம்மை மட்டும் தள்ளி இருந்துடச் சொல்லி ரொம்ப வற்புறுத்தினாரு. அதான், வில்சன் எனக்கு அடிச்சதை நான் யாரிடமுமே சொல்லலை. கிராமத்திலுள்ளவங்களுக்குத் தெரியவந்தா, அப்புறம் வில்சன் பிடிபட்டதும் அதுக்கு நானும், என்அப்பாவும்தான் காரணம்னு நினைப்பாங்க. அதுக்காக பழிவாங்கினாலும் வாங்குவாங்க."

லஸ்ஸன்னவின் முகத்தையே மற்ற மூவரும் பார்த்தவாறு இருந்தனர்.

" வில்சன் மரம் வெட்டுற இடத்தை எப்படிக் கண்டு பிடிப்பது? " சலீம் கேட்டான்.

" அதான் நானும் யோசிக்கேன். காட்டுக்குள்ளே ரொம்ப தூரம் நாம தனியே போகக்கூட முடியாதே. என்ன செய்றது? "

நால்வரும் யோசித்தனர்.

" ஒன்று செய்யலாமா? "

" என்ன? சொல்லேன். "

" நடந்த விசயத்தை நம்ம சங்கத்தின் தலைவரிடம் ரொம்ப ரகசியமா சொல்வோம். அவரு எப்படியாவது இடத்தைக்கண்டுபிடிச்சிடுவாரு. அவருக்கு காடு முழுதுமே அத்துபடி."

" நல்ல ஐடியாதான். ஆனா, வில்சன் அவருக்குச் சொந்தக்காரனா இருந்தா?" சலீம் சந்தேகம் எழுப்பினான்.

" அவருக்கு அவன் சொந்தமே இல்லை. அத்துடன் அவருடைய தோட்டத்துக்குள்ளே அவன் கள்ளத்தனமா புகுந்து வாழைக்குலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டினதாலே அவரு மனம் புழுங்கிக்கொண்டிருக்காரு." லஸ்ஸன்ன கூறினான்.

" பாபு சொன்னாப்லயே செய்துடலாம். ராவைக்கே அவரைப்போய் பார்ப்போம்."

தீர்மானித்தவாறு அவர்கள் அன்று இரவே சங்கத்தின் தலைவர் தென்னக்கோனைச் சந்தித்து காதும் காதும் வைத்தது போல விசயத்தைச் சொல்லி.........அடுத்தநாளே நம்பிக்கையான சிலரை காட்டுக்குள் அனுப்பி தேவையான தகவலைப் பெற்று அவர்களிடம் கூறினார்.

" அவனுடைய ஆட்கள் நால்வர் இதுவரையில் அஞ்சு தேக்க மரங்களை வெட்டிட்டாங்களாம். வில்சன் அங்க இல்லையாம். இன்னும் நிறைய மரங்களை வெட்டுவாங்கபோல. வில்சன் அங்க நிக்கும்போதுதான் றேஞ்சர் அவருடையஆட்களோட போய் எல்லோரையுமே புடிக்கக் கூடியமாதிரி செட்பண்ணனும். பிரச்சினை என்னென்னா, வில்சன் எப்ப காட்டுக்குப் போவான் என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? " கூறியவாறு சலீம் கேள்வி எழுப்பினான்.

" அது ரொம்ப சுலபம். காலையிலேதான் மரம் வெட்டுறவங்க காட்டுக்குப் போவாங்க. வில்சனும் காலைலதான் போவான். நாளைக்குச் சனிக்கிழமை, அடுத்தது ஞாயிறு. அதனாலே நாம நாலு பேரும் காட்டுக்குப் போற ஒவ்வொரு வழியிலேயும் போய் எங்கேயாவது மறைந்து நிப்போம். எப்படியாவது அவன் நம்மில் ஒருவரைக் கடந்துதான் காட்டுக்குள்ளே போகணும். அப்படிப்போனா பகலெல்லாம் அங்கேயே நிப்பான். அவன் போவதைக்கண்டதும் உடனேயே சைக்கிள்ள போய் றேஞ்சர்கிட்டே சொல்லிடணும். எப்படி ஐடியா?"

" சுப்பர்டா பாபு" என்றான் பாபுவின் தோளில் தட்டியவாறு லஸ்ஸன்ன.

" அப்ப ஒன்று செய்வோம். இப்போ உடனடியா நானும், பாபுவும் றேஞ்சர் சாரோட ஊட்டுக்குப் போய் மரம்வெட்டுற இடத்தைச்சொல்லி, நாளைக்கும், நாளன்னைக்கும் காலையிலே அவரோட ஆட்களோட ரெடியாஇருக்குமாறு கேட்டுட்டு வந்துடறோம்."

" செய். அந்த மொட்டத்தலையனை மட்டும் கூட்டிவந்துட வேணாம்னு சொல்லிடு." சலீம் கூறியதும் மற்றவர்கள் கோரஸாக சிரித்தனர்.

அடுத்தநாள்காலையில் சலீம் நேரத்தோடு எழுந்தான். அவனுடைய தகப்பன் அப்பாஸ் தொழுதுவிட்டு சுற்றிவைத்திருந்த பனைஓலைப்பாயை தரையில்விரித்து காலைத்தொழுகையைத் தொழுதான். தாய் கொண்டுவந்த தேனீரைப் பருகினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஏன்டா சலீம். உன் சங்கத்திலே சொல்லி இந்தஊரிலே சின்னதா ஒருபள்ளி கட்டவையேன். வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழ ரொம்பதூரம் போகவேண்டியிருக்கு." என்றார் பாக்குவெட்டியால் பாக்கொன்றை நறுக்கிக்கொண்டிருந்த அப்பாஸ்.

" எனக்குக்கூட அந்த எண்ணம் இருக்குத்தான். பள்ளிவாசல் மட்டும் இல்ல, சிங்களவர்களுக்காக தேவாலயமும், தமிழர்களுக்காக கோவிலொன்றும், கிறிஸ்தவர்களுக்காக சர்ச்சும் கிராமத்திலே கட்டணும். இங்கதானே நாலு இனமும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கோம்."

" ஆமாடா மகனே. பக்கத்துக் காட்டுக்குள்ளே பலசாதி மிருகங்களும் ஒற்றுமையா வாழ்றமாதிரி, காட்டை அண்டிய இந்தக்கிரா மத்திலே நாம நாலு சாதியும் ஒற்றுமையா வாழுறோம்." என்றாள் அவனுடைய தாய் மரியம்.

" எதுக்கும் உன் சங்கத்திலே இந்த விசயத்தைப்பத்தி அவங்க காதுலே போடு. ஆண்கள் பள்ளிக்குப்போய் தொழுதாத்தான் கூடிய நன்மைகள் கிடைக்குமாம்."

" கட்டாயம் சொல்றன் வாப்பா. கொழும்பிலிருந்து சமீபத்திலே பெரிய துரைமாருங்க நம்ம கிராமத்துக்கு வரஇருப்பதா கதைச்சிக்கிறாங்க. காட்டையும், அதிலுள்ளமரங்களையும், வாய்பேசாத அப்பிராணிகளையும் பாதுகாப்பதற்காக வலியவே நாமஎல்லாம் ஒன்றுகூடி சங்கம் தொடங்கினதை பேப்பர்ல பெரிசா போட்டிருந்தாங்களாம். மந்திரிமார்வரைக்கும் விசயம் போயிருக்காம்." கூறிவிட்டு சலீம் வீட்டிலிருந்தும் வெளியேறினான்.

" இன்னமும் பொலபொலன்னு விடியல்ல. இந்த நேரத்திலே எங்கே போறே?" அப்பாஸ் சப்தமாக கேட்டார்.

" பாபுவைப்பார்த்து புத்தகமொன்று வாங்கிட்டு வந்துடறேன். நான் ஸ்கூலுக்குப் போகவேண்டியிருக்கு. சைக்கிளை எடுத்துக்கொண்டு எங்கேயும் போயிடாதீங்க."

" இன்றைக்குத்தான் சனிக்கிழமையே?"

" அதான். சின்னத்துரை சேர் பாடம்நடத்துறதா சொன்னாரு. கொஞ்ச நேரத்திலே வந்துடுவேன். எங்கேயும் போயிடாதீங்க."

சலீம் வேகவேகமாக நடந்து, தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தை அடைந்தான். சிறிதுநேரம் நின்றான். சூரியக்கதிர்கள் மெதுவாக எட்டிப்பார்க்கத் தொடங்கின. தோட்டங்களுக்கு வேலைசெய்வதற்காக சிலர் மண்வெட்டிகளுடன் வேகநடைபோட்டனர். இரவெல்லாம் காவற்பரன்களில் நுளம்புக்கடியால் அவஸ்தையுற்ற இரண்டொருவர் தூக்கக்கலக்கத்துடன் உடுத்திருந்த சாரனைத் தூக்கி தோளில் போட்டு போர்த்தியவாறு குனிந்து நடந்துவந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருநாய்கள் வால்களைச் சுருட்டியவாறு மரங்களினடிகளில் படுத்துறங்கின.

கண்ணுக்கெட்டியதூரம்வரை யாரும் தெரியாததால் சலீம் சரசரவென நாவல் மரமொன்றில் ஏறி கிளையொன்றில் வசதியாக அமர்ந்துகொண்டான். அங்கிருந்து நாணாபக்கமும் பார்ப்பது அவனுக்கு இலகுவாக இருந்தது.

அவன் நீண்டநேரம் அக்கிளையில் இருந்தான். சுமார் ஏழரை மணியளவில் ஐவர் கொண்ட குழுவொன்று சற்றுத்தொலைவில் வருவது தெரிந்தது. சலீம் உசாராகி பார்வையைக் கூராக்கினான். அவர்கள் அவன் வீற்றிருந்த மரத்தைக்கடந்து போகும்போது சிவப்புத்துவாயொன்றால் தலையில் முண்டாசுடன் போவது வில்சன்தான் என்பது ஊர்ஜிதமாகியது. அவர்கள் கண்ணுக்கெட்டிய தூரம்வரை போகுமட்டும் காத்திருந்து, மரத்திலிருந்தும் இறங்கி, வீட்டுக்குச்சென்று, சைக்கிளை எடுத்து, முச்சிரைக்க பெடல்மிதித்து.........றேஞ்சரிடம் விசயத்தைச் சொன்னான்.

வில்சனையும் இன்னும் நால்வரையும் காட்டிலாகா அதிகாரிகள் மரங்கள் வெட்டும்போது கையும் களவுமாக பிடித்துச் சென்றார்களென்ற செய்தி அன்று பிற்பகல் கிராமம் முழுதும் தீயாக பரவியது.

## 11

இருந்தாற்போலிருந்து கிராமத்தின் மூலையிலுள்ள வீடொன்றிலிருந்து பயங்கரமான அழுகைக்குரல் திடீரெனக்கேட்டது.

" மகே தெய்யனே! மே மினிஉ றாட மொனவதவூனே?" என்ற வயதான பெண்ணொருத்தியின் சப்தம் பலமாக ஒலிக்க.....கிராமத் தவர்களின் கால்கள் தாமாக அவளுடைய குடிசையை நோக்கிப்பாய்ந்தன.

" யானை அடிச்சிப்போட்டாம்! "

ஒவ்வொருவராக செய்தி பரவியது. காட்டுக்கு விறகு தறிப்பதற்காக இன்னுமொருவனுடன் சென்ற அவளுடைய கணவனை தனியனாக வந்த யானையொன்று தூக்கியதால் அந்த இடத்திலேயே விழுந்து கிடக்கிறானாம். மற்றவன் எப்படியோ தப்பிவந்து கிழவியிடம் நடந்தவற்றைச் சொல்லியிருக் கிறான்.

செய்தி கொண்டுவந்தவன் குடிசைவளவில் ஓர் ஓரமாக நின்றான். அவனை கிராமத்தினர் ஈக்களாக மொய்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்னப்பா. என்ன நடந்தது? " தென்னக்கோன் ஆட்களை விலக்கியவாறு வந்து கேட்டார்.

அவனுடைய முகம் முழுதும் சோகம் அப்பிக்கிடந்தது. காட்டுக்குள்ளிருந்து தொடர்ந்து ஓடி வந்ததால் இன்னும் அவன் சயநிலைக்கு வராமல் இருந்தான்.

" அதை ஏன் கேக்கீங்க. நானும் முத்துபண்டாவும் விறகு தறிச்சோமா. திடீரென பின்னாலே ஒரு சப்தம். திரும்பிப்பார்த்தா தனிஅலியன். நான் கொஞ்சம் தூரத்திலதான் நின்றேன். முத்துபண்டா அதுக்குப்பக்கத்திலே. 'முத்துபண்டா ஆனை ஓடு'ண்ணு சப்தம் போட்டவாறு நான் ஒரு பக்கமா ஓடத்தொடங்கி, அவரும் ஓடுவதற்காக ரெண்டடிவைக்கும் போதே எதிலேயோ கால்சிக்கி கீழே விழுந்துட்டார். நான் தூரத்திலே நின்று திருப்பிப்பார்த்தேன். விழுந்துகிடந்தவரை அது காலாலே மிதித்தவாறு என்னை நோக்கி நடந்து வருவது தெரிந்தது. நான் அங்குமிங்குமாக மாறிமாறி ஓடிவந்து..... எப்படியோ தப்பிச்சிட்டேன்." கூறியவாறு மூச்சிரைத்தான்.

" இன்னும் முத்துபண்டா அங்கதான் கிடக்காரா?" கூட்டத்தில் நின்ற ஒருவன் கேட்டான்.

" எழும்பிவந்ததா தெரியல்ல. செத்துப்புட்டாரோ, உயிரோட இருக்காரோன்னு என்னாலே போய்ப்பார்க்கமுடியல்ல"

அழுக்கான உடைகளுடன்கூடிய சில பிள்ளைகளுடனும், தோளில் குழந்தையொன்றுடனும் ஒருபெண் புயலாக அங்குவந்தாள். குடிசையின் வெளியே கைகளிரண்டாலும் தலையைப் பொத்தியவாறு ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்த கிழவியைக் கட்டிப்பிடித்தவாறு "மகேதாத்தே..!" என்று அவள் பெருங்குரலெடுத்து அழத்தொடங்க.....அவளைத் தொடர்ந்துவந்த அவளுடைய பிள்ளைகளும் தாயைப்பின்பற்றி ஓலமிடத் தொடங்கினர்.

" சரி. சரி. கதைச்சுக்கொண்டிருக்கிறதிலே பிரயோசனமில்லே. காட்டுக்குள்ள போய் முத்துபண்டாவைத் தூக்கிக்கொண்டு வாரதுக்கு நாலுபேரு ரெடியாகுங்க." என தென்னக்கோன் கூறியதுதான் தாமதம், "வாங்கடா போகலாம்." என்றது இளைஞர் கூட்டமொன்று. அக்கூட்டத்துடன் பாபுவும், சார்ல்ஸும் சேர்ந்துகொண்டனர்.

" போறதுதான் போறீங்க. அப்படியே என் ஊட்டுக்குப்போய் அஞ்சாறு ஆனைவெடிகளையும் கையிலே எடுத்துட்டுப்போங்க. ஏய். நீ என்னப்பா இன்னமும் தலையிலே கைவைச்சு அழுதுகொண்டிருக்கே? நீயும் கூடப்போ. உனக்குத்தானே இடம் தெரியும்." என்றார் முத்துபண்டாவுடன் விறகு தறிப்பதற்காக சென்ற மற்றவனைப்பார்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கூட்டம் அந்த இடத்திலிருந்து ஓட்டமும் நடையுமாக செல்வதைப்பார்த்துக்கொண்டுநின்ற தென்னக்கோன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

" என்ட எண்ணப்படி இந்த தனியன்தான் ராவைகளிலே வந்து தோட்டங்களை அழிச்சிருக்கு. கூட்டத்தை விட்டுப்பிரிஞ்சிட்டுதுபோல, அதான் அங்குமிங்குமாக அலைஞ்சு கொண்டிருக்கு."

" சரியா சொன்னீர். அந்தப்பிசாசுதான் என் தோட்டத்தை அழிச்சிருக்கு. அதைக்கொல்லலாம்னு பலதடவைகள் முயற்சி எடுத்தேன். ஒண்ணும் முடியல்ல. பூசணிக்காய்க்குள்ளே நஞ்சு வைச்சுப்பார்த்தேன். அதைச்சாப்புட்டும் சாகாம இருந்திருக்கே." என கமகே கூறும்போது சற்றுத்தூரத்தில் நின்ற சலீம் லெஸ்ஸன்னவைப்பார்த்து கண்களால் சிரித்தான்.

" எதுக்குப்பா உயிரைக் கொல்லப்போனே? நீ இப்படி யானையைக் கொல்ல நஞ்சு வைச்சேன்னு அதிகாரிகளுக்குத்தெரிய வந்தா, புடிச்சி உள்ளே தள்ளிடுவாங்க." என்றான் கூட்டத்தில் நின்ற ஒருவன்.

" என்ன ஓய் கதைக்கிறே? நான் அதைக்கொன்னா அது கொலை. அது நம்மைக்கொன்னா, அது என்ன? கொலையில்லையா? அதுக்கு மதம் புடிச்சிருக்கு ஓய். அதை விட்டுவச்சோம்னா, நாளைக்கு பட்டப்பகல்லே ஊருக்குள்ளே வந்து உன்னையும், என்னையும் கொன்னுட்டுப்போயிடும். அதனாலே நாம எல்லோருமா சேர்ந்து அதைக்கொன்றே ஆகணும்." என்றான் தொண்டை நடுங்க கமகே.

கமகேயின் கூற்றுக்கு ஆதரவாக சிலரும், மறுத்து வேறு சிலரும் தொடர்ந்து கதைக்க......சிலர் ஆளுக்காள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட.....

தூரத்தே இடியோசையாக யானைவெடி வெடிக்கும் சப்தம் கேட்டது.

" அவங்க காட்டுக்குள்ளே உட்புகுந்துட்டாங்க போல." என்றான் ஒருவன்.

கூட்டத்தினர் யானையைக் கொல்வதா, வேண்டாமா என்ற விவாதத்தில் மூழ்கி இருக்க......

" நிறுத்துங்கப்பா. இப்ப என்ன செய்யணும்? அந்த தனியன்ல இருந்து உங்களையும், உங்க பயிர்களையும் காப்பாற்றணும். சரி. அந்தப்பொறுப்பை நான் ஏத்துக்கறேன். நாளைக்கே டவுனுக்குப்போய் அதிகாரிகளோட கதைச்சி அதைத்தூர இடமொன்றுக்குத் துரத்தி விடுவதற்கோ, அல்லது பிடித்துக்கொண்டுபோய் வேறு ஒரு காட்டிலே விடுவதற்கோ ஏற்றமாதிரி நடவடிக்கை எடுக்கேன். ஆனா, நீங்க யாருமே அதைக்கொல்ல மட்டும் முயற்சிக்கக்கூடாது. உங்க எல்லோருக்கும் யானை வெடிகள் தாரேன். ராவையிலே கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க."

" துரத்துறதுன்னா இந்தக்காட்டுக்குள்ளேயே துரத்தக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்களைச் சாப்பிட்டு ருசி கண்டுட்டுது. எப்படியும் திரும்பிவரத்தான் செய்யும். அதைப்புடிச்சி எங்கேயாவது கொண்டு போகக்கூடியவாறாக செய்துடுங்க." என்றான் கமகே.

" அதான் அதிகாரிகளோட கதைக்கேன்னேனே."

நேரம் ஊர்ந்தது. செய்தி வேகமாகப்பரவியதால் சற்றுதூர இருந்தெல்லாம் ஆணும் பெண்ணுமாக அந்தக்குடிசையை நோக்கி ஒவ்வொருவராக வந்துகொண்டிருந்தனர். பெண்களில் பலர் இப்போது கூட்டமாக சேர்ந்து அழுதனர்.

" ஏன் தென்னக்கோன். இந்த மிருகங்களெல்லாம் ஊருக்குள்ளே வராம கறன்ட்கம்பி அடிச்சிட்டா என்ன?" அப்பாஸ் தென்னக்கோனைப் பார்த்துக் கேட்டார்.

" அப்படி ஒரு யோசனை இருக்கு அப்பாஸ். அது பெரிய விசயம். சமீபத்திலே நம்ம ஊருக்கு கொழும்பிலிருந்து அதிகாரிமாரு வர இருக்காங்களே. உனக்கு விசயம் தெரியுமா."

" என்னது ? "

" வனத்தையும், வனமிருகங்களையும் பாதுகாக்கணும்னு நம்ம பிள்ளைகளா சேர்ந்து சங்கம் அமைச்சது சனாதிபதிக்கும் தெரிய வந்துட்டுதாம். பத்திரிகைக்காரங்களெல்லாம் இங்கவர இருக்காங்களாம். அப்படியெல்லாம் இருக்கும்போது நாம இன்னமும் யானைகளைக் கொண்ணோம்னா, நம்மைப்பற்றிய நல்ல அபிப்பிராயங்களெல்லாமே தவிடுபொடியாப்போயிடும். அதான், நீங்களெல்லாம் கொஞ்சம் பொறுங்கன்னு நான் சொல்றேன்."

" இதிலே இன்னும் ஒன்னு இருக்கு தென்னக்கோன். என்னென்னா, நாம இருக்கிற இந்தக் கிராமம், தோட்டம்செய்ற பூமிகளெல்லாமே வனமிருகங்களுக்குச் சொந்தமா இருந்தவைதான். அவைகளுக்கு சொந்தமானவைகளைத்தான் நாம நமக்குச் சொந்தமாக்கிக் கொண்டோம். இதெல்லாம் மிருகங்களுக்குத் தெரியுமா? இந்தப்பகுதியெல்லாம் அவைகளுக்குச் சொந்தமான பகுதின்னுதான் இன்னமும் அவை நினைத்துக்கொண்டிருக்குதுகள். அதான் உரிமையோட தோட்டத்துக்குள்ளே வருதுங்க. இப்ப சொல்லுங்க. பிழை யார் மேலே? நம்மேலேயா? அல்லது மிருகங்கமேலேயா? " கூட்டத்தில் நின்ற வயதான ஒருவர் தென்னக்கோனையும், மற்றவர்களையும் பார்த்துக்கேட்டார்.

அவர்கள் பதில் சொல்வதற்காக யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் "அதோ...............முத்துபண்டாவைத் தூக்கிக் கொண்டு வாறாங்க" என்று சப்தமிட்டான் பையனொருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நிமிடங்களில் முத்துபண்டாவின் உயிரற்ற உடல் குடிசையின் முன்னால் கிடத்தப்பட்டது. அங்கு கூடிநின்ற பெண்கள் ஏகநேரத்தில் தொண்டைகிழிய கூக்குரலிடத் தொடங்கினர்.

## 12

ஆளடியனான தனியன் யானையைப்பிடித்து வேறு ஒரு காட்டுக்குக்கொண்டு செல்வதென்ற தீர்மானம் வனசீவராசிகள் திணைக் களத்தின் தலைமையகத்தில் எடுக்கப்பட்டுள்ளதென்ற செய்தியை அறிந்துவந்த தென்னக்கோன் சஙகத்தின் செயலாளரான லஸ்ஸன்னவை அழைத்து சங்கக்கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு கூறினார்.

அன்று பிற்பகலே அவருடைய வீட்டுமுற்றத்தில் சங்கக்கூட்டம் நடைபெற்றது. ஆளடியன் தொடர்பான செய்திகள் பரிமாறப்படலாம் என்ற செய்தி முற்கூட்டியே தெரியவந்ததால் அங்கத்தவர்கள் அல்லாத பலரும் கூட்டத்துக்கு சமூகமளித்திருந்தனர்.

தனது கூட்டத்திலிருந்து பிரிந்து தனியனாகத்திரியும் யானையைப்பிடித்துப் போவதற்கான தீர்மானம் குறித்து உள்ளூர் அதிகாரிகள் தன்னிடம் கூறிய செய்தியை தென்னக்கோன் கூட்டத்தினருக்குத் தெரிவித்தார்.

"எப்ப புடிக்கப்போறாங்களாம்?" சற்றுத்தூர பீடி புகைத்துக்கொண்டு நின்ற கமகே தனது கரகரத்த குரலில் கேட்டான்.

" சரியா சொல்ல முடியாது. நாளைக்கோ அல்லது நாளையன்னைக்கோ கொழும்பில் இருந்து ஆக்கள் வருவாங்க. நீங்களெல்லாம் ஒன்னு செய்யணும்."

" சொல்லுங்க. என்ன செய்யணும்? "

" என்ன செய்வீங்களோ, ஏது செய்வீங்களோ. எப்படியாவது முயற்சி செய்து அந்த ஆளடியன் காட்டுக்குள்ளே எந்தப்பக்கத்திலே வழக்கமா நடமாடுதுன்னு கண்டு புடிக்கணும். அப்படிக் கண்டுபுடிச்சா ஆனைபுடிக்கவாரவங்களுக்கு விசயம் லேசா போயிடும்."

" அது எப்படிங்க காட்டுக்குள்ளே போய் அதைத் தேடுறது? ஏற்கனவே முத்துபண்டாவை மிதித்து சாக வைச்சுப்போட்டுது. மதம் புடிச்சி அலையுது. எப்படிங்க காட்டுக்குள்ளே போறது?" விரல்களுக்கிடையில் இருந்த பீடியைத்தூர விசிறியவாறு மீண்டும் கமகே கேள்வி எழுப்பினான்.

" உண்மைதான். அதிகாரிகளும் யானை நடமாடும் இடத்தைக் கண்டு பிடித்துத்தான் வைக்கணும்னு என்னை வற்புறுத்தல்ல. ஆனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமாக தெரிந்து வைச்சிட்டோம்னா, வர்றவங்களுக்கு வேலை லேசாகிடும்னுதான் சொன்னேன்."

" அதைக்கண்டு பிடிப்பது அவ்வளவு கஸ்டமில்லீங்க. ராவைலே தோட்டங்களுக்கு வாரதுக்கு அது வழக்கமா ஒரு வழியைத்தான் பயன்படுத்தும். அது போட்டுட்டுப்போற சாணத்துக்குப் பின்னாலே போனா கண்டுபிடிச்சிடலாமுங்க." என்றான் தோளில் பண்ணாடைத்துவாயொன்றைப் போட்டுக்கொண்டு நின்ற ஒருவன்.

" அது நல்ல யோசனைதான். ராவைக்கோ அல்லது நாளை ராவைக்கோ அது காட்டிலேருந்து வெளியே வரணுமே?" என்றான் அப்பாஸ்.

" தேவையில்லீங்க. துணிச்சலுள்ள நாலுபேரு என்னோட வாங்க. காய்ந்த சாணத்தைப்பின்பற்றிப்போய் நான் கண்டுபிடிச்சித்தாறேன்." என்றான் பண்ணாடைத் துவாய் மீண்டும்.

" நான் வாறேன்."

" நானும் வாறேன் "

ஒருவர் பின்னொருவராக பலர் முன்வந்தனர்.

இரண்டு தினங்கள் பயப்பிராந்திக்கு மத்தியில் கழிந்தன. ஆளடியன் எப்போது கிராமத்தினுள் நுழைந்துவிடுமோவென ஊரே பயந்து நடுங்கியது. பலருடைய கைகளில் யானைவெடியும் தீப்பெட்டியும் தயாராக இருந்தன. இரவு நேரங்களில் தோட்டக்காவலுக்குப்போவதற்கு யாரும் முன்வரவில்லை. இருள்கவியத் தொடங்கியதுமே கதவுகளை இழுத்துப் பூட்டிவிட்டு குடிசைகளுக்குள்ளும், வீடுகளுக்குள்ளும் பெண்கள் ஒடுங்கிக் கொண்டனர். துணிச்சலுள்ள இளைஞர்கள் கைகளில் பந்தங்களுடன் தெருக்களில் கூட்டமாக அலைந்தனர். சிலரின் கைகளில் வைத்திருந்த டார்ச்லைட்டுக்கள் விட்டுவிட்டு தூர இடங்களுக்கு ஒளிபாய்ச்சின.

மதம்பிடித்த யானை நடமாடும் சில இடங்களைக் கண்டு பிடித்துள்ளதாக கிராமத்தில் செய்தி அடிப்பட்டது.

மூன்றாவது நாள் காலையில் இரண்டு ஜீப்வண்டிகள், ஒரு உழவுஇயந்திரம், ஒரு பழையலாரி, புள்டோசர் ஆகியவை பலத்த உறுமல்களுடன் கிராமத்தினுள் நுளைந்து தென்னக்கோனின் வீட்டருகில் நிரையாக நின்றன. மூக்குக்கண்ணாடி அணிந்த, முன்தலையில் வழுக்கைவிழுந்த உயரமான ஒருவர் தன்னை வனசீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்த மிருகவைத்திய நிபுணர் என அடையாளம் காட்டியவாறு தென்னக்கோனின் வீட்டினுள் உட்புகும்போது, அவரைப் பலர் பின்தொடர்ந்தனர். காக்கி உடுப்பணிந்த அதே இலாகாவைச்சேர்ந்த பலர் சடுதியாக அங்கு கூடிய கிராமத்தவர்களோடு அளவளாவத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" யாருப்பா அது ஆனடியன் நடமாடுற இடத்தை அடையாளம் கண்டது? வாப்பா முன்னாலே" என்றார் சற்றுச்சப்தமிட்டு தென்னக்கோன்.

" நான்தாங்க. " என்றவாறு தலையில் முண்டாசு கட்டிய ஒருவன் முன்னே வந்து யானை நடமாடிக் கொண்டிருக்கும் இடங்களை விபரித்தான்.

" இப்ப, இந்த நேரம் அது எங்கே நிக்கும்?" நிபுணர் கேட்டார்.

" சரியா சொல்லணும்னா, ஒருவேளை தண்ணி குடிக்க வம்மியடிக்குளத்துக்கு பக்கத்திலே நிக்கலாம்க"

" அதாவது, தண்ணி குடிக்க அடிக்கடி அந்தக் குளத்துக்கு வருது என்கே? "

" ஆமாங்க."

" சரி. நீங்க எல்லோரும் கூட்டத்தோட எங்களோட வரக்கூடாது. தெரிந்தெடுத்த இரண்டொருவர் வந்தாபோதும். ஒருவேளை உங்க கெட்ட காலத்துக்கு அதுக்குக் கோபம் வந்து உங்களைத்துரத்தத் தொடங்கிட்டா, அப்புறம் விளைவு விபரீதமாகிடும். ஆமா, அதை நீ எத்தனை தடவைக பார்த்தே? தனியா நின்டுச்சா, அல்லது கூட்டத்தோடவா? "

" ரெண்டுதடவை ரொம்ப தூரத்திலேருந்து பார்த்தேங்க. தனியாத்தான் நின்டுச்சி. நான் மட்டும் இல்ல. இவனும் பார்த்தான்" என்றான். சாரனை மடித்துக் கட்டியவாறு நின்ற மற்றுமொருவனை சுட்டிக்காட்டியவாறு.

" என்னப்பா, இவரு சொல்றது உண்மையா? "

" ஆமாங்க."

" என்ன உயரம் இருக்கும்? "

உத்தேசமாக தன்னால் கணிக்க முடிந்த உயரத்தைக் கூறினான்.

" தந்தங்கள் இருக்கா? "

" ஆமாங்க. "

" அப்படின்னா நேரத்தை வீணாக்கக் கூடாது. வாங்க கிளம்புவோம்"

யானையைப் பிடிப்பதற்காக அதிகாரிகள் வந்துள்ளதைக் கேள்வியுற்ற லஸ்ஸன்னவும், சலீமும் ஓட்டமாக வந்து நின்றனர்.

" டாக்டர்சார். இவங்கதாங்க எங்க சங்கத்தை ஆரம்பிப்பதற்கு காலாயிருந்தவங்க. இன்னும் ரெண்டுபேரு இவங்க கூட்டாளிமாரு இருக்காங்க. இவங்க நாலுபேருமே நாலு இனங்களைச் சேர்ந்தவங்க. இது சின்னக் கிராமம் என்றாலும் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், கிறிஸ்தவர்களென்ற நாலு இனத்தவர்களும் ரொம்ப ஒற்றுமையா வசிக்கிறோம்க" என்றார் இளைஞர்கள் இருவரையும் அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தியவாறு தென்னக்கோன்.

மிருகவைத்திய நிபுணரும், மற்றவர்களும் அவர்களைப் பார்த்து முகம் மலரச் சிரித்து.....கைகூப்பியும், கைகுலுக்கியும் வரவேற்று.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உங்களைப்பற்றி தலைமைக்காரியாலயத்திலே நிறையவே கேள்விப்பட்டோம். வனமிருகங்களையும், மரங்களையும் பாதுகாப்பதற்காக நீங்க தொடங்கிய இந்த முயற்சி சாதாரணமான ஒன்றா நினைக்காதீங்க. மக்களுடைய பங்களிப்பு இல்லாம வாய் பேசாத அப்பிராணிகளையும், தேசிய செல்வமான மரங்களையும் பாதுகாக்கவே முடியாது. உங்களைப்பற்றியும், உங்க சங்கத்தைப் பற்றியும் பத்திரிகைகளிலே நிறைய விசயங்கள் வந்திருக்கு." என்றார் வனசீவராசிகள் திணைக்கள உயர் அதிகாரியொருவர்.

அதிகாரிகளும், தெரிந்தெடுத்த வேறுசிலரும், லஸ்ஸன்னவும், சலீமுமாக ஒரு கூட்டத்தினர் உழவுவண்டியில் ஏறி காட்டைநோக்கி நகரத்தொடங்க புள்போசர் மெதுவாக அவர்களைப் பின்தொடர்ந்தது.

சூரியக்கதிர்களின் வெப்பம் உழவுவண்டியில் சென்றவர்களின் தோல்களை சுட்டெரிக்க முயன்றாலும், காட்டின் மரங்களினூடே தவழ்ந்த தென்றல் முகங்களிலும், திறந்திருந்த வெற்றுஉடல்களிலும் இதமாக தொடர் முத்தமிட்டுச் சென்றது. காட்டினுள் அவர்கள் உட்புகுந்த வேளையில் நரிகளின் கூட்டமொன்று தூரத்தே நின்றவாறு அவர்களைப்பார்த்து வாய்பிளந்து ஓலமிட்டது. ஓநாயொன்று திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு மிரண்டு ஓடியது. காட்டுமாடுகள் இரண்டு கண்ணுக்கெட்டிய தூரத்தே நின்றவாறு மறி ஏற முயன்றன.

ஆளடியன் வழக்கமாக நடமாடும் இடங்களில் மெதுவாக உழவுயந்திரம் ஊர்ந்து சென்றாலும், அதைக்கண்டுபிடிப்பது என்பது இலகுவான செயலாக தென்படவில்லை. சூரியன் உச்சிக்கு வர..... உழவு இயந்திரத்தை மரநிழலில் நிறுத்தி அதிகாரிகளும் மற்றவர்களும் இறங்கி இளைப்பாறினர். கையோடு கொண்டு சென்றிருந்த பாணையும் பனிசையும் சாப்பிட்டு தண்ணீர் குடித்தனர்.

" என்ன லஸ்ஸன்ன, அதைக் காணவே முடியலையே" என்றார் மிருகவைத்திய நிபுணர் மரமொன்றில் சாய்ந்தவாறு நின்றிருந்தவனைப் பார்த்து.

" அதானே சார். வம்மியடிக்குளத்துக்கு தண்ணி குடிக்க வரும்னு பார்த்தா, இன்றைக்கென்று வரல்லையே."

" எதுக்கும் பொறுத்துப்பார்ப்போம். யானையை கண்டுபிடிப்ப தென்பது அவ்வளவு லேசான காரியமல்ல."

அவர்கள் மீண்டும் தங்களின் தேடுதல் வேட்டையைத் தொடங்கி. ..... வம்மியடிக்குளத்தின் அருகே மறைவிடமொன்றில் நீண்டநேரம் காத்திருந்து..... ஏமாந்து...... பொழுதுசாயும்வேளையில் உழவுஇயந்திரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தை நோக்கி செலுத்தத் தொடங்கினர்.

அன்று இரவு தென்னக்கோனின் வீட்டுவளவினுள் பாய்களில் படுத்துக்கொண்டிருந்த அதிகாரிகளுக்கு நிசப்தத்தைக் கிழித்தவாறு காற்றில் கலந்துவந்த பயங்கரக்கூச்சல் கேட்கவில்லைப் போலும். பகலெல்லாம் அலைந்த அசதியினால் அவர்கள் ஆழமான நித்திரையில் ஆழ்ந்திருந்தனர்.

## 13

அதிகாலையிலேயே சரசரவென கிராமம் முழுதும் செய்தி பரவத்தொடங்கிவிட்டது. கடந்த இரவு தோட்டமொன்றுக்குள் புகுந்த ஆளடியன் பயிர்களையும் வாழைமரங்களையும் முற்றாக நாசப்படுத்தியது மட்டுமல்லாமல், கிராமத்தின் கோடியில் தனியாக அமைக்கப்பட்டிருந்த குடிசையொன்றை துவம்சம் செய்ய முற்பட்டபோது, குடிசைக்குள்ளிருந்த வர்களும், அயல்வாசிகளும் போட்ட சப்தத்தினாலும், வெடிக்கவைத்த இடிவெடியோசையினாலும் பயந்து பின்வாங்கிப் போய்விட்டிருந்தது.

" பாருங்கசார். இதான் எங்க வாழ்க்கை. பகலிலும் பயம். ராவிலும் பயம், எந்தநேரம் எந்த வழியால வந்துடுமோன்னு செத்துச்செத்துப் பிழைக்கிறோம்." என்றார் தென்னக்கோன் பல்விளக்கியவாறு கிணற்றடியில் நின்ற அதிகாரியொருவரைப் பார்த்து.

" இப்படியெல்லாம் பயப்படுவதற்குக் காரணமே நீங்கதான். மிருகங்களுக்குச் சொந்தமான இடங்களை நீங்க அடாத்தாகப்பிடித்துக் கொண்டீங்க. நீங்க அவங்கட இடங்களை விட்டுட்டு வேறு இடங்களுக்குப் போயிட்டா, மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான போராட்டங்கள் எழவே எழாது."

" நாங்க எப்படி சார் விட்டுக்கொடுப்பது? இந்தக்காடுகளை வெட்டி குடியிருப்புக்காணிகளா மாற்றுவதற்கு நாங்கபட்ட கஸ்டங்கள் எங்களுக்குத்தான் தெரியும்." என்றான் யானை பிடிப்பதற்கு அதிகாரிகளுடன் செல்வதற்காக அங்கு வந்த கிராமத்தவர்களில் ஒருவன்.

" என்ன விஜேரட்ன, காலைலேயே குளிக்கப்போறீங்களா? " கேட்டவாறு மிருகவைத்தியர் கிணற்றினருகில் வந்தார். விஜேரட்ன கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள் குழுவினருள் ஒருவர்.

" நேற்றெல்லாம் அலைஞ்சதாலே அலுப்பு இன்னும் மாறல்ல. தலைலே தண்ணியை ஊற்றினாத்தான் பிரஷ்ஷா இருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இன்றைக்கு அதைப்பிடிச்சிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு? "

" எப்படி ? "

" கடந்தராவு அது தோட்டமொன்றுக்குள்ளே வந்திருக்கு. சாணம் போட்டுப்போயிருக்கும். அத்துடன் காலடிகளும் இருக்கும். அவைகளைப் பின்பற்றிப் போனால் லேசா கண்டுபிடிச்சிடலாம்."

மிருகவைத்தியர் கூறியதுபோன்று அவர்கள் அன்றும் காட்டுக்குள் நுழைந்து பாதுகாப்பான ஓர்இடத்தில் மறைந்தவாறு நீண்டநேரம் நின்று கொண்டிருக்கும்போது.........

" அதோ மரங்களுக்குள்ளே அசையுதுங்க." என்றான் சற்றுத் தொலைவில் விரலைச்சுட்டிக்காட்டியவாறு மெல்லிய குரலில் ஒருவன்.

அவன் காட்டியதிசையில் அனைவரும் பார்க்க.... தனது நீண்ட தந்தங்களுடன் யானையொன்று தனியாகத் தெரிந்தது.

" சந்தேகமில்லாம அதாங்க. அதாங்க முத்துபண்டாவை மிதிச்சுக் கொன்னது" என்றான் தலையில் முண்டாசு கட்டியவாறு உழவு இயந்திரப்பெட்டியின் மூலையில் நின்றவன்.

" நீங்க எல்லோருமே எந்தச்சப்தமும் இல்லாம பெட்டிக்குள்ளே குந்துங்க. நான் மெல்லப்போய் மயக்க ஊசியைச்சுட்டுட்டு வந்துடறேன்" என்றவாறு கையில் தயாராக வைத்திருந்த துப்பாக்கியுடன் மிருகவைத்தியர் மெதுவாக இறங்கி....ஊர்ந்தவாறும், நகர்ந்தவாறும், மரங்களுக்கிடையில் ஒளிந்தவாறும் யானை நின்றிருந்த இடத்துக்கு சுமார் நாற்பது அடிகள் தூர நெளிந்து..... தரையில்படுத்தவாறு அதன் பெருத்த பின் பக்கத்தை நோக்கிக் குறிவைத்து.....விசையைத்தட்டிவிட்டார்.

திடீரெனத் தாக்கப்பட்ட யானை முன்பின் யோசியாது முன்னால் பாய்ந்து ஓடியது.

" வாங்க...... வாங்க......எல்லோரும் வாங்க. நாமும் தொடர்ந்து போவோம்." என்றார் டாக்டர் தரையிலிருந்தும் எழுந்து சேர்ட்டில் அப்பியிருந்த மண்துகள்களைக் கைகளால் தட்டிவிட்டவாறு.

யானை தறிகெட்டு அங்குமிங்குமாக ஓடியது. அதனது பருத்தகால்களுக்குள் அகப்பட்ட பற்றைகள் சல்லடைகளாகின. தும்பிக்கையை மேலே உயர்த்தி இரண்டொரு தடவைகள் பலத்த சப்தத்தில் பிளிறியது. டாக்டரும் மற்றவர்களும் யானைக்கும் அவர்களுக்கு மான இடைவெளியைத் தொடர்ந்து வைத்துக்கொண்டு அதைப் பின்பற்றி ஓடிக்கொண்டிருந்தனர். யானையின் கால்கள் மெதுவாக சக்தியிழக்க.... அதனது வேகம் குறைய..... அகன்ற கால்களை தூக்க முடியாமல் தூக்கி.....ஒவ்வோர் அடிகளாக வைத்து......மேற்கொண்டு நடக்கமுடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அறிந்து......ஓர் இடத்தில் நின்று!.....மயக்கமுற்று.....மெதுவாக தரையில் சாய்ந்து கொண்டது.

டாக்டர் மெதுவாக ஊர்ந்து படுத்துக்கிடந்த யானையின் அருகில் சென்றார். அதனது கண்கள், இமைகள் மூடப்பட்டிருந்தன. கால்களில் அசைவு தெரியவில்லை. பலமான மூச்சுக்கள் வெளிவரும்போது பருத்தவயிறு உப்பித்தணிந்தது. யானையின் துதிக்கை அதனது முன்னங்கால்களொன்றுக்குள் அகப்பட்டு இருந்ததைக் காணமுடிந்ததால் டாக்டரும் மற்றவர்களுமாக மிக சிரமப்பட்டு காலைச்சிறிது மேலே உயர்த்தி துதிக்கையை விடுவித்து தரையில் கிடத்தினர்.

வனசீவராசிகள் இலாகாவின் ஊழியர்களில் சிலர் உழவுஇயந்திரப் பெட்டிக்குள் சுருட்டிக்கிடந்த அறுக்கமுடியாத கயிறுகளை எடுத்துவந்து, அதனது ஒவ்வொரு கால்களையும் சற்று உயர்த்தி, கயிற்றால் முடிச்சுப்போட்டு தூரத்தில் நின்ற அகன்ற மரமொன்றில் மற்ற தொங்கலை முடிந்துவிட்டனர். அவர்கள் யானைக்கு முடிச்சுப்போட்டுக் கொண்டிருக்கும் வேளையில் புல்டோசர் அந்த இடத்தை நோக்கிவரும் சப்தம் கேட்டது.

"இதுக்கு மயக்கம் தெளிவதற்கு முன்னாலே கயிறுகளை மரத்திலிருந்து அவிழ்த்து புல்டோசருடன் கட்டிவிடுங்க." டாக்டர் சப்தமிட்டார்.

விழுந்துகிடந்த யானையின் பின்பக்கமாக புல்டோசர் கொண்டு வரப்பட்டு....அவசரவசரமாக கயிறுகள் மரத்திலிருந்தும் அவிழ்க்கப்பட்டு . ...... புல்டோசரில் பொருத்தமான இடங்களில் கட்டப்பட்டன.

ஒவ்வொருவரும் இயந்திரகெதியில் இயங்கினர். வேறு சிலர் யானையை ஏற்றுவதற்காக லாரியைக் கொண்டுவந்து நிறுத்தக்கூடிய பொருத்தமான இடமொன்றைத் தேடப்புறப்பட்டனர்.

காற்று வீசாததால் மதியவெய்யில் புழுக்கத்தை ஏற்படுத்தியது. யானை இன்னும் புசுபுசுவென மூச்சுவிட்டது. பருந்து ஒன்று இவர்களை நோக்கிப் பறந்து வந்து, வட்டமடித்துவிட்டுச்சென்றது. காட்டுமாடுகளின் கூட்டமொன்று அசைபோட்டவாறு சற்றுத்தூர அசைந்து நடந்தது. பற்றைகளுக்குள்ளிருந்து திடீரென வெளியேபாய்ந்த இரண்டு மான்கள் எதிர்பாராது மனிதசீவிகளைக்கண்டதும் திரும்பிப்பாராமல் துள்ளிப் பாய்ந்து அடர்ந்த காட்டுக்குள் அடைக்கலம் தேடிக்கொண்டன.

"எல்லாமே சரி. கயிற்று முடிச்சுகளெல்லாம் சரியா போடுபட்டுள்ளதா என்பதை இன்னுமொருதடவை சரிபார்த்துடுங்க. யானைக்கு அடுத்த இன்ஜெக்ஷன் போட்டு எழுப்பப்போறேன். எல்லோரும் டிரக்டரிலே ஏறி சற்றுத்தூரப்போய் நில்லுங்க." டாக்டர் கூறியதும் விஜேரட்னவும் மற்றும் அனைவரும் யானையின் கால்களிலும், புல்டோசரிலும் போடப்பட்டிருந்த கயிற்று முடிச்சுக்களை கைகளினால் பலமாக இழுத்து சரிபார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எல்லாம் சரியா இருக்கு டாக்டர்." என்றார் விஜேரட்ன.

டாக்டர் இன்ஜெக்சன் ஊசியொன்றை துப்பாக்கிமுனையில் பொருத்தி, சற்றுத்தூரநின்றவாறு விசையைத்தட்டிவிட்டார். வேகவேகமாக நடந்துசென்று மற்றவர்களுடன் இணைந்துகொண்டார். உழவுஇயந்திரம் எந்தக்கணமும் நகரக்கூடியவாறாக ஸ்டாட் செய்யப்பட்டு தயார் நிலையில் நின்றது.

நேரம் மெதுவாகக்கரைய.....ஒவ்வொருவரும் படுத்துக்கிடந்த யானையையே பார்த்தவாறு சலனமாகநிற்க.......யானை மெதுவாக அசைந்து. ......தும்பிக்கையை மேலேதூக்கமுயன்று......தோல்வியுற்று.....கால்களை அசைத்து....கண்களைத் திறந்து...மெதுவாக பலம்பெற்று.......துதிக்கையை மேலேஉயர்த்தி...... கால்களை மடக்கி......வயிற்றை உயர்த்தி.....சில அங்குலங்கள் தவழ்ந்து.....மிக சிரமத்துக்கு மத்தியில் கால்களை மடக்கிக்குந்தி..... எழுந்துநிற்கமுயன்றது. துதிக்கையை உயர்த்திப் பிளிறியது. மீண்டும் காடதிரப் பிளிறி.....மீண்டும் எழ முயன்று.......தன்னால் எழ முடியாதவாறு எதுவோ தடைசெய்வதாக உணர்ந்து.....மூர்க்கம் கொண்டு ......பலமாக கால்களைப்பிரிக்க முயன்று முடியாது போனதால் மீண்டும் தன் பலம் முழுவதையும் பிரயோகித்து மெதுவாக அசைந்து.... யானை தோற்றுப்போய் துதிக்கையை உயர்த்தி மிகப்பலமான சப்தத்தில் அலறியது.

யானை கால்களால் பலம் கொண்டமட்டும் இழுக்க முயற்சிப் பதையும் தோற்றுப்போவதையும் மூச்சுவிட மறந்த நிலையில் உழவுஇயந்திரப்பெட்டிக்குள் நின்றவாறு அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர்.

" இப்ப என்ன டாக்டர் செய்வது? " சலீம் கேட்டான்.

"லாரி நிறுத்தக்கூடிய இடம் பார்க்கப் போனாங்களே. வந்துட்டாங்களா?"

" இன்னும் இல்ல."

"அவங்க வரட்டும், அப்புறம் உங்களிலே கொஞ்சபேர் அவங்களோட திரும்பவும் போய், லாரியின் டயர்களைத் தரைக்குள் இறக்கக்கூடியவாறு மடுவெட்டணும். லாரியின் பின்சட்டம் தரையோடு படக்கூடியவாறு அதைத் தரைக்குள்ளே இறக்கணும். யானையை இழுத்துவந்து அதனுள்ளே ஏற்றியதும் அதை மேலே கொண்டுவரக்கூடியவாறு கம்புதடிகளைப்போட்டு வைக்கணும்." டாக்டர் கூறிக்கொண்டிருக்கும் போதே, அவர்கள் நின்ற இடத்திலிருந்து சுமார் ஐம்பது யார் தூரத்திலுள்ள இறுகிய தரையில் லாரிவந்து நிற்பது தெரிந்தது.

" விசயம் லேசா முடிஞ்சிடும்போல. ரொம்ப தூரத்துக்கு இழுக்க வேண்டிவராது." டாக்டர் விஜேரட்னவைப் பார்த்துக்கூறினார்.

"மண்வெட்டிகள் லாரிக்குள்ளேயே கிடக்கு. வாங்க போகலாம்." என்றான் காக்கிசேர்ட் அணிந்து நின்ற இலாகா ஊழியர்களுள் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாறுபேர் கொண்ட ஒருகுழுவினர் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது லாரி நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்குச் சென்று.......லாரியின் சாரதி கூறியவாறு மடுவெட்டத் தொடங்கினர்.

உச்சிவெய்யில் தலைகளைச்சுட்டது. யானை பக்கத்துக்குப் பக்கம் புரள்வதற்கு முயன்று தோற்றது. அதனுடைய நான்கு கால்களும் ஒன்றோடொன்று பிணைத்துக் கட்டப்பட்டிருந்ததால், தான் பெரியதொரு பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டதாக நினைத்தது போலும், அதிலிருந்து விடுபட ஆனமட்டும் முயன்று சலித்தது.

லாரியின்டயர்களை இறக்கக் கூடியவாறு மடு வெட்டி முடிந்ததும். சாரதி லாரியை பின்பக்கமாகத்திருப்பி மெதுவாக அதனுள் இறக்கினான். யானையை அதனுள் ஏற்றியதும் இலேசாக லாரியை வெளியே எடுக்க முடியுமா என்பதைப் பரிசோதிப்பதற்காக மடுவிலிருந்தும் அதை வெளியே கொணர்ந்து பரிசோதித்துப்பார்த்தான்.

"எல்லாம் சரிங்க. ஒருவேளை யானையை ஏற்றி லாரியை மேலே கொண்டுவரும்போது டயர்கள் புதைந்தாலும் கவலைப்படத் தேவலை. இருக்கவே இருக்கு புல்டோசர். ஒரே இழுவைலேயே இழுத்து எறிஞ்சிடும். வாங்க அங்கபோய் எதையாவது சாப்டுட்டு அப்புறம் யானையை ஏத்தலாம்" என்றார் டாக்டர்.

பொழுது மெதுவாகச்சாயத்தொடங்க......புல்டோசர் ஸ்டாட் செய்யப்பட்டது. கால்கள் ஒன்றுடன் ஒன்றாக பிணைக்கப்பட்டிருந்த யானை. புல்டோசரின் என்ஜின் சப்தப்தைச் செவியுற்றதும் சடுதியாக திடுக்குற்று, தன் பலம்முழுவதையும் பிரயோகித்து கயிறுகளிலிருந்தும் கால்களை விலக்க முயன்று தோற்றது.

" நீதான் இந்த விசயத்திலே எக்ஸ்பேட் றைவர் ஆச்சே. உனக்குச் சொல்லித் தரவே தேவல்லையே. எதுக்கும் ரொம்ப கவனமா இழுப்பா" என்றார் புல்டோசரின் சாரதியைப் பார்த்து மிருகவைத்தியர்.

சாரதி உதட்டில் கௌவியிருந்த சிகரட்டில் ஒரு தம் இழுத்து வளையங்களாக புகையைக் கக்கினான், கிளச்சைமாற்றி மெதுவாக புல்டோசரை முன்னே இழுக்க, கயிறுகளின் சுருக்கங்கள் நீங்கி நிமிர... யானை தரையோடு இழுபட்டது.

" பார்த்துப்பா. பார்த்து. கல்லுகளுக்கு மேலாக அதை இழுக்காதே. தோல் உரைந்து புண் ஆகிடும்." கட்டளையிட்டவாறு மிருகவைத்தியர் யானைக்கும் புல்டோசருக்கும் இடையில் லாரியை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

யானை தொடர்ந்து இழுபட்டு, லாரியின் அருகில் கொண்டுவரப்பட்டு, தரையோடு தரையாக வைக்கப்பட்டிருந்த பின் பக்கத்தினுள் மெதுமெதுவாக இழுத்துப்போடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இப்போ புல்டோசரிலிருந்து கயிறுகளை அவிழ்த்திட்டு அதை லாரிக்கு முன்னாலே கொண்டு வாங்க. " மிருகவைத்தியரின் கட்டளை செயற்படுத்தப்பட்டது.

லாரியை ஸ்ராட் செய்து அதை முன்னால் இழுக்க சாரதி முயன்றான். லாரியின் சக்கரங்கள் வேகமாக சுற்றினாலும் அது மேலெழும்ப முடியாமல் கதறியது. சக்கரங்கள் அங்குலம் தானும் முன்னுக்கு வராமல் சுற்றிக் கொண்டிருக்க,........

" ஏம்பா கஸ்டப்படுறே. புல்டோசரிலே லாரியைக்கட்டி இழுத்துட்டாப் போச்சு?" என்றார் புல்டோசரின் சாரதி.

சுமார் அரைமணி நேரத்தினுள் லாரியின் முழுப்பகுதியும் தரையின்மேல் வந்து நின்றது. லாரியின் பின் கதவுகள் பூட்டப்பட்டன. ஜீப்வண்டிகளும், புல்டோசரும் பின்தொடர லாரி அசைந்தவாறு கிராமத்தை நோக்கி முன்னேறத் தொடங்கியது.

## 14

ஞாயிற்றுக்கிழமை காலையொன்றில் கவனிப்பாரற்றுக்கிடந்த புல்வெளியில் கிராமத்தின் இளைஞர்கள் பலர் கூடினர். சுமார் இருபத்தைந்து பேர் அளவில் நின்றனர். சிங்கள, தமிழ், இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைச்சார்ந்த அவர்களில் சிலர் தொய்ந்த கிழிந்த கட்டைக்கால் சட்டைகளுடனும், சிலர் சாரன்களுடனும், மிகச் சிலர் சற்று நாகரீகமாக உடுத்தியவாறும் வந்திருந்தனர். அவர்களில் பலர் பக்கத்து கிராம பாடசாலையில் கல்வி கற்பவர்கள். சலீம், லஸ்ஸன்ன, பாபு, சார்ல்ஸ் ஆகிய நண்பர்கள் நால்வரும் அங்கு நின்றனர். சின்னத்துரை ஆசிரியரும் வந்திருந்தார்.

" சரிசரி. டீம் டீமா பிரிஞ்சி நில்லுங்க. மேட்சைத் தொடங்கிடலாம்" கூறிவிட்டு சின்னத்துரை வாயில் விசிலை வைத்து சப்தம் எழுப்பியவாறு விளையாட்டு மைதானமெனக்கருதப்பட்ட புல் வெளிக்குள் சென்றார்.

வட, தென் பக்கங்களில் இரண்டு டீம்களும் தங்களை நிலைப் படுத்திக் கொண்டனர். பாபுவும், சலீமும் ஒருபக்கத்திலும், மறுபக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லஸ்ஸன்னவும், சார்ல்ஸும் சேர்ந்து கொண்டனர். பாடசாலையில் உதைபந்தாட்டங்களில் கலந்து கொள்ளும் கிராம இளைஞர்கள் இருவர் இரண்டு டீம்களுக்கும் தலைமைவகித்தனர்.

உதைபந்தாட்டப்போட்டி தொடங்குவதற்குமுன்னரே கிராமத்து யுவதிகளில் பலர் வேடிக்கை பார்ப்பதற்காக மைதானத்துக்கு அருகே வந்திருந்தனர். சில வயதானவர்களும், தோட்டங்களில் வேலை செய்யும் வேலையாட்களும் அங்கொன்றும், இங்கொன்றுமாக நின்றனர். தென்னக்கோன் சைக்கிளில் வந்து புல்வெளியை ஒட்டியவாறு ஓங்கி வளர்ந்து நின்ற மரமொன்றில் சைக்கிளைச்சார்த்திவிட்டு சின்னத்துரை ஆசிரியரைப்பார்த்து பலமாக கையசைத்தார்.

மைதானத்தின் ஒருபக்கமாக நின்ற லஸ்ஸன்ன கூட்டத்தினருள் நின்றிருந்த உயர்ந்த, சற்றுக்கவர்ச்சியான இளம் பெண்ணொருத்தியைப் பார்த்து மெதுவாக கையசைத்தான்.

"போதும், போதும். கையை மெள்ள அசைங்க, நாலு பேரு பார்த்துட்டா அப்புறம் தோலை உரிச்சுடுவானுக." என்றான் லஸ்ஸன்னவுக்கு சமீபமாக நின்றிருந்த சார்ல்ஸ். இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

" கைகாட்டுற அளவுக்குப் போயிட்டுதா? ஒன்றைமட்டும் மறந்துடாத. கள்ளமரம் வெட்டின குற்றத்துக்காக இப்போ மறியலிலே இருக்கானே வில்சன். அவன்ட தங்கச்சிதான் அவ என்பதை மறந்துடாதே. அவனைக் காட்டிக் கொடுத்தது நீதான்னு அவனுக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கும். அவன் இதுக்கு ஒத்துக்கொள்வான்னு எனக்கு நம்பிக்கையே இல்லை. மேலும் மேலும் அவ மனசிலேயும் உன் மனசிலேயும் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளாம இந்த விசயத்தை இத்துடனேயே விட்டுடு. இல்லே, பின்னாலே இதன் விளைவுகள் பாரதூரமாய் ஆகிடலாம்." என்றான் அவனை நெருங்கிவந்து நின்ற சார்ல்ஸ் மீண்டும்.

சார்ல்ஸ் கூறிக்கொண்டிருந்ததை லஸ்ஸன்ன செவியுற்றுக் கொண்டிருந்தாலும் அவனுடைய பார்வை இன்னமும் தூரத்தே நின்றுகொண்டிருந்த அனோமாவின் மீதே லயித்தது. தொடர்ந்தும் அவனது முகம் புன்சிரிப்புடனேயே மிளிர்ந்தது.

"காலம்கடந்துட்டுது சார்ல்ஸ். உங்க எல்லோரிடமும் நான் எல்லா உண்மைகளையும் இன்னும் சொல்லல்ல. பொதுவாசொன்னா, நானும் அனோமாவும் உயிருக்குயிரா காதலிக்கிறோம். அவள் எனக்குத் தூரத்திலே முறைப்பொண்ணு கூட."

"மேட்ச் தொடங்கப்போகுது. இதை இப்போ கதைக்க நேரம் இல்லை. நாம நாலுபேருமே கூடிக்கதைப்போம். எதுக்கும் வில்சனைப் பற்றித்தான் எனக்குப் பயமா இருக்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவராக செயற்படும் சின்னத்துரை விசில் அடிக்க............உதைபந்து ஒவ்வொருவரினதும் வெற்றுக்கால்களுக்குள் அகப்படுவதும், உதைபடுவதும், மேலெழும்புவதும், குதிப்பதுமாக......சாகசங்களைக் காட்டியது.

பொழுது பொலபொலவென புலர்ந்தது. காட்டுக்குருவிகள் இடையறாது குரலெழுப்பின. தெத்திப்பறந்தன. வயல்வெளியில் சிறிது தூரத்தில் ஆண்மயிலொன்று தனது பலவர்ண பட்டுத்தோகையை விரித்தவாறு நடனமாடியது. அதனது எதிரே அது நடனமாடும் அழகைப் பருகியவாறு இரண்டு பெண்மயில்கள் மயங்கிய நிலையில் நின்றிருந்தன. ஆண்மயில் அடிக்கடி தனது அடித்தொண்டையால் பெண்மயில்களுடன் காதல் மொழிகள் கதைத்தது. புறாக்கூட்டமொன்று சிறகடித்தவாறு மேலே பறந்து சென்றது.

கிராமத்தவர்களில் சிலர் உடுத்தியிருந்த சாரன்களைத் தோளில் போட்டுப்போர்த்தியவாறு காலைக்கடன்களைக் கழிப்பதற்காக பற்றைகளை நோக்கி நகர்ந்தனர். மாட்டுத்தொழுவமொன்றுக்குள் சாணத்தினுள் படுத்துக்கிடந்த மாடுகளை இடுப்பில் துண்டு மட்டும் உடுத்தியிருந்த ஒருவன்........ சப்தமிட்டவாறே எழுப்பிவிட்டான். பாய்ந்துவந்த குட்டி தாயின் பால்மடியைத் தலையால் மோதி பால் குடிக்கத்தொடங்க.....அதன்தலையில் கைவைத்து பலாத்காரமாகஒருபக்கத்துக்கு இழுத்து அருகே நட்டிருந்த கம்பத்தில் அதனைக்கட்டிவிட்டு, பானையொன்றைத் தாயின் மடியின் கீழ்வைத்து காம்புகளை விரல்களால் நசித்து பால்கறந்தான். தோட்டங்களுக்குள் மரக்கறி பறிப்பதற்காக ஓலைப்பெட்டிகளுடன் சில பெண்கள் சென்றனர்.

அன்று பிற்பகல் நடைபெறவிருந்த சங்கக் கூட்டத்தைப் பற்றி கிராமத்தவர்களுக்கு தெரிவிப்பதற்காக மரங்களில் ஒட்டப்படவேண்டிய நோட்டீஸ்களை கடந்த இரவே எழுதி வைத்திருந்தனர்.

"ஏம்பா பாபு. கூட்டத்துக்கு கொழும்பிலிருந்து பெரிய அதிகாரிமாருங்களெல்லாம் வாராங்களாமே. மெய்யா?" மாணிக்கம் தனது மகனைப்பார்த்துக் கேட்டான்.

"ஓம்பா. இன்றைக்குத்தான் நம்ம கிராமத்தைப்பற்றி பெரிய பெரிய தீர்மானஙகளெல்லாம் எடுக்கப்போறாங்களாம். ஜனாதிபதி கூட தன்னுடைய பிரதிநிதியாக ஒரு ஆளை இந்தக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக அனுப்புறாங்களாம்."

"பாபு. நம்ம கிராமத்திலே நமக்குன்னு ஒரு கோயில் இல்லையே. பூஜை செய்யணும்னா கோயில் உள்ள இடங்களா தேடித்திரிய வேண்டியிருக்கு. இதாம்பா சரியான சந்தர்ப்பம். நமக்கு ஒரு கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவதைப்பற்றியும் எப்படியாவது கதைச்சு ஒரு முடிவு எடுத்துடுங்கப்பா"

"இதைப்பற்றி நாங்க கதைக்கத்தான் போறோம். நீங்களும் கூட்டத்துக்கு வரத்தானே போறீங்க. பாருங்களேன் என்னென்ன நடக்கப் போகுதுன்னு."

நோட்டீஸ்களை கையில் எடுத்துக்கொண்டு பாபு வீட்டிலிருந்து வெளியாகி சலீமின் வீட்டை நோக்கி நடந்தான். அன்று முற்பகலுக்கு முன்பே அவைகளை ஒட்டிவிடவேண்டும் என அவர்கள் தீர்மானித்திருந்தனர். சலீம் வீட்டில் இருக்கவில்லை. லஸ்ஸன்னவுடன் தோட்டமொன்றுக்கு மரக்கறி பறிப்பதற்காக அவன் போயிருப்பதாக அறிந்து, அந்தத் தோட்டத்தை நோக்கி நடக்கத்தொடங்கினான்.

கிராமத்தின் ஒரு கோடியைக் கடந்து ஒற்றையடிப்பாதையொன்றால் அவன் நடந்து கொண்டிருந்தபோது, அவனது இதயத்தை உறைய வைக்குமாப்போன்று சற்றுத்தூர அடர்ந்த பற்றைகளுக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் அலறல் ஒலிகேட்டது.

"என்னைக் காப்பாத்துங்க. என்னைக்காப்பாத்துங்க....." தொடர்ந்து ஒலித்த அந்தத்தீனக்குரல் சடுதியாக அடங்கிவிட்டதை பாபுவால் உணர முடிந்தது. குரல்வந்த திசையை நோக்கி அவன் வேகமாக ஓடினான். பற்றைகளை விலக்கியவாறு.....மரக்கிளைகளை நீக்கியவாறு....காய்ந்த சருகுகளை பாதங்களினால் நொறுக்கியவாறு அவன் ஓடிக்கொண்டிருக்கையில்.....உயர்ந்த வளர்ந்த பற்றைகளுக்கிடையில் சிவப்பு நிறமான துணியொன்று தெரிய.......வேகமாக அந்த இடத்துக்குச் சென்று பற்றைகளை நீக்கி அவன் பார்க்க......திடுக்குற்றான். பருவவயதான இளம் பெண் ஒருத்தியை தரையில் கிடத்துவதற்காக வயதான ஒருவன் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

பாபு என்ன நினைத்தானோ, நொடியில் அருகே கிடந்த பாரமான நீண்ட தடியொன்றைக் கையில்பற்றி, ஓசையில்லாமல் பற்றைகளுக்குள்ளால் நுளைந்து பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவனின் பின்னால் சென்று.......கையிலிருந்த தடியை ஓங்கி அவனது இடுப்பில் அடித்தான்.

பெண்ணின் வாயைப் பொத்தியிருந்த கையை எடுத்தவாறு மற்றவன் திரும்புவதற்கிடையில் பாபு மீண்டும் தனது பலம் முழுவதையும் பிரயோகித்து அவனுக்கு அடித்தான். திரும்பவும் அடித்தான்.

"சீ ! நீயெல்லாம் ஒருமனசனாய்யா? தோட்டத்துக்குப்போக தனியா வந்த பெண்ணோட இப்படி நடக்க முயற்சித்திருக்கியே. நான் மட்டும் வாரதுக்கு கொஞ்சம் பிந்தியிருந்தா, இந்த இடத்திலே எப்படிப்பட்ட ஒரு பாவச்செயலைச் செய்திருப்பே" கூறியவாறு காறி தூர உமிழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் பொறுக்கி! என் வழியிலேயா வரப்பாக்கே? இருடா! உன்னை உண்டா இல்லையான்னு ஆக்கிக்காட்டுறேன்." என்றான் அடிபட்ட பாம்பாக மணலில் சுருண்டவாறு மற்றவன்.

"என்னடா செய்வே? என்ன செய்வே? நான் இப்போ இந்தப் பொண்ணை பொலீஸ் ஸ்டேசனுக்குக் கூட்டிப்போய் முறைப்பாடு செய்தா, நீயே உண்டா இல்லையான்னு ஆகிடுவே. வாம்மா. இப்படியே பொலிசுக்குப் போகலாம்." என்றான் பாபு பயத்திலிருந்து இன்னும் விடுபடாத நிலையில் நின்று கொண்டிருந்த இளம் பெண்ணைப்பார்த்து.

கீழே தரையில் பாம்பாக சுருண்டவன் என்ன நினைத்தானோ, வேகமாக தரையோடு தவழ்ந்து வந்து பாபுவின் கால்களை சரேலெனக்கட்டிப் பிடித்தான்.

"தம்பி. வேண்டாம்பா. என்னை மன்னிச்சுடு. இனிமே ஜென்மத்துக்கும் இப்படியான செயலிலே ஈடுபடமாட்டேன்பா. மன்னிச்சுடுப்பா. பொலிசுக்கு போகாதப்பா. நீ என்ன சொன்னாலும் நான் கேப்பேன்பா. பொலீசுக்கு மட்டும் போயிடாத." என்றவாறு அழத்தொடங்கினான்.

"இப்பத்தான் உன் மனம் முழிச்சுக்கொண்டதாக்கும். சரிசரி. எழுந்து நில்லு."

அவன் தரையில் கையைக் குத்தியவாறு மெதுவாக எழுந்து நின்றான்.

" உன் பேரு என்ன?"

" நாகப்பன்"

"ஓஹோ_றா. அந்த நாகப்பன் நீதானா? நீதானே காட்டிலே பறவைகளைப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்றதுக்காக விற்கிறது?"

நாகப்பன் மௌனம் சாதித்தான்.

" உன்னை முதலும் கடைசியுமா எச்சரிக்கை செய்றேன். இனிமே காட்டுக்குப்போய் பறவைகளைப்பிடித்து நீ விற்பதா கேள்விப்பட்டா, உன்னைப் பற்றிய சங்கதிகளை யெல்லாமே கிராமத்திலே பரப்ப வைச்சிடுவேன். உன் மரியாதையை நீ காப்பாத்தணும்னா அந்தத் தொழிலையே நீ விட்டுடணும், அத்தோட நீ இன்னொன்னும் செய்யணும்"

" என்ன செய்யணும்னு சொல்லு தம்பி. நீ எதைச் சொன்னாலும் செய்றேன். ஊரிலே என் மரியாதையை மட்டும் போக்கடிச்சுடாதே."

" நீ என்ன செய்யணும்னா, காட்டுக்குள்ளே போய் பறவை பிடிக்கிறவங்களை கையும் மெய்யுமாக அதிகாரிமார் பிடிக்கக்கூடியவாறு அவங்களைப் பற்றிய தகவல்களை அவ்வப்போது தரணும். மற்றது, காட்டுக்குள்ளே எங்கோ ஓர் இடத்திலே சிலர் கஞ்சா செய்கையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருக்கிறதா தகவல் கிடைச்சிருக்கு. அதிலே ஈடுபட்டிருக்கிறவங்க யாரு, எந்த இடத்திலே பயிர்செய்றாங்க என்பன பற்றிய தகவல்களை எப்படியாவது மோப்பம் புடிச்சி பெற்றுத்தரணும்."

"உனக்கு எதுக்கு இந்தத் தகவல்களெல்லாம்?" நாகப்பன் கேட்டான்.

" காட்டையும் அதிலுள்ள ஜீவராசிகளையும் பாதுகாப்பதற்காக சங்கம் அமைக்க முயற்சி எடுத்ததே நாங்கதான்."

" ஓ........"

" என்ன ஓ........? என்ன சொல்றே? இந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு பொலீசுக்குப்போகவா அல்லது நான் சொன்னதற்கெல்லாம் கட்டுப்படுறியா?"

" கட்டுப்படுறேன். கட்டுப்படுறேன்."

" அப்படீன்னா இந்தப்பெண்ணோட காலைத்தொட்டு மன்னிப்புக்கேளு." பாபு கட்டளையிட்டான்.

நாகப்பன் தனது செய்கைக்காக உண்மையாகவே வேதனைப்படுவதை அவனது முகபாவம் துல்லியமாகக் காட்டியது. அவனது நல்லமனம் விழித்துக்கொண்டதை செய்கைகள் படமாகக்காட்டின.

நாகப்பன் முகத்தைத் திருப்பி, இன்னும் பயம் கலையாத நிலையில் நின்ற யுவதியை நோக்கிக் குனிந்து அவளது கால்களைத் தொட்டான்.

"என்னை மன்னிச்சுடு தங்கச்சி. ஏதோ வெறியிலே அப்படி நடந்துக்க முயற்சி செய்துட்டேன். கடவுளுக்காக உன் வீட்டிலே யார்கிட்டயும் இங்க நடந்த விசயங்களைச் சொல்லிடாதம்மா." என்றான் நாத்தளதளக்க.

" நாகப்பன் உனக்கு ஒரு கிழமை டயம் தாரேன். அதுக்கிடையிலே எப்படியாவது முயற்சி செய்து கஞ்சாப்பயிர் செய்பவங்க பற்றிய தகவல்களை நீ எனக்குத் தரணும். அப்படி நீ தந்துட்டேன்னா நீ திருந்திட்டேன்னு அர்த்தம். தரல்லேன்னா, அப்புறம் என்ன நடக்குமோ.. .....நீ அதை அனுபவிச்சுக்கோ. வாம்மா போகலாம்."

அந்த யுவதி தான் அணிந்திருந்த பாவாடையை சரி செய்தாள். மெதுவாக பாபுவை நோக்கி நடந்து....அவனுடன் கூட நடக்கத்தொடங்கினாள்.

" உன் பேர் என்ன? "

" சீலா "

" யார் உன் அப்பா? "

" குணரத்ன "

" யார் குணரத்ன? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மேசன் பாஸ் "

" அட்ட. மேசன் பாஸ்ட மகளா நீ? இனிமே இப்படியெல்லாம் தனியே வரக்கூடாது. காலம் பொல்லாதது. ஆக்கள் பொல்லாதவங்க."

" எல்லோருமே பொல்லாதவங்களா? "

" பொதுவா எல்லோருமே பொல்லாதவங்கதான்."

" உங்களையும் சேர்த்தா? "

" ஆமா. என்னையும் சேர்த்துத்தான்."

" நான் நம்பமாட்டேன். "

" ஏன் ? "

"அதான் கண்ணாலேயே பார்த்தேனே. நீங்க மட்டும் அந்த மிருகத்திடமிருந்து என்னைக் காப்பாத்தலேன்னா நான் இதுவரை தற்கொலை செய்துருப்பேன்."

" தற்கொலையா ? "

"பின்னே? மரியாதை போனபிறகு நான் எதுக்காக வாழணும்?"

"அப்படியெல்லாம் இந்தச் சின்னப்பருவத்திலே யோசிக்கக்கூடாது. உனக்கு இன்றைக்கு ஏற்பட்டமாதிரி ஒரு கட்டம் வந்தா அதிலிருந்து தானாக தப்பிக்கொள்வதற்கு உடனேயே முயற்சி எடுத்திருக்கணும்,"

" எப்படி முயற்சி எடுக்கிற ? அவன் என் பின்னாலேயே எனக்குத் தெரியாம பதுங்கிப்பதுங்கி வந்திருக்கான். ஒரு கட்டத்திலே தரையிலே அவன்ட நிழலைப்பார்த்துட்டேன். திரும்பிப் பார்த்தேனா......அவன் பயங்கரமா என்னை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பயந்து எந்தப்பக்கம் ஓடுவது எனத்தெரியாம பற்றைகளுக்குள்ளே ஒளிச்சுக்கொள்ளலாம்னுதான் காட்டுக்குள்ளே ஓடினேன். பாவி என்னைத்துரத்தி வந்து என்னை பலாத்காரமா பிடித்து என் வாயைப்பொத்திக் கொண்டான்."

பாபு அவள் கூறியதைக்கேட்டு முகத்தில் பரிதாப உணர்ச்சி காட்டினான்.

"நீ ஒண்ணு செய்திருக்கலாம்."

"என்ன ? "

" இப்படியான சந்தர்ப்பங்களிலே திடீரென கீழே குனிந்து இரண்டு பிடி மண்ணை அள்ளி அவன்ட முகத்தைப்பார்த்து எறிஞ்சிருக்கலாம்."

"ஆம்மா.....எனக்கு அந்த எண்ணமே வரல்ல. பாவி! என்னமா என்வாயைப் பொத்தினான். அந்தக் கடவுள்தான் உங்களை அங்க கூட்டிவந்திருக்காரு. ஆமா....உங்க பேரு என்ன?" சீலா கேட்டாள்.

" பாபு "

" நீங்க தமிழரா? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆமாம் "

பாபு தமிழினத்தைச் சேர்ந்தவன் என அறிந்ததும் சீலாவின் மனம் ஏனோ தெரியாது சடுதியாக சோர்ந்தது.

## 15

தென்னக்கோனின் வீட்டு முற்றத்தில் விரித்திருந்த பாய்களிலும், கோணிச்சாக்குகளிலும் கிராமத்தவர்கள் வீற்றிருந்தனர். இளைஞர்களும், வயதானவர்களும், பெண்களும், யுவதிகளுமாக நான்கு இனத்தவர்களும் கூடியிருந்தனர். இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் அருகருகே இருந்தவாறு வாய் ஓயும்வரை ஊர்கதைகள் அலசினர். கூட்டத்தினுள் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த அனோமாவின் அகன்றவிழிகள் அங்குமிங்குமாக நடந்தவாறு கூட்டத்துக்கு வந்திருந்தவர்களிடமிருந்து சில தகவல்களைப் பெற்றவாறிருந்த ஸெல்ஸன்னவின் மீது மொய்த்தன. வயதான அப்புஉறாமி வெள்ளை ஆடை அணிந்து கையில் கோல் ஒன்றுடன் மெதுவாக நடந்து கூட்டத்தினரை நோக்கி வந்து கொண்டிருந்தார். சலீமுடன் கதைத்தவாறு நின்ற சின்னத்துரை ஆசிரியரைக்கண்டதும், மாணிக்கம் அவரை நோக்கி நடந்து அருகில் சென்றான்.

"மாஸ்டர், நான் உங்ககிட்ட சொன்னதை மறந்துடாதீங்க. எப்படியாவது ஒரு சின்ன கோவிலைக்கட்டுவதற்கு தீர்மானம் எடுத்துடுங்க" என்றான்.

"கோயில் மட்டுமில்லை, மற்ற இனங்களுக்குத் தேவையான வணக்கத்தலங்களைக் கட்டுவதைப்பற்றிக் கூட கதைக்க இருக்கேன்."

"ஏன் மாஸ்டர், யானை வந்து தோட்டங்களை அழிச்சுதே. அதுக்கு நஸ்டஈடு பெற்றுத்தரமாட்டாங்களா? " என சின்னத்துரைக்குப் பக்கத்தில் நின்றிருந்த வேறொரு கிராமவாசி கேட்டான்.

"அதிகாரிமாரிடம் ஏற்கனவே கேட்டுப்பார்த்துட்டேன். நஸ்டஈடு பெறவே முடியாதாம். ஏன்னா அரசாங்கத்தின் நிலங்களை பலாத்காரமாகப் பிடித்துத்தான் நீங்க தோட்டம் செய்றீங்களாம். உங்களுக்கு பேமிட் காணி இருந்து தோட்டம் செய்தா, அந்தத் தோட்டத்தை யானை அழிச்சா நஸ்டஈடு தருவாங்களாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்போ யானை மிதிச்சு காலஞ்சென்றாரே முத்துபண்டா அதுக்கு நஸ்டஈடு கிடைக்குமா?"

"அதுக்குத்தான் சலீமும், சார்ல்ஸூம் அதிகாரிகளோட கதைச்சி நஸ்டஈடு கிடைக்க ஒழுங்கு செய்துட்டாங்களே. கூடிய சீக்கிரம் கிடைச்சிடும்"

ஜீப் வண்டிகள் புழுதியின் மத்தியில் வேகமாக வருவது தெரிந்தது.

" அதிகாரிமாருங்க வாறாங்க. எல்லோருமே கீழே உட்காந்துடுங்க. அவங்க வந்ததும் கூட்டத்தை ஆரம்பிச்சுடலாம்."

சிறிது நேரத்தினுள் கூட்டம் தொடங்கியது. தென்னக்கோன் தலைமைவகித்தார். வந்த அதிகாரிகளை வரவேற்றார்.

" அதிகாரிமார் உங்களோட ஒரு முக்கியமான விசயத்தைப்பற்றி கதைக்க வந்திருக்காங்க. ஏற்கனவே அவங்கட ஓபீஸுக்கு என்னையும் முக்கியமான வேறு ரெண்டொருவரையும் அழைத்து அந்த விடயமாக கதைத்தாங்க. நாங்க எதுவும் முடிவு சொல்லல்ல. ஏன்னா அந்த விசயம் நீங்க எல்லோருமே சம்பந்தப்பட்ட ஒன்னு. அதைச் செய்யணும்னா உங்க எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. உங்கட சம்மதம் தேவை. அதனாலே அதைப்பற்றி உங்களோட நேரடியாக பேசச்சொல்லி நான் அவங்களை அழைக்கிறேன்."

தென்னக்கோன் அமர்ந்ததும், வனசீவராசிகள் இலாகாவின் உயர் அதிகாரியொருவர் எழுந்து நின்றார். தன்னைக் கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்தார்.

" உங்க கிராமம் பற்றியும் வனசீவராசிகளையும், வனத்தையும் பாதுகாப்பதற்காக நீங்கள் அமைத்துள்ள சங்கத்தைப்பற்றியும் இந்த நாட்டிலேயுள்ள பலர் இப்போ தெரிந்துவைத்திருக்காங்க. நாலு இன மக்களும் சமமா வாழுகிற இந்தக் கிராம மக்களாகிய நீங்க எல்லோரும் ஒன்று சேர்ந்து இத்தகைய நடவடிக்கைகளிலே ஈடுபடுவது தொடர்பாக இந்த நாட்டின் அதிகௌரவ ஜனாதிபதியே அறிந்து வைத்திருக்கிறார்." என அவர் கூறிக்கொண்டிருக்கையில் சபையினர் கைகளைத்தட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

" உங்க கிராமத்தைப்பற்றி நாங்க நிறைய விபரங்களைத் திரட்டியிருக்கோம். நீங்க இந்தப்பகுதிக்கு வசிக்க வந்ததுக்கான காரணங்கள் எங்களுக்குத்தெரியும். படிப்படியாக உங்களின் தொகை அதிகரித்ததும், நீங்க சிறு சிறு குடிசைகளை அமைத்துக்கொண்டதும், சிலர் களிமண் வீடுகளைக் கட்டிக் கொண்டதும், அங்கும் இங்குமாக காட்டுப்பூமிகளைத் துப்புரவு செய்து தோட்டப்பயிர் செய்ததும், அதனாலே உங்களுக்குக் கிடைச்ச லாபமும், நீங்க முகம் கொடுக்கும் பிரச்சினைகளும் ஆகிய எல்லாவற்றையும் நாங்க தெரிந்து வைத்திருக்கிறோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக்கொண்டிருந்தவர் சிறிது நிறுத்தி கூட்டத்தினரைப் பார்த்தார்.

"நீங்க அனுபவிச்ச லாபங்களை முதலிலே சொல்றேன். காட்டு மரங்களைக் கள்ளத்தனமாக வெட்டுவித்து பணம் சம்பாதிச்சீங்க, இந்தச் செயலால காடுகளில் மரங்கள் குறைய ஆரம்பித்தன. காடுகளில் தன்னிச்சையாகத் திரியும் வாய்பேசாத ஊமைப்பிராணிகளை வேட்டையாடி இறைச்சியை வித்தீங்க. அல்லது சாப்பிட்டீங்க. இதனால இந்த நாட்டின் தேசிய செல்வமான வனசீவராசிகளின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. புல்மேய்வதற்காக உங்களின் மாடுகளை காட்டுக்கு அனுப்புறீங்க. காட்டிலே விறகு பொறுக்கி அடுப்புக்கு விறகா பாவிக்கிறீங்க. அல்லது வித்துடுறீங்க. பறவைகளைப் பிடித்து வேறு நாடுகளுக்கு அனுப்ப உதவிசெய்றீங்க. சிலர் காட்டுக்குள்ளே கஞ்சாபயிர்கூட செய்றீங்க. இந்தச் செயல்களால உங்களுக்கு ஓரளவு பணம் கிடைக்குமென்றாலும், இவைகள் எல்லாமே சட்டத்தினாலே தண்டிக்கப்படக்கூடிய பாரதூரமான குற்றங்கள். நான் சொன்னதெல்லாம் சரிதானே?" கேட்டவாறு அவர் கூட்டத்தினரைப் பார்த்தார்.

பலர் தரையைப் பார்த்தவாறு மௌனம் காத்தனர். சிலர் கொடுப்பினுள் சிரித்தனர். வேறு சிலர் தாங்கள் ஈடுபட்ட குற்றச்செயல்களைக் குறித்து மனங்களில் சலனப்படக் காட்சிகளைப் பார்த்தனர்.

அவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு தொடர்ந்தார்.

"பொதுவாக குற்றம் செய்பவர்கள் யார்? இங்கே கூடியிருக்கும் உங்களின் நான்கு மதங்களுமே குற்றம் செய்பவர்கள் கொடியவர்கள் எனக் கூறுகின்றன. தங்களது மடிகளில் பால் குடிக்கும் குட்டிகளைக் கொண்ட மிருகங்களை நீங்கள் சுட்டுக் கொல்வதனால் அந்தக் குட்டிகள் அப்புறம் யாரிடம் சென்று பால் குடிக்கும்? வயிற்றில் குட்டிகளைச் சுமக்கும் நிறைமாத கர்ப்பிணிகளைக்கூட சுட்டுக் கொலை செய்கிறீர்கள். இரவில் அவைகளின் கண்களுக்கு வெளிச்சத்தைப் பாய்ச்சி அவைகளைத் திகைக்க வைத்து கொலை செய்கிறீர்களே. இது பாவங்களிலும் மகா பாவம் அல்லவா?" கேட்டவாறு தனது பார்வையை கூட்டத்தினருள் பரவலாக மேய்ந்தார்.

" நான் இதுவரை நீங்கள் அனுபவித்த இலாபங்களைக் கூறினேன். இப்போது நீங்கள் முகம் கொடுக்கும் கஸ்டங்களைக் கூறப்போகிறேன். முக்கியமான கஸ்டம், நீங்கள் எப்போதுமே பயத்துடன் வாழ்கிறீர்கள். எப்போது காட்டுமிருகங்கள் உங்கள் மீது வந்து தாக்கிவிடுமோ என சதா பயம். தனியாக தெருக்களில் நடக்கப்பயம். தோட்டங்களுக்குப்போக பயம். தோட்டப்பயிர்கள் சேதமுறும்போது அதுநாள்வரைபட்ட சிரமங்களுக்குப் பிரயோசனமே இல்லாது போய்விடுகிறது. எந்தநேரம் எந்த அதிகாரி வந்து குற்றங்களுக்காக கைதுசெய்து விடுவாரோ எனப்பயம். மிருகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வளவுகளுக்குள் வந்து பாவனைச் சாமான்களைச் சேதப்படுத்திய சம்பவங்களும் நடந்துள்ளன. கோழி வளர்க்க முடியாது. நரிகளும், நாய்களும் அவைகளை தந்திரமாக வந்த சாப்பிட்டுவிடும். ஆடுவளர்க்க முடியாது. காட்டுக்கு சமீபமாக அடாத்தாகப்பிடித்த காணிகளில் குடியிருப்பதால், அரசாங்கத்தின் எந்த உதவிகளும் உங்களுக்குக்கிடைப்பதில்லை. பாடசாலை, ஆஸ்பத்திரி ஆகிய எதுவும் இல்லை. இத்தகைய கஸ்டங்களையெல்லாம் தொடர்ந்து அனுபவிக்கப் போறீங்களா அல்லது இவைகளுக்கு முடிவுகட்டணுமா என்பதுதான் தற்போதைய பிரச்சினை." கூறிக்கொண்டிருந்தவர் சிறிது நிறுத்தினார்.

அவர் கூறிய அத்தனை பிரச்சினைகளும் அவர்கள் நாளாந்தம் முகம் கொடுத்துக் கொண்டிருப்பவை. அந்தப் பிரச்சினைகளிலிருந்து தற்காலிகமாகத்தானும் மீளுவதற்காகத்தான் அவர்கள் தங்கள் கிராமத்தினுள் வரும் யானைகளைக் கொன்றதும் ஒரு காரணமாகும். காட்டின் சமீபமாக வாழுவதனால் எப்போதுமே மிருகங்கள் தொடர்பாக அவர்களுக்குப் பயம். அவர்களுக்கும் யானைகளுக்குமிடையில் தொடர்ச்சியாகவே பிரச்சினைகள் இருந்து கொண்டிருந்தன.

" நீங்க கூறியது எல்லாமே உண்மைதாங்க." என்றான் சலீம்.

"இந்த யானைகளாலேதான் ரொம்ப பிரச்சினைங்க" என்றான் வாய்க்குள் வெற்றிலை கொதுப்பிக்கொண்டிருந்த ஒருவன்.

" ஆகவே நான் கூறியவை எல்லாமே நீங்க தினசரி அனுபவிக்கும் சிரமங்கள்தான்னு ஏற்றுக்கொள்றீங்க. இந்தப் பிரச்சினைகளிலிருந்தும் நீங்கணும்னும் நீங்க கருதுறீங்க."

" ஆமாங்க " என்றனர் பலர் ஏகோபித்த குரலில்.

"அதற்காகத்தான் நாங்க ஒரு திட்டத்தோட வந்திருக்கோம். நீங்க எல்லோரும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டால் உங்களுக்கு இதனாலே எதிர்காலத்திலே பெரிய நன்மைகள் இருக்கு."

" சொல்லுங்க. நல்ல திட்டம்னா ஏற்றுக்கொள்றோம்." என்றார் தலையில் தொப்பியுடன் நின்ற அப்பாஸ்.

அதிகாரி கையோடு கொண்டு வந்திருந்த திட்டத்தைப்பற்றி அவர்களுக்கு விபரித்துக்கூறினார். அவர் சிபாரிசு செய்ததிட்டத்தின்படி கிராமத்தில் வசிக்கும் நான்கு இனங்களையும் சேர்ந்த சுமார் நூறு குடும்பங்களையும் அங்கிருந்து அகற்றி, பதிலாக சிறிது தூரமான ஓர் இடத்தில் அரசாங்க செலவில் கல்வீடுகள் கட்டிக்கொடுத்து அவைகளில் குடியேற்றுவதும், உப உணவுப்பயிர் செய்கையில் ஈடுபடுவதற்கு வசதியாக சுமார் இரண்டு ஏக்கர் காணிகளை ஒவ்வொரு குடும்பத்துக்கும் பெற்றுக்கொடுப்பதுமாகும். காணிகளில் கிணறுகள் அமைத்து நீர் இறைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரங்கள் மூலமாக பயிர்செய்கையில் ஈடுபட உதவியளிப்பதும் திட்டத்தில் இருந்தது.

"இவைகளை விட, இந்தக் காட்டையும் வனசீவராசிகளையும் பாதுகாப்பதற்காக சுயமாக நீங்களே முன் வந்ததனாலே காடு ஒன்றை உருவாக்கி அதிலுள்ள மரங்களை உங்களுக்குச் சொந்தமானதாக ஆக்குவதும் இந்தத்திட்டத்தில் அடங்கியுள்ள மற்றுமொரு விடயமாகும்" என்றார் அவர்.

" காட்டை எங்களுக்குச் சொந்தமானதா ஆக்கப்போறீங்களா? " மீண்டும் அப்பாஸ் கேட்டார்.

" நீங்கதான் அந்தக்காட்டை உண்டாக்கப்போறீங்க. நீங்கதான் மரங்கள் நடப்போறீங்க. அவைகளை வளர்க்கப்போறீங்க." எனக்கூறிய அதிகாரி அந்தத்திட்டத்தைப்பற்றி விபரித்தபோது வைத்த விழி வாங்காது கிராமத்தவர்கள் அவர் கூறியதைச் செவியுற்றனர்.

ஏற்கனவே உள்ள அடர்ந்த பெரிய காட்டைச் சுற்றி கணிசமான தூரத்துக்கு இன்னுமொரு காட்டை உண்டாக்குவதுதான் அந்தத்திட்டம். ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சுமார் ஐநூறு தேக்கு மரங்கள் வளர்ப்பதற்குத் தேவையான காணியும், மரக்கன்றுகளும் கொடுக்கப்படும். எதிரேவரும் மழைநாட்களில் மரக்கன்றுகளை நட்டு அவைகளை வளர்த்தெடுக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு. உயரமாக வளரும் ஒவ்வொரு மரமும் அதை நட்டி வளர்த்த குடும்பத்துக்குச் சொந்தமாகும். மரங்களைத் தறிக்கும் உரிமை அரசாங்கத்துக்கு மட்டுமே இருக்கும். மரங்கள் முழுதாக முற்றியபின் அவைகளை அரசாங்கம் தறித்தால், மரங்களுக்கான அப்போதைய பெறுமதி சொந்தக்காரர்களுக்குக் கொடுக் கப்படும். மரங்களைச் சொந்தக்காரர்கள் தறிக்க முடியாது. மற்றவர்கள் அவைகளைத் தறியாமல் பாதுகாப்பதும் அவர்களின் பொறுப்புகளில் ஒன்று.

"நான் சொன்னதை நீங்க நன்றா புரிஞ்சிருப்பீங்க. இப்போதே மரங்களை வளர்க்கத்தொடங்கினா அவைகள் வளர்ந்து முற்றி தறிப்பதற்கு சுமார் இருபது இருபத்தைந்து வருடங்கள் செல்லலாம். அப்போது ஒரு மரத்தின் விலை இருபது முப்பதினாயிரத்துக்கும் மேலே போகலாம். உங்களது ஒரு குடும்பத்துக்கு ஆகக்குறைந்தது ஐநூறு மரங்கள் சொந்தமா இருந்தா ஒருகோடியோ அல்லது ஒன்றரைக்கோடி ரூபாவோ உங்களுக்குச் சொந்தமா ஆயிடும். நீங்க செய்வதெல்லாம் மரங்களை சேதமுறாம வளர்த்து எடுப்பதுதான்" அதிகாரி தனது திட்டத்தைக் கூறிவிட்டு பாயில் சென்று அமர்ந்தார்.

கூட்டத்தினர் தங்களுக்குள் குசுகுசுக்கத்தொடங்கினர். பொழுது மெதுவாக சாய்ந்து கொண்டிருந்தது. இளந்தென்றல் தவழ்ந்தது. சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் பெண்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கிளாஸ்களில் தேனீர் விநியோகித்தனர். சிறிது தூரத்தில் மரமொன்றின் கீழ் நின்றவாறு பாபுவும், சலீமும் தேனீர் ஊற்றிக்கொடுத்தனர்.

"திட்டத்தைக் கேட்டியா சலீம். அட்வான்ஸ்லெவல்ல கோட்டை விட்டாலும், தேக்கு மரம் வளர்க்கிற வேலைலே ஈடுபடலாம் போலிருக்கே. நாளாந்த வருமானத்துக்கு பயிர்செய்கையிலே ஈடுபடலாம்." என்றான் பாபு மெல்லிய குரலில்.

"நம்ப ஆட்கள் இந்தத் திட்டத்தை எப்படி கிரகிக்கிறாங்கன்னு பார்ப்போமே."

" இந்தாங்க. கிளாஸ்களை நல்லா கழுவிட்டு தேத்தண்ணியை ஊத்தித்தாங்க. கழுவ சோம்பலா இருந்தா சொல்லுங்க. நானே கழுவித்தாரேன்." என்றாள் குனிந்தவாறு மறுபக்கம் பார்த்துக்கொண்டு நின்ற பாபுவைப் பார்த்து ஒரு யுவதி.

அந்தக் குரலைக்கேட்டதும் பாபு திடுக்குற்றான், தான் அந்தக் குரலை எங்கேயோ கேட்டதாக உணர்ந்தான். வேகமாக திரும்பினான்.

அன்று காலை நாகப்பனிடமிருந்து அவனால் காப்பாற்றப்பட்ட சீலா அங்கு நின்றாள். அவளுடைய கைகளில் சில வெற்றுக்கண்ணாடிக் கிளாஸ்கள் இருந்தன.

## 16

தென்னக்கோன் கூட்டத்தினர் எதிரே எழுந்து நின்றார்.

"ஐயாமார் சொன்ன திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக பிரச்சினைகள் எதுவும் இருந்தா ஒவ்வொருவரா எழுந்து நின்று கேளுங்க. ஏன்னா, உங்க எல்லோருடைய சம்மதத்தின் மீதுதான் இதை நிறை வேற்றணும்." கூறிவிட்டு ஓரமாகச்சென்று அமர்ந்தார்.

"நாங்க எங்க குடிசைகளை, வீடுகளை ரொம்ப சிரமப்பட்டுக் கட்டியிருக்கோம். அவைகளையெல்லாம் உடைச்சீங்கன்னா, அதற்கு நட்டஈடு தருவீங்களா?" அழுக்கான மஞசள்நிற ரீசேர்ட் அணிந்த ஒருவன் எழுந்து நின்று கேட்டான்.

"எதுக்கு நட்டஈடு தரணும்? அதான் ஒரு புது கல்வீடே அரசாங்க செலவிலே கட்டித்தரப்போறோமே" என்றார் உயர் அதிகாரி ஒருவர் பாயில் இருந்தவாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நீங்க தாரதா சொல்ற காணியிலே நாங்க பயிர்செய்யலாம்தாங்க. மழை காலத்திலே மட்டும்தான் பயிர் செழித்து வளரும். மற்றக்காலங்களிலே பட்டினியா கிடக்கணும். முன்னரென்றாலும் வேட்டையாடி விற்றுக்காலத்தைக் கழிச்சோம். இவங்க இந்தச்சங்கத்தை ஆரம்பிச்சதுக்குப் பின்னாலே ஊரிலே ரொம்பக் கெடுபிடிங்க." என்றான் பெனியனின் மீது துவாயொன்றால் போர்த்திக்கொண்டு கலைந்த தலையுடன் நின்ற ஒருவன்.

" நீங்க ஏற்கனவே ஆரம்பித்து இருக்கிற சங்கத்தை சரியான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தி பலப்படுத்தப்போறோம். வங்கியொன்றிலே உங்க சங்கத்தின் பேரில் கணக்கொன்றை நீங்க தொடங்கணும். கணிசமான தொகையொன்றை அரசாங்கம் உங்களுக்குக் கடனாக தரும். அந்தத் தொகையை நீங்க வங்கியிலே போடணும். அதிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரங்களை வாங்குவதற்குத் தேவையான பணத்தை நீங்க கடனாகப்பெறலாம். எங்களுக்கு இன்னுமொரு ஐடியா இருக்கு. உப உணவுப்பயிர்செய்கைக்காக திட்டமொன்றைத் தயாரித்து ஏதாவது அரச சார்பற்ற நிறுவனமொன்றுடன் தொடர்புகொண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் சிலதை உங்களுக்கு இலவசமா பெற்றுத்தரலாமான்னு யோசிக்கிறோம். உங்களுக்குள்ளே சரியான ஒற்றுமையிருந்தா ஐந்தாறு குடும்பங்களுக்கு ஒரு இயந்திரமே போதும். மாற்றி மாற்றி ஒவ்வொருவருமே அவைகளைப் பாவிக்கலாம். மற்றது, விஞ்ஞான முறைப்படி உபஉணவுப் பயிர் செய்வது எப்படி? விளைச்சலை எவ்வாறு அதிகரிக்கலாம் என்பதைப் பற்றியெல்லாம் உங்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் எண்ணி யிருக்கோம். அதனாலே வருடம் முழுவதுமே நீங்க பயிர்செய்கையிலே ஈடுபடலாம்."

" ஏங்க, தேக்கு மரங்களை நட்டி, அவைக வளர்ந்து முற்றித் தறிப்பதற்கு ரொம்ப வருசங்களேகுமே. அதற்கிடையிலே அதனாலே எங்களுக்கு எந்த வருவாயும் வரப்போறல்ல. மரங்களை ஈடாக வைத்து கடன் பெறுவது போன்ற விசயங்கள் எதுவும் திட்டத்திலே இல்லையா?" சின்னத்துரை மாஸ்டர் கேட்டார்.

"இருக்குங்க. மரங்கள் வளரத்தொடங்கியதற்குப் பின்னாலே, மரங்களை ஈடாக வைத்து நீங்க கடன்பெறக்கூடிய வசதிகளும் இந்தத்திட்டத்திலே உண்டு. ஒரு குடும்பத்தினர் வருடமொன்றுக்கு குறிப்பிட்ட உச்ச எல்லைக்குள்தான் கடன் பெறலாம். நீங்க அந்தக் கடனைத் திருப்பிக் கட்டலைன்னா, மரங்களை விற்பதனாலே உங்களுக்குக் கிடைக்க விருக்கும் மொத்தப்பணத்திலே வட்டியோட சேர்த்து கடன் கழிபடும்"

"காட்டுக்குள்ளே போயி பட்டமரங்களை விறகு பொறுக்கலா முங்களா?" வழக்கமாக காட்டுக்கு விறகு பொறுக்கப்போகும் ஒரு வயதான பெண் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முடியாது. காட்டையும், அதனுள்ளே வசிக்கும் ஜீவராசிகளையும் பாதுகாப்பது உங்க கடமை. யாரும் காட்டுக்குள்ளே போய் மிருகங்களை வேட்டையாட முடியாது. மரங்கள் தறிக்க முடியாது. விறகு பொறுக்க முடியாது. சட்டத்துக்கு மாறான எந்தச் செயல்களிலும் இனிமே ஈடுபடவே கூடாது"

"எங்கட மாடுகளை காட்டுக்கு மேய்வதற்காக அனுப்பலாமா?" மாட்டுப்பண்ணை வைத்துக்கொண்டிருக்கும் ஒருவன் கேட்டான்.

" அதுவும் முடியாது. மாடுகளுக்குத் தேவையான புற்களை தேக்க மரங்கள் நடுவதற்காகத் தரவிருக்கும் நிலத்திலே நீங்கபயிரிடலாம். தேவைப்படும் நேரங்களிலெல்லாம் நீங்க புற்களை வெட்டி எடுத்துக்கலாம். அத்துடன் ஒதுக்கப்படும் காணிக்குள் சொந்தக்காரரின் அனுமதியின்றி வேறுயாரும் உட்புகவும் முடியாது இருக்கும்."

அவர்கள் நீண்டநேரம் அந்தத்திட்டத்தைப்பற்றி அக்குவேறு ஆணிவேறாக அலசினர். கிராமத்தவர்களின் சந்தேகங்களெல்லாம் ஒவ்வொன்றாகத் தீர்க்கப்பட்டன.

"இவர்களுக்காக கட்டப்படவிருக்கும் வீடமைப்புத்திட்டத்தில் இவர்களின் மார்க்க வழிபாடுகளுக்காக தேவாலயம், கோயில், பள்ளிவாசல், சேர்ச் ஆகிய நான்கும் கட்டப்படணுமுங்க. ஒருவரின் மதவழிபாடுகளை மற்றவர்கள் மதிக்கக்கூடியவாறான ஒரு அமைதிக்கிராமமாக அந்தக் கிராமத்தை அமைக்கணுங்க." என சின்னத்துரை மாஸ்டர் கூறியதும், அவருடைய கூற்றை அனைவரும் ஆமோதிப்பதாக கைதட்டி வரவேற்றனர்.

"ஏங்க, புதிதாக அமையவிருக்கிற அந்தக் கிராமத்துக்கு 'அமைதி கிராமம் ' என பெயர் வைச்சடலாங்க. நான்கு இனமக்களும் எவ்வாறெல்லாம் ஒற்றுமையா வாழலாம்னு இந்த நாட்டு மக்களுக்கு அந்தக்கிராமத்தவர்கள் எடுத்துக் காட்டணும்க." என்றார் பலத்த கைதட்டலின் மத்தியில் தென்னக்கோன்.

"நீங்கள் தெரிவித்த கருத்துக்களையெல்லாம் நாங்க அறிக்கையாக தயாரித்து எங்களுடைய மேலதிகாரிகளுக்கும், கௌரவ அமைச்சர்களுக்கும் கொடுப்போம். அடிக்கடி எங்களுடைய அதிகாரிகள் இங்கு வருவார்கள். மழைகாலத்துக்கு முன்னரே தேக்கங் கன்றுகள் வளர்த்தெடுப்பதற்கான நாற்றுமேடைகள் அமைப்பதற்கு உத்தியோகத்தர்கள் வருவார்கள். அவர்களோடு வேலை செய்வதற்கு தினக்கூலிகளாக நிறையபேர் தேவைப்படலாம். உங்களுடைய சங்கத்திலிருந்துதான் அதற்கு ஆட்கள் எடுப்பார்கள். வீடுகள் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை கொழும்புக்குச் சென்ற உடனேயே மேற்கொள்வோம். உங்களைக் குடியேற்றுவதற்காக சிபாரிசு செய்யப்பட்ட இடத்தை நாளைக்கே சென்று பார்க்கவிருக்கிறோம். உங்களிலும் சிலர் அங்கு வரலாம்." எனக்கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி வீடமைப்புத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட காணி அமைந்துள்ள இடத்தைப்பற்றி விபரித்தார்.

"இவங்களிலே சிலரை அழைத்துக்கொண்டு நாளைக் காலையிலேயே நான் அந்த இடத்துக்கு வாரேங்க." என்றார் தென்னக்கோன்.

இருட்டு பரவத் தொடங்கும் போது கூட்டம் முடிவடைந்தது.

அதிகாரிகள் ஜீப்வண்டிகளை நோக்கி நடந்து கொண்டிருக்கும் போது, அந்தப் பகுதிக்குப்பொறுப்பான வன இலாகா அதிகாரியின் அருகில் பாபு வேகமாகச் சென்றான்.

" சார். கொஞ்சம் தனியே கதைக்கணும் " என்றான்.

இருவரும் ஓரமாகச் சென்று.....பாபு அவருடைய காதுக்குள் எதையோ குசுகுசுக்க......

" தகவல் கிடைச்சதும் உடனேயே வந்து சொல்லிடு. ஆட்களை அப்படியே அப்பிடலாம்."

அதிகாரிகளின் ஜீப் வண்டிகள் உறுமியவாறு நகர்ந்தன.

பாபு கையிலிருந்த கடிதத்தை மீண்டும் ஒருதடவை மனதினுள் வாசித்தான். அவனுக்கு இனம் புரியாத ஒரு மகிழ்ச்சியாகவும், அதே சமயம் பயமாகவும் இருந்தது. அவ்வளவு சீக்கிரத்தில் அத்தகையதொரு கடிதம் கிடைக்கலாமென அவன் கற்பனை பண்ணித்தானும் இருக்கவில்லை. எதிரேவரவிருக்கும் ஆகஸ்ட் மாதத்தில் அட்வான்ஸ் லெவல் பரீட்சைக்காக அவன் மும்முரமாக ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும் அவ்வேளையில், அவனுடைய கைக்குள் மலராக அடங்கிக்கிடந்த அந்தக்கடிதம் ஓர் இன்பவேதனையை உணரவைத்தாலும், முள்ளாகமாறி விரல்களில் குற்றி இரத்தக்காயத்தை ஏற்படுத்திவிடுமோ எனப் பயத்தையும் உண்டாக்கியது.

முத்துக்களைக் கோர்த்தது போல் ஒவ்வொரு எழுத்தாக சிங்கள மொழியில் சீலா அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள். கடிதத்தை உற்றுப்பார்க்கும் போது சீலாவின் குழந்தைத்தனமான அப்பாவிமுகம் அதில் மெலிதாக தெரிந்தது. நாகப்பனுடன் அவள் போராடிக்கொண்டு நின்றபோதும்,......நாகப்பன் அவளிடம் மன்னிப்புக்கேட்டபோதும்......தன்னுடன் கூடவே நடந்துவந்து கொண்டிருந்த போதும்......கூட்டம் நடைபெற்றபோது தேனீர் விநியோக வேளையில் கிளாஸ்களில் தேனீர் பெறுவதற்காக அவனிடம் வந்தபோதும்......அவன் பார்த்த சீலாவின் முகம் மனத்திரையில் மெலிதாக ஓடியது.

அவன் அவளை அந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் காப்பாற்றிய தற்காக நன்றி தெரிவித்து எழுதியிருந்தாள். கடிதத்தில் காணப்பட்ட கடைசிவரிகள்தான் அவளின் மன ஓட்டத்தையும், கடிதம் எழுதியதற்கான உள்நோக்கத்தையும் அவனுக்கு உணரவைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' ஏனோ தெரியாது இரவு வேளைகளில் என்னால் நித்திரைகொள்ள முடியாமல் உள்ளது. தொடர்ச்சியாக உங்களின் முகம் என் கண்களுக்குள் தெரிந்து என்னை அலைக்கழிக்கிறது. எவ்வளவு முயன்றும் அந்த முகம் என் மனத்திரையில் சதா ஒளிகாட்டுகிறது. இது என் வாழ்நாள் முழுதும் தொடர்ந்தால் நான் பாக்கியம் பெற்றவளாவேன்.'

இந்த வசனங்கள் கோடுபோட்டுக் காட்டுவது எது என்பதை அறிய முடியாதவனாக அவன் இல்லை. அவைகளின் அர்த்தம் அவனுக்குப் புரிந்தது. மனம் செக்குமாடாக சீலாவைச் சுற்றிச்சுற்றி வந்தது. ஒவ்வொரு சுற்றிலும் அவனுக்கும் சீலாவுக்குமிடையில் தளிர்விடும் புது உறவு குறித்து. .....அந்த உறவினால் ஏற்படக்கூடிய சாதகபாதகங்கள் குறித்து.......அவர்களை ஏற்கனவேயே பிரித்து வைத்திருக்கும் மதக்கொள்கைகள் குறித்து..... அவன் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் பரீட்சை குறித்து.......எத்தனையோ விடயங்கள் நீர்க்குமிழ்களாக மேலெழுவதும், கரைந்து போவதுமாக.......

எதிர்வரும் ஆகஸ்டில் நடக்கவிருக்கும் பரீட்சைக்காக தயார்செய்து கொண்டிருப்பதை சீலாவுக்குத் தெரிவித்து, பரீட்சையின் பின்னர் அவளோடு மீண்டும் தொடர்பு கொள்வதாக அவளுக்கு அறிவிப்பது நல்லது என்று முடிவுக்கு அவன் வந்தான்.

அவன் என்னதான் முடிவு செய்தாலும், அவளுக்கு அவனுடைய முடிவைத் தெரியப்படுத்தினாலும், அவளிடமிருந்து அடுத்த கடிதம் வந்ததையோ, அவளுடைய முகத்தை, அதில் அவன் காணும் சில இனிய அழகுகளை மனதினுள் இரசிப்பதையோ அவனால் நிறுத்த முடியவில்லை.

## 17

நண்பர்கள் நால்வரும் பக்கத்து கிராமத்தில் வசிக்கும் அப்புஉறாமியைச் சந்திப்பதற்காக இரண்டு சைக்கிள்களில் சென்று கொண்டிருந்தனர். ஒரு சைக்கிளை லஸ்ஸன்ன மிதிக்க சார்ல்ஸ் பாரின் குறுக்கே இருந்தான். மற்றதில் சலீமும், பாபுவும். சலீம் சைக்கிளை மிதித்தான். ஒற்றையடிப்பாதை வழியாக ஒன்றுக்குப்பின் மற்றொன்றாக சைக்கிள்கள் சென்றன.

பாதையின் இருமருங்கும் பரந்த பற்றைக்காடுகளும், அங்கொன்றும் இங்கொன்றுமாக மரங்களும் நின்றன. ஆகாயத்தில் கோடொன்றை இழுத்தது போல் பறவைக்கூட்டமொன்று பறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" லஸ்ஸன்ன, அந்தப் பறவைகள்தான் சைபீரியாவிலிருந்து பறந்து வருபவை. இல்லையா? " சார்ல்ஸ் கேட்டான்.

" அவைதான். அவைகளைப்பற்றி நினைக்கும்போது உண்மையிலேயே அதிசயமா இருக்கு. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து தங்களின் பயணத்தைத் தொடங்கி, தொடர்ந்து பறந்து, சென்ற வருடம் தங்கிய அதே இடத்திலல்லவா வந்து தரிக்கின்றன. அந்த இடத்தைக் குறிவைத்து வந்து தங்கி, சினைதரித்து, முட்டையிட்டு, குஞ்சு பொரித்து, குஞ்சுகளை வளர்த்து, தங்கவேண்டிய காலம் முடிவடைந்ததும் குஞ்சுகளையும் அழைத்தவாறு மீண்டும் தங்களின் நாடுகளுக்குச் சென்று விடுகின்றனவே." என்றான் லஸ்ஸன்ன.

" நாம் எடுத்த நடவடிக்கைகளால் பறவைகளுக்கும் விமோசனம். அவைகளும் சுதந்திரமாக திரியலாம். உனக்கு விசயம் தெரியுமா? "

" என்ன ? "

" நமது சங்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றி செய்திப் பத்திரிகைகளெல்லாம் பக்கம், பக்கமாக எழுதுகின்றனவாம். நமக்குத்தான் ஒரு செய்தியையும் வாசிக்க முடியல்ல. அப்புஉறாமி ஐயாவின் வீட்டுக்குப் போகும்போது அங்கே பத்திரிகைகள் இருந்தால் பார்த்துடணும்."

" நான் கூட அந்த எண்ணத்தையும் மனதிலே வைச்சுக் கொண்டுதான் வாறேன். பாபு உன்னிடம் ஏதாவது சொன்னானா? " லஸ்ஸன்ன கேட்டான்.

" இல்லையே. என்ன விசயம்? "

" மேசன்பாஸ் குணரத்னவின் மகள் சீலாவதி. அவளை உனக்குத் தெரியுமா?"

" ஞாபகமில்லை. ஏன் கேக்கே? "

" உனக்கு நல்லா ஞாபகம் இருக்கும். அன்றைக்கு கூட்டம் நடந்தபோது உயரமான, மெலிந்த, பாவாடை அணிந்து நின்று தேனீர் பரிமாறிக்கொண்டிருந்தாளே, அவள்தான்."

" இடுப்புக்குக் கீழே தொங்கிய கூந்தலோடு. நீ கூட கேட்டியே கூந்தலின் நீளத்தைப் பார்த்தாயான்னு. அவளா? "

" அவளேதான். அவளுக்கு என்ன? "

" அவள் இவனுக்குக் கடிதம் எழுதியிருக்காள்."

" லவ்லெட்டரா? "

" அதேதான் "

" இவன் பதில் எழுதினானா? "

" எழுதியிருக்கான். ஆகஸ்ட் பரீட்சை முடியட்டும். அப்புறம் இதைப்பற்றி யோசிக்கலாம்னு எழுதினானாம். ஆனா, அவ விடுவதாயில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அட! பாபுவும் காதல் வலையிலே விழுந்துட்டானா உன்னைப் போல. உங்க ரெண்டுபேருட காதலும் சிக்கலான காதல்தான். இவன் தமிழ். அவள் சிங்களம். உன் காதலியோ உன்னால் காட்டிக்கொடுக்கப்பட்டு கம்பி எண்ணிக்கொண்டிருக்கும் ஒருவனின் தங்கை. உங்களின் இந்தக் காதல் நிறைவேறுமா என்பதுதான் கேள்விக்குறி. "

அவர்கள் நால்வரும் அப்புஉறாமியின் வீட்டை அடைந்தனர்.

அப்புஉறாமி வராந்தையில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். பக்கத்தில் வெற்றிலைச்சாறு துப்புவதற்கான படிக்கமொன்று தயார் நிலையில் இருந்தது.

சைக்கிள்களை மரமொன்றில் சாற்றிவிட்டு நால்வரும் சென்று அவருக்கு எதிரே நின்றனர்.

"தம்பிமார்களே? வாங்க. வாங்க" என்றார் அப்புஉறாமி உற்சாகத்துடன்.

அவர் காட்டிய கதிரைகளில் உட்கார்ந்தனர்.

" என்ன.......இந்தப்பக்கம்? " அப்புஉறாமி இழுத்தார்.

"சில விசயங்களைப்பற்றி உங்களோட கதைக்கணும் சார்" என்றான் சலீம்.

" நீதானே அப்பாஸிட மகன்?"

" ஆமா சார். "

" நீங்க என்னதான் சொக்குப்பொடி போட்டீங்களோ, உங்க கிராமத்திலே வசிக்கிற மக்களுடைய மனங்களை அப்படியே மாற்றிப்போட்டீங்களே. நரபலி எடுத்துக் கொண்டிருந்தவங்களை யெல்லாம் யோகிகளா மாத்துட்டீங்க. இப்போ எல்லாரும் நான் முந்தி, நீ முந்தின்னு மரங்களையும், வனசீவராசிகளையும் பாதுகாக்கணும்னு முன்னுக்கு வந்து கொண்டிருக்காங்க. நான் சொல்றது சரியா? "

" ரொம்ப சரி சார். உண்மைகள் எப்போதுமே சாகமாட்டுது சார். கொஞ்சம் சிந்திக்கத் தெரிந்தவங்களுக்கு உண்மைகளை எடுத்துச்சொன்னா புரியாம போயிடுமா என்ன? இப்போ எல்லோருடைய வாய்களிலும், கோடீஸ்வரர்களாகும் நாள் எப்போது என்பதுதான் கதை." என்றான் சிரித்தவாறு லெஸ்ஸன்ன.

"உங்களுக்கான வீடுகள் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை யெல்லாம் இன்னும் ரெண்டொரு கிழமைக்கிடையிலே அனுப்ப இருப்பதாக செய்திகிடைச்சுதே. அன்றைக்கு அதிகாரிகள் கதைச்சதிட்டத்திலே உங்க கிராமத்தவர்களுக்கு மட்டும் நன்மை இல்லை. அரசாங்கத்துக்கும் நிறைய பிரயோசனம் இருக்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதனாலே அரசாங்கத்துக்கு என்ன சார் பிரயோசனம்?" சார்ல்ஸ் கேட்டான்.

" ஒன்றா,. ரெண்டா. கள்வனைப்பிடித்து கிராம அதிகாரி வேலைக்கு நியமித்தது போல இதுநாள் வரை காட்டையும், மிருகங்களையும் அழித்துக்கொண்டிருந்த கிராமத்தவர்களுக்கே அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கு. எந்த, எந்த வழிகளைப் பயன்படுத்தி அவைகளை அழிக்கலாம் என்ற யுக்தி அவங்களுக்குத்தான் தெரியும். இனிமேல் எந்த எறும்பும் இவர்களை மீறி காட்டுக்குள்ளே உட்புகமுடியாது. காட்டையும் காட்டு மிருகங்களையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் இனி பணம் செலவழிக்கத் தேவையில்லை. மற்றப்பிரயோசனம் என்னான்னா, ஐம்பதினாயிரம் மரங்களை நீங்களே நாட்டி, நீங்களே வளர்க்கப்போறீங்க. இதை அரசாங்கம் செய்யணும்னா மரங்கள் நடுவது, வளர்ப்பது ஆகிய வேலைகளிலே நிறைய ஊழல்கள் இடம்பெறும், ஒருபக்கம் மரங்கள் வளரும் போது, மறுபக்கம் கள்ளத்தனமாக அவைகளை யாராவது வெட்டிக்கொண்டு போயிடுவாங்க. வளர்ந்த மரங்களைப் பாதுகாப்பது ரொம்ப கஸ்டம். இன்னுமொரு நன்மை என்னென்னா, இந்தத்திட்டம் சரிவர நடைபெற்றுவிட்டால், இதை இந்த நாட்டிலே பல இடங்களிலே செயற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கும். நிறைய மரங்களை வளர்ப்பது, அரசாங்கத்தின் திறைசேரியிலுள்ள பணத்தொகையை அதிகரித்துக்கொண்டு போவது போலத்தான்." அப்புஉறாமி நிறுத்திவிட்டு, தட்டொன்றில் கிடந்த பச்சைப்பாக்கை எடுத்து பாக்கு வெட்டியை நீக்கி அதனுள் வைத்து நறுக்கினார்.

" சார். எங்க சங்கத்தைப்பற்றி செய்திப் பத்திரிகைகளிலெல்லாம் எழுதியிருக்காங்களாமே. வாசிச்சீங்களா? " பாபு கேட்டான்.

" வாசிக்காம ? எல்லாவற்றையுமே பத்திரமா எடுத்து வைச்சிருக்கேன். நீங்க யாருமே பாக்கலையா? "

" எங்க கிராமத்திலே யாரு சார் பத்திரிகை எடுக்கிறா? ஒன்று செய்யணும் சார். வீடமைப்புத்திட்டத்திலே வாசிகசாலையொன்றையும் சேர்த்து கட்டச்சொல்லி சொல்லிப்புடணும்." என்றான் சலீம்.

" ஏற்கனவே அவங்க வரைந்து இருக்கிற படத்தை என்கிட்டே காட்டினாங்க. அதிலே வாசிகசாலையும் இருக்கு. அத்தோட மரக்கறி அறுவடைகளை விற்பதற்கு ஏற்றவாறு சின்னதாக ஒரு சந்தைக் கட்டிடமும் இருக்கு. ஒரு விசாலமான இடத்திலே நான்கு மதவழிபாட்டுத் தலங்களை அமைக்கக் கூடியதாகவும் ஏற்பாடுகள் இருக்கு. இந்தத்திட்டத்தை உடனடியாக செயற்படுத்தணும்னு மந்திரிசபை தீர்மானம் நிறைவேற்றி யிருக்காம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

" பாபு. சாரிடம் அதைச் சொல்லேன்." என்றான் லஸ்ஸன்ன.

" சார். வெளியூரைச் சேர்ந்த சில முதலாளிமார் ஒன்று சேர்ந்து அடர்ந்த காட்டுக்குள்ளே போய் கஞ்சா பயிர்செய்கை செய்றாங்களாம். துப்பாக்கிகளோட நின்னுதான் காவல் பார்க்கிறாங்களாம். யாருக்கும் தெரியாம ரொம்ப ரகசியமா இதைச் செய்றாங்க. இதிலே சம்பந்தப்படுற ஆட்கள் யாரு, எந்த இடத்திலே செய்றாங்கன்னு கண்டுபிடிப்பது பெரிய சிரமமா இருக்கு. நாகப்பன்னு ஒருவன் தகவல் தாரதா சொன்னான். தகவல் எடுப்பது ரொம்ப கஸ்டமா இருக்காம். எப்படியும் அவன் தகவல் பெற்றுத்தருவான்ற நம்பிக்கை இருக்கு. அவனை விட்டா, வேற எப்படிசார் இந்தத் தகவலைப் பெறலாம்? " பாபு கேட்டான்.

" அப்படியான விவகாரங்கள் தொடர்பாக தகவல்கள் பெறுவது கஸ்டம்தான். எனக்குச் சில அந்தரங்க ஆட்கள் இருக்காங்க. நானும் முயற்சித்துப் பார்க்கிறேன். நான் உங்களுக்கு ஒன்னு சொல்வேன். இப்படி பணக்காரர்கள் சம்பந்தப்படுற விவகாரங்களிலே நீங்க ரொம்ப ஜாக்கிரதையா செயல்படணும். அவங்க விசயங்களிலே நீங்க தலையிடுவது எந்த வழிகளிலும் வெளியே வரக்கூடாது. அது யாரு நாகப்பன்? அவனை நம்பலாமா? "

" நம்பலாம் சார். அவனுடைய ஒரு அந்தரங்கம் என் கைக்குள்ளே சிக்கிக்கொண்டிருக்கு."

பாபு கூறியதும் மற்ற மூவரும் அவனது முகத்தைப்பார்த்து கண்களால் கேள்விக்குறிகள் எழுப்பினர். நாகப்பன் சீலாவதியைப் பலாத்காரம் செய்ய முயன்றதை அவன் யாரிடமும் இதுவரை சொல்லவில்லை. இனிமேல் சொல்லப்போவதும் இல்லை.

" சார். நாங்க உங்களைச் சந்திக்க வந்த விசயத்தையே இன்னும் சொல்லலை." என்றான் லஸ்ஸன்ன.

" சொல்லுங்களேன்."

"எங்க கிராமத்திலே நிறைய இளம் பெண்கள் இருக்காங்க. சமைப்பது, விறகு பொறுக்குவது, தோட்ட வேலை செய்வது போன்றவைகளைத் தவிர வேறு எதுவுமே அவங்களுக்குத் தெரியாது. அதனாலே யாராவது அதிகாரிகளிடம் சொல்லி, தையல் பயிற்சி அல்லது சுயமாக தொழில் செய்யக்கூடியவாறு ஏதாவது ஒரு பயிற்சி ஒழுங்கு பண்ணிக் கொடுக்கணும். அதை எப்படிச் செய்யலாம்னு கேட்கத்தான் வந்தோம்."

"நல்ல யோசனை. உங்களுக்காக அமைக்கப்போற வீடமைப்புத் திட்டத்திலே ஒரு பொது மண்டபமும் கட்டப்போறாங்க. அதைக்கட்டிட்டா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் பிரிவுச் செயலாளரிடம் சொல்லி இத்தகைய வகுப்புக்களை அதிலேயே நடத்தலாம்."

"அதுக்கு நிறைய நாட்கள் எடுக்குமே. இப்போதே பயிற்சி கொடுக்க ஏதாவது செய்தா, புது வீடுகளுக்குக் குடிபோனதும் அவங்க தானாக ஏதாவது தொழில் செய்யத்தொடங்கிடுவாங்க." என்றான் சார்ல்ஸ்.

"அதுவும் சரிதான். நான் எதுக்கும் பிரிவுச் செயலாளருடன் கதைக்கிறேன். அவரை எனக்கு நல்லாவே தெரியும்."

" இன்னும் ஒரு விசயம்."

" என்ன ? "

"வர்ர மாதம் சித்திரை வருசப்பிறப்பு வருது. சுற்றுவட்டத்திலே இருக்கிற எல்லாக் கிராமத்தவர்களையும் எங்க கிராமத்துக்கு அழைத்து, பெரிசா ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சி ஒழுங்குசெய்யலாம்னு யோசிக்கோம். நாலு இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து அவங்கவங்க கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியவாறான நிகழ்ச்சிகளை நடத்தலாமான்னு யோசிக்கோம்" என்றான் சலீம்.

"ரொம்ப நல்ல ஐடியா. அதுல முக்கியமா ஒரு நிகழ்ச்சியையும் சேர்த்துக்கொள்ளுங்க. என்னென்னா நமது தேசிய சொத்துக்களான மரங்களையும், வனசீவராசிகளையும் எவ்வாறெல்லாம் பாதுகாக்கலாம் என்பதை பார்வையாளர்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய விதமான நிகழ்ச்சியாக அது இருக்கணும். உங்களுக்கு வேணுமுன்னா நானே ஒரு நல்ல நிகழ்ச்சியை எழுதித்தர்றேன்."

"தாங்க சார். வருடப்பிறப்பு நிகழ்ச்சிக்காக எங்க பகுதிக்குப் பொறுப்பா இருக்கிற வனஇலாகா, வனசீவராசிகள் இலாகா ஆகியவைகளின் அதிகாரிகளையும், பொலீஸ் அதிகாரிகள், பிரிவுச்செயலாளர் ஆகிய எல்லோரையும் அழைப்போம். மாவட்டச் செயலாளரையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் அதிதிகளாக அழைப்போம்." என்றான் பாபு.

" அப்படின்னா ஒன்று செய்யலாமே."

" என்ன சார் " சார்ல்ஸ் கேட்டான்.

" புது கிராமத்துக்கான வீடமைப்புத்திட்டத்துக்கு அன்றைக்கே அடிக்கல் நாட்டு விழாவையும் வைச்சுடலாம்."

" சுப்பர் ஐடியா சார். "

நண்பர்கள் நால்வரும் அப்புஉறாமியுடன் நீண்டநேரம் கதைத்துக் கொண்டிருந்துவிட்டு விடைபெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18

ஒரு இன்ஸ்பெக்டரும், எட்டு பொலிஸ்காரர்களும், வன இலாகாவின் உயர் அதிகாரியொருவரும், அவருடைய ஊழியர்கள் சிலரும் அந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.

இருள் பிரிவதற்கு முன்பே அவர்கள் தங்களது பயணத்தை மூன்று ஜீப்வண்டிகளில் ஆரம்பித்து இருந்தனர்.

நாகப்பன் கொடுத்த தகவல் வன இலாகா உயர் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டு, அடர்ந்த காட்டுக்குள் கஞ்சாசெய்கையில் ஈடுபடுபவர்களை கையும் களவுமாக பிடிப்பதற்காக அவர்கள் சென்று கொண்டிருந்தனர். கஞ்சா பயிர் செய்யப்படும் சரியான இடத்தை நாகப்பன் கடதாசியொன்றில் படம்கீறி கொடுத்திருந்தான். அந்த இடத்துக்குப்போவதற்கான வழி வன இலாகாவின் உத்தியோகத்தர் ஒருவருக்குத் தெரிந்திருந்தது.

பயணம் புறப்படும்வரை, வன இலாகாவின் உயர் உத்தியோகத்தரையும், பொலீஸ் இன்ஸ்பெக்டரையும் தவிர, அவர்கள் எதற்காக, எங்கே போகவிருக்கிறார்கள் என்ற விபரம் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. குறித்த இடத்துக்குப் போவதற்கான வழியைக்கூட, அந்த வழியை தெரிந்திருந்தவரிடம் அன்று அதிகாலை அவர் கடமைக்காக வந்த பின்னர் தான் உயர் அதிகாரி கேட்டறிந்தார்.

அவர்களுடைய ஜீப்வண்டிகளின் அடியில் துவக்குகள் கிடத்தப் பட்டிருந்தன. தோட்டாக்கள் பெட்டிகளுக்குள் பத்திரமாக சொருகப் பட்டிருந்தன.

பொலபொலவென்று பொழுது விடியும் போதே அவர்கள் காட்டை அண்மித்து விட்டனர். சூரியக்கதிர்கள் மெதுவாக மரஇலைகளை நீக்கியவாறு எட்டிப்பார்த்தன. இரவு பெய்த பனி இன்னும் நீங்காமல், சூரியக்கதிர்கள் பட்டதும் வெளிச்ச மழை பெய்வது போல் ஜாலம் காட்டின. பனித்துகள்களால் மூடப்பட்ட புல்வெளி வெண்மேகமோ என ஐயுற வைத்தது. பறவைகள் கூட்டம், கூட்டமாக உயரே பறந்தன. காட்டுக் குருவிகள் காச், மூச் என திறந்த அலகுகள் மூடாமல் கத்திக் கொண்டிருந்தன. சிறிய தடாகமொன்றின் கரையில் நீளமான சொரசொரத்த தோலுடன் கூடிய முதலைகள் நீண்டுபடுத்தன.

ஜீப் வண்டிகள் உறுமியவாறு காட்டுக்குள் ஒற்றையடிப் பாதைகள் ஊடாக முன்னேறிக் கொண்டிருந்தன. சிறிது தூரத்தில் நூற்றுக்கும் அதிகமான தொகையைக் கொண்ட மான் கூட்டமொன்று நின்று ஜீப் வண்டிகளை அதிசயத்துடன் உற்று நோக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சரத் சைஸைப்பார்த்தியா? குழுமாடுகள் மாதிரி வளர்ந்திருக்கு துகளப்பா. எவ்வளவு சுதந்திரமாக தங்களின் எல்லைக்குள் திரியுதுகள். அதைப்பாரேன். அந்த மானின் கொம்புகள் வெல்வெட் துணிபோல எவ்வளவு அழகா இருக்கு." என்றான் பொலிஸ்காரர்களில் ஒருவன் தன் அருகே திறந்த ஜீப் வண்டியினுள் நின்று கொண்டிருந்த மற்றவனைப் பார்த்து.

" அதுக்கு புதுசா கொம்புகள் முளைக்குது. அதான் அவ்வளவு அழகு. அந்த மானைப்பார். ஐந்தடிக்கும் மேலே உயரம் இருக்கும். " என்றான் சரத்.

வாகனங்கள் மூன்றும் இன்னும் சிறிது தூரம் முன்னேற......முன்னால் சென்று கொண்டிருந்த வன இலாகாவின் வாகனம் சரேலென நிற்க...... தொடந்து மற்ற இரண்டும் பிரேக்போட்டு நின்றன.

பாதையின் நடுவே சிறிது தொலைவில் உயரமான யானையொன்று குட்டியுடன் நின்று கொண்டிருந்தது. அதற்கு சுமார் பத்தடி தூரத்தினுள் பாதையை அண்டியிருந்த மரங்களுக்கு மத்தியில் யானைக்கூட்டமொன்று நடமாடுவது தெரிந்தது.

" யாரும் பயப்படாதீங்க. யானைகள் கூட்டத்தோடதான் நிக்குது. யாருக்கும் எதுவும் தீங்கு செய்யாது. அவைகள் அங்கிருந்து போகும்வரை எந்தச்சப்தமும் இல்லாமல் நிற்போம். ஜீப்களின் ஹோறனை மட்டும் ஒலிச்சிடாதீங்க." என்றான் முன்னால் நின்றிருந்த ஜீப்வண்டியின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த வனசீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்த பாதுகாவலனொருவன்.

அடர்ந்த காட்டினுள் செல்லும்போது வனவிலஙகுகளால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை முற்கூட்டியே தெரிந்து கொள்வதற்கும், அவைகளி லிருந்து தப்புவதற்கான வழிகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கும் உதவியாக வன சீவராசிகள் பாதுகாவலர்கள் இருவரும் அந்தக்குழுவில் அங்கம் வகித்தனர்.

குட்டியுடன் நின்ற தாய்யானை இடுப்பை அசைத்தவாறும், அடிக்கடி தும்பிக்கையை உயர்த்துவதும், தாழ்த்துவதுமாகவும், தும்பிக்கையால் குட்டியை ஆசைதீர தடவுவதுமாகவும் சுமார் கால் மணி நேரம் அதே இடத்திலேயே நின்றது. சற்றுத்தூரத்தில் குழுமாடுகள் இரண்டு ஒன்றையொன்று துரத்தியவாறு தலைதெறிக்க ஓடின.

பாதையை மறித்தவாறு நின்ற யானை குட்டியின் பின்பக்கத்தில் துதிக்கையைப் போட்டு தள்ளியவாறு தனது கூட்டத்தினர் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி நகர்ந்தது. யானைக்கூட்டம் அடர்ந்த மரஙகளினுள் மறைந்தது.

ஜீப் வண்டிகள் மெதுவாக முன்னோக்கி நகர ஆரம்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏம்பா. அந்த தாய் யானையும் குட்டியும் வரும்வரை மற்றயானைகள் நகராமல் அங்கேயே நின்று கொண்டிருந்தனவே. இவைகள் இரண்டையும் அப்படியே பாதையிலே விட்டுட்டு மற்றவை நகர்ந்திருக்கலாமே. ஏன் அப்படிச் செய்யல்ல?" என பொலீஸ்காரர்களில் ஒருவன் வனசீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தனிடம் கேட்டான்.

"யானைகள் கூட்டம் கூட்டமாகத்தான் வாழும். அந்தக் கூட்டத்திலுள்ள எல்லாமே ஆளுக்காள் சொந்தக்காரங்க. கூட்டத்துக்கு ஒரு யானை தலைவனாக தொழிற்படும். தலைவனுக்கு மற்றவைகள் கட்டுப்படும். அந்தக் கூட்டம் வசிப்பதற்கென ஒரு குறிப்பிட்ட பகுதியை நிர்ணயித்துக்கொள்ளும். அந்தப் பகுதிக்கு அப்பால் எந்த யானையும் போகாது. ஒரு கூட்டத்துக்குள்ளே உள்ள ஒரு யானை மற்றக்கூட்டத்து யானைகளோடு சிநேகம் வைத்துக்கொள்ளாது. எந்த யானையாவது தலைவனுக்குக் கட்டுப்பட மறுத்தால் அது தனது கூட்டத்திலிருந்து துரத்தப்பட்டுவிடும். அப்படி துரத்தப்பட்ட யானை வேறு கூட்டத்தோடு சேரமுடியாமல் தனிமையாகிவிடும். இந்த மாதிரி தனிமைப்படுத்தப்படும் யானையைத்தான் தனியன் எனச்சொல்றாங்க. " பாதுகாப்பு ஊழியன் யானைகளைப்பற்றி ஒரு பிரசங்கமே செய்தான்.

பாதை கரடுமுரடாகவும், வளைந்து, நெளிந்தும் இருந்ததால் ஜீப் வண்டிகள் மெதுவாக ஊர்ந்தன. சில இடங்களில் மரக்கிளைகள் முறிந்து கிடந்ததால், வண்டிகளிலிருந்து சிலர் இறங்கி அவைகளைத்தூக்கி அப்புறப்படுத்தியபின் ஊர்ந்தன.

குரங்குகளின் கூட்டமொன்று மரங்களிலிருந்து பொத், பொத் என பாதையின் நடுவே பாய்ந்து, எதிரே வந்து கொண்டிருந்த ஜீப் வண்டிகளைப் பார்த்து அதிசயித்து, பல்லிளித்து, கைகளிரண்டாலும் தலைகளில் சொறிந்து..........துள்ளிப்பாய்ந்து ஓடின.

"சரத் ! சரத் ! அங்க பார். அதோ தூரத்திலே சிறுத்தை !" என்றான் ஜீப்பில் நின்று கொண்டிருந்த பொலீஸ்காரன் தனது நண்பனைப் பார்த்து.

சரத் மற்றவன் கைநீட்டிக் காட்டிய திசையில் பார்வையை இறுக்கினான். தூரத்தே நின்ற இரண்டு மரங்களின் மத்தியில் ஒரு சிறுத்தை மெதுவாக உலாவிக்கொண்டிருந்தது. சடுதியாக திரும்பி ஜீப்வண்டிகளைப் பார்த்தது.

"இந்தப்பக்கம் பார்க்குதுப்பா. பாய்ந்து வந்தாலும் வந்துடும்" என்றான் சரத்.

"வந்தாத்தான் என்ன? துவக்கை எடுத்து குறிபார்த்து ஒரேயொரு டிஸூம். அப்புறம் பதறிட்டுச் சரிந்துடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத் சிரித்தான்.

" ஏன் சிரிக்கே? "

" நீ துப்பாக்கியை எடுத்து தோட்டாவை மாட்டுவதற்கிடையிலே ஒரே பாய்ச்சலிலேயே உன் மென்னியை முறிச்சிடும். இவரு குறிபார்க்கப் போறாராம்."

அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

" ஏன்டா சரத். நம்ம இன்ஸ்பெக்டர்ர வாய்க்குள்ளே எப்போதுமே கொழுக்கட்டை தான்டா." என்றான் நின்று கொண்டிருந்த அந்தப் பொலீஸ்காரன். பொலீஸ் இன்ஸ்பெக்டர் அடுத்த ஜீப் வண்டியில் இருந்ததால் அவர் குறித்து இவர்களுக்கு உரையாட முடிந்தது.

" ஏன் சொல்றே ? "

"காலைலே ஜீப் வண்டி புறப்படுற வரைக்கும் நாம எதற்காக, எங்கே போகவிருக்கிறோம் என்பதை அவர் சொல்லவே இல்லையே."

"எப்படிடா சொல்வாரு. அதான் வாய்க்குள்ளே கொழுக்கட்டையைப் புகுத்திக் கொண்டல்லவா இருந்திருக்காரு." என சரத் கூறவும் மற்றவர்கள் கொல் என வாய்விட்டுச் சிரித்தனர்.

"அவருட பொறுப்பு அவருக்குத் தெரியும். இந்த நாளைலே பெற்ற பிள்ளைகளைக் கூட நம்பக்கூடாது. அவர் நேற்றே நம்மிடம் சொல்லியிருந்தா, நம்மிலே ஒருவன் கஞ்சா பயிர்செய்கிற முதலாளிமாருக்கு செய்தி சொல்லிடுவான். அந்தப்பயத்திலே தான் சொல்லாம இருந்திருக்காரு" என்றான் வயதான கான்ஸ்டபிள் ஒருவன்.

"ஆமா. ஆமா. எந்தப் புற்றுக்குள்ளே எந்தப் பாம்பு இருக்குன்னு. ......" சரத் முடிப்பதற்கிடையில் "அதப்பாருங்கபா. எம்மாம் சைஸ் பாம்பு!" என்றான் ஒருவன்.

சுமார் இருபதடிக்கும் நீளமான கொழுத்த மலைப்பாம்பொன்று மரக்கிளையொன்றிலிருந்து கீழே நழுவிக் கொண்டிருந்தது.

"நம்ம இன்ஸ்பெக்டர் மட்டும் சைனாக்காரனா இருந்திருந்தா இந்த இடத்திலேயே பயணத்தை நிறுத்தியிருப்பாரு." என்றான் ஒருவன்.

" ஏன்? " சரத் கேட்டான்.

"விட்டுட்டுப் போகலாமா? சமைச்சு சாப்டுட்டுப் போகணுமில்லே?"

" எதை ? "

" மலைப்பாம்பைத்தான் "

'உவ்வே......' என்றவாறே வயிற்றைப்பிரட்டுவது போல் மற்றவர்கள் முகங்களைக் கோணலாக்கினர்.

ஜீப்வண்டிகள் இன்னும் நகர்ந்து கொண்டிருந்தன. வெய்யில் இப்போது வண்டியில் நின்று கொண்டிருந்தவர்களின் தலையில் சுட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயர்வைக் கசிவு காரணமாக பூட்டியிருந்த சேர்ட் பொத்தான்களைக் களைந்து மயிர் அடர்ந்த மார்புகளில் காற்றைத் தழுவவிட்டனர்.

" இன்னும் கொஞ்ச தூரம் போனா இடம் வந்துடும்." என்றான் முன்னால் சென்ற ஜீப் வண்டியில் இருந்த வன இலாகா உத்தியோகத்தன்.

வன இலாகா அதிகாரி தனது கையிலிருந்த வோக்கி டோக்கி மூலமாக பின்னால் வந்து கொண்டிருந்த ஜீப்வண்டியில் முன் ஆசனத்தில் இருந்த பொலீஸ் இன்ஸ்பெக்டருடன் ஆங்கிலத்தில் கதைத்தார்.

"அந்த மரத்தடியிலே ஜீப்பை நிறுத்துங்க. எதையாவது சாப்புட்டு அப்புறம் பிரயாணத்தை தொடங்குவோம். "

அவர்கள் சிறிது நேரம் தரித்து, கையோடு கொண்டு வந்திருந்த காலை ஆகாரத்தை உட்கொண்டு, ஜீப் வண்டிகளில் ஏறி பயணத்தைத் தொடர்ந்தனர்.

"இன்னும் ரெண்டு கிலோமீட்டர் போனாபோதும். இடம்வந்துடும்" என்றான் வன இலாகா ஊழியன்.

"அப்படீன்னா ஜீப்பை இங்கேயே நிறுத்திட்டு நடக்கத் தொடங்கு வோம்." வன இலாகா அதிகாரி கூறியவாறே வோக்கிடோக்கி மூலம் பொலீஸ் இன்ஸ்பெக்டருடன் கதைத்து அவருடைய சம்மதத்தையும் பெற்றார்.

ஜீப் வண்டிகள் நிறுத்தப்பட்டு..........அனைவரும் இறங்கி அணி வகுத்து நின்றபின் பொலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களைப் பார்த்து உரையாற்றத் தொடங்கினார்.

"நாம் இப்போ ஒரு பெரிய வேட்டைக்குப் போகப்போறோம். எல்லோருமே காட்டுக்கு மிருகங்களை வேட்டையாடப் போவாங்க. ஆனா நாம கஞ்சாசெய்றவங்களை வேட்டையாட இப்போ போகப்போறோம். எல்லோரும் அவங்கவங்க துப்பாக்கிகளை எடுத்து தோட்டாக்களைப் போட்டு வைச்சுக்கோங்க. மரங்களுக்கிடையிலே மறைஞ்சு நடக்கணும். எல்லோரும் கூட்டமா போகாமல் ஆளுக்காள் இடைவெளிவிட்டு நடக்கணும். ஒருவருக்கு மற்றவர் தெரியக்கூடிய தூரத்தினுள் இருக்கணும். வனசீவராசிகள் இலாகா, வன இலாகா ஆகியவற்றைச் சேர்ந்த வழி தெரிந்தவங்க முன்னாலே போவாங்க. மற்றவங்க பின் தொடரணும். ஒன்றை மட்டும் மறந்துடக்கூடாது. உங்களில் யாரையும் வேறு எவருமே பார்த்துடக்கூடாதவாறு மறைஞ்சு போகணும். தேவைப்படும்போது தரையிலே ஊர்ந்தும் போகலாம்."

அவர் கூறியவாறு அவர்கள் நடந்து....,சிறிது தூரம் வயிறுகளால் ஊர்ந்து........

கஞ்சாப் பயிர்கள் காற்றுக்கு தலையசைத்து ஆடிக்கொண்டி ருப்பதை ஊர்ந்து வந்து கொண்டிருந்த அவர்கள் கண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

குழுவிலிருந்த அனைவரும் தரையோடு தரையாக படுத்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் வளர்ந்திருந்த செடிகொடிகளும், பற்றைகளும் அவர்களை மறைத்தன. பொலீஸ்காரர்கள் கைகளில் துப்பாக்கிகளை தயார் நிலையில் வைத்துக்கொண்டிருந்தனர்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் மெதுவாக தலையை உயர்த்தி கண்களுக்கு முன்னால் கையிலிருந்த டெலஸ்கோப்பைப்பிடித்து அதனூடாக பார்த்தார். வளர்ந்த கஞ்சாச்செடிகளும், அதை அண்மித்து உயரமான மரமொன்றில் கட்டப்பட்டிருந்த காவற்பரனொன்றும் தெரிந்தன. காவற்பரனினுள் நால்வர் சீட்டாடிக்கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில் சில துப்பாக்கிகள் சாத்தி வைக்கப்பட்டிருந்தன. டெலஸ்கோப்பை மாற்றி ஏனைய பக்கங்களையும் பார்வையால் அலசினார். ஒவ்வொரு பற்றைகளாக.....ஒவ்வொரு மரங்களாக ஆராய்ந்தார். பரனிலிருந்த நால்வரைத் தவிர வேறு யாரும் அங்கில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார். தனக்கு சற்றுச்சமீபமாக தரையோடு படுத்துக்கொண்டிருந்த பொலிஸ்காரரர் ஒருவருக்கு கையை உயர்த்தி சாடை காட்டினார். அவரது சாடை நொடிக்குள் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு தெரிவிக்கப்பட்டு..... எல்லோருமே துப்பாக்கிகளை வெடிக்க தயார் நிலையில் ஆகி......

சரேலென எழுந்த துப்பாக்கி வெடியும் அதே வினாடியில் தாங்கள் வீற்றிருந்த காவற்பரனுக்குள்ளால் காற்றைக் கிழித்தவாறு சென்ற ரவையின் உஷ்ஷ்......சப்தமும் அந்த நால்வரையும் திடுக்குறவைத்தது. இருந்து கொண்டிருந்தவர்கள் சடுதியாக முகம்குப்புறப்படுத்து.....தலையை உயர்த்தி நானா பக்கங்களிலும் பார்வைகளால் ஓடி....மெதுவாக ஊர்ந்து சாத்தியிருந்த துப்பாக்கிகளை கைகளில் எடுக்க முயற்சிக்கும் போது.....அடுத்த வெடிச்சப்தம் கேட்டதுடன், ரவைகள் உராய்ந்தவாறு பறந்து செல்வதை அவர்கள் உணர்ந்தனர்.

கைகளில் பிடித்திருந்த துப்பாக்கிகளை அப்படியேவிட்டுவிட்டு மீண்டும் அவர்கள் தலைகளை தரையில் அழுத்தியவாறு படுத்தனர். எதிர்பாராதவிதமாக நடைபெறும் அந்தச் சம்பவம் அவர்கள் நால்வரையும் நிலைகுலைய வைத்தது. மேற்கொண்டு என்ன செய்யலாம் என அவர்கள் தீர்மானிப் பதற்கிடையில்.......மைக்ரோபோனில் பொலீஸ் இன்ஸ்பெக்டரின் குரல் ஒலித்தது.

"நான் பொலீஸ் இன்ஸ்பெக்டர் கதைக்கிறேன். உங்களைப் பிடிப்பதற்காக ஒரு பெரிய பொலீஸ் பட்டாளத்தோட வந்திருக்கேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவித மறுப்புமில்லாம கீழே இறங்கி கைகளை மேலே தூக்கியவாறு சரணடைங்க. இல்லே......துப்பாக்கி ரவைகளால உங்க உடம்புகள் சல்லடையாகிடும்." கூறியவாறு ஆகாயத்தை நோக்கி ஒரு தடவை சுடுமாறு மற்றவர்களுக்கு கைச்சாடை காட்டினார். ஒவ்வொரு திசையிலிருந்தும் ஒவ்வொன்றாக துப்பாக்கிவேட்டுக்களின் ஒலி காற்றைக் கிழித்தது.

"பெருமாள் ! சரணடைவதைத்தவிர வேறு வழியே இல்லடா" சீனி குசுகுசுத்தான்.

"சரணடைஞ்சா முதலாளிமாரு நம்மகுடும்பத்தை உண்டா, இல்லையான்னு ஆக்கிடுவானுகள்டா" என்றான் பேதுரு.

"சரணடைவதாவது! கத்தரிக்காயாவது! உயிர் போனாலும் பரவால்ல. துப்பாக்கிகளை எடுத்துச்சுடுவம்டா " என்றான் சந்தன.

"உனக்கு தலைமுழுக்க கருங்கல்தான்டா. வளைச்சி பொலீஸ் காரன் துவக்குகளோட தயாரா நிக்கான். அதுக்குள்ளே சுடப்போறாராம்" என்றான் பெருமாள்.

"நீங்க மூணுபேரும் என்ன இழவாவது செய்ங்க. நான் பைட் பண்ணத்தான் போறேன்." என்றான் சந்தன.

நேரம் வினாடிகளாக கரைய.....

"நான் ஐந்து எண்ணுவதற்கிடையில் நீங்க நால்வரும் கீழே இறங்கிவர முயற்சிக்கல்லைன்னா, அப்புறம் நாங்க மேலே வந்து உங்க பிணங்களை கீழே கொண்டு வரவேண்டியிருக்கும்." என மைக்ரோபோனில் தனது கரகரத்த குரலில் இன்ஸ்பெக்டர் கூறியதுமில்லாமல், சேர்ட் பக்கட்டினுள்ளிருந்து கிரனைட் ஒன்றை எடுத்து, மூடியை பற்களால் இழுத்துவிட்டு, கஞ்சாச்செடிக்குள் வேகமாக எறிய.....கிரனைட் வெடித்த சப்தம் பரனிலிருந்தவர்களின் உடல்களை உறைய வைத்தது.

" ஒன்று.......இரண்டு......மூன்று......" இன்ஸ்பெக்டர் இடைவெளிவிட்டு எண்ணிக்கொண்டிருக்கும் போது, நால்வரும் பரனிலிருந்தும் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தனர்.

பொலீஸ்காரர்களும், மற்ற அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரும் அந்த நால்வரையும் சூழ்ந்து.....அவர்களின் கைகளில் ஆளையாள் இணைத்து விலங்குகள் பிணைத்து.......பொலீஸ்காரர்களில் இருவர் மரத்திலேறி பரனுக்குள் நுழைந்து அங்கு சாத்தியிருந்த துப்பாக்கிகளை எடுத்து கீழே எறிந்து........சட்டிபானைகள், பாத்திரங்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை கயிறுகளில் வரிந்து கீழே இறக்கி.......

"சார். ஒரு பெரிய டின்னிலே லாம்பெண்ணை இருக்கு." என்றான் தலையை வெளியே நீட்டிய ஒரு கான்ஸ்டபிள் இன்ஸ்பெக்டரைப் பார்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நல்லதாப்போச்சு. ஜீப்பினுள்ளே இருக்கிற நாம் கொண்டுவந்த கெரஸினை பாவிக்கத்தேவலை. பத்திரமா எடுத்துக்கொண்டு வா."

சிலர் காட்டுக்குள் சென்று காய்ந்த சருகுளையும், விறகுகளையும் பொறுக்கி வந்து கஞ்சாசெடிகளுக்குள் அங்குமிங்குமாக குவித்தனர். வேறு சிலர் செடிகளை சரசரவென பிடுங்கத்தொடங்கினர். இன்ஸ்பெக்டர் செடிகள் வளர்ந்திருந்த இடத்தின் உத்தேசமான பரப்பளவைக் கணக்கிட்டு டைரியில் குறித்துக் கொண்டார்.

மதியமாகியது........வெய்யில் இறைத்தது. உடம்பு முழுதும் அனைவருக்கும் வெயர்த்துக்கொட்டியது. பலர் தங்களுடைய சேர்ட்களைக் களைந்து மரக்கிளைகளில் தொங்கவிட்டனர். விலங்குகளினால் பிணைக்கப்பட்டு நின்றவர்கள் தங்கள் கண் முன்னால் நடப்பவைகள் கனவா அல்லது நிஜமா என சந்தேகித்து, மனதளவில் உறைந்து போனவர்களாக பார்த்துக்கொண்டிருந்தனர்.

"ஏம்பா. யாராவது போய் ஜீப்களை இந்த இடத்துக்கு கொண்டு வாங்க. வழி தெரிந்த ஒரு ஆளை அழைச்சுட்டுப்போங்க. துப்பாக்கிகளையும் கையோடு கொண்டு போங்க. இடையிலே ஏதாவது வனவிலங்குகள் நின்றாலும் நிக்கும்." என்றார் இன்ஸ்பெக்டர்.

"துப்பாக்கிகள் வேணாம். நான் உங்களைப் பத்திரமா கூட்டிப்போறேன். கையிலே துப்பாக்கி இருந்தா மிருகங்களைக் கண்டதும் சுடுவதற்குத்தான் எண்ணம் வரும். காட்டுக்குள் துப்பாக்கிகளையே தூக்கக்கூடாது." என்றான் வனவிலங்குகள் பாதுகாவலனொருவன்.

கஞ்சாச் செடிகள் பிடுங்கும் வேலைகள் இன்னும் நடைபெற்றன. பிடுங்கப்பட்டவை பல இடங்களிலே குவிக்கப்பட்டன. நீதிமன்றத்துக்குத் தேவைப்படலாமென நினைத்த இன்ஸ்பெக்டர் ஒரு குவியல் செடிகளை பரணிலிருந்து வீசி எறியப்பட்ட கோணிச்சாக்கொன்றினுள் போட்டுக்கட்டுமாறு கட்டளையிட்டார்.

ஜீப்கள் மூன்றும் அவர்கள் நின்றிருந்த இடத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

"எல்லோரும் வாங்க. சாப்பிடலாம். பசி குடல் சதைகளைப் போட்டு குதறுது." என்றார் டயபிடிக் நோயால் அவதியுறும் உயர் அதிகாரியொருவர்.

எல்லோரும் மரநிழலில் அமர்ந்து.....

"நீங்களும் இருங்கப்பா. பசி எல்லோருக்கும் பொதுதானே" என்றார் அந்த அதிகாரி கைகளில் விலங்குகளோடு நின்றிருந்தவர்களைப் பார்த்து.

"ஏம்பா இந்த அனியாய செயலுக்கு நீங்களும் துணையா இருக்கீங்க? இவ்வளவு கஞ்சாச்செடிகளும் முற்றினா, அவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடைசெய்து மக்களுக்குத்தானே உங்க முதலாளிமாரு விற்கப்போறாங்க. மற்ற நாடுகளெல்லாம் எப்படியெப்படியோ முன்னேறும் போது நம்ம நாட்டிலே கஞ்சா போதைக்கு ஆக்களை அடிமையாக்கிற வேலையிலே நீங்க ஈடுபட்டு இருக்கீங்களே. நாட்டை அபிவிருத்தி பண்ற முயற்சியை விட்டுட்டு இந்த மாதிரியான கேவல முயற்சிகளிலே இறங்கி இருக்கீங்களே." என்றார் முகங்களைத் தொங்கப் போட்டவாறு வீற்றிருந்த விலங்கணிந்தவர்களைப் பார்த்து வன இலாகா றேஞ்சர்.

ஏறக்குறைய கஞ்சாச் செடிகளில் கணிசமானவை பிடுங்கப்பட்டு குவிக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொரு குவியலின் மேலும் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு நெருப்பு மூட்டப்பட்டது. பச்சைச் செடிகள் இலகுவாக பற்றி எரியாமல் புகையத்தொடங்கின. ஜீப்புக்குள்ளிருந்த எண்ணெயும் தெளிக்கப்பட்டு முயற்சிகள் தொடர்ந்தன.

"எல்லாமே பற்றாமல்விட்டால், அவைகளைக் கலைத்துவிட்டு ஜீப் வண்டிகளை மேலே செலுத்தி சின்னாபின்னமாக்கிவிட்டுப் போவோம். பொழுதுபட்டுடும்னா திரும்பிப்போறது கஸ்டமாகிடும். " என்றார் றேஞ்சர்.

அவர் கூறியவாறே மூன்று ஜீப்களும் நெருப்பணைந்து கலைக்கப்பட்ட செடிகளுக்கு மேலால் பல தடவைகள் குறுக்காலும், மறுக்காலும் ஓடி சிதைத்தன.

## 20

வீடமைப்புத்திட்டத்துக்கான கட்டிடப்பொருட்கள் லாரிகளில் ஏற்றிவரப்பட்டு பல இடங்களில் குவிக்கப்பட்டன. கல், மண், போன்றவை ஒவ்வொரு வீடும் கட்டுவதற்காக குறித்தொதுக்கப்பட்ட இடங்களில் பறிக்கப்பட்டன. கைமரங்கள், கதவு, ஜன்னல் ஆகியவற்றிற்கான நிலைகள், அஸ்பஸ்டஸ் சீட்கள், சீமெந்து ஆகியவை தற்காலிகமாக கட்டப்பட்டிருந்த மண்டபமொன்றினுள் பத்திரப்படுத்தப்பட்டன. நான்கு வீடுகளுக்கு ஒன்று வீதம் இருபத்தைந்து கிணறுகள் கட்டுவதற்காக குழிகள் தோண்டப்பட்டிருந்தன.

நண்பர்கள் நால்வரும் ஆகஸ்ட் மாத பரீட்சைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்ததால் வீடமைப்பு தொடர்பான வேலைகளில் மும்முரமாக ஈடுபட முடியாமலிருந்தார்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நால்வரும் கூட்டாக சேர்ந்து குறித்த இடங்களுக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். சங்கத்தின் கூட்டத்தைக் கூட்டி, தங்களின் இக்கட்டான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை எடுத்துச் சொல்லி, தங்களுக்குப் பதிலாக கிராமத்தின் ஏனைய இளைஞர்களையும், யுவதிகளையும் வேலைகளில் ஈடுபடுமாறு வேண்டினர்.

"நீங்க ஒண்ணும் யோசிக்காதீங்க. நாங்க எதுக்காக இருக்கோம்? சித்திரை வருசப்பிறப்பன்று வீடமைப்புத்திட்டத்துக்கு அடிக்கல் நட்டுவதற்கும், அதைத் தொடர்ந்து கலை விழாவுக்கும் வேண்டிய சகல ஏற்பாடுகளையும் நாங்க செய்றோம். நீங்க நல்லாபடிங்க. பரீட்சையிலே எப்படியாவது பாஸ் பண்ணப்பாருங்க. நம்ம கிராமத்திலேருந்து முதன் முதலிலே அட்வான்ஸ் லெவல் பரீட்சை எழுதப்போறவங்க நீங்க நாலவரும் தான்" என தென்னக்கோன் கூறியபோது, கூட்டத்தின் ஓரமாக விளிமா மரமொன்றில் சாய்ந்தவாறு நின்றிருந்த அனோமாவின் மேல் லஸ்ஸன்ன தனது பார்வையைப் பாய்ச்சினான். அவள் உதடுகள் விரியாமல் சிரித்தாள்.

" கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் போது நான்கு இனங்களினதும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடியவாறாக பார்த்துக்கொள்ளணும். வன மிருகங்களையும், மரங்களையும் பாதுகாப்பது மட்டும் நமது சங்கத்தின் நோக்கமாக இருக்கக்கூடாது. இங்கே வாழ்ற நான்கு இனங்களினதும் ஒற்றுமையையும் நமது செயல்கள் ஒவ்வொன்றும் வெளிச்சமிட்டுக்காட்டக்கூடியவாறும் இருக்க வேண்டும். நாம் எந்த எந்த மதங்களைப் பின்பற்றினாலும் அத்தனை பேரும் மனிதர்கள் என்ற எண்ணத்தோட செயல்படணும்" என பாபு கூறியவாறு கூட்டத்தினுள் அவனையே வைத்தவிழி வாங்காது பார்த்துக்கொண்டு நின்ற சீலாவை கடைக்கண்களால் நோக்கினான்.

"அதைத்தாங்க நாங்களும் வற்புறுத்துறோம். இந்த நாட்டுக்கே நம்ம கிராமம் ஓர் உதாரணமா அமையணும். நாம எல்லோருமே ஆளுக்காள்விட்டுக் கொடுத்து, ஆளையாள் மன்னித்து, பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் கைக்கொண்டு வாழணும்." என்றார் வெள்ளிக் கம்பிகளுடன் கூடிய தாடியுடன் நின்ற அப்பாஸ். அப்பாஸின் செயல்களில் சமீப நாட்களாக பெரியதொரு மாறுதல் காணப்பட்டது. தினசரி ஐந்து வேளையும் நேரத்துக்கு தொழுவதை தவறாமல் மேற்கொண்டார். தலையில் தொப்பியணியாமல் அவர் வெளியே வருவது அரிதாக காணப்பட்டது. ஏற்கனவே அவரிடமிருந்த கள்ளமரம் வெட்டுவது, மிருகவேட்டை போன்றவற்றை அவர் நினைத்துத்தானும் பார்ப்பதாக இல்லை.

இதற்கெல்லாம் முக்கியமான ஒரு காரணம் இருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் தொழுகைக்காக அழைக்கும் இறைபணிக் குழுவொன்று அக்கிராமத்துக்கு வருகை தந்து அவருடன் உரையாடி அவரையும் தங்களினது குழுவில் ஒருவராக ஆக்கிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபணி வேலைகளில் அவர் ஈடுபடத்தொடங்கிய பின்னர் தன் செயல்களும், சிந்தனைகளும் எந்தளவு தூய்மையாக இருக்கவேண்டு மென்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

"அப்பாஸ். நீங்க சொல்றது நூறு வீதம் சரி. வீடமைப்புத்திட்டம் முடிந்து நாமெல்லாம் அங்கே குடியேறியதன் பின்னர், நமக்குள்ளே ஏற்படும் பிணக்குகளை நாமே தீர்த்துக்கொள்வதற்காக ஒரு இணக்க சபையையும் ஏற்படுத்திக்கொள்ளணும். நமது பிரச்சினைகள் எதையுமே பொலீஸுக்கு கொண்டு போகக்கூடாது. நமது கிராமத்துக்குள்ளே பொலீஸே வராம நாம பார்த்துக்கணும்" என்றான் மாணிக்கம்.

" வீடுகளைக் கட்டி நமக்குத் தரும்போது நான்கு இனத்தையும் சேர்ந்த நாம ஒரு குடும்பத்துக்குப் பக்கத்திலே மற்ற இனமொன்றைச் சேர்ந்த குடும்பமொன்று வசிக்கக்கூடியவாறு வீடுகளை ஒதுக்கித் தருமாறு கேக்கணும். நாலு வீடுகளுக்கு ஒன்று வீதம் கட்டப்படும் கிணறுகளிலே நாலு இனத்தவரும் தண்ணீ மொள்ளக்கூடியவாறு இருக்கணுங்க." என்றான் கமகே.

"ஆனா ஒன்றுங்க. பெண்கள் குளிக்கக் கூடியவாறு மறைவான ஒதுக்குப்புறமும் அமைச்சுக் கொள்ளணுங்க" என்றார் மீண்டும் அப்பாஸ்.

அவர்கள் நீண்டநேரம் தங்களின் மனதில் தோன்றிய அபிப்பிராயங் களையெல்லாம் கூறினர். சிலயோசனைகளை கூட்டத்தினர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். வேறு சிலதையிட்டு ஆழமாக விவாதித்தனர்.

"ஏங்க தலைவரு. ஐநூறு தேக்குமரம் நடுவதற்கு காணிதாரதா சொன்னாங்களே. அது என்னங்க ஆச்சு" என கூட்டத்தினுள் நின்றிருந்த ஒருவன் தென்னக்கோனை நோக்கிக் கேட்டான்.

" அதுக்கும் நடவடிக்கை எடுக்கிறாங்களாம். நாம இப்போ வசிக்கிற இந்தப் பகுதிகளையெல்லாம் அதுக்காக எடுக்கப்போறாங்க. இன்னும் சில தினங்களிலே நில அளவை வேலைகள் தொடங்கப்போறாங்க. அப்புறம், தேக்கங்கன்றுகள் பதியமிடுவதற்காக கொட்டில்கள் அமைப்பாங்க. பதியமிடுற வேலைகளிலே உங்களை ஈடுபடுத்தி தினக்கூலியும் தருவாங்க. மழைகாலம் தொடங்கியவுடன் மரங்களை நடத்தொடங்கலாம்."

"ஏங்க, காட்டைச்சுற்றி மிருகங்கள் வெளியேறாம மின்சார கம்பி வேலி போடுறதா சொன்னாங்களே. அதுக்கு என்னங்க ஆச்சு ?" மாட்டுப் பட்டி வைத்திருக்கும் ஒருவன் கேட்டான்.

" அந்த வேலைக்கு இன்னும் இரண்டொரு மாதங்கள் செல்லலாம். வேறு எங்கோ ஒரு இடத்திலே இப்போ வேலி அமைக்கிறாங்களாம். அது முடிஞ்சதும், அதுலே வேலை செய்றவங்களை இங்கே கூட்டி வருவாங்களாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைத்தாங்க உடனேயே செய்யணும். சென்றகிழமை கூட காட்டுக்கு மேய்ச்சலுக்குப் போன எனது மாட்டுப்பட்டியிலே ஒன்றைக் காணல்லீங்க. சிறுத்தைப் புலி புடிச்சி கொண்ணு தின்னிருக்கும்." என்றான் பட்டிக்காரன் மீண்டும்.

" இவ்வளவு காலமும் தான் பொறுத்திட்டீங்க. இன்னும் கொஞ்சம் பொறுங்க. நமக்கெல்லாம் மிகக்கூடிய சீக்கிரத்திலே நல்லகாலம் பொறக்கப் போகுது." என்றார் தென்னக்கோன்.

"ஏங்க தலைவரு. இந்த மூலிகைச்செடி அது இதுன்னு சொல்றாங்களே. அதுகளை நாம வளர்க்க இயலாதா?" மார்பு முழுக்க அடர்ந்த முடியுடன் துவாய் துண்டொன்றால் போர்த்தியவாறு நின்ற வயதான ஒருவர் கேட்டார்.

" கஞ்சா மூலிகையா? " அப்பாஸ் சரேலெனக் கேட்க கூட்டத்தினர் வாய்விட்டு ஏகநேரத்தில் வெடிச்சிரிப்புச் சிரித்தனர்.

"காட்டுக்குள்ளே கஞ்சாப்பயிர் செய்தவங்களைத்தான் பொலீஸ் போய் அள்ளிக்கொண்டு போனாங்களாமே " என்றான் வாயில் சிரிப்பைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருந்த இளைஞன் ஒருவன்.

" நான் சொன்னது அது இல்லப்பா. ஆயுள்வேத மருத்துவத்துக்குத் தேவைப்படுற மூலிகைச் செடிகள். அந்தச் செடிகளை வெளிநாடு களுக்குக்கூட ஏற்றுமதி செய்றாங்களாம்." என்றார் அடர்ந்த முடி மார்புக்காரர்.

" ஆமாமா. இத்தனை நாளும் தான் மிருகங்களின் தோல்களையும், பறவைகளையும் ஏற்றுமதிக்காக விற்றுவந்தோம். அவைகளை விட்டுவிட்டதாலே, இனி ஆயுள்வேத மூலிகைகளை உற்பத்தி செய்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கொடுப்போம் " இன்னுமொரு இளைஞன் கூறினான்.

" இது நல்ல யோசனைதான். அதிகாரிமாரிடம் சொல்லிப்பார்ப்போம். தேக்கு மரங்களை நடும்போது, அவைகளுக்கிடையில் ஆயுள்வேத மூலிகைகளைப் பயிர்செய்யலாம்."

" தலைவரே ! எல்லாம் சரிதான். நம்ம வீடமைப்புத்திட்டத்துக்கு என்ன பெயர் வைக்குறதுன்னு தீர்மானிச்சிட்டீங்களா? " என வயதான ஒருவர் தென்னக்கோனைப் பார்த்துக்கேட்டார்.

" இல்லையே. நீங்களெல்லாம் ஏகமனதாக தீர்மானிக்கிற பெயரை அதிகாரிமாருக்குத் தெரிவிச்சிடலாம். பொருத்தமான பெயரொன்றை சிபாரிசு பண்ணுங்களேன்."

கூட்டத்தினரின் நெற்றி மடிப்புகள் அவர்கள் ஆழமாக சிந்திக் கிறார்கள் என்பதை வெளிக்காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லஸ்ஸன்னவும் அவனுடைய நண்பர்களும் புது கிராமத்துக்கான பெயர்வைப்பது தொடர்பாக பலமுறை விவாதித்து பெயரொன்றைத் தெரிவு செய்து இருந்தனர்.

" ஏன் பாபு. நாம தெரிவு செய்த பெயரை கூட்டத்தாருக்குச் சொல்லேன். அவர்களுக்கும் பிடித்திருக்குதான்னு பார்ப்போம் " என்றான் தன் அருகே நின்ற பாபுவைப் பார்த்து சலீம்.

" ஐயா. அமைதிக்கிராமம்னு பெயர் வைச்சா எப்படி? " என்றான் சிறிது சப்தமாக பாபு.

அவன் கூறிய பெயரையிட்டு அவர்கள் தங்களினது மனதுக்குள் அலசினர். சிலர் அந்தப் பெயர் பொருத்தமானதெனக் கருதினாலும், பலர் வேறு பெயர்களையும் பற்றி சிந்தித்தனர்.

" நான் ஒன்று சொன்னா நீஙகளெல்லாம் கேட்பீங்களா ? " என்றார் வயதான ஒருவர் தான் நின்றிருந்த இடத்திலிருந்து சிறிது முன்னால் வந்தவாறு.

" இங்கே எல்லோருமே நண்பர்கள். ஒவ்வொருவருக்கும் அவர்களின் மனங்களில் தோன்றும் எண்ணங்களைச் சொல்ல உரிமை இருக்கு. " என்றார் தென்னக்கோன்.

" அப்படீன்னா சொல்றேன். சில மாதங்களுக்கு முன்னாலே நாம எப்படியெல்லாமோ வாழ்ந்தோம். வேட்டை இறைச்சி சாப்பிடாம வாழவே முடியாதோ என எண்ணியிருந்தோம். நம்ம கைகளாலே கொல்லப்பட்ட மிருகங்கள், பறவைகள், வெட்டப்பட்ட மரங்கள் எத்தனையென்ற எண்ணிக்கையே நமக்குத் தெரியாது. அப்படியாக வாழ்ந்த நம்மை இப்போ நாம வாழுற புது வாழ்க்கைக்கு கொண்டு வந்ததே நல்ல நண்பர்களாக கிராமத்திலே சுற்றித்திரியும் இந்த நான்கு இளைஞர்களும் தான். நமக்குக்கிடைக்கப்போற புது கல்வீடு, பயிர்செய்றதுக்கு நிலம், தேக்கு மரங்கள் நடுவதற்கான காணி ஆகிய எல்லாவற்றுக்குமே அடிப்படைக் காரணம் இந்த தம்பிமார்தான். அதனாலே, புது கிராமத்துக்கு ' நண்பர்கள் கிராமம் ' அதாவது 'யஉறலு கம' என்ற பெயரை வைப்பதுதான் பொருத்தம்னு எனக்குப்படுது. கிராமத்தவர்களான நாம எல்லோருமே ஆளுக்காள் நண்பர்கள், நம்ம கிராமத்துக்கு அண்டிய கிராமஙகளில் வசிப்போர்களுக்கும் நாம நண்பர்கள், வனமிருகங்கள், பறவைகள் போன்றவற்றிற்கும் நாம நண்பர்கள்" அவர் கூறி முடிக்குமுன் கூட்டத்தினர் அனைவரும் கைகளைத்தட்டி அவரின் யோசனையை வரவேற்றனர்.

" பொருத்தமான பெயருங்க " என்றனர் பலர் ஏககாலத்தில்.

" எனக்குக்கூட இந்தப் பெயர்தான் சரியா தெரியுது. இதையே வைச்சுடச் சொல்லி அதிகாரிமாரிடம் சொல்லிடுவோம்." தென்னக்கோன் கூட்டத்தினரைப் பார்த்துக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

திட்டமிட்டவாறு சித்திரைப் புதுவருட தினத்தன்று வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா மிக விமரிசையாக நடந்து முடிந்தது. வன இலாகா, வனசீவராசிகள் பாதுகாப்பு இலாகா ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவிருந்த அமைச்சரே தனது உயர் அதிகாரிகள் சகிதம் கிராமத்துக்கு வந்து அடிக்கல்லை நட்டிவைத்தார். தேசிய கொடி ஏற்றி. .....குத்து விளக்கின் மூக்குகளில் திரிகளைப் பற்றவைத்து.... புத்தமததுறவியொருவரால் சில் அனுஸ்டானம் செய்யப்பட்டு..... இந்து மதப்பெரியார் ஒருவரால் தேவாரம் ஓதப்பட்டு.......இஸ்லாமிய மௌலவி யொருவரால் புனித குர்ஆனின் சில வசனங்கள் மொழியப்பட்டு......கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரால் பைபிளின் சில வரிகள் பாராயணம் செய்யப்பட்டு.. ...நான்கு இனத்தைச் சேர்ந்த கிராமத்தின் முக்கிய பிரமுகர்களால் தூக்கிக்கொடுக்கப்பட்ட கருங்கல் ஏற்கனவேயே வெட்டிப்பட்டிருந்த குழியொன்றுக்குள் அமைச்சரால் வைக்கப்பட்டது.

பிற்பகல் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இரண்டு டிரெயிலர் பெட்டிகளை இணைத்து மேடையமைத்து இருந்தனர். பக்கத்து கிராம பாடசாலையிலுள்ள கதிரைகளையெல்லாம் ஏற்றிக்கொண்டு வந்து மேடையின் முன்னால் பிரமுகர்கள் அமர்வதற்காக போட்டு இருந்தனர். வீடுகள் அமைப்பதற்காக கிராமத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த காணிகளெல்லாம் ஏற்கனவேயே அவர்களால் துப்புரவு செய்யப்பட்டு காட்சியளித்தது. அருகருகே கிளை பரப்பி நின்ற இரண்டு மரங்களின் மத்தியில் மேடை அமைக்கப்பட்டிருந்ததால் பார்வையாளர்கள் பிற்பகல் வெய்யிலின் உபத்திரவமின்றி நிற்பதற்கு வசதியாக இருந்தது. மரங்களின் உச்சியில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் ஒவ்வொரு இனங்களும் வழிபடும் மதப்பாடல்களை பெரிய சப்தத்தில் காடு முழுதும் கேட்கக் கூடியவாறு இசைத்துக் கொண்டிருந்தன. சிங்களமும், தமிழும் மாறிமாறி ஒலித்தன.

நண்பர்கள் நால்வரும், அவர்களுடைய மற்ற நண்பர்களுடன் அங்குமிங்குமாக ஓடியாடி தங்களுக்காக ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்து கொண்டிருந்தனர். கிராமத்தவர்களில் பெரும்பாலோர் தங்களது களிமண் வீடுகளையும், குடிசைகளையும் பூட்டிக்கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இடத்துக்கு நேரகாலத்தோடேயே வந்துவிட்டனர். நடக்க முடியாத வயதான சில பெண்களும், கிழவர்களும் மட்டுமே கிராமத்தில் தங்கிநின்றனர். சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் நடந்தும், சைக்கிள்களிலும் வந்திருந்தனர். சிலர் மாட்டுவண்டில்களில் தங்களுடைய குடும்ப அங்கத்தவர்களுடன் வந்து விழாவைச் சிறப்பித்தனர்.

வனங்களில் சுதந்திரமாக மேய்ந்து திரியும் விலங்குகள் மனிதர்களின் எதிரிகளல்ல, நண்பர்கள் என்பதை வலியுறுத்துவதற்காக யானையொன்றின் தும்பிக்கையுடன் அழகிய சிறுமியொருத்தி கைகுலுக்குவது போன்ற காட்சியொன்றைக் கொண்ட படங்கள் வனசீவிகள் பாதுகாப்பு இலாகாவினரால் கூட்டத்தினருக்கு விநியோகிக்கப்பட்டது. உயிருள்ள மரங்களை வெட்டும்போது அவைகள் துக்கம் பீறிட்டு கண்ணீர் உகுத்துவது போன்ற காட்சியொன்றைச் சித்தரித்துக்காட்டும் போஸ்டர்கள் மரங்களிலெல்லாம் ஒட்டப்பட்டிருந்தன. ' நாங்களும் உங்களைப்போல் உயிருள்ளவர்களே!' என்ற வசனம் கொட்டை எழுத்துக்களில் போஸ்டர்களில் அச்சிடப்பட்டிருந்தன.

அப்புஉறாமியும், சின்னத்துரை மாஸ்டரும் பிரமுகர்களுடன் கதிரைகளில் அமர்ந்திருந்தனர். சங்கத்தின் தலைவரான தென்னக்கோனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, முதல் நிகழ்ச்சியாக கண்டிய நடனமொன்று இடம்பெற்றது. அதைத்தொடர்ந்து தெய்வத்துக்கு தீபாராதனை செய்வதைக்குறிக்கும் முகமாக தமிழ் இன யுவதிகள் சிலரைக்கொண்ட நாட்டிய நிகழ்ச்சியொன்றும், தொடர்ந்து முஸ்லிம் இளைஞர்களால் நடாத்தப்பெற்ற களிகம்பு அடிக்கும் நிகழ்ச்சியும் அடுத்தாக கிறிஸ்தவ யுவதிகளால் இயேசு சிலுவைக்கு முன்னால் மெழுகுவர்த்திகளைக் கைகளிலேந்தி ஆடிய நாட்டிய நிகழ்ச்சியொன்றும் இடம்பெற்றன.

வனசீவராசிகளும், மரங்களும் இந்த நாட்டின் தேசிய சொத்துக்கள் என்பதை வலியுறுத்துவதற்காக அப்புஉறாமியினால் எழுதப்பட்டு சின்னத்துரை மாஸ்டரால் நெறிப்படுத்தப்பட்ட சிறுவர்களையும், சிறுமிகளையும் கொண்ட நாட்டிய நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. காட்டில் வசிக்கும் பல இன மிருகங்களைப் போல் முகமூடிகள் அணிந்த சிறுவர்கள் மிருகங்களைப் போலவே கத்தி, கர்ஜனை செய்து, பிளிறி நடித்தனர்.

கடைசி நிகழ்ச்சியாக நான்கு இன இளைஞர்களும், யுவதிகளும் பங்குபற்றிய இன ஒற்றுமையை வலியுறுத்துவது தொடர்பான நாடகமொன்று நடித்துக்காட்டப்பட்டது.

கலைவிழா வெற்றிகரமாக முடிவுற்றது தொடர்பாக பலரும் மகிழ்ந்தனர்.

வயதான அப்புஉறாமி மேடையிலேறி கலைவிழாவில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றி தெரிவித்ததைத் தொடர்ந்து, பார்வையாளர்கள் பெரிய இரைச்சலுடன் கலையத்தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவு காய்ந்தது. பற்றைகள் துப்புரவு செய்யப்பட்ட தரையில் நிலாக்கதிர்கள் பரவி பகலா, இரவா என்ற சந்தேகத்தை எழுப்பியது. மரங்களின் நிழல்கள் மட்டும் கரும்பூதங்களாக காட்சி கொடுத்தன.

லஸ்ஸன்னவைத் தவிர்ந்து மற்ற நண்பர்கள் மூவரும் மேடையின் அருகே கிடந்த கதிரைகளில் காலாற அமர்ந்திருந்தனர்.

" எப்படியோ வீடமைப்புத்திட்டத்துக்காக அடிக்கல் நட்டி, திட்டமிட்டவாறு கலைவிழாவையும் நடத்தி முடித்துட்டோம். நமது கிராம மக்கள் இந்தளவு ஒத்துழைப்பு தருவாங்கன்னு நாம ஆரம்பத்திலே நினைச்சுக்கூட பார்க்கல. இல்லையா?" என்றான் சலீம்.

" ஆமா. மக்களைப் பொறுத்தவரை நல்ல விசயங்களை பொருத்தமான முறையிலே எடுத்துச் சொன்னா எப்பவுமே ஏற்றுக்கொள்வாங்க. எந்த நடவடிக்கையும் அவங்களைப் பாதிக்குமெனக் கண்டால்தான் எதிர்ப்புத் தெரிவிப்பாங்க." என்றான் பாபு.

"ஆகஸ்ட் பரீட்சை முடியும்வரை நாம இனிமே எந்த விசயங்களிலேயும் மும்முரமா ஈடுபடக்கூடாதுப்பா. ஆமா.......லஸ்ஸன்ன எங்கே? கொஞ்சநேரமா ஆளையே காணோமே. வீட்டுக்குப்போவதென்றா சொல்லிட்டுப் போயிருப்பானே" என்றான் சார்ல்ஸ்.

"என்னோட நின்னுதான் நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். அதுக்கிடையிலே எங்கே போனான்?" பாபு கேட்டான்.

அவர்கள் லஸ்ஸன்னவைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்த அதே வேளையில் அவனும் அனோமாவும் ஓங்கிவளர்ந்திருந்த மரமொன்றின் கீழ் இருளில் ஆளுக்காள் சமீபமாக நின்றவாறு கதையளந்து கொண்டிருந்தனர்.

## 22

வீடமைப்புத்திட்டத்தில் வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. திட்டமிட்டவாறு கிணறுகள் அத்தனையும் இதுவரை கட்டப்பட்டுவிட்டன. கிராமத்தவர்களில் பலர் தங்களுடைய குடிசைகளை இடித்து தேவையான கம்பு, தடிகள், ஓலைகள் ஆகியவற்றை வண்டில்களில் ஏற்றிச்சென்று தங்களுக்காக ஒதுக்கப்பட்ட வளவுகளில் தற்காலிக குடிசைகளை அமைத்து, கட்டிட வேலைகளில் முடிந்தளவு ஒத்தாசைகள் செய்தனர்.

பெருங்காட்டைச்சுற்றி சூரிய வெப்ப மின்சக்தியால் இயங்கக்கூடிய கம்பிவேலி அமைக்கும் வேலைகள் தொடங்கப்பெற்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன இலாகாவினருக்காக பெரிய அளவிலான கொட்டிலொன்று கட்டப்பட்டு, தேக்கங்கன்றுகள் பதியமிடும் வேலைகளுக்காக கிராமத்த வர்களைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. நண்பர்கள் நால்வரும் ஆகஸ்ட் மாத உயர்தர பரீட்சையை எழுதிவிட்டு தொழிலாளர்களாக வேலை செய்வதற்கு தங்களது பெயர்களையும் பதிவு செய்திருந்தனர்.

ஒரு பிற்பகலில் வழக்கமாக அவர்கள் சந்திக்கும் கருங்கற் பாறையில் நால்வரும் அமர்ந்திருந்தனர்.

தூரத்தே தெரிந்த கிராமத்தவர்களின் தோட்டங்களெல்லாம் இப்போது கவனிப்பாரற்று காட்சியளித்தன. தோட்டச்சொந்தக்காரர்களெல்லாம் எதிரே வரும் மாரிக்கு முன்னர் தங்களின் கல்வீடுகளை அமைத்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் வீடமைப்பு வேலைக ளிலேயே கண்ணாக இருந்தனர்.

லஸ்ஸன்ன தனது கைகளுக்குள்ளிருந்த சிறு கற்களை ஒவ்வொன்றாக எடுத்து, மெதுவாக தூர எறிந்தவாறிருந்தான்.

"ஏம்பா. எல்லோரும் பேசாமா இருக்கீங்க? எதையாவது கதைங்களேன்." என்றான் சலீம்.

"பாபு. உன் விசயம் என்ன ஆச்சு ? பரீட்சைதான் முடிஞ்சுட்டுதே. சீலாவைச் சந்திக்கலையா?" சார்ல்ஸ் கேட்டான்.

"சந்திச்சேன்."

"எப்போ பரீட்சை முடிவடையும், எப்போ சந்திக்கலாம்னு காத்துக் கொண்டு இருந்திருக்கே."

"இல்லப்பா. நீங்க நினைக்கிறமாதிரியெல்லாம் அப்படி ஒன்றுமே இல்ல."

" ஒன்னுமே புரியல்லையே "

"புரியும்படியா சொல்றேன்" கூறிவிட்டு தொலைதூரத்தே நோக்கிய வாறு விரக்தியாக பெருமூச்சுவிட்டான்.

" பரீட்சை முடிந்து நாலைந்து நாட்களிலே அவ எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தா. போயா தினத்தன்று பக்கத்துக்கிராம பன்சலைக்குப் போவதாகவும், அவவோடு எனக்குத் தொடர்ந்து சிநேகமாக இருக்க விருப்பமிருந்தா அங்கவந்து சந்திக்குமாறும் கேட்டிருந்தா. "

" நீ போயிருப்பியே? "

" போனேன். அவவை சந்தித்தேன். "

" சந்தித்து............? "

" என் நிலைமையை எடுத்துச் சொன்னேன். "

" உன் நிலைமைய்ன்னா.................? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நான் சைவம். அவ பௌத்தம். நான் தமிழன். அவ சிங்களப்பெண். இளம் வயதிலே மதம், இனம் இப்படி எதையுமே பார்க்காம காதல் வயப்பட்டிடலாம். ஆனா, என் பெற்றோரும், அவ பெற்றோரும் ஏற்றுக்கொள்ளணுமே. ஒவ்வொரு மதத்தவர்களுமே அவங்கவங்க மதத்தை உயர்வா கருதுறாங்க. திருமணம் செய்வதுன்னா அவங்க மதத்தைச் சார்ந்தவங்களுக்குள்ளேயே செய்வதுதான் உசிதம்னு கருதுறாங்க. பெற்றோரை மீறி திருமணம் செய்து கொண்டா, பின்னாலே எதிர்பாராம வர்ர பிரச்சினைகளையெல்லாம் தனியே இரண்டு பேராலே மட்டும்தான் தீர்க்கவேண்டிய நிலைமை ஏற்படும். எங்க காதலை எங்க பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளாம விட்டு, நாங்க இருவரும் ஏதாவது கோவில்ல மாலைமாற்றி திருமணம் செய்து கொண்டா, இப்போ ஒற்றுமையா இருக்கிற நம்ம கிராமத்திலே அப்புறம் வேற்றுமை ஏற்பட்டுடும். பிரிவு வளர்ந்திடும். தவிர, நான் இப்போ வேலையில்லாம பெற்றோருக்குப் பாரமா இருக்கிற ஒருவன். எதிர்காலத்திலே எனக்குன்னு எத்தனையோ கனவுகளை வைத்துக்கொண்டு வாழுறவன். அதனாலே....." பாபு சிறிது நிறுத்தி அவனையே பார்த்துக்கொண்டிருந்த நண்பர்களின் விழிகளை ஊடுருவினான்.

" அதனாலே, அவகிட்ட என் நிலைமையை எடுத்துச் சொல்லி என்னை மறந்துவிடுமாறு வேண்டினேன்."

" அவ ஏற்றுக்கொண்டாவா ? "

" நான் என் நிலைமையைச் சொன்னதும் அவ அழுதா. எனக்காக எவ்வளவு காலம் வேண்டுமென்றாலும் காத்துக்கொண்டிருப்பதா சொன்னா. நான் என் கட்சியை விட்டுக்கொடுக்கவே இல்லை. எப்படியோ ஒருவாறு ஒத்துக்கொள்ள வைச்சுட்டேன்."

அவர்கள் ஆளையாள் பார்த்துக்கொண்டனர். பாபு இத்தகைய ஒரு முடிவை எடுப்பான் என அவர்கள் நினைத்துத்தானும் பார்த்திருக்க வில்லை. காதல்வயப்படும் இளைஞர்கள் எவ்வித எதிர்ப்புத்தான் ஏற்படினும் அவைகளையெல்லாம் மீறி தங்களின் காதலை வளர்ப்பதிலேயே குறியாக இருப்பதைப்பற்றி மட்டுமே அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

"பாபு, நீ எடுத்த முடிவு ஒரு நல்ல முடிவுதான்பா. அந்த முடிவுதான் உனக்கும் நல்லது. அவவுக்கும் நல்லது. கிராமத்திலே வாழும் நாலு இனத்தவர்களும் எப்போதுமே ஒற்றுமையாக வாழணும்னு நாம ஒவ்வொரு நடவடிக்கையாக எடுத்துக்கொண்டிருக்கும்போது, நம் நால்வரின் ஒருவரது செயல் அந்த ஒற்றுமையைக் குலைக்க காரணமாக இருந்துவிடவே கூடாது. என்னைப்பார். நான் ஒரு முஸ்லிம். நான் திருமணம் செய்வதென்றா, என்னுடைய மதத்தை, என்னுடைய கலாச்சாரத்தை அறிந்த, தெரிந்த, பேணுகிற ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்யணும். ஏன்னா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம்கிறது கடையிலே வாங்கிட்டு பொருத்தமில்லேன்னா தூக்கி வீசுகிற ஒன்றல்ல. பிள்ளைகளைப் பெற்று காலம், காலமா நீடிக்கிற ஒண்ணு, " என்றான் சலீம்.

"அப்போ நீ சொல்ற மாதிரி பார்த்தா, லஸ்ஸன்ன மட்டும் தான் தொடர்ந்து காதலித்துக்கொண்டிருக்கலாம் போலிருக்கு." கூறியவாறு சார்ல்ஸ் சிரிக்க, மற்றவர்களும் அடக்கமுடியாமல் வாய்விட்டுச் சிரித்தனர்.

"லஸ்ஸன்ன. இனித்தான்பா நீ ரொம்ப கவனமா இருக்கணும். மறியலுக்குப் போன வில்சன் இன்னும் சில நாட்களிலே விடுதலையாகி வர்றானாம். உனக்கும் அவனுக்கும் ஏற்கனவே பகை. அவனுடைய தங்கையை நீ காதலிப்பதை அவன் ஜீரணித்துக்கொள்வானா என்பது சந்தேகம் " என்றான் சார்ல்ஸ்.

" நான் என்னப்பா செய்வது ? அனோமாவும் நானும் இதயங்களாலே ஒன்றாகிட்டோம். அவளை நானும், என்னை அவளும் மறப்பதென்பது கற்பனைக்கே எட்டாத ஒரு விசயம். எது, எது எப்படி ஆகப்போகுதோ, பொறுத்திருந்து தான் பார்க்கணும்."

அவர்கள் நீண்ட நேரமாக பேசிக்கொண்டிருந்துவிட்டு கலைந்தனர்.

வீடமைப்புத்திட்டத்தில் ஏற்கனவேயே தற்காலிக குடிசைகள் அமைத்துக் குடியேறியவர்கள் உப உணவுப்பயிர்செய்கைக்காக ஒதுக்கப் பட்ட தஙகளது காணிகளில் பயிர்செய்கையைத் தொடங்கியிருந்தனர். கிணறுகளில் தண்ணீர் மொண்டு பயிர்களுக்கு ஊற்றினர். சற்று பணவசதி பெற்றிருந்தவர்கள் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை சொந்தமாக வாங்கி அவைகளின் மூலமாக பயிர்களுக்கு நீர் வார்த்தனர். காணிகளைத் துப்பரவாக்கிய போது பிடுங்கப்பட்ட பற்றைகளைக் கொண்டு பயிர்களைச் சுற்றி வேலி அமைத்திருந்தனர்.

அனோமாவின் குடும்பத்தினரும் தற்காலிகமாக குடிசையமைத்துக் குடியேறி பயிர்செய்கையில் ஈடுபட்டனர். ஒரு வெள்ளிக்கிழமை காலை வேளையில் அனோமாவின் பெற்றோர் பக்கத்துக்கிராம பன்சலைக்கு சென்றிருந்ததால், பயிர்களுக்கு நீர்வார்க்கும் வேலையில் அவளே ஈடுபட்டாள். அகஸ்மாத்தாக அந்த வழியால் நடந்து வந்த லஸ்ஸன்ன அவளைக் கண்டான். நடையைத்தளர்த்தி தண்ணீர் நிரம்பிய மண்குடத்தை அவள் சுமந்து வரும் தோற்றத்தை வைத்தவிழி வாஙகாமல் சிறிது தூரநின்று ரசித்தான்.

"தண்ணிக்குடம் ரொம்ப பாரம் போல" என்றான் தொண்டையைக் கனைத்தவாறு.

அவனது குரலைக் கேட்டதும், அவள் தலையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். முகம் நிறைய சிரித்தாள். என்ன நினைத்தாளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரேலென பார்வையை மாற்றி மற்றப்பக்கங்களிலெல்லாம் பார்த்தாள். அவர்கள் இருவரையும் தவிர, வேறு யாரும் அந்தப் பக்கங்களில் இல்லை யென ஊர்ஜிதம் செய்து கொண்டாள்.

"பாரம்தான். ஏன் நீங்க தூக்கிக்கொண்டு வந்து தரப்போறீங்களா?" கூறியவாறு கலகலத்தாள்.

"தூக்கச் சொன்னா குடத்தை மட்டும் அல்ல உன்னையும் சேர்த்துத் தூக்கிச் செல்ல நான் தயார். தூக்கட்டுமா?" கேட்டவாறே அவளை நோக்கி நடந்து வந்தான்.

" ஐயையோ. வேணாம்."

" இப்போ வேணாம். அப்போ எப்ப தூக்க ?"

லஸ்ஸன்ன அவள் அருகில் வந்து நின்றான். அவள் தண்ணீர் நிரம்பிய குடத்தைக் கீழே வைத்தாள்.

" காலையிலேயே எங்கே கிளம்பிட்டீங்க ? "

அவன் அவளது விழிகளை உற்று நோக்கினான். பேசாமல் அவளையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான்.

"பார்க்கிற பார்வையைப் பார்த்தா அப்படியே என்னை விழுங்கிடு வீங்க போல தோணுது." என்றாள் கலகலத்த சிரிப்புடன்.

"உன்னைப்பார்க்கும் போது சில சமயங்களிலே அப்படியும் எனக்கு நினைக்கத் தோணுது. உன்னை அப்படியே விழுங்கிட்டா நீ எனக்குள்ளேயே ஐக்கியமாகிடுவே. இப்போதே விழுங்கட்டா ?" கேட்டுவிட்டு வாயைப் பிளந்தவாறு அவளின் முகத்தின் அருகில் அவனது முகத்தை சமீப மாக்கினான்.

" யாராவது பார்த்தா.....தள்ளியே நில்லுங்க " சிணுங்கினாள்.

" என்ன கேட்டே ? காலைலே எங்கே கிளம்பிட்டேன்னா? எங்கேயும் கிளம்பல்ல. எல்லாம் உன்னைப்பார்க்கத்தான். கடந்த இரவெல்லாம் தொடர்ச்சியாக உன்னைப்பற்றிய எண்ணம்தான். இரண்டொரு மணித்தி யாலங்கள் மட்டும்தான் கண்ணயர்ந்திருப்பேனாக்கும். அதுக்குள்ளேயும் கனவிலே நீதான்,. அதான், எழுந்ததும் உன்னைப் பார்த்திட முடியாதான்னு வந்தேன். "

அவன் கூறிக்கொண்டிருக்கும்போது அவளின் மனதினுள் மகிழ்ச்சிப் பூக்கள் ஆயிரமாக மலர.....

" என்மீது உங்களுக்கு அவ்வளவு காதலா ? " என்றாள்.

" அது எவ்வளவுன்னு என்னாலே எப்படி அளவு சொல்ல முடியும். என் இதயம் நிறைய நீதான் அனோமா. "

அவள் அவனைப் பார்த்து முகம் நிறைந்து சிரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆமா. ஏன் நீ தனியே வேலை செய்றே ? உதவிக்கு யாருமே வரல்லையா?"

" அம்மாவும், அப்பாவும் தம்பியையும் அழைச்சிட்டு பன்சலைக்குப் போயிட்டாங்க. வில்சன் இன்னும் மூணு நாளைலே வருகுதில்லே. வெளியே வந்ததும் பழைய சண்டித்தனம் ஒன்றும் இல்லாம அது நல்லா இருக்கணும்னு பிரார்த்திக்கிறதுக்காக போயிருக்காங்க. ம்....." கூறியவாறு பெருமூச்செறிந்தாள்.

" ஏன் பெருமூச்சு ? "

" அது எங்கே நல்லாயிருக்கப்போகுது. அது வந்ததும், வராததுமா அதுட கூட்டாளிமாரு வந்து அதைச்சூழ்ந்து கொள்வானுக. அப்புறம் குடிப்பானுக. அதுக்குக் கோபம் வரும். அப்புறம் சண்டித்தனம் காட்டும். அது மட்டும் கூட்டாளிமார்கிட்டேருந்து விலகிடும்னா, நல்லபிள்ளையா மாறிடும். இதப்பாருங்க. உங்களையும் உங்க நண்பர்களையும் பற்றி ஊருசனங்க எவ்வளவு நல்லா கதைக்காங்க. ஆனா, என் அண்ணன் மட்டும் ஏன் தான் இப்படியெல்லாம் சமூக விரோதியா திரியவிரும்புறானோ?"

லஸ்ஸன்ன என்ன நினைத்தானோ சரேலென அவளைத் தன் கைகளால் அணைத்து, விரலொன்றால் அவளது கன்னத்தில் உருண்டு ஓடிய கண்ணீரை மெதுவாக துடைத்தான்.

"விடுங்க . யாராவது பார்துடுவாங்க" அவள் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள். அணைப்பிலிருந்து அவளை விடுவிக்காமல் அவன் மேலும் இறுக அணைத்தான்.

சிறிது தூரத்தில் நடந்து வந்து கொண்டிருந்த கிராமத்தவன் ஒருவன் அவர்கள் அணைத்தவாறு நின்றிருப்பதைப் பார்த்துவிட்டு சரேலென மரமொன்றின் பின்னே மறைந்து........அங்கு நின்றவாறு முகத்தை மட்டும் மெதுவாக நகர்த்தி அவர்களை விழிவாங்காமல் பார்த்தவாறு நின்றான்.

## 23

சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி வந்திருந்த வில்சன் சில நாட்கள் மட்டும் வீட்டுக்கடங்கிய நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள முயன்றான். அவனை அதிகாரிகளுக்குக் காட்டிக்கொடுத்து தண்டனை பெறுவதற்குக் காலாகவிருந்த லஸ்ஸன்ன தொடர்பான எண்ணம் அவனது மனதில் வண்டாக ஊர்ந்து கொண்டே இருந்தது. லஸ்ஸன்னவுக்கு ஏதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழியில் நல்லதொரு பாடம் புகட்டுவதற்கான நந்நாளை அவன் எதிர்பார்த்த வண்ணமாக இருந்தான்.

கிராமத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் அவனது தொழிலைச் செய்வதில் பெரிதும் இடையூறாக அமைந்தன. காட்டுக்கு மரங்கள் தறிக்கப்போவது அவனுக்கு இயலாமல் இருந்தது. கிராமத்திலுள்ள பெரிதுகளும், சிறிதுகளும் வனத்தையும், வனசீவராசிகளையும் பாதுகாப்பதில் காட்டிக்கொண்டிருக்கும் சிரத்தையைச் சீரணிப்பதற்கு அவனால் முடியாமல் இருந்தது. கிராமத்தவர்கள் யாருமே மிருகவேட்டைக்காகப் போதில்லையென்பதை அறிந்து அவன் மருண்டான். இன்னும் சில தினங்களில் அங்கு நடைபெறவிருந்த புதுமையானதொரு நிகழ்ச்சி அவனை அலைக்கழிய வைத்தது. அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னர் குறைந்தது ஒரு தடவையாவது தன்னுடைய துப்பாக்கியைப் பயன்படுத்திவிட வேண்டுமென்ற எண்ணம் மேலெழுந்து அவனை வதைத்தது. அது தொடர்பாக ஒரு தீர்மானம் எடுப்பதற்காக அவனுடைய நண்பனொருவனான விஜேகோனைச் சந்திப்பதற்காகச் சென்றான்.

"வா. வா. எப்ப விடுதலையாகி வந்தே ?" என்றான் சாரனை மடித்துக்கட்டியவாறு கட்டிமுடிக்கப்பட்ட அவனது வீட்டின் சுவர் பூசும் வேலையில் உதவிசெய்து கொண்டு நின்ற விஜேகோன்.

" ஒரு கிழமைக்கு மேலாச்சு. சுகமா இருக்கியா? "

" இருக்கேன். நீ எப்படி ? நல்லா இளைச்சிப்போயிட்டே. ஒழுங்கான சாப்பாடு இல்லாமலிருந்தா இப்படித்தான். சரியான வேலை வாங்கியிருப்பானுகள். என்ன வேலைக்கு விட்டானுகள் ? "

" அதை ஏன் கேக்கே. கள்ளமரம் வெட்டியதாலே மறியலுக்குப் போனேனா. அங்கபோயும் மரம் தறிக்கும் வேலைதான்."

"மரம் தறிச்சியா ? ஏன் ஜெயிலர்மாருகளும் கைதிகளோட சேர்ந்து கள்ளமரம் தறிக்கத்தொடங்கிட்டாங்களோ? " கேட்டவாறு சிரித்தான்.

" இல்லப்பா. நான் மரம் என்றது விறகை. கைகளைப் பார்த்தியா எப்படி காய்ச்சிருக்குன்னு. காலையிலேயே கோடாலியைக் கையிலே தந்துடுவான்கள். செத்துப்புழைக்கிற வேலைதான். அதை நினைச்சா இப்பகூட அழுகை வருதுப்பா. இது எல்லாத்துக்கும் காரணம்........" வில்சன் கூறியவாறு பற்களை நறநறவெனக் கடித்தான்.

" யாரு காரணம் ? "

"அதான் ஊருமுழுக்கத் தெரியுமே. அந்தப் பொறுக்கிப்பய லஸ்ஸன்னன்னு. " கோபமிகுதியால் இரண்டு கைகளையும் ஒன்றாகப் பொத்தி பலமாக நசித்தவாறு நெற்றிநரம்புகளைச் சுருக்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீயென்னவோ அவன்மேலே இவ்வளவு வெறுப்பா இருக்கே. ஆனா, உன் தங்கச்சி செய்ற வேலையை அறிஞ்சீன்னா........அதை நினைக்கும்போது தான் பயமா இருக்கு."

"என் தங்கச்சியை ஏன் இதுலே இழுக்கிறே ? அவளுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் ?"

"சம்பந்தம் இருக்கோ இல்லையோ ? ஆனா உன் தங்கச்சி உன் எதிரியை உயிருக்குயிரா காதலிச்சுக் கொண்டிருக்கிறாளே."

விஜேகோன் கூறியதைக் கேட்டதும் கண்களைச் சிறிதாக்கி வில்சன் அவனை உற்றுப்பார்த்தான்.

"நீ என்னப்பா சொல்றே ? என் தங்கச்சி அனோமா அந்த நாய்ப் பயலைக் காதலிக்கிறாளா?"

"காதலிக்கிற மட்டுமில்லே, ரெண்டுபேருமே பட்டப்பகலைலே ஆளுக்காள் அணைச்சுக்கொண்டு......வேணாப்பா. அந்த அசிங்கத்தை என்வாயாலே சொல்ல விரும்பலேப்பா....."

வில்சன் சில வினாடிகள் அமைதியாக நின்றான். அவனுடைய மனதில் லஸ்ஸன்ன தொடர்பாக வெறுப்பான எண்ணங்கள் மேலெழுந்து, மேலெழுந்து கொதிப்படைய வைத்தன,.

" உனக்கு இது யார் சொன்னது ? " கரகரத்த குரலில் கேட்டான்.

" யார் சொல்லணும்? நான்தான் கண்ணாலேயே பார்த்தேனே. "

"நீ பார்க்கும் போதே அவங்க அணைச்சுக்கொண்டு நின்டாங்களா? இருக்கட்டும். இருக்கட்டும். டேய் லஸ்ஸன்ன ! உன் கழுத்தை திருகி எடுக்கத்தான்டா போறேன். என்னை மறியலுக்கு அனுப்பினதும் இல்லாம, என் தங்கச்சி வேற தேவைப்படுதோ?" என்றான் கோபத்தால் உடல் முழுதும் குலுங்க.

"பார்த்தியா. பார்த்தியா. இதுக்குத்தானே உன்கிட்டே சொல்லக் கூடாதுன்னு நினைச்சிருந்தேன். என்னவோ வாய்மீறி சொல்லிட்டேன். இதையெல்லாம் பெரிசா எடுக்காதேப்பா. இதெல்லாம் சர்வசாதாரணம். இளம் பருவத்திலே காதலிக்கிறதும், அப்புறம் கைகழுவிட்டுப் போறதும் இந்தக்காலத்திலே பெரிய விசயமே இல்லப்பா." என்றான் மனதுக்குள் பெரிதாக எதையோ மறைத்து வைத்தவாறு.

"உனக்கு பெரிசா இல்லாமவிடலாம். அவன் யாரு ? என் எதிரி! என் தங்கச்சியை அவன் சொந்தமாக்கிக் கொள்வதுன்னா.......? அப்புறம் நான் இருந்தென்ன, இறந்தென்னபா. கொஞ்சம் பொறுத்துப்பாரேன். எப்படி நான் அவனுக்குப் பாடம் கட்டுறேன்னு ." வில்சன் இன்னும் கோபத்தில் துடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சரிசரி. அதவிடு. ஆமா. நீ எதுக்காக என்னைத் தேடி வந்தேன்னு சொல்லலையே. "

வில்சன் மிகச்சிரமத்துடன் தனது கோபத்தைக் கட்டுப்படுத்தினான். உடனடியாக வீட்டுக்குச்சென்று அனோமாவை சந்தித்து, லஸ்ஸன்ன தொடர்பாக கதைக்கவேண்டுமென தீர்மானித்துக் கொண்டான்.

"ஏன்பா விஜேகோன். ஊரில் கள்ளத்துவக்கு வைச்சிருக்கிறவங்க எல்லாம் இன்னும் இரெண்டொரு தினங்களிலே அவைகளை பொலீசிலே ஒப்படைக்கப் போறாங்களாமே. நீ கேள்விப்பட்டியா ?" கேட்டான்.

"அதை ஏன் கேக்கே? நம்ம கிராம ஜனங்களுக்கு என்ன மாயம்தான் நடந்ததோ. இப்போ எல்லாமே தலைகீழா நடந்து கொண்டிருக்கு. மிருகங்களை வேட்டையாடுவதிலே பொழுதைக் கழிச்சவங்க, இப்போ அவைகளைப் பாதுகாப்பதிலே கழிக்காங்க. மரங்களையும், மிருகங்களையும் பாதுகாக்கணும்னு தொடங்கி இருக்காங்களே ஒரு சங்கம். அந்தச் சங்கத்திலே இப்படியொரு தீர்மானம் எடுத்திருக்காங்களாம். கள்ளத்துவக்கு, கட்டுத்துவக்கு இப்படி எல்லாத் துவக்குகளையும் ஒட்டு மொத்தமா பாரம் கொடுக்கப் போறாங்களாம். இனிமே காட்டு மிருகங்களாலே எந்தப் பயமுறுத்தலும் வராதாம். அதான் இந்தத் தீர்மானமாம்." கூறியவாறு சிறிது ஏளனமாக சிரித்தான்.

"அப்போ என்கிட்ட இருக்கிற துவக்கையும் கொடுக்கணும்னு சொல்லு."

" கொடுக்கத்தான் வேண்டிவரும். ஏன்னா உன்னிடம் துவக்கு இருக்கிறது பலருக்கும் தெரியும். நீ மட்டும் கொடுக்கலைன்னா, உன்னை பொலீசுக்கு காட்டிக் கொடுத்துடுவாங்க. ஊரிலே இப்போ யாரை நம்புறது, யாரை நம்பாமல் விடுவதுன்னு ஒன்றுமே தெரியுதுல்லே. "

"நீ சொல்றது சரிதான். நானும் துவக்கை ஒப்படைக்கேன். ஆனா அதுக்கு முதலிலே நீயும் நானும் ஒரேயொரு தடவை வேட்டைக்கு போயிட்டு வந்துடுவோம்." கூறியவாறு விஜேகோனின் விழிகளை ஆராய்ந்தான்.

"ஐயையோ. என்னை விட்டுடு. எந்தப் பொந்துக்குள்ளே எந்தப்பாம்பிருக்குன்னு தெரியாம இருக்கு. நாம வேட்டைக்குப் போவது ஒரு சின்னப் பிள்ளைக்குகூட தெரியவந்தாலும் உடனேயே அவன்கள் நாலு பேருக்கும் தகவல் போயிடும். எப்படா ஒரு தகவல்வரும், எப்படா யாருக்காவது எதிரா நடவடிக்கை எடுத்து அவங்களைக் கரைச்சல்ல மாட்டாலாம்னு அந்த நாலுபேரும் ஊரையே வளைய வந்து கொண்டிருக்கானுகள். நீ வேணும்னா தனியே போ. என்னை விட்டுடு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ நாலு பேருன்னு சொன்னது அந்தப் பொறுக்கிப்பய லஸ்ஸன்னவையும், அவனுடைய கூட்டாளிகளையும் தானே ?"

"அதே ஆட்கள்தான். ஊருக்கு நன்மை செய்றோம் பேர்வழிகளென்று ஆட்களைக் காட்டிக்கொடுக்கிற வேலையைத்தான் செய்து கொண்டிருக்கானுங்க. "

"சரிசரி. இன்னும் கொஞ்ச நாளைலே அந்த கூட்டத்திலே மூணுபேருதான் மிஞ்சியிருப்பானுங்க." என்றான் வில்சன் பற்களை நறநறத்தவாறு.

" நீ என்ன சொல்றே ? "

" கொஞ்சம் பொறுத்திரேன். என்ன நடக்குதுன்னு பாரேன். அப்போ நீ என்கூட வரப்போறதில்லே ? "

" என்னை விட்டுடு வில்சன். "

வில்சன் அவனை விட்டுவிட்டு முகம் நிறைந்த கோபத்துடன் தெருவை நோக்கி நடக்கத்தொடங்கினான்.

விஜேகோன் மனதினுள் வக்ரமாக சிரித்துக்கொண்டான். அவனுக்கு நீண்ட நாட்களாகவே அனோமா மீது ஒரு கண். கிராமத்திலே அவள்தான் பேரழகானவள் என்பதும், அவன்தான் அவளை அடைவேண்டுமென்பதும் அவனுடைய மனதில் அடிக்கடி எழுந்து தணியும் எண்ணங்களில் ஒன்று. அவளை அடைவதில் அவனுக்கு எதிராக முளைத்த லஸ்ஸன்னவை பிடுங்கி எறிவதற்கான அத்திவாரத்தை வில்சனின் மனதில் ஏற்படுத்திவிட்டான்.

'லஸ்ஸன்ன! நீயாவது, அனோமாவை அடைவதாவது!' அவனுடைய வக்ரமனம் கொக்கரித்தது.

## 24

வில்சன் வீட்டை அடையும்போது அனோமா அரிசி கழுவிக் கொண்டிருந்தாள். புதிதாகக் கட்டி முடித்திருந்த வீட்டில் சிதறிக்கிடந்த சீமெந்துப் பூச்சுக்கலவைத் துகள்களை அவனுடைய பெற்றோர் துப்பரவு செய்து கொண்டு நின்றனர்.

"வில்சன், காலைலேயிருந்து எங்கப்பா போனே ? வீட்டிலே வளர்ந்தபிள்ளை. இந்த வேலைகளை நாங்களாப்பா செய்வது ? எங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மாயிருக்கச் சொல்லிட்டு நீ அல்லவா இதையெல்லாம் செய்யணும். உனக்கு இன்னுமே பொறுப்பு வரல்லையே!" என்றார் அவனைக் கண்டதும் அவனுடைய தகப்பன்.

" ஆமாமா. எனக்கு ஒண்ணும் பொறுப்பு வரல்லைத்தான். ஆனா, உங்க மக மட்டும் ரொம்ப பொறுப்பான வேலைகளிலே ஈடுபடுறா. தூ! " அனோமாவைப் பார்த்தவாறு காறி வெளியே துப்பினான்.

அனோமா கையிலிருந்த பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"ஏன் வந்ததும், வராததுமா அவளை இழுக்கிறே ? இத்தனை நேரமா அவள்தான் எங்களுக்கு உதவி செய்தாள். " என்றாள் சற்றுக் கடுகடுப்பாக அவனுடைய தாய்.

"உதவியும் செய்றாள். ஆனா ஊரே நாறும்படிக்கு உபத்திரமும் செய்றாள்."

அனோமா சடுதியாக திணுக்குற்றாள். தன்னைப்பற்றி அவன் எதையோ மனதுக்குள் வைத்துக்கொண்டு கதைக்கிறான் என நினைத்துக் கொண்டாள்.

"ஊர் நாற அவள் அப்படி என்னதான் செய்தாள் ?" தாய் கேட்டாள்.

"அவளிடம் தான் கேளேன். நாலுபேரு வாற வழிலே யாரோ ஒரு நாய்ப்பயலோடு நின்னு கொண்டு என்ன செய்தான்னு நீயே கேளேன்"

அனோமாவுக்கு அவன் கூறியது மெலிதாக புரிந்தது.

" என்னடா சுத்திவளைக்கிறே? அவ அப்படி என்னதான் செய்தா? சொல்லேன்." என்றார் சிறிது கோபமாக தகப்பன்.

வில்சனிடம் விஜேகோன் கூறியதை காலும், கையும் வைத்து ஒப்படைத்தான்.

" அடட! நம்ம லஸ்ஸன்னவோடேயா? அவன்தான்டா அவளுக்கு முறை மாப்பிள்ளை. பழகட்டுமேடா. அதுக்கு ஏன்டா இப்படி சப்தம் போடுறே ?" என தாய் கூறியதும், அனோமா மகிழ்ச்சி பொங்கிய மனதுடன் அவனைப் பார்த்தாள்.

" யாரு முறை மாப்பிள்ளை ? அந்தப் பொறுக்கிப்பயலா ? அவன் எனக்குச் செய்த சதியை நீங்களெல்லாம் மறந்துட்டீங்களா? என்னை அவன் காட்டிக்கொடுத்து, நான் மறியலுக்குப் போய், கை ஒடிய விறகு கொத்தி, களி சாப்பிட வைச்சதையெல்லாம் மறந்துட்டீங்களா?" என்றான் பெரிய சப்தத்தில் கோபமாக.

"அவன் என்னடா உன்னைக் காட்டிக் கொடுப்பது ? நீ செய்த வேலைக்கு நானே உன்னைக் காட்டிக் கொடுத்திருப்பேன். நீ குடிக்கிறதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டித்தனம் காட்டுறதும்........கள்ளமரம் வெட்டப்போகாதே, போகாதேன்னு நாங்க எத்தனை தடவைடா உன்கிட்ட சொன்னோம். நீ கேட்கலையே ! நீ மறியலுக்குப் போனது உன் விதி ! " என்றார் சப்தமிட்டு அவனுடைய தகப்பன்.

"விதி இல்ல. பச்சைச்சதி ! லஸ்ஸன்ன அவனுடைய நண்பர்களோட செய்த சதி ! மரங்களை வெட்டி விற்று நான் நாலு காசு சம்பாதிப்பது அவனுக்குப் பிடிக்கலை. அந்தப் பொறாமையாலேதான் அவன் என்னைக் காட்டிக் கொடுத்தான். இப்போ என் தங்கச்சி அவனுக்குத் தேவைப்படுது. "

" சீ ! வாயை மூடுடா. அந்தத் தங்கங்களால்தான்டா இன்னைக்கு இப்படியொரு வாழ்வு நமக்குக் கிடைச்சிருக்கு. உன்னைப்போல பொறுப்பில்லாத ஒருவனாலே ஒரு களிமண் வீட்டைத்தானும் கட்ட முடியுமாடா ? இப்போ கல்வீடு கிடைச்சிருக்கு. பயிர்செய்ய காணி கிடைச்சிருக்கு. ஐநூறு தேக்க மரங்கள் கிடைக்கப்போகுது. கொஞ்ச நாளைலே நாமெல்லாம் மற்றக்கிராமங்களைச் சேர்ந்தவங்களெல்லாம் பார்த்துப் பெருமூச்சு விடக்கூடியவாறு வாழப்போறோம்டா. அந்தப் பிள்ளைகளைப் போய் நீ இப்படிக் கதைக்கிறியே. உன் நாக்கு அழுகிப் போகும்டா" என்றாள் தாய்.

" நீ எதையாவது சொல்லு. ஆனா, அனோமாவை அவன் அடைய நான் விடப்போறதே இல்லை. ஏய் அனோமா! வாடி இங்கே! "

வில்சன் கோபமாக அழைத்ததைக் கேட்டு, ஈரக்கைகளை உடுத்திருந்த பாவாடையில் துடைத்தவாறு மெதுவாக எழுந்து அவனருகில் வந்தாள்.

அவன் அவளை விழுங்குமாப்போன்று கோபமாகப் பார்த்தான். அவனுடைய கண்கள் சிவந்திருந்தன.

" முளைச்சி இன்னும் மூணு இலை அரும்பல்ல. அதுக்குள்ளே உங்களுக்கு காதல் தேவைப்படுதோ ? இதப்பாருடி. உன் அண்ணனை உனக்குத் தெரியும். நான் எவ்வளவு கெட்டவன்னும் உனக்குத் தெரியும். இவங்க இரண்டுபேரும் எதைச் சொன்னாலும் சரி. அந்தப் பொறுக்கிப் பய உன்னை அடைவதை மட்டும் என்னாலே பொறுத்துக் கொள்ளவே முடியாது. நீ என்னை மீறி நடந்தே.......... உன்னையும் அவனையும் ஒரு வாளாலேயே வெட்டிட்டு திரும்பவும் மறியலுக்குப் போவேன். ஜாக்கிரதையா நடந்துக்க. "

அனோமா குனிந்த தலை நிமிராமல் நின்றாள். அவனை எதிர்த்து எதையாவது கதைக்கப்போக, அது அவளுக்குப் பாதகமாக முடிந்து, அவனது கையால் அடிபட நேர்ந்தாலும் நேரலாம் என எண்ணி வாழாமல் நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி பேசாம நிக்கே ? இதற்குப் பிறகும் அவனைக் கண்டா கதைப்பியாடி ? சொல்றி " சப்தமிட்டான்.

அவள் இன்னும் குனிந்தவாறு நின்று காலவிரலால் நிலத்தில் கோடு வரைந்தாள்.

"அவன் கிடக்கான். நீ உன்பாட்டுக்குப் போய் அரிசியைக் கழுவு. உனக்கு லஸ்ஸன்ன கிடைக்கிறதுக்கு நீ தவம் செய்திருக்கணும்" என்றாள் தாய்.

பருவ மழை பெய்வதற்கு அறிகுறியாக அடிக்கடி வானம் முழங்கி சாடைகாட்டியது. திட்டுத்திட்டான கரும் மேகங்கள் பரவலாக நகரத் தொடங்கின. சில நாட்களில் குளிர்காற்று இதமாக வீசி ஓய்ந்தது.

பெருங்காட்டைச் சுற்றி மின்கம்பி போடும் வேலைகள் முற்றுப் பெற்றுவிட்டன. சூரிய ஒளியை பெட்டரிகளில் தேக்கி வைத்து கம்பிகளுக்குப் பாய்ச்சுவதற்காக சிறிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. கம்பிகளில் மின்சக்தி இருப்பதை அறியாத வனவிலங்குகள் அடிக்கடி அவைகளில் மோதி, உடல் சிலிர்த்து, பயத்தால் நடுங்கி பின்வாங்கி ஓடின.

காட்டைச்சுற்றி தேக்கு மரங்கள் வளர்ப்பதற்காக தேவைப்பட்ட நிலம் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் பிரித்தொதுக்கப்பட்டு, கற்கள் நடப்பட்டு இருந்தன. வன இலாகாவினரால் தேவையான தேக்கங்கன்றுகள் பதியமிடப்பட்டு பொலிதீன் பைகளில் வைக்கப்பட்டிருந்தன. முதல் மழை பெய்து மண் இளகியவுடன் நடுவதற்காக கிராமத்தவர்களுக்கு பகிர்ந்தளிப்ப தற்கான நிலையில் அவைகள் இருந்தன.

தேக்கங்கன்றுகள் நடுவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் நிலைத்திருந்த கிராமத்தவர்களின் சில குடிசைகளும் இப்போது அகற்றப்பட்டு விட்டன. அங்குமிங்குமாக வளர்ந்திருந்த பற்றைகளை சமப்படுத்துவதில் கிராமத்தவர்கள் ஈடுபட்டனர்.

வீடமைப்புத் திட்டத்தில் சகல வீடுகளும் கட்டிமுடிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீடும் இரண்டு அறைகளும், ஒரு மண்டபமும், வீட்டோடு சேர்த்து குசினியும் கொண்டதாக அமைந்திருந்தது. நாலு வீடுகளுக்கு பொதுவாக ஒரு பெரிய கிணறு. ஒரு பாடசாலைக் கட்டிடம். நான்கு மதங்களுக்குமான வேறுவேறான வழிபாட்டுத் தலங்கள். புத்த கோவிலுக்காக புத்தமத துறவியொருவர் நியமிக்கப்பட்டு ஏற்கனவேயே வழிபாடுகள் தொடங்கிவிட்டிருந்தன. கோயில் மணி உரிய நேரங்களில் ஒலித்தது. பள்ளிவாசலில் ஐவேளை பாங்கொலி கேட்டது. சர்ச்சில் ஞாயிற்றுக்கிழமைப் பூசை ஆரம்பித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தவர்களின் உப உணவுப்பயிர்ச்செய்கையால் கிடைக்கும் அறுவடைகளை விற்பனை செய்வதற்காக சுவர்களில்லாத தூண்களை மட்டும் கொண்ட சிறியதொரு மண்டபம் கட்டப்பட்டிருந்தது. மரங்களையும், வனசீவராசிகளையும் பாதுகாப்பதற்கான சங்கத்துக்காக சிறியதொரு மண்டபம் தனியாக கட்டப்பட்டிருந்தது. உப உணவுப் பயிர்செய்கை, தேக்க மரச்செய்கை, ஆயுள்வேத மூலிகைப் வளர்ப்பு ஆகியவை தொடர்பாக பயிர்செய்கை உத்தியோகத்தர்களினால் கிராமத்தவர்களுக்கான பயிற்சிவகுப்புகள் ஒன்றிரெண்டு ஏற்கனவே நடாத்தப்பட்டிருந்தன.

நண்பர்கள் நால்வரும் திட்டமிட்டிருந்தவாறு ஒரு நாள் காலை தலைவர் தென்னக்கோனின் வீட்டில் கூடினர். சின்னத்துரை மாஸ்டரும் அங்கு வந்திருந்தார். வன இலாகா, வனசீவிகள் பாதுகாப்பு இலாகா உத்தியோகத்தர்கள் சிலர் அங்கு எந்த நேரத்திலும் எதிர் பார்க்கப்பட்டனர்.

தென்னக்கோனின் வீட்டு மண்டபத்தில் நிறைய கதிரைகள் கிடந்தன. அவைகளை அவர் புதிதாக வாங்கிப் போட்டிருந்தார். அவருடைய புதல்வர்களில் இருவர் வீட்டுக்கு முன்னாலுள்ள காணியில் குழாய் மூலம் பயிர்களுக்கு நீர் வார்த்துக்கொண்டிருந்தனர்.

"வாங்க. மண்டபத்துக்குள்ளேயே கதிரைகளிலேயே இருக்கலாம்" என்றார் நண்பர்களைப் பார்த்து தென்னக்கோன்.

"வேண்டாமய்யா. வெளியேயே மரத்துக்குக்கீழ் பாய்களைப் போட்டுக் கொண்டிருப்போம். உள்ளுக்குள்ளே புழுக்கம்" என்றான் பாபு.

"அது நல்லதுதான். சின்னத்துரை மாஸ்டர் மண்டபத்துக் குள்ளேதான் இருக்கார். அவரையும் இங்கே வரச்சொல்வோம்"

அவர்கள் விரித்த பாய்களில் அமர்ந்தனர்.

" வேலைகள் எல்லாமே முடிந்துட்டுது. நண்பர்கள் கிராமமென்ற பெயர்பலகை கூட இன்றைக்கோ நாளைக்கோ வந்துடும். திறப்புவிழாவை எப்போ வைச்சுக்கொள்றது, அதை எப்படி நடத்துவது என்பன பற்றியெல்லாம் கதைக்கணும்னுதான் உங்களைக் கூப்பிட்டேன். அதிகாரிமாரும் இப்போ வருவாங்க. நாமெல்லாம் பொருத்தமான தீர்மானங்களை எடுத்துட்டு, அப்புறம் சங்கத்தின் கமிட்டியினரைக் கூட்டி அவங்க சம்மத்தையும் பெற்று செயல்ல இறங்கணும். " அவர் கூறிக் கொண்டிருக்கும் போதே ஜீப் வண்டிகளில் அதிகாரிகள் வந்திறங்கினர்.

அவர்கள் அனைவரும் எழுந்து நின்று அதிகாரிகளை சிரித்த முகங்களுடன் வரவேற்றனர்.

"இன்னமும் பழைய பழக்கங்களுடன் தான் வாழ்றீங்க இல்லே ?" என்றார் மரநிழலில் விரித்துக்கிடந்த பாய்களைக் காட்டியவாறு ஓர் அதிகாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வெளியிலே நல்ல காற்று. அதான் இங்கேயே இருந்துட்டோம். ஐயாமாருக்கு நான் கதிரைகளை எடுத்து வந்துடறேன். "

" வேணாம். நாங்களும் உங்களுடனேயே பாய்களிலேயே இருக்கோம். நாங்க எத்தனையோ சிரமப்பட்டு செய்ய வேண்டிய வேலைகளை அதாவது வனத்தையும் வனமிருகங்களையும் பாதுகாக்கும் வேலைகளை இப்போ நீங்க செய்றீங்க. அதனாலே நாங்களும் நீங்களும் அந்தஸ்திலே ஒரே தரம்தான்." என்றார் ஓர் அதிகாரி தென்னக்கோனின் தோளில் கைபோட்டு அணைத்தவாறு.

அனைவரும் அமர்ந்தனர். வீடமைப்புத்திட்டத்தை திறந்து வைப்பது தொடர்பாக உரையாட ஆரம்பித்தனர்.

" இந்த வீடமைப்புத் திட்டத்தைத் தொடங்கிவைக்க வரப்போறது யார் தெரியுமா ? " அதிகாரியொருவர் கேட்டார்.

" இல்லையே "

" ஜனாதிபதியே வரப்போகிறார். "

"ஜனாதிபதி எங்க கிராமத்துக்கு வரப்போறாங்களா? " ஆச்சரியத்தால் சின்னத்துரை வாய்பிளந்தார்.

"ஆமா. உங்க கிராமத்துக்கு வந்து, தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக தானாகவே முன்வந்த உங்களையெல்லாம் நேரடியாக பார்க்கணும்னு விரும்புகிறார். அது மட்டுமல்ல, இப்படியொரு சங்கத்தை தொடங்கி குறுகிய கால இடைவேளைக்குள் கிராம மக்கள் அனைவரினதும் மனங்களை மாற்றி தேசிய செல்வங்களைப் பாதுகாப்பதற்கு ஏற்றவாறானவர்களாக ஆக்கியதற்காகவும், ஐம்பதினாயிரம் தேக்கமரங்கள் வளர்க்கக்கூடிய திட்டத்தை உங்களைக் கொண்டு நிறைவேற்றி எடுக்கக் கூடியதாக ஆக்கியமைக்காகவும், இந்த நாலு நண்பர்களுக்கும் மேடையிலே வைச்சு அவர் பதக்கம் அணிவிக்கப்போகிறார்."

அதிகாரி கூறியதைக் கேட்டதும் நண்பர்கள் நால்வரினதும் உடல்கள் சிலிர்த்தன. அவர்கள் ஆளையாள் பார்த்துக் கொண்டனர்.

"எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. என் மனதிலே எத்தனையோ நாட்களா கிடந்த எண்ணங்களை இந்த இளைஞர்கள் தான் செயற்படுத்த முன் வந்தாங்க. " என்றார் சின்னத்துரை மாஸ்டர் உணர்ச்சி பொங்க.

" உங்களுக்கும், தலைவர் தென்னக்கோனுக்கும், அப்புஉறாமி ஐயாவுக்கும் திறப்புவிழாவன்றைக்கு பொன்னாடை போர்த்துவதாக தீர்மானித்து இருக்காங்க."

அதிகாரி கூறி முடிக்குமுன்னே நண்பர்கள் மெதுவாக கைகளைத் தட்டி பெரிதாக மகிழ்ச்சிகளைத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களைவிட, உண்மையிலேயே எங்க முயற்சிகளுக்கு துணையாயிருந்து உடனுக்குடனேயே திட்டங்களைச் செயற்படுத்தியது ஐயாமாராகிய நீங்கதானே. உங்களுக்கு ஒன்றுமே இல்லையா ?" லஸ்ஸன்ன கேட்டான்.

"ஏன் இல்ல, எங்களுடைய செயற்பாடுகளை அரசாங்கம் கருத்திலே எடுத்து எங்களுக்கும் பதவி உயர்ச்சி தர இருக்கிறது. ஐம்பதினாயிரம் தேக்குமரங்கள் வளர்க்கும் திட்டத்துக்கு மேல் அதிகாரியா என்னைத்தான் நியமித்து இருக்காங்க. இந்த ஐயாவுக்குக் கூட பதவி உயர்வு கொடுத்து, இந்தப் பெரும்பாகத்துக்குப் பொறுப்பான அதிகாரியா மாற்றியிருக்காங்க" என்றார் வன இலாகா அதிகாரி வன சீவராசிகள் இலாகா அதிகாரியைச் சுட்டிக் காட்டி.

தென்னக்கோனின் மனைவி கொண்டுவந்து கொடுத்த தேனீரை அனைவரும் பருகினர்.

"திறப்பு விழாவை எப்போ வைக்கலாம்னு இருக்கீங்க ?" தென்னக்கோன் கேட்டார்.

ஜனாதிபதியால் குறித்தொதுக்கப்பட்ட திகதியை அதிகாரிகளில் ஒருவர் கூறினார்.

" அன்றைய நிகழ்ச்சிகள் எப்படிங்க ? " பாபு கேட்டான்.

"காலையிலே பத்து மணிக்கு நிகழ்ச்சி தொடங்குது. முதலிலே தேக்கந் தோப்புக்கான முதலாவது தேக்கங்கன்றை ஜனாதிபதி நட்டு வைப்பாங்க. அதற்கப்புறம் வீடமைப்புத்திட்டத்துக்கான பெயர்பதித்த கல்லை திறப்பாங்க. அதைத் தொடர்ந்து பொதுக்கூட்டமொன்று நடைபெறும். அதிலேதான் பொன்னாடை போர்த்துதல், பதக்கம் அணிவித்தல் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறும்."

"ஏங்க. நான்கு மதங்களுக்கும் உரிய வணக்கத்தலங்களுக்கு ஜனாதிபதியை அழைத்துச்செல்வதில்லையா ?"

" அதுவும் இருக்கு. அதுதான் முதல்லே இடம்பெறும். முதல்லே சகல வணக்கத்தலங்களுக்கும் போயிட்டுத்தான் அப்புறம் தேக்கந்தோப்புக்கு மரம் நடப்போவாங்க. "

"இந்த நிகழ்ச்சிகளிலே எங்களுடைய பங்கு என்னங்க ?" தென்னக்கோன் கேட்டார்.

"உங்களுக்குத்தான் நிறைய வேலைகள் இருக்கு. முதலிலே இந்த வீடமைப்புத்திட்டத்திலேயுள்ள பாதைகளை ஒழுங்கா செப்பனிட வேண்டியிருக்கு. அதற்குரிய இயந்திரம் நாளையே வந்து கிறவல் மண்ணை சமப்படுத்தி சகல பாதைகளையும் செப்பனிடும். கிராமத்தை சோடிப்பது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையமைப்பது, கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வது போன்ற சகல வேலைகளையும் நீங்கதான் செய்யணும். "

"ஏங்க. எங்களுக்கு இப்படி ஒரு எண்ணம் மனதிலே இருக்கு." என்றான் சலீம்.

" என்ன எண்ணம் ? "

"அன்றைக்குப் பகல் கிராமத்திலுள்ள அத்தனை பேருக்கும் பொதுவான ஓர் இடத்திலே வைத்து மதிய உணவு வழங்கினா எப்படி ?"

" நல்ல ஐடியா. இப்படியான செயல்கள் உங்க ஒற்றுமையைப் பலப்படுத்தும். ஏற்பாடு செய்ங்க. "

" பெரிய செலவு வருமே தம்பி " என்றார் தென்னக்கோன்.

" அந்தப் பொறுப்பை எங்ககிட்டவிடுங்க. அதற்குத் தேவையான பணத்தை நாங்க சேர்த்துடுவோம். "

அவர்கள் நீண்டநேரம் நிகழ்ச்சி ஏற்பாடுகள் பற்றி கதைத்தனர். எடுத்த தீர்மானங்களையெல்லாம் குறித்து சங்கக் கமிட்டிக்கூட்டத்தில் இன்னும் விரிவாக ஆராயப்படல் வேண்டுமென தீர்மானித்தவாறு கலைந்தனர்.

## 25

தெருக்கள் முழுதும் சோடனைகள் காலை இளங்காற்றில் அசைந்து ஆடின. தெருக்களில் புழுதிகளை அடக்குவதற்காக நேரகாலத்தோடேயே பெண்கள் குடங்களில் தண்ணீர் மொண்டு வந்து ஊற்றி நனைத்தனர். சிறுவர்களும், சிறுமிகளும் கிணற்றங்கரைகளில் உடல் நனைய குளித்தனர். நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்னர் அவர்கள் புத்தாடைகளை அணிந்து கொண்டு தெருக்களில் திரிய போட்டிபோட்டு முனைந்தனர். வீட்டு வளவுகளில் கட்டப்பட்டிருந்த கயிற்றுக் கொடிகளில் ஈர உடுப்புக்கள் உலர்ந்தன.

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட சூழல் பாதுகாப்புச் சங்கங்களின் பிரதிநிதிகள் சிலர் கடந்த சில தினங்களாக கிராமத்துக்கு வந்து புத்தாடைகள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கியிருந்தனர். மரங்களைப் பாதுகாப்பதற்காகவென்று ஏற்படுத்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமொன்றைச் சேர்ந்த சிலர் கிராமத்துக்கு வந்து, சிக்கனமாக விறகுகளைப் பயன்படுத்தி சமைக்கக் கூடியவாறான அடுப்பொன்றின் செய்முறை பற்றி பெண்களுக்கு பயிற்சி வகுப்பொன்றை நடாத்தியதுடன், சில அடுப்புகளையும் இலவசமாக கையளித்தனர். இந்த அடுப்பின் அமைப்பின்படி, குறித்த ஓர் இடத்தில் வைக்கும் இரண்டு, மூன்று துண்டு விறகுகளினால் ஏற்படும் வெப்பம் சிறிய குழாய்களின் மூலமாகச் சென்று சமநேரத்தில் மூன்று பாத்திரங்களில் உள்ள உணவுப் பொருட்களை வேகவைக்கக் கூடியவாறாக இருந்தது. ஒரே நேரத்தில் சோறும், இரண்டு கறிகளும் இதில் சமைக்க முடிந்தது.

வணக்கத்தலங்கள் அமைந்துள்ள பகுதிக்குச் சிறிது தூர கிளைகளைப் பரப்பியவாறு தொடர்ச்சியாக நின்ற சில மரங்களின் நிழலிலேயே அன்றைய பகல் உணவு பரிமாறவிருந்ததால், சமையலுக்கான வேலைகள் மும்முரமாக நடைபெற்றன.

தெருக்களில் அதிகாரிகளின் ஜீப் வண்டிகள் ஓடின.

வணக்கத்தலங்கள் பெருக்கப்பட்டு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன.

பெரியதொரு மேடையமைக்கப்பட்டு காலையிலேயே பக்தி கீதங்கள் இசைக்கத் தொடங்கிவிட்டிருந்தன.

ஜனாதிபதியினால் முதலாவது தேக்கங்கன்று நடுவதற்கு ஆயத்தமாக குழி வெட்டப்பட்டு, அதன் அருகே திட்டத்தைப்பற்றிய சுருக்கமாக எழுதிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கற்பலகையொன்று நடப்பட்டு சீலையினால் திரையிடப்பட்டிருந்தது.

புது உடுப்பு அணிந்த இளைஞர்களும், யுவதிகளும் தெருக்களில் நடமாடத் தொடங்கிவிட்டனர்.

சலீம், பாபு, சார்ல்ஸ் ஆகிய நண்பர்கள் மூவரும் லஸ்ஸன்னவின் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் போது அந்த பெருஞ சப்தம் அனோமாவின் வீடு அமைந்துள்ள திசையிலிருந்து செவிப்பறைகளில் முட்டி மோதியது.

"கடவுளே! லஸ்ஸன்னவை யாரோ வெட்டிப் போட்டாங்க !"

அப்போது காலை ஏழரை மணியிருக்கலாம்.

சப்தம் வந்த திசையை நோக்கி நண்பர்கள் தலைதெறிக்க ஓடத்தொடங்கினர்.

லஸ்ஸன்ன புத்தாடை அணிந்து நண்பர்களைச் சந்திப்பதற்காக சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். மனதில் என்ன நினைத்தானோ அவனுக்கு உடனேயே அனோமாவைப்பார்க்க வேண்டும் போலிருந்தது. பாதையை மாற்றி அவளின் வீட்டுப்பக்கம் சைக்கிளை மிதித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனோமா குளித்துவிட்டு, மார்பைச்சுற்றிய பாவாடையுடன் தோள்களைச்சுற்றி துவாயொன்றால் போர்த்தியவாறு வீட்டை நோக்கி நடந்து கொண்டிருப்பதைக் கண்டான். உலர்த்திய தலைமுடி அவளுடைய முதுகு முழுதும் படர்ந்து கிடந்தது. வாளிப்பான குருத்துக் கால்கள் காலை வெய்யிலில் பளபளத்தன.

லஸ்ஸன்ன தன்னை மறந்து "அனோமா" என மெதுவாக அழைத்தவாறு சைக்கிளை நிறுத்தி அதை அருகே நின்ற மரமொன்றில் சாத்திவிட்டு அவளை நோக்கி நடந்தான்.

அவள் அவனைப் பார்த்து முகம் மலரச் சிரித்தாள்.

"போங்க. அண்ணன் உள்ளே படுக்காரு. பார்த்தாலும் பார்த்துடுவாரு" என்றாள்.

"பார்த்தா பயமில்லை. நான் உன் அண்ணனுக்குப் பயப்படப் போறதே இல்லை. வா. வா. அந்த மரத்துக்கு மறைவிலே நின்னு கொஞ்சம் கதைச்சுட்டுப் போயிடலாம்."

"ஐயையோ ! நிலைமை தெரியாம நீங்க ஒன்னு. அண்ணன் உங்களை வெட்டிக்கொடுத்தா தின்னுற கோபத்திலே இருக்காரு. போங்க. பிறகு கதைக்கலாம்."

"மாட்டேன். இன்றைக்கு எவ்வளவு சந்தோசமான ஒரு நாள். எனக்கும் என் நண்பர்களுக்கும் ஜனாதிபதியே பதக்கம் சூட்டிவிடப்போற நாள்." கூறியவாறு கிணற்றுக்கு சற்றுதள்ளி நின்ற மரமொன்றுக்கு பின்னால் சென்றான். அனோமா விரும்பியோ விரும்பாமலோ அவனைப்பின் தொடர்ந்தாள்.

லஸ்ஸன்ன சைக்கிளில் வந்ததையும் குளித்துவிட்டு வந்த அனோமாவிடம் கதைத்ததையும், மரத்துக்கு மறைவாக அவர்கள் இருவரும் சென்றதையும் அப்போது தான் படுக்கையைவிட்டு எழுந்த வில்சன் ஜன்னலூடாகக் கண்டான். திடீரென அவனுடைய இரத்தம் சூடாகி.... மெதுவாக நகர்ந்து மறைத்து வைத்திருந்த வெட்டுக் கத்தியொன்றை எடுத்து சாரனுக்குள் ஒளித்தவாறு.......அவர்களை நோக்கி பாம்பாக ஊர்ந்தான்.

"குளித்த உடம்போட நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா? இந்தமுகம், இந்தத்தோள்கள், இந்தக் கைகள்.........நீ முழுக்க அழகுதான். இரவும், பகலும் எனக்கு உன் எண்ணம்தான் அனோமா. உனக்கும் அப்படித்தானா?" லஸ்ஸன்ன காதல் வடியும் விழிகளுடன் கேட்டான்.

"எனக்கு உங்களை நினையாத நேரமே இல்லை. இதபாருங்க. உடனேயே போயிடுங்க. எந்த நிமிசமும் அண்ணன் எழுந்து கிணற்றடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தான் வரும். இந்த நல்ல நாளைலே வீண் பிரச்சினைகள் எதுவுமே ஏற்பட்டுடக்கூடாது. போங்க....." அவள் கூறிக் கொண்டிருக்கும் போதே...

" அவன் எதுக்குடி போகணும். அவனை நான் நரகத்துக்கே அனுப்பிடுறேன். " எனக்கூறியவாறு லஸ்ஸன்னவின் பின்பக்கத்தால் திடீரென வெளிப்பட்ட வில்சன் கண் இமைக்கும் நேரத்தினுள் அவனின் தோளில் கத்தியால் ஆழமாக வெட்டிவிட்டு வினாடிக்குள் மறுபக்கத்தால் பாய்ந்து ஓடினான்.

நண்பர்கள் மூவரும் சம்பவம் நடைபெற்ற தலத்துக்கு வரும்போது லஸ்ஸன்ன தோளைக்கையால் பொத்தியவாறு துடிதுடித்துக் கொண்டிருந்தான்.

" யாரு.......? யாரு உன்னை வெட்டினது ? " சலீம் பதறினான்.

லஸ்ஸன்ன தன்னை வெட்டியது யாரென தெரியாது என்பதை தலையையும், கையையும் அசைத்துக் காட்டினான். அவனுடைய சேர்ட் முழுதும் இரத்தக்கறை.

அனோமாவின் தாய், தந்தையரும் அங்கு நின்றனர். வில்சன் தான் அவனை வெட்டியிருப்பான் என அவர்களுக்குத் தெரியும்.

"அனோமா. நீ சொல்லு. உன் அண்ணன் தானே வெட்டினான் ?" சார்ல்ஸ் கேட்டான்.

அவள் அமைதியாக நின்றாள். பேயறைபட்டவளைப்போல் பார்வையை எங்கேயோ நிலைகுத்தியவாறு உடல் நடுக்கத்துடன் நின்றாள்.

வில்சனைக் காட்டிக் கொடுத்துவிடவேண்டாம் என தோளில் வெட்டப்பட்ட உடனேயே லஸ்ஸன்ன அவளிடம் கேட்டிருந்தான்.

"அவனைக் காட்டிக் கொடுத்திட்டா அவன் ஒருகாலமுமே திருந்த மாட்டான். அவனை மன்னிப்பது தான் அவன் திருந்த வழி" என வேதனைக்கு மத்தியிலும் அவன் அவளிடம் சொல்லியிருந்தான்.

"இதிலே ஏதோ சதியிருக்கு. வெட்டியது யாரென எங்களுக்குத் தெரியும். அதை அப்புறம் நாங்க பார்த்துக்கறோம். முதலிலே வாகன மொன்றை எடுத்துட்டு வாங்க. ஆஸ்பத்திரிக்குப் போவோம். " என்றான் சார்ல்ஸ்

விபரம் கேட்ட கிராமத்தவர்கள் ஓடோடி வர......வேகமாகவந்து நின்ற ஜீப்பொன்றில் லஸ்ஸன்னவை தூக்கி வைத்து நகர ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர்.

நகர வாடி வீட்டில் காலை உணவு உட்கொண்டவாறிருந்த ஜனாதிபதியின் அருகில் செக்யூரிட்டி ஆபீஸர் ஒருவர் மெதுவாக சென்று சல்யூட் அடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி அவரின் பக்கம் திரும்ப......

"நண்பர்கள் கிராமத்திலே அந்த நாலு நண்பர்களிலே ஒருவரை யாரோ வெட்டிப் போட்டாங்களாம் மேடம். அங்கேயிருந்து செய்தி வந்திருக்கு"

" வெட்டுப்பட்ட ஆள் எங்கே ? "

" இங்க தான் ஜெனரல் உறாஸ்பிடலுக்கு எடுத்து வந்திருக் கிறாங்களாம். "

" ஆள்ட பேரென்ன ? "

" லஸ்ஸன்னவாம். "

" அந்தக் கிராமத்தையே உருவாக்க முன்னின்று உழைச்ச வங்களிலே ஒருவர் இல்லே ? "

" ஆமா "

" உயர்ந்த சேவைக்கான பதக்கம் பெறவேண்டிய நால்வர் பட்டியல்லே அவர் பெயரும் இருக்கு. இல்லே ? "

" ஆமா "

" அவருக்கு அணிவிக்க வேண்டிய பதக்கத்தை எடுத்துக்கொண்டு முதலிலே ஆஸ்பத்திரிக்குப் போகலாம். "

ஜனாதிபதி அதிகாரிகளும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் புடைசூழ ஆஸ்பத்திரிக்குச் சென்று.....ஆபரேசன் முடிந்து அப்போதுதான் படுக்கையில் கொண்டு வந்து கிடத்திய லஸ்ஸன்ன படுத்திருந்த கட்டிலின் அருகே போய் நின்று....

ஆஸ்பத்திரியின் டாக்டர்களும், தாதிமார்களும் ஜனாதிபதி வருகை தந்த செய்தியறிந்து அவரின் பின்னே கூடினர்.

ஆபரேசனின் போது லஸ்ஸன்னவை முழுவதுமாக மயக்கமுறச் செய்யாமல் இருந்ததால் அவன் விழித்துக் கொண்டிருந்தான். ஜனாதிபதியைக் கண்டதும் மெதுவாக ஒரு கையை கட்டில் மெத்தையில் ஊன்றி எழுந்திருக்க முயன்றான்.

" வேண்டாம். வேண்டாம். எழுந்திருக்க வேண்டாம். அப்படியே படுத்திருங்க. " என்றார் ஜனாதிபதி கனிவான குரலில்.

" யார் ஆபரேசன் செய்தது ? " தனது பின்புறமாக நின்ற டாக்டர்களைப் பார்த்துக் கேட்டார்.

" யுவ எக்ஸலன்ஸி. நான் தான் " என்றார் தலையில் வெள்ளிக் கம்பிகள் சகிதமாக நின்ற சற்று வயதான டாக்டர் ஒருவர்.

" இப்போ இருவருக்கு எப்படி ? "

" தெய்வாதீனமாக அவர் பிழைச்சிட்டார். கத்திவெட்டு தோள் பட்டையின் சதையைத்தான் சீவியுள்ளது. கொஞ்சம் தள்ளி கழுத்திலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நெஞ்சிலோ வெட்டு விழுந்திருந்தால் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும். "

ஜனாதிபதி முகத்தைத் திருப்பி லஸ்ஸன்னவைப் பார்த்தவாறு சில வினாடிகள் அமைதியாக நின்றார்.

" இவருக்கு அப்படிப்பட்ட ஆபத்து எதுவுமே வராது. காட்டிலே தன்னிச்சையாக வாழும் வாய் பேசாத மிருகங்களைப் பாதுகாப்பதற்காக இவர் எடுத்த முயற்சிகளையிட்டு இந்த நாடே பாராட்டுகிறது. இவரது முயற்சியைப் பாராட்டி மேடையில் வைத்து இவருக்கு அணிவிக்கப்போகும் தங்கப்பதக்கத்தை நான் இங்கேயே அணிவித்துவிடப்போகிறேன்." ஜனாதிபதி கூறியவாறு திரும்ப, அருகில் நின்ற உயர் அதிகாரியொருவர் அட்டைப்பெட்டியொன்றைத் திறந்து, அதனுள்ளிருந்த தங்கப்பதக்கமொன்றை எடுத்து அவரின் கையில் கொடுத்தார்.

லஸ்ஸன்ன மீண்டும் எழ முயற்சித்து தோற்றான். அவனுடைய உடலில் போர்த்தியிருந்த சீலையின் மீது ஜனாதிபதி பதக்கத்தை அணிவித்தார். அவன் கண்களால் அவருக்கு நன்றி கூறினான். மெதுவாக உதடுகளைத்திறந்து " நன்றி மேடம். என் கிராம மக்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைக் செய்ங்க மேடம். " என்றான். ஒருகையை அவரின் பக்கம் நீட்டி ஜனாதிபதியின் நீட்டிய கையுடன் குலுக்கினான்.

" இவரைப் பத்திரமா பார்த்துக்கொள்ளுங்க டாக்டர். இவரைப் போன்ற இளைஞர்கள் தான் இந்த நாட்டுக்குத்தேவை. " ஜனாதிபதி கூறியவாறு டாக்டர்களுடன் வெளியேறினார்.

ஜனாதிபதியும் அவருடைய பரிவாரங்களும் வீடமைப்புத் திட்டத்தை வாகனங்களில் சென்றடைந்தனர். முதலில் பௌத்த வழிபாட்டுத்தலத்தை நோக்கி அவர்கள் நடந்து செல்லும்போது, கிராம சிங்களப் பெண்கள் றபான் அடிக்க......முஸ்லிம் பெண்கள் வாய்களுக்குள் விரல்களைவிட்டு குரவைச் சப்தம் ஒலிக்க.....முஸ்லிம், தமிழ் இளைஞர்கள் தெருவோரம் நின்று பன்னீர் தெளிக்க......தமிழ் பெண்கள் ஆரத்தித்தட்டுகளைச் சுற்ற. ......அவர்களின் கைகளில் கொடுக்கப்பட்ட பூத்தட்டங்களை புனித புத்தரின் பாதத்தடியில் சமர்ப்பித்து கைகளைக் கூப்பி வணங்கி......இந்து கோவிலுக்குச் சென்று கடவுளர்களை வழிபட்டு......முஸ்லிம் பள்ளிவாசலுக்குச் சென்று நடைபெற்ற பிரார்த்தனையில் கலந்து கொண்டு..... கிறிஸ்தவ ஆலயத்துக்குப் போய் பிரார்த்தனையில் பங்கு பற்றி.....

வாகனங்களில் ஏறி தேக்கந்தோப்புக்கான மரம் நட திட்டமிட்டிருந்த இடத்துக்குச் சென்று.......நான்கு மதங்களையும் சேர்ந்த மதகுருமார்களின் பிரார்த்தனைகளுக்கு மத்தியில் முதல் தேக்கங்கன்றை ஜனாதிபதி நட்டார். அவருடன் கூடவே வருகை தந்திருந்த அமைச்சர்களும், பாராளுமன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் ஆளுக்கொன்றாக கன்றுகளை நட்டினர்.

ஆயுள்வேத மூலிகைச் செடி வளர்ப்பதற்கான முதல் கன்றையும் ஜனாதிபதியே நட்டிவைத்தார்.

" இதை எப்படி பயிர் செய்யப்போறீங்க ? " ஜனாதிபதி சமீபத்தில் நின்ற சுகாதார அமைச்சரைப் பார்த்துக் கேட்டார்.

" ஆயுள்வேத மூலிகைச் செடிகளுக்கு வெளிநாடுகளிலே நிறைய கிராக்கி இருக்கு மேடம். ஒவ்வொரு தேக்கங்கன்றுகளுக்கும் இடையிலே உள்ள நிலத்திலே இந்தச் செடிகளை வளர்ப்பதுதான் திட்டம். "

அவர்கள் அங்கிருந்த வாகனங்களில் ஏறி மீண்டும் வீடமைப்புத் திட்டத்தைச் சென்றடைந்து.....பலத்த கரகோசத்துக்கு மத்தியில் 'நண்பர்கள் கிராமம்' பெயர்ப் பலகையையும், கல்வெட்டையும் திரைநீக்கம் செய்து........

மேடையில் நான்கு மதப்பெரியார்களும் வீற்றிருந்தனர். அமைச்சர்களும் அதிகாரிகளும், அப்புஉறாமி, சின்னத்துரை போன்றவர்களும் தங்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்திருக்க.........நடுநாயகமாக சிரித்த முகத்துடன் ஜனாதிபதி உட்கார்ந்திருக்க............

தென்னக்கோன் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து அதிகாரிகளும், அரசாங்க அதிபரும், பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சர்களும் பேச...... நண்பர்களான பாபு, சலீம், சார்ல்ஸ் ஆகியோருக்கான தங்கப்பதக்கங்களை ஜனாதிபதி அணிவிக்கும் போது கூட்டத்தினர் கைகளைத் தட்டி பெரிதாக வரவேற்றனர். தென்னக்கோன், அப்புஉறாமி, சின்னத்துரை மாஸ்டர் ஆகிய மூவருக்கும் அமைச்சர்கள் மூவரால் பொன்னாடை போர்த்தப்பட்டது.

இறுதியில் ஜனாதிபதியைப் பேசுமாறு தென்னக்கோன் அழைத்தார்.

மதப் பெரியார்களையும், பிரமுகர்களையும், கிராம மக்களையும், கூட்டத்துக்கு வந்திருந்த சகலரையும் விளித்துவிட்டு...........

".........இதுதான் உண்மையான சேவை. ஒரு நாடு சகல வளங்களையும் பெற்றுத்திகழ வேண்டுமானால் அந்நாட்டில் சூழல் பாதுகாக்கப்படல் வேண்டும். பருவமழை உரியகாலத்தில் பெய்ய வேண்டும். மரங்கள், காடுகள், வனமிருகங்கள் ஆகியவை நாட்டில் வாழ் மக்களைப் போன்று இந்நாட்டின் சொத்துக்கள். இவைகளை அழிக்கக்கூடாது. நமது காலத்தில் நாட்டிலுள்ள தேசிய செல்வங்களான இவைகளினால் நாம் மட்டுமே பயன் அடையவேண்டும் என்ற குறுகிய நோக்கத்தைக் கொண்டிராமல், நமது எதிர்கால சந்ததியினருக்காக அவைகளை விட்டு வைக்கவேண்டும். அவைகளை நம்மால் முடிந்தவரை அதிகரிப்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் தான் ஒரு நாட்டின் வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

" இங்கு நீங்கள் வனவாழ் ஜீவராசிகளைப் பாதுகாப்பதற்கு முன்வந்திருக்கிறீர்கள். உப உணவுப் பயிர்செய்கையில் ஈடுபடுவதன் மூலம் நாட்டின் உணவுத் தேவையைப்பூர்த்தி செய்வதில் பங்கெடுக்கப் போகிறீர்கள். ஐம்பதினாயிரம் தேக்க மரங்களை வளர்க்கும் திட்டத்தின் மூலம் சூழல் பாதுகாப்பில் ஈடுபடுவது மட்டுமல்ல, நாட்டின் செல்வத்தை அதிகரிக்கும் முயற்சியிலும் ஈடுபடப்போகிறீர்கள். மூலிகைப் பயிர் செய்கையின் மூலம் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டு பொன்னான அந்நியச் செலவாணியை அதிகரிப்பதற்கும் காலாக இருக்கப் போகிறீர்கள்.

" இவை எல்லாவற்றையும் விட, நாலு மதங்களையும் சார்ந்த உங்களின் ஒற்றுமையுணர்வு உண்மையிலேயே போற்றப்படவேண்டிய தொன்று. அரசாங்கம் விரும்புவதே இதைத்தான். இந்த நாடு நமது நாடென்ற நாட்டுப்பற்றும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமையும் மிக முக்கியமாக நமக்குத் தேவைப்படுவனவாக உள்ளன.

" இங்கு என்னால் காணக்கூடிய அபிவிருத்திக்கான ஏற்பாடு களுக்கும், இன ஒற்றுமைக்கும் இக்கிராமத்தின் வாலிபர்கள் சிலர் காரணமாக இருப்பதை அறிந்து பெருமைப்படுகிறேன். அத்தகைய வாலிபர்களில் ஒருவருக்கு இன்றுகாலை ஏற்பட்ட அசம்பாவித நிகழ்ச்சியொன்றை அறிந்து நான் உண்மையிலேயே வேதனையடைந்தேன். தன்னைத்தாக்கியவரை யாரென்று அறிந்திருந்தும் அவரை மன்னித்துவிட்ட அந்த வாலிபரின் உயர்ந்த குணத்தை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். உங்களுடைய நல்வாழ்வுக்காக பாடுபட்ட இந்த நான்கு இளைஞர்களும், அவர்கள் சமீபத்தில் எடுத்த பரீட்சையில் சித்தியடையும் பட்சத்தில், அவர்களின் எதிர்கால கல்விக்கான சகல பொறுப்புக்களையும் அரசாங்கம் எடுக்கும் என்பதைக் கூறி, உங்களின் நல்வாழ்வுக்காக அரசாங்கத்தின் நேசக்கரம் எப்போதும் நீண்டிருக்கிறது என்பதையும் கூறி முடிக்கிறேன்."

ஜனாதிபதியின் உரை முடிந்ததும் எழுந்த கரகோசம் நீண்ட நேரம் நீடித்தது. சரேலென வீசிய தென்றல் காற்று அங்கிருந்த அத்தனை பேரினதும் உடல்களைத் தழுவி ஆசி வழங்கியது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்து விட்டீர்களா?

**ஜ்னைதா ஷெரீப் எழுதியவை:**

| | |
|---|---|
| அவன் ஒன்று நினைக்க.... | (துப்பறியும் நாவல்) |
| சாணைக் கூறை | (சமூக நாவல்) |
| அவளுக்கும் ஓர் இதயம் | (சமூக நாவல்) |
| மூன்றாம் முறை | (சமூக நாவல்) |
| காட்டில் எறித்த நிலா | (சமூக நாவல்) |
| ஒவ்வாமுனைக் காந்தங்கள் | (சமூக நாவல்) |
| இளநரை | (சிறுகதைத் தொகுப்பு) |
| பெட்டிசம் | (சிங்கள நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பு) |
| பொன்னாடை | (வானொலி நாடகத் தொகுப்பு - இலங்கை அரசின் சாகித்திய விருது பெற்றது) |
| இவளுக்காகவா? | (சிறுகதைத் தொகுப்பு) |
| ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது | (சமூக நாவல்) |

ISBN : 955 - 95096 - 4 - 0

Typeset and Printed by print Graphics,
No. 4, Nelson Place, Colombo - 6 (Tel : 596312

noolaham.org | aavanaham.org